காவேரி

பிப்ரவரி_1959.

என் மனைவி மிக

துஷார்

வைடமின் நிறைந்த வனஸ்பதி

துஷார் வனஸ்பதி சமையலுக்கு ஏற்ற சாதனம் மட்டுமல்ல. இதில் ஏ. டி. வைடமின் சத்துக்கள் நிறைந்து, சமையலின் ருசியையும் வாசனையை ஊட்டமளிக்கும் சக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன.

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்,
கர்நூல்

சென்னையில்: காஸினோ, பிராட்வே, மற்றும் தமிழ்நாடெங்கும்

முதல் கட்டம்



1958 அக்டோபர் 1-ம் தேதி மெட்ரிக் முறை எடைகளும் அளவுகளும் அமுலுக்கு வந்துள்ளன. இந்தத் தேதியிலிருந்து, இராஜ்யங்களின் குறிப்பிட்ட சில பகுதிகளில் மெட்ரிக் எடைகள் சட்டப்படி புழக்கத்துக்கு வந்திருக்கின்றன.

அதேவிதமாக, அரசாங்க இலாக்காக்களிலும், தொழில்களிலும், குறிப்பாக—பருத்தி ஆலைகள், இரும்பு-உருக்கு ஆலைகள், எஞ்சினீயரிங் தொழில்கள், கனரக கெமிகல் ஆலைகள், காகிதத் தொழில்கள், சிமென்ட் தொழில்கள், சணல் தொழில்கள் ஆகியவற்றில் மெட்ரிக் முறை அமுலுக்கு வந்திருக்கிறது.

இந்தச் சீர்திருத்தம் சிறிது சிறிதாக நாடு முழுவதும் அமுலாக்கப்படும்.

மெட்ரிக் முறை

சுலபமானது

ஒரே சீரானது

இப்போதுள்ள எடைகளும் அவைகளுக்குச் சமமான மெட்ரிக் எடைகளும்

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

மெட்ரிக் எடை மாற்றுப் பட்டியல்

தேவைப்படும் - வைத்திருங்கள்

பலம்	கிராம்
1	35
2	70
3	105
4	140
5	175
6	210
7	245
8	280
9	315
10	350
11	385
12	420
13	455
14	490
15	525
16	560
17	595
18	630
19	665
20	700
21	735
22	770
23	805
24	840
25	875
26	910
27	945
28	980
29	1015
30	1050
31	1085
32	1120
33	1155
34	1190
35	1225
36	1260
37	1295
38	1330
39	1365

வீசை (1 வீசை = 40 பலம்)	கிலோகிராம்	கிராம்
1	1	400
2	2	800
3	4	200
4	5	600
5	7	—
6	8	400
7	9	800

மணங்கு (1மண = 8வீ)	கிலோகிராம்	கிராம்
1	11	200
2	22	400
3	33	600
4	44	800
5	56	—
6	67	200
7	78	400
8	89	600
9	100	800
10	112	—
11	123	200
12	134	400
13	145	600
14	156	800
15	168	—
16	179	200
17	190	300
18	201	500
19	212	700

கண்டி (1 கண்டி = 20 மணங்கு)	கிலோகிராம் (கிலோ கிராம் சுத்தமாக)
1	224
2	448
3	672
4	896
5	1120

1 கிலோகிராம் = 1,000 கிராம்

DA 58/247 (1) TM.

குறிப்பிட்ட நோக்கத்தோடு

சேமியுங்கள்

அத்தகைய சேமிப்புகள்

உங்கள் குழந்தையின் கல்வி

வளமான வாழ்வு தொடங்க அல்லது
திருமணத்திற்கு

உங்கள் வயோதிக காலத்
தேவைகளுக்கு



அல்லது ஒரு வீடு கட்ட

பயன்படும். மாதம் தவறாமல் சேமித்து விவேகமான முறையில் முதலீடு செய்ய வசதியானது உங்கள் அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் புதிய

வளரும் மாதச் சேமிப்புத் திட்டம்

மாதாமாதம் முதலீடு செய்யுங்கள் ▶	ஒவ்வொரு மாதமும் ரூ. 5. ரூ. 10. ரூ. 20. ரூ. 50. ரூ. 100, அல்லது ரூ. 200.
ஒவ்வொரு மாதமும் கட்டும் ரூ. 10 க்கு உங்களுக்குக் கிடைப்பது ▶	ஐந்து வருஷ முடிவில் ரூ. 650; பத்து வருஷ முடிவில் ரூ. 1.450.
முதலீட்டு எல்லை ▶	ஒரு தனிப்பட்ட நபருக்கு ரூ. 12,000. இரண்டு வயது வந்தவர்கள் கூட்டாக ரூ. 24,000.
தொடர்ச்சியாகப் பணம் கட்ட முடியவில்லை என்றால் ▶	(அ) 5 வருஷ திட்டத்தின் பேரில் 5 மாதங்களும். 10 வருஷ திட்டத்தின் பேரில் 10 மாதங்களும் தவணை முறிவு அனுமதிக்கப்படும். அதற்குத் தகுந்தபடி முதிர்வு தேதிகளும் தள்ளிப்போடப்படும் (ஆ) முதிர்ந்தவுடன் முதலீட்டிற்கு ஏற்ப பணம் கொடுக்கப்படும்.

உங்கள் தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கி அல்லது

தேசீய சேமிப்பு ஸ்தாபனம்

தேவையான மற்ற விவரங்கள் தந்து மகிழ்வுடன்
உங்களுக்கு உதவத் தயாராக உள்ளன.

DA-58/344

காவேரி

பொருளடக்கம்

விளம்பி-வருடம் மலர் 18	பிப்ரவரி–1959	தை இதழ் 6

தொப்பிக்கேற்ப தலையா?	... தலையங்கம்	... 6
காதல் இன்றேல்...!	... தமாஷ்வாலா	... 7
மூன்றும் முறை	... பட்டாபி நாராயணன்	9
புத்தக விமர்சனம்		... 16
மனக்குரங்கு	... க. சந்தானம்	... 17
வஜ்ர வீணை (தொடர் கதை)	... கே. சுந்தராம்பாள்	... 23
விஞ்ஞானத் துணுக்குகள்	... நா. கி. நாகராசன்	... 33
மீளாத நகை	... கோமதிநாகராஜன்	... 37
சிறுவர் பகுதி	... எஸ். விசாலாக்ஷி	... 41
தந்தை தந்த வாழ்வு!	... மு. சதாசிவம்	... 45
கேரள நாட்டுப் பிரயாணம்–6	... கே. ஸ்ரீநிவாஸன்	... 53
எதிரொலி	... விஸ்வம்	... 57
தொழில் துணுக்குகள்	... விசால்தேவ்	... 61
சலனம்...!	... அசேன்ராஜ்	... 65
பெண் உள்ளம் பெண்ணுக்குத் தெரியும்:	கு. ப. சேது அம்மாள்	... 73
பெண்களுக்கு மட்டும்	... எஸ். விஜயா	... 78
வேரும் விளைவும்	... சேதி	... 81
சிரித்த செந்தாமரை (தொடர் கதை)	... ஏ. சுப்பையா	... 85
சினிமா	... நமது விசேஷ நிருபர்	... 93

அட்டைப்படம் :

மண்ணக வாழ்வினை விட்டெழுந்து–மனம்
மாசிலா மாணிக்கமா யொளிர்ந்து
விண்ணக வாழ்வை விரும்பிடவே–நிதம்
வேண்டிய போதனை செய்பவரார்—

(கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை)

குறிப்பு: காவேரியில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும், அவற்றை எழுதினவர்களுடையனவே; அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

JL M121, V4 1KV N59

காவேரி

விளம்பி-ஹூ
மலர் 18

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

தை
இதழ் 6

தொப்பிக்கேற்ப தலையா?

இன்றுடன் காவேரி போன்ற பத்திரிகைகளுக்கு அளிக்கப்பட்டு வந்த தபால் கட்டண சலுகை முற்றுப்பெறுகிறது. அதாவது 1941லிருந்து பத்திரிகை என்று அங்கீகரிக்கப்பட்டு நமக்கு அளிக்கப்பட்டுவந்த தபால் கட்டண சலுகை ரத்தாகிறது. பெருவாரியான பக்கங்களில் செய்திகளோ அதனையொட்டிய கட்டுரைகளோ இடம் பெறவில்லையாம். எனவே தபால் சட்டத்தில் கண்டுள்ள விவரப்படி இப்பத்திரிகைகள் தபால் கட்டண சலுகைக்குப் பாத்திரமாகக்கூடியனவல்லவாம். எனவே, பத்திரிகை கட்டணப்படி நாம் இதுவரை பிரதி அனுப்பும்பொழுது ஒட்டிவந்த மூன்று நயா பைசாவுக்குப் பதிலாக இனி புக்போஸ்ட் விகிதப்படி பதினெட்டு நயாபைசா ஒட்டி அனுப்ப வேண்டும். பத்திரிகையின் விலையில் பெரும் பகுதி தபால் கட்டணமே விழுங்கிவிடும். இதன் விளைவு பாதிக்கப்பட்ட பெருவாரியான பத்திரிகைகள், இலக்கியத் தொண்டுபுரியும். மக்களின் தேவைக்கேற்ப, நடத்திவரும் பத்திரிகைகள் மறையவேண்டியதே. இதற்கு அடிகோலுவது நமது தேசிய சர்க்கார்.

எது பத்திரிகை என்பதற்கு தபால் சட்டத்தில் ஏற்பட்டுள்ள விளக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல; பிரிட்டிஷ் ஆட்சிகாலம்தொட்டு, நமது தேசிய சர்க்காரிலும் பத்து ஆண்டுகளுக்கு மேலாக அமலிலிருந்து வரும் விளக்கம். ஆனால் இன்று அதற்கு புது வியாக்யானம் ஏற்படுத்தி பத்திரிகை உலகில் அனர்த்தம் விளைவிக்கப் பார்க்கின்றனர்.

தொடர் கதைகள், சிறு கதைகள் இவை பாதிக்குமேல் பல பத்திரிகைகளில் உள்ளனவாம். எனவே, அவைகளை பத்திரிகைகள் எனக்கொள்ள முடியாது என்பது தபால் இலாகா தலைமை அதிகாரியின் வியாக்யானம்.

கொலை, களவு, கள்ளக் காதல், நக்ஷத்திரங்களின் வாழ்க்கை ரகசியங்கள், இவை நிரம்பிய செய்தித்தாள், பத்திரிகை இவைகளுக்குத் தபால் சலுகை உண்டு. ஆனால் உள்ளத்தை அள்ளி வாழ்க்கைப் போக்கைப் பிரதிபலித்து மக்களை கண் விழிக்கச் செய்யும் பத்திரிகைகள் தபால் இலாகாவுக்கு ஒவ்வாது. நல்ல பண்புகளை மக்களிடயே தம் கதைகள் மூலமும், கட்டுரைகள் வாயிலாகவும் வளர்க்கும், தமிழ் வளர்ச்சிக்கு அடி கோலும் பத்திரிகைகள் தபால் சட்ட விளக்கத்திற்கு சற்று புறம்பாகப் பட்டாலும், அதிகாரிகள் அச்சட்டத்தைத் திருத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமேயல்லாது பத்திரிகைகளுக்குச் சலுகையை வழங்க மறுப்பது குறுகிய புத்தியைக் காட்டுகிறது. தலைக்குத் தகுந்த தலைப்பாகை தான் இருக்க வேண்டும். அதனை விட்டு விட்டு பத்திரிகைகளுக்கு ஒரு மாதம் அவகாசம் கொடுத்திருக்கிறோம், அதற்குள் உங்கள் தலையை மாற்றி அமைத்துக் கொள்ளாவிட்டால் தபால் சலுகை என்ற தொப்பி அளிக்கப்படமாட்டாது என்று கூறுவது விசித்திரமாக இருக்கிறது.

கதைக்கு மக்களிடையே இருக்கும் மோகம் வேறு எவ்வித இலக்கியத்திற்கும் இல்லை. நாடகங்களிலும் சரி, சினிமாவிலும் சரி, கதைக்குத் தான் முக்கியத்வம். அது கவர்ச்சியாக அமையாவிட்டால் நடிப்பெல்லாம் எவ்வளவு திறமையாக இருந்தாலும் மக்களைக் கவராது. ஷேக்ஸ்பியர் கதை வாயிலாகத்தான் தம் காவியத்தை இயற்றினர். அவர் இயற்றிய நாடகங்களைப் பத்திரிகைகளில் பிரசுரித்து வெளியிட்டால், அதற்கு தபால் சலுகை மறுக்கப்படும்.

இதன் அடிப்படைத் தத்துவம் என்னவென்றால் போஸ்ட் ஆபீஸ் ஆக்டில் உள்ள பத்திரிகை விளக்கம் நெடுநாட்களுக்கு முன்பு தொகுக்கப்பட்டது. அக்காலத்தில் பெருவாரியான பத்திரிகைகள் அரசியல் சம்பந்தப்பட்ட செய்திகளையும் கட்டுரைகளை மட்டுமே தாங்கி வந்தன. எனவே தான் சட்ட விதி அடியிற் கண்டபடி பத்திரிகைக்கு விளக்கம் தந்துள்ளது. "முழுமையிலோ அல்லது பெருவாரியாகவோ அரசியல் அல்லது இதர செய்திகள் அல்லது அதனை ஒட்டிய கட்டுரைகள் அல்லது வேறு சுடான விஷயங்கள் இவைகளை தாங்கி வரும் தாள்கள்"

கதைகள், இலக்கியக் கட்டுரைகள், விஞ்ஞான விஷயங்கள், குடும்பக்கலை, சினிமா இவைஎல்லாம் பத்திரிகைகளில் அதிகமாக அடிபடாத காலம். அரசியலும் அது சம்பந்தமான கட்டுரைகள் மட்டுமே தாங்குவது பத்திரிகைகளின் கடமை என்று கருதிய காலம்.

மேலும் மக்களின் கலை, இலக்கியம், விஞ்ஞான பொருளாதார ஞானம், நாகரிகம், பண்பாடு இதனை வளர்ந்தோங்கச் செய்வதே நோக்காகக் கொண்ட வார, மாதாந்தரப் பத்திரிகைகள் அக்காலத்தில் மிகச் சொற்பம். இக்காலத்தில் பல்வேறு வார, மாதப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. சுதந்தர இந்தியாவின் எழுச்சிக்கு, வளர்ச்சிக்கு இவை அஸ்திவாரம் போன்றவை. அதனைக் குலைக்க முயற்சிப்பது மக்களின் அறிவு வளர்ச்சிக்குத் தடை விதிப்பதாகும்.

இதனை நன்கு உணர்ந்து காலம் கடத்தாது மக்களின் பிரதிநிதிகள் என்று பறைசாற்றும் காங்கிரஸ் சர்க்கார் உடனடியாக தபால் இலாகா அதிகாரிகள் பத்திரிகைகளுக்குப் போடும் முட்டுக்கட்டைகளை அகற்றுவதோடு, சட்ட விளக்கத்தையும் காலத்திற்கேற்ப, சுதந்தர இந்திய மக்களின் தேவைக்கேற்ப, மாற்றவேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

காதல் இன்றேல்......!

தமாஷ்வாலா

"காதல், காதல், காதல், காதல் இன்றேல் சாதல், சாதல், சாதல்" என்று பாடினார் பாரதப் பெரும் புலவர் பாரதியார். அதற்குப் பொருள்கூற முன்வந்த வியாக்யான கர்த்தாக்கள் அதை விரித்துரைக்கும்போது மேற்கூறிய பொன்மொழிகள் காதலன், காதலி இருவருடைய மனோநிலையையும் படம் பிடித்துக் காட்டுவ காகத்தான் இதுவரை கூறி வந்திருக்கிறார்கள். ஆனால் மகாகவிகளின் பொன்மொழிகளில் மேலெழுந்த வாரியாக ஓர் அர்த்தம் இருப்பதும், ஆழ்ந்து ஊடுருவிப் பார்ப்பவர்களுக்கு அவற்றில் புதைத்து வைக்கப் பட்டிருக்கும் நுண்பொருள் புலனாவதும் நாமறிந்ததே. அதேபோல பாரதியாருடைய மேற்கூறிய பொன்மொழிகளுக்கும் ஆழ்ந்த நுண்பொருள் ஒன்று உண்டென்றே நான் கூறுகிறேன். 'சாதல்' என்பதனால் காதலில் தோல்வியுற்ற காதலன் காதலி இருவர் மடிவதை மாத்திரம் பாரதியார் குறிப்பிடவில்லை. உலகமே செத்து மடிந்துவிடும் என்ற ஒரு பெரிய உண்மையையே அவர் அப்பொன் பொழிகளின் வாயிலாக வாய் மலர்ந்தருளியிருக்க வேண்டும் என்பதே அடியேன் அபிப்பிராயம்.

நீங்களே சொல்லுங்கள். 'காதல்' என்னும் மஹா மந்திரம் இல்லாவிட்டால் இப்பிரம்மாண்டமான உலகம் இயங்க முடியுமா? உலகமாகிய பம்பரத்தை காதலாகிய கயிறு கொண்டு ஆதி கர்த்தா சுழற்றிவிட்ட அன்றுமுதல் அப்படியே சொக்கிப்போய் பம்பரம் தூங்குவதை நாம்தான் கண்ணாரக் காண்கிறோமே! ஆதி மனிதனையும் ஆதிஸ்திரீயையும் படைத்த அக்கடவுள் அவ்விருவருக்குமிடையே 'காதல்' என்னும் காந்தத்தை ஏற்படுத்தியிராவிட்டால் இப் பரந்த பூவுலக மக்களே தோன்றியிருக்கமாட்டார்களே! அண்ட சராசரங்களையும் ஊடுருவிப் பாயும் இந்தக் காதலின் சக்திக்குமுன் — உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன், அரசன், ஆண்டி. மேற்குலத்தவன், கீழ்குலத்தவன், பெரியவன், சிறியவன், அறிவாளி, அறிவிலி, முதலாளி, பாட்டாளி,...... அனைவரையும் ஒருங்கே ஆட்டிவைக்கும் இந்த அபார சக்திக்குமுன் — அணுகுண்டின் சக்தியேன்? எந்த சக்திதான் என்ன செய்யமுடியும்? அணுவில் பொதித்துவைத்த அவ்வளவ சக்தியையும், 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தில் திணித்துவைத்த அவ்வளவு சக்தியையும் புற முதுகு காட்டி ஓடச்செய்துவிடுகிறதே காதலின் சக்தி!

'காதல்' என்னும் மூன்றெழுத்து மந்திரம் என்னென்ன வேலையையெல்லாம் செய்திருக்கிறது? நூற்றுக் கணக்கான வருஷங்களாக நடுக்காட்டில் கடுந்தவம் புரிந்துவந்த விசுவாமித்திர மகரிஷியை ஒரு விநாடியில் தலைகுப்புற விழச்செய்துவிட்டாளே மேனகை தன் மோஹனப் புன்னகையால்! தன் காதலுக்காக ஒரு பெரும் சாம்ராஜ்யத்தையே தியாகம் செய்தானே மேனாட்டு இளவரசன் ஒருவன் சமீபகாலத்தில்! தன் காதலியின் சவத்துக்கு சலவைக்கற்களாலான கோயில் கட்டினான் ஷாஜஹான்! முடிவணங்காமன்னன் என்று பெயர்பெற்ற பெரும் வீரன் நெப்போலியன் தன் ஆருயிர்க்காதலி ஜோஸபைனின் காலடியில் ஆயுள் பரியந்தம் தவம் கிடந்தான் காதல் பேசும் அவள் கண்வீச்சுக்கு அடிமையாக! காதலின் மின்சார அதிர்ச்சியால் தாக்குண்டு திக்குமுக்காடியவர்களின் ஜாபிதா வெகு நீளம்! வெகு வெகுநீளம்!

எந்த நாட்டின் எந்த காவியத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள், காதலைப் பற்றிய கதை, கவிதையில்லாத நாடே இல்லை, காவியமே இல்லை, பழங்காலக் கவிகள்தான் காதலை எவ்வளவு ரசனையுடன் அனுபவித்துப் பாடியிருக்கிறார்கள்! தெய்வப்புலமைத் திருவள்ளுவர் கூட காதலுக்காக ஓர் அத்தியாயத்தையே அல்லவோ தமது திருக்குறளில் ஒதுக்கியிருக்கிறார்! 'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில' என்ற அடியில் எவ்வளவு ஆழமான, கருத்துச் செறிவுள்ள அனுபவ பூர்வமான, உண்மையைப் புதைத்து வைத்திருக்கிறார்! கவியரசன் கம்பனின் ராமாயணத்தைத் தான் எடுத்துக் கொள்ளுங்களேன். ஜனகனது வில்லையொடிக்க மிதிலாபுரிக்கு கட்டழகன் இராமபிரான் விஜயம் செய்தபோது உப்பரிகையின் மீது நின்று அவனைப் பார்க்கிறாள் சீதாபிராட்டி. அதை வர்ணிக்கும் கம்பர் தமக்கே உரித்தான முறையில் 'அண்ணல் நோக்கினான்; அவளும் நோக்கினாள்' என்ற நான்கே வார்த்தைகளில் எவ்வளவு அழகாக அவர்களிடையே ஏற்பட்ட பரஸ்பர காதல் உணர்ச்சியை விளக்கிவிட்டார். இன்னும் எந்த நாட்டின் எந்தக் காவியத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். காதலில் திளைக்காத காவியமே கிடையாது. காவியங்களில் கவிரசம் சொட்டுவதெல்லாம் காதல் என்ற கட்டங்களில்தான்! 'காதல்' என்று ஒன்று இல்லாவிட்டால் இந்தக் காவியங்களே ஜனித்திருக்க முடியாதே! இதிகாச புராணங்களைத் தான் எடுத்துக் கொள்ளுங்களேன். மேனகை காதல், அகலிகை காதல், ரம்பையின் காதல், இந்திரன் காதல், சந்திரன் காதல் ... ...

அங்கேயும் சர்வம் காதல் மயம்தான்! ஓவியங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அல்லது சிற்பங்களைத் தான் எடுத்துக் கொள்ளுங்கள். எதை எடுத்துக்கொண்டாலும் அங்கே காதலுக்கு ஒரு தனி இடம், ஒரு தனிச்சிறப்பு கொடுக்கப்பட்டுத் தான் இருக்கிறது. 'காதல்' இல்லாத கதையோ, கவிதையோ, ஓவியமோ, சிற்பமோ ஜீவனற்றதாகத் தான் இருக்கிறது. ஏன்? காதல் இல்லாவிட்டால் வாழ்க்கையே உப்புசப்பற்றதாகத் தானே இருக்கும்? இரண்டாம் கலியாணத்திற்குப் பிறகு கிழவனும் குமரனாகிவிடுவதை நாம்தான் நமது தினசரி வாழ்க்கையில் காண்கிறோமே! இதையெல்லாம் அறிந்துதானே நம் பண்டைத் தமிழ் மக்களும் சரி, மற்ற நாட்டினரும் சரி, காதலுக்கென்றே ஒரு தனிக் கடவுளை ஒதுக்கியிருக்கிறார்கள்!

யாரோ ஒரு மேனாட்டு மேதாவி கூறினானாம்; 'உலகம் அதன் வயிற்றின் மேல் ஊர்ந்து செல்கிறது' என்று. அதாவது 'பசி' என்னும் பிணி மாத்திரம் மனிதனுக்கு இல்லாமலிருந்தால் உலகமே நடைபெறாது என்று. ஆனால் நான் கூறுகிறேன்; 'உலகம் காதல் மேல்தான் ஊர்ந்து செல்லுகிறது', என்று. 'காதல்' என்ற உணர்ச்சியைமாத்திரம் கடவுள் உலகத்திலிருந்து எடுத்து விடட்டும். பிறகு உலகம் போகிற போக்கைப் பற்றி நீங்களே கற்பனை செய்து பாருங்கள். நவநாகரிகமான உடையுடுத்தி வேளைக்கொரு நகைபூட்டி, ஒய்யார நடைபயிலும் காலேஜ் குமரிகளைக் காணத்தான் முடியுமா? பகட்டான பட்டாடையுடுத்தி, மிடுக்கான நடைபோட்டுச் செல்லும் காதல்ஜோடிகள் கொண்ட கடற்கரையைத் தான் காணமுடியுமா? அலங்கார ஆடை அணிந்து அகங்கார நடை நடந்து பவனிவரும் கட்டழகிகளின் வருகைக்காக வழிமேல் விழி வைத்து அங்கே தவம் கிடக்கும் 'மைனர் ஜாலி மணிபர்ஸ் காலி'களைத்தான் காணமுடியுமா? காதல் கனிரசம் சொட்டும் காவியங்களைத்தான் உலகம் கண்டிருக்க முடியுமா? ஓவியம், நாட்டியம், சிற்பம், சங்கீதம் முதலான அறுபத்து நான்கு கலைகள் தான் உதித்திருக்க முடியுமா? காதல் இல்லாவிட்டால் உலகமே களையற்று. அழகற்று, சோலையற்று, ஜீவனற்று, ஒரு வறண்ட பாலைவனமாக அல்லவோ ஆகியிருக்கும்? இதையெல்லாம் முன்கூட்டி அறிந்துதானே சர்வக்ஞனான சர்வேஸ்வரன் 'காதல்' என்று ஓர் அபார உணர்ச்சியையே உலகத்தில் ஏற்படுத்தியிருக்கிறான்? அதிலும் மனிதனுடைய ஏகபோக உரிமையாக அதை விடாமல் முப்பத்து முக்கோடி ஜீவராசிகளிடத்தும் இந்தக் 'காதல்' உணர்ச்சியை அவர் ஏற்படுத்தியிருப்பதிலிருந்தே அதன் அத்யாவசியம் புலப்படவில்லையா?

அதனால்தான் கூறுகிறேன்; காதல் இன்றேல் காவியம் இல்லை, ஓவியம் இல்லை; கதையில்லை, கவிதையில்லை; கற்பனையில்லை, (பத்திரிகைகளுக்கு) விற்பனையில்லை; கலையில்லை, சிலையில்லை; சினிமா இல்லை, டிராமா இல்லை; கனவில்லை, நனவில்லை; நானுமில்லை, நீங்களும் இல்லை; உலகமேயில்லை—ஏன் இந்தக் கட்டுரையுமில்லையே! ★

சினிமா பட விமர்சனம்:

கடன் வாங்கி கல்யாணம்

கடன் வாங்கி, நெஞ்சம் கலங்கி வாழ்க்கை நடத்துபவர்களைக் கூடக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் சக்தி வாய்ந்ததோர் சிறந்த சித்திரமாகும் விஜயாவின் "கடன் வாங்கி கல்யாணம்."

பிசகான காரியங்களைச் செய்ய முற்படும் பெரியவர்கள் மனது நோகாமல் அவர்களது போக்கிலேயே போய் பக்குவமான சமயத்தில் அவர்களை நல்வழிப்படுத்த வேண்டியது இளைஞர்களின் கடமை என்கிற கருத்தை மையமாகச் கொண்டு அழகாகச் சுழலுகிறது கதை.

முதல்தரமான நக்ஷத்திரங்கள் நிறைந்த இப் படத்தில் டி. எஸ். பாலையாவின் பழுத்த நடிப்பு அழுத்தமாகப் பதிந்திருக்கிறது. அடுத்தபடி, தங்கவேலு செம்மையாகப் பேசி பம்பரமாக ஆடுகிறார். ஜெமினி கணேஷின் 'ராஜா' வேஷம் தேவலை. அவரது சந்நியாசி கோலம் சுமார். சாதாரண கதர் ஜிப்பாவில் சர்வ சாதாரணமாகக் காட்சி அளிக்கிறார். சாவித்திரியின் சீரான நடிப்பில் உயர்தரமான அம்சம் என்று எதையும் குறிப்பிட்டுச் சொல்வதற்கில்லை. கே. சாரங்கபாணி, எல். நாராயண ராவ் இருவர் நடிப்பும் கச்சிதம். எல். வி. ரங்காராவ் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. ஜமுனா ஊமைப் பேச்சோடு சரி. ஈ. வி. சரோஜாவின் நடனம் கண்கவர் கேவா கலரில், வெகு நேர்த்தி. டி. ஆ. ராமச்சந்திரன் 'லண்டன் துரை' யாகத் திரும்பியும் அதிகமாக எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

வசனம், பாடல்களை அமைத்தவர் தஞ்சை ராமையாதாஸ். வசனங்களில் ஹாஸ்யச் சுவை அளவோடு இருக்கிறது. பாடல்களில் அதிக விறுவிறுப்பு இல்லை.

சாது சன்னியாசிகள் கூத்து அளவுக்கு மிஞ்சுகிறது. படக்கதையை முடிக்க கடைசி காட்சிகள் குழம்பித்தவிக்கின்றன.

நாகிரெட்டி, சக்ரபாணி நிர்வகித்து வாஹினி ஸ்டுயோவில் நன்கு வளர்த்துள்ள இப்படத்தை திறம்பட டைரக்டர் செய்திருக்கிறார் பிரசாத். கையில் காசில்லாவிட்டாலும் கடன் வாங்கிக்கூட இப்படத்தைப் பார்ப்பதில் பிசகில்லை. ★

மூன்றும் முறை

பட்டாபி. நாராயணன்

காரியாலயத்திலிருந்து களைப்புடன் வீடு திரும்பிய சட்டநாதனை அதிக நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளவிட வில்லை பறந்தோடி வந்த தந்திச் சேவகன்,

உடல் சற்று ஓய்வு பெறட்டும் என்ற நோக்குடன் அவன் வாசல் அறையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தான். அவனுடைய உள்ளத்தால் மட்டும் அந்தக்குறுகிய இடைக்காலத்தில் அமைதியைப்பெற இயலவில்லை. பலவிதமான சிந்தனைகள்! குழப்பமூட்டும் கற்பனைச் சுழற்சிகள்!!

மூன்றும்முறை! மார்கழி மாதம். திருவாதிரைத் திருநாள்! அதைப்பற்றி நினைத்தவுடனே சட்டநாதனுக்குப் பகீரென்றது.

புத்தாடை புனைந்து, தெய்வவழிப்பாட்டிற்குப் பிறகு அன்பு கொண்ட மனைவியுடனும் சேர்ந்து இன்பமாகக் கழிக்கப்பட வேண்டிய அப்புனித தினம் இரண்டு முறைகளாக அவனுக்கு ஒரு கடுஞ்சோதனைத் தினமாகவே அமைந்தது.

மூன்றும் முறையாகப் பண்டிகை வருவதற்கு மேலும் பத்து நாட்கள்தாம் இருந்தன. அவனுக்குத் திருமணம் முடிந்த பிறகு வந்த மூன்றும் பண்டிகை அது. முதல் இரண்டு பண்டிகைகளுக்கு முன்னேடி போன்றமைந்த அதே அறிகுறிகள், வழக்கம், தன்மை இவை சற்றும் மாருமல் இப்போதும் தோன்றின.

விமலா—தங்கச்சிலை போன்ற தன் மனைவியைப் பற்றிய நினைவு வந்ததும் சட்டநாதனின் கண்கள் கலங்கின. அவளைப்பற்றிய சிந்தனை தான் அதுகாறும் அவனுடைய உள்ளத்தை நிரப்பிக்கொண்டிருந்தது. அவளுக்குற்ற நிகழ்கால நிலையைக் கடந்துபோன பழைய நிகழ்ச்சிகளின் பின்னணியில் அமைத்து ஒப்பிட்டுக் கொண்டிருந்தது கலக்கமுற்றிருந்த அவனுடைய உள்ளம்.

கண்களை மூடிக்கொண்டதால் அவனுடைய சிந்தனை உலகம் இருண்டு விடவில்லை. அவனுடைய வாழ்க்கையில் குறுக்கிட்ட, கடந்தகாலச் சம்பவங்கள் மீண்டும் அவன் உள்ள அரங்கில் ஒத்திகையிட்டுக் காட்டின.

சட்டநாதன் நல்லவருவாயுடையவன். பிரசித்திபெற்ற கம்பெனியொன்றின் தலைமை நிர்வாகி. வயதிற்கேற்ற வளர்ச்சி. வளர்ச்சிக்கேற்ற வனப்பு. வனப்புக்கேற்ற பண்பு எல்லாம் நிறைந்த இளைஞன். வயது இருபத்தொன்பது தான் என்றாலும்— அந்த வாலிபக்கால வரம்பிற்குள் மூன்று முறை கணவன் ஆகிவிட்டான். விமலா அவனுடைய அன்புக் கரங்களைப் பற்றிய மூன்றும் மனைவி. வாழ்க்கையில் ஏற்பட்ட அதிர்ச்சிகளின் அடுக்கினுல் சட்டநாதனின் உடலும் உள்ளமும் தளர்ந்தே காட்சியளித்தன. இப்போதும் மூன்றும் முறையாக அதே கடும் சோதனை. அவன் வாழ்வில் குறுக்கிட்டது. சோதனையிலும் கொடிய சோதனை— அவனுடைய வாழ்வையே பாதிக்கும்படியான சோதனை!

முதல் முறை:

சட்டநாதன் முதல் முறையாகத் தான் காதலித்த பெண்ணையே மணந்துகொண்டு விட்டோமென்ற பெருமிதத்தில் தன்னை மறந்திருந்தான். ஜனகம்! ஆம்! அவள்தான் அவனுடைய முதல்மனைவி. மனைவியாக்கிக் கொள்வதற்கு முன்பு அவனுடைய கல்லூரித் தோழி. அடுத்து அவனுடைய மாணவியும் ஆனுள் ஜனகம். அவன் எம். ஏ. இறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது அவளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவனுக்குக் கிட்டியது. இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்தவுடன் ஜனகத்திற்குக் கணிதப் பாடமே பிடிபடவில்லை,



ஜனகத்தின் தந்தையும்,சட்டநாதனின் தந்தையும் பழங்கால நண்பர்கள். பெண்ணைப் பெற்றவரின் வற்புறுத்தலினால் பிள்ளையைப் பெற்றவர் சட்டநாதனைக் கேட்டுக்கொண்டார். அது முதல் கணித ஆசிரியராகத் தொடர்பைத் தொடங்கிய சட்டநாதன், ஜனகத்தின் இதய பீடத்திலேயே நிரந்தரமானதொரு இடத்தைப் பெற்றான். இன்பங் கொழிக்க, அடுத்த ஆண்டே சட்டநாதன் எம். ஏ. ஜனகத்தின் தளிர்க் கரங்களைப் பற்றினான். கொழித்த இன்பம் செழித்து வளரவில்லை!

ஜனகம் 'தற்கால நாகரீகம்' என்ற மெருகிடப் பட்ட ஒரு காவியப் பெண்ணாகவே திகழ்ந்தாள். மெல்லிய சரீரம். நடனப் பயிற்சியும் பெற்றிருந்ததால் அவளுடைய உடலின் அளவோடு கூடிய வளர்ச்சி சட்டநாதனின் மனதை ஈர்த்தது. வில்லையொத்த புருவத்தினின்று விடு பட்ட அம்பைப் போன்ற அவளுடைய அழகு நடையில், இனிமை கலந்த சிரிப்பில், பேச்சில் தன்னை மறந்தான். திருமணம் சிறப்பாக நடந்தேறியது,

அந்த வருடப் பண்டிகையும் நெருங்கிக்கொண்டிருந்தது. பண்டிகைக்கு ஒருமாதம் இருக்கும் போதே அவர்களுடைய இன்பவாழ்வில் இருளின் சாயல் படரத்தொடங்கியது. செல்வத்தில் காணாத குறையை அவர்கள் தம் சுகத்தில் கண்டார்கள்; திடீரென்று இருமத் தொடங்கிய ஜனகம், ரத்தத்தையும் வெளிப்படுத்தினாள். அவளுடைய பொன்னிற உடல் வெளுத்தது. இடைவிடாது காய்ச்சலடிக்கத் தொடங்கியது.

ஜனகம் மெலிந்து படுத்த படுக்கை ஆனாள். அவளுடைய எழிலை விநாடிக்கு விநாடி அந்த நோய் கொள்ளையுண்டது.

ஜனகத்தின் உடல் நோகக்கூடாதே என்ற ஒரே நோக்குடன் சமையல் செய்வதற்கென்று ஒரு வயதான அம்மாளை அமர்த்தியிருந்தான் சட்டநாதன். நிலைமை அவளுடைய உடலை மட்டும் வருத்துவதுடன் நின்றுவிடவில்லை. உள்ளத்தையும் சிதைத்தது. ஜனகம் நம்பிக்கையை இழந்துவிட்டாள்.

தான் இனிப் பிழைக்கப்போவதில்லை என்ற மனக்கவலையைக் காட்டிலும், தன் உயிரான சட்டநாதனின் எதிர்காலம் சூனியமாகிவிடுமே என்ற பயம் அவளை இறுகப் பிடித்தது. படுத்த படுக்கையாக இருந்தாலும் சமையற்கார அம்மாளைக் கண்காணித்து வேலை வாங்கினாள். தன் கணவனுக்கு ஒரு குறையும் ஏற்படக்கூடாது. அவர் சிறிதும் வேதனைப்படக்கூடாதென்று முழு முயற்சி எடுத்துக்கொண்டாள்.

அந்த அம்மாள் சற்று சங்கோஜி என்று அறிந்தவுடன் உதவிக்கு ஓர் ஆளையும் அமர்த்திக் கொள்ளும்படி சொன்னாள். அந்த அம்மாள் ஜனகத்திற்கு அறிமுகம் செய்துவைத்தவள்தான் அனுசுயா. அனுசுயா வேறு யாருமில்லை. சமையற்கார அம்மாளின் ஒரே புதல்வி.

அனுசுயா வீட்டு வேலையைக் கவனிக்கத் தொடங்கிய ஒரு வாரத்திற்குள் ஜனகத்தின் உள்ளம் அவளிடம் ஈடுபட்டுவிட்டது. வண்டு போன்ற அவளுடைய முகம், சிரித்துச் சிரித்துப் பேசிக் கேட்பவர்களுடைய மனக்கவலையைப் போக்கடிக்கும். அவளுடைய திறமை, உணவு, உறக்கம் இவற்றைப் பற்றிச் சிந்தனையின்றி தேனீயைப் போன்ற அவள் உழைப்பு இவை தாம் ஜனகத்தின் உள்ள ஈடுபாட்டிற்குக் காரணம். அரைகுறையான நினைவில் ஜனகம் வேதனையுற்று நடுநிசியில் பேத்திப் புலம்பியபோது தலைமாட்டில் ஒரு ஜீவன் உட்கார்ந்தவாறு அவளுடைய

தலையை வருடிக் கொடுத்தது. ஜனகத்தை நிமிர்த்தி உட்கார வைத்துக் 'குளுகோஸ்' தண்ணீரைக் கொடுத்து ஆறுதலளித்தது. கண் விழித்துப் பாத்தாள் ஜனகம்.

"அனுசுயா? தூங்க வில்லையா இன்னும்?..."

"இல்லே அக்கா! தூங்கிக் கொண்டுதானிருந்தேன். இப்போதுதான் விழித்துக் கொண்டேன். நீங்கள் நிம்மதியாகத் தூங்குங்கள் அக்கா!"

"அனுசுயா! எனக்காக நீயும் உன் உடம்பைக் கெடுத்துக் கொள்ளப் போகிறாய். அவ்வளவுதான்!"

"எனக்கு என்ன அக்கா! இரும்புக் கட்டையை வேக வைத்தவள் நான்! என் கிட்டே எந்த வியாதியாவது வாலாட்டுமா?"

ஜனகம் குப்பென்று சிரித்தாள். உறக்க மூட்டும் நடு நிசியிலும் அனுசுயா தன் குறும்புத்தனத்தையும் கேலிப் பேச்சையும் கை விடவில்லையே என்று வியந்தாள். அவள் 'அக்கா அக்கா' வென்று அடிக்கடி அழைத்த போது ஜனகம் இந்த உலகை மறந்தாள். வெட்டுண்ட தன் உள்ளத்திற்கு இதமான மருந்தைப் போன்று அவளுக்குப் பட்டது அனுசுயாவின் அன்புக் குரல்.

சட்டநாதனின் எதிர்கால இல்வாழ்வைப் பற்றித் தன் இதயத்தில் வியாபித்திருந்த இருளைப் போக்கியது அந்தக் குரல்—குரலுக்கு உரியவளின் எழில் உருவம்—அந்த உருவத்தின் அன்பு, தியாகம், தன்னலமற்ற செயல்.

தனக்குள் ஒரு முடிவுக்கு வந்து விட்டாள் ஜனகம். வியாதியின் கொடுமை வளர்ந்தது. சட்டநாதன் அவளைப் பிறந்த வீட்டிற்கு அனுப்பி வைத்தான். பண்டிகைக்கு நான்கு தினங்களுக்கு முன் வந்த தந்தி சட்டநாதனை அலறி அடித்துக்கொண்டு ஜனகத்தின் பிறந்த வீட்டிற்கு ஓடச் செய்தது. ஜனகத்தின் அனுமானம் ஊர்ஜிதமாகி விட்டது. அவள் மீளா விடை பெற்ற போதும் அனுசுயா அவளுடைய தலைமாட்டில் தான் இருந்தாள்.

'ஜனகம்! ஜனகம்!' என்ற சட்டநாதனின் கதறலைக் காட்டிலும், 'அக்கா! அக்கா!' என்ற அனுசுயாவின் அலறல் அவனை ஆகர்ஷித்தது.

அனுசுயாவை நோக்கிக் கையை அசைத்தாள் ஜனகம். அவளும் அருகில் வந்து நின்றாள். சட்டநாதனின் உள்ளங்கைகளில் அனுசுயாவின் கரங்களைப் பதித்தாள்.

இரண்டாம் முறை

ஜனகம் பணித்த கட்டளையை மீற முடியாத நிலையில் ஏற்றுக்கொண்டு அவளுடைய ஆன்மாவைச் சாந்தியடையச் செய்தான் சட்டநாதன். அனுசுயா ஜனகத்திற்காகச் செய்த தொண்டிற்குத் தன் உடமை முழுவதையும் பணயம் வைக்கத்தயாராகயிருந்தான். முதலில் அனுசுயாவைத் தன் இரண்டாம் மனைவியாக ஏற்றுக்கொள்வது அதுவும் ஜனகத்தின் பிரிவு அவனுடைய உள்ளத்தை ரணப்படுத்திய அதே வேளையில் அவனுக்கு மிகவும் கடுமையான சோதனையாகத் தானிருந்தது. வாழ்வே பாலைவனமாகி விட்டதைப் போன்ற ஓர் உள்ளுணர்வு. எதிலுமே ஈடுபாடற்ற போக்கைத் தன்னுள் வளர்த்துக் கொண்டான். அடிக்கடிக் கண்ணீர் சிந்தினான்.

பிறர் துயரைப் போக்குவதையேத் தன்லட்சியமாகக் கொண்ட அனுசுயா ஜனகத்திடம் இறுதியில் தோல்வியுற்றாலும், சட்டநாதனிடம் வெற்றியே கண்டாள். அனுசுயாவின் ஏழ்மையான பிறப்பு அவர்களுடைய இல்வாழ்வில் குறுக்கிடவில்லை. ஏழ்மையிலும் அவளிடம் மிளிர்ந்த எளிமை, பரிசுத்தம், அவளைச் சட்டநாதனுடன் ஒன்றுபடுத்தியது.

சூரியன் உதயமாகும் போதே அதற்குக் கிரகணம் பிடித்தால் எப்படி இருக்கும்? அது போன்றுதான் ஜனகத்தை இழந்ததால் சூழ்ந்த இருள் கலையுமுன்பே அடுத்து பேரிருள் ஒன்று சட்டநாதனைத் தொடர்ந்தது. இரண்டாம் பண்டிகையையும் அவனால் இன்பமாகக் கொண்டாட முடியவில்லை.

ஜனகம் நோய்வாய்ப்பட்டபோது உறுதுணையாக நின்று உதவிசெய்ய அனுசுயா தோன்றினாள். எளியவர்களுக்குத் தெய்வம்தான் துணை என்பார்கள்! பண்டிகைக்கு இருதினங்களுக்கு முன்பு அனுசுயாவும் படுத்தவள் தான். தன்னைப் பற்றியே சட்டநாதனுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. ஜனகத்தைப் பறித்துச் சென்ற அதே வியாதியின் அறிகுறிகள்! அதே முடிவு! "அக்கா அழைக்கிறாள்" என்ற சொற்றொடர்தான் அனுசுயாவின் இறுதிக் குரலாக அமைந்தது.

மூன்றாம் முறை

வாழ்வின் கொடுமைக்கு ஒரு பிரதிநிதியாக, துயரத்தின் உருவமாக, எதிலுமே ஈடுபாடற்ற ஒரு தனி மனிதனாகவே வாழ்ந்து விட வேண்டுமென்றுதான் சட்டநாதன் முடிவு செய்திருந்தான்; சந்தர்ப்பமும் சூழ் நிலையும்—ஏன், விதியும் சேர்ந்து ஒரு மனிதன் எண்ணியது எண்ணியபடியே நடைபெறச் செய்துவிட்டால் மனிதன் ஏது? வாழ்வு ஏது? வாழ்வின் சுவை என்பதுதான் ஏது? சூழ்நிலை கட்டாயப்படுத்தியது. சட்டநாதன் மூன்றாம் முறையாகவும் கணவனானான்.

அவனுடைய துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள முன் வந்தவள் தான் விமலா. விமலாவை அவன் மணந்ததே ஒரு விந்தையான நிகழ்ச்சி.

விமலாவின் தந்தை சத்தியமூர்த்தி சட்டநாதன் வேலை பார்த்தக் கம்பெனியின் பிரதம குமாஸ்தா. வயதும் நாணயமும் மிகுந்தவர்; சட்டநாதன் அவரிடம் அளவு கடந்த மரியாதையும், நம்பிக்கையும் கொண்டிருந்தான். அமைதியும் லாபமும் குடிகொண்டிருந்த அக் கம்பெனியில் திடீரென்று குழப்பமும் கவலையும் சூழ்ந்தது. எல்லோரும் ஒரு முகமாக வியப்பில் ஆழ்ந்தார்கள்,

"என்ன ஐயா? மூர்த்தியும் கூட இப்படிச் செய்வாரா!...ஒன்ரு, இரண்டா...ரூபாய் இரண்டாயிரமாயிற்றே!... முதலாளி இப்படித் திடீரென்று சோதனை போடா விட்டால்..." சக தொழிலாளிகள் எல்லோருடைய நாவிலும் இதே பேச்சுத்தான்! பற்ருக் குறைக்குச் சட்டநாதனுடைய பெயரையும் அவர்களுடைய வம்புப் பேச்சில் இழுத்துக் களங்கப் படுத்தினுர்கள்.

"மானேஜர் என்னைய்யா தூங்கிக் கொண்டாயிருந்தார்?" என்ருர் ஒரு சிப்பந்தி.

"அவரென்னைய்யா செய்வார்? அவரே தம் நிலை தெரியாமல் தவிக்கிருர். இரண்டு பெண்டாட்டிகளைப் பறி கொடுத்து விட்டு..." என்று அனுதாபப்பட்டுக் கொண்டார் மற்ருெருவர்.

சட்டநாதனுடைய காதுகளுக்கும் அவர்களுடைய பேச்சின் சாரம் எட்டியது. குடும்பத் துயரச் சுமை, போதாதென்று இக் கொடிய பழிச் சுமையையும் தாங்க மாட்டாமல் துடித்தான். அதற்கு அடுத்த நாள் இரவு சட்டநாதனின் வீட்டுக் கதவு பட பட வென்று இடிக்கப் பட்டது. சேவகன் கதவைத் திறந்து விட வெறி பிடித்தவரைப் போன்று சத்தியமூர்த்தி நுழைந்து சட்டநாதனின் கால்களில் தடாலென்று விழுந்தார்.

"சட்டம்! சட்டம்!... நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். ஆத்திரத்தில் என் புத்தி மழுங்கி விட்டது. நான் எந்த தண்டனையும் ஏற்றுக் கொள்கிறேன். ஜெயிலுக்கும் போகத் தயாராக இருக்கிறேன். தாயை இழந்த என்னுடைய ஒரே பெண் விமலாவிற்கு—அவளுடைய நல்வாழ்விற்காகத்தான் நான் இந்தக் கொடிய செயலைத் துணிந்து செய்தேன். செய்தும் பயனற்றுப் போய்விட்டது. நான் நினைத்தது—எதிர்பார்த்தது ஒன்றுமே நடக்கவில்லை. விமலாவுக்குக் கல்யாணம் செய்து வைக்கும் வரைக்கும் எப்படியாவது என்னைக் காப்பாற்றுங்கள், சட்டம்!"

சட்டநாதனுக்கு அவர் கையாடல் செய்து விட்டார் என்ற ஆத்திரமும், கோபமும் ஒரு புறம் ஏற்பட்டாலும், தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு பெரியவர் தன் காலில் விழுகிருரே என்ற கலக்கம், இரக்கம் மறுபுறம் ஏற்பட்டது.

"என்ன சத்யம்?நீங்கள் பெரியவர். இப்படியெல்லாம் இந்தச் சிறியவன் காலில்... என்ன இதெல்லாம்? விமலா என்பவள் உங்கள் பெண்ணு? நீங்கள் நினைத்தது என்ன? நடவாமல் போனது எது?" என்று கேட்டு அவரைச் சமாதானப் படுத்திய பிறகு தான் அந்த அதிர்ச்சியூட்டும் விளக்கத்தை அவர் வெளிப்படுத்தினர்.

சத்தியமூர்த்தி கம்பெனிப் பணம் இரண்டாயிரத்தை எடுத்து உபயோகித்து விட்டது உண்மைதான். இரு தினங்களுக்கு முன்புதான் அவர் அப்படிச் செய்துவிட்டார். அதுவும் ஒரு புனித காரியத்திற்காகத்தான். தாயை இழந்த தன் ஒரே புதல்வி விமலாவின் வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொடுக்கும் முயற்சியில் தான்.

ஆனல் கையாடல் செய்த பணம் கரைந்ததேயொழிய காரியம் ஒன்றும் கைகூடவில்லை. தம் பூர்வீக நிலத்தை விற்பனைக்குப் பேசிவிட்டால் ரொக்கமாக இரண்டாயிரம் ரூபாய் கிடைத்து விடும். எடுத்த பணத்தை போட்டுவிடலாம் என்ற நம்பிக்கையின் பேரில் தான் அவர் துணிந்து அச் செயலைச் செய்தார். வாய்வாக்காகப் பிள்ளை வீட்டார் சொன்னதன் அடிப்படையில் திருமண ஏற்பாட்டில் பணத்தின் பெரும்பகுதியைச் செலவழித்தும் விட்டார்.

நூருே இருநூருே தான் எஞ்சியது. அத்துடன் மிஞ்சியது அந்தப் பிள்ளை வீட்டார் அடித்திருந்த தந்தியும் தான். "பையனுக்குப் பெண் பிடிக்கவில்லை" என்ற அந்தத் தந்தியின் வாசகம் அவர் தலையில் சம்மட்டியைப் போன்று அடித்தது. நிலமும் குறித்த காலத்தில் விலையாகவில்லை· மனிதனுக்குப் பேரதிர்ச்சி வேறென்ன வேண்டும்.

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாகப் பெற்றிருந்த சட்டநாதனுக்கு அது ஒன்றும் ஒரு பெரிய பொருளாகப் படவில்லை. அவன் மூர்த்திக்கு அளித்தது ஒருபொருள் பொதித்த புன்சிரிப்புத் தான்! மூர்த்தி வியப்புற்று கண்கள் நிலைத்தவாறு சட்டநாதனைப் பார்த்தார்.

மூர்த்தியின் கவலையை நொடிப் பொழுதில் போக்கினுன் சட்டநாதன். அந்த வினுடியே உள்ளே சென்ருன். வெற்றிலை பாக்குத்தட்டில் ரூபாய் இரண்டாயிரத்துடன் திரும்பினுன். பெரியவருடைய கைகளில் கொடுத்து நமஸ்கரித்தான்.

"என்ன சட்டம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே" என்ருர் மூர்த்தி.

"புரிந்து கொள்வதற்கு இதில் என்ன இருக்கிறது, மாமா? முதலில் இந்தப் பணத்தை நாளையே ஆபீஸில் சேர்த்து விடுங்கள். வாழ்க்கையில் கஷ்டப்பட்டவனுக்குத்தான் கஷ்டப் படுகிறவர்களைப் பற்றித் தெரியும். முதலில் உங்கள் மாப்பிள்ளையை ஆசீர்வதியுங்கள்!" என்ருன் சட்டநாதன்·

சொல்லால் வியப்பூட்டிய சட்டநாதன் தன் செயலாலும் மூர்த்தியை வியப்புக் கடலிலாழ்த்தினன். விமலாவைத் தன் மனைவியாக ஆக்கிக் கொண்டான். தம்முடைய பெண்ணும் சட்டநாதனும் லட்சியத்தம்பதிகள் தாம் என்றுஎண்ணி எண்ணிப் பூரிப்படைந்தார் அவ்விருவருடைய இல்வாழ்வைக் கண்டு அனுபவித்த மூர்த்தி.

மூன்றும் முறையாகப் பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்தது. சட்டநாதனுக்குத் தன்மீது கொண்டிருந்த நல்லெண்ணம், உறுதிபாடு அறவே அழிந்துவிட்டது. பதினைந்து தினங்களுக்கு முன்புதான் விமலாவை மூர்த்தி தம் கிராமத்திற்குக் கூட்டிச்சென்றார். அதே இருமல்! வாந்தி! வெளுப்பேறிய உடல்! சோர்வு உண்டாக்கும் காய்ச்சல். விமலா வேதனையால் வாடினாள்.

தன்னுடைய போதாத காலம் தெரிந்திருந்தும் மூன்றாம் முறையாக விமலாவையும் பலியிடப் போகிறோமே என்ற எண்ணம் சட்டநாதனைப் பைத்தியமாக்கியது. அவளைப்பற்றித்தான் சிந்தித்துக்கொண்டேயிருந்தான்!

* * * *

நீண்டநேரம் நின்று பார்த்துவிட்டுத் தந்தி சேவகன் 'சார்!' என்ற பலத்த குரல் கொடுத்தான். சட்டநாதன் திடுக்கிட்டுச் சுய உணர்வு பெற்றான். யந்திரத்தைப் போன்று கையெழுத்திட்டு அவனை அனுப்பிவிட்டு தந்தியை முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்தான். அந்தத் தந்தியின் உறை சற்று மெல்லிய காகிதமாக இருந்தபடியால் உட்புறம் 'மூர்த்தி' என்ற எழுத்துமட்டும் நன்றாகத் தெரிந்தது. வந்த தந்தியைத் தூக்கி ஒரு மூலையில் எறிந்தான்.

அவனுடைய 'நெற்றிப் பொட்டு' விண் விண்ணென்று தெறித்தது. தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டான். அவனுடைய உடல் முழுவதும் பீதியின் கொடிய வெப்பம் பரவியது. நினைத்தபடியே நடக்கிறதே என்று மனம் வெதும்பினான். எதைப்பற்றி முழுநேரமும் சிந்தித்துக்கொண்டிருந்தானோ அதுவே செயல்படுகிறதே என்று உள்ளங் கலங்கினான். வந்த தந்தியைப் பிரித்துக்கூடப் பார்க்கவில்லை.

'பதறியடித்துக்கொண்டு ஓடிப் போய் நாம் எதைத் சாதித்து விட்டோம். விமலாவுக்கும் அதே சோதனை ஏற்பட்டிருக்கிறது. இப்போது நாம் போய்த்தான் என்ன செய்துவிட முடியும்? ஆண்டவன் விட்டவழி விடட்டும்' என்ற தீவிர முடிவுக்கு வந்துவிட்டான் சட்டநாதன்.

பண்டிகைக்கு இரண்டு நாட்கள் தாம் இருந்தன. துயரப் புயலையும், மனக் கொந்தளிப்பையும் அடக்கிவைத்தே கடந்த ஒரு வாரத்தைக் கழித்துவிட்டான். வெறுப்பில் ஏற்பட்ட உறுதியால், இனி வரவிருந்த நிகழ்ச்சி எதுவாக யிருப்பினும் சகித்துச் சமாளிக்கத் தன்னையே தயாரித்துக் கொண்ட சட்டநாதனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது சத்தியமூர்த்தியின் எதிர்பாராத வருகை.

கிராமத்தில் விமலாவுக்கு என்ன நேர்ந்ததோ? இவர் என்ன சேதியைக் கொண்டு வந்திருக்கிறாரோ என்ற கவலை சட்டநாதனைப் பேச முடியாமலே செய்து விட்டது. வந்த மாமனாரை வாருங்கள் என்று சொல்லக் கூட அவனுக்கு நா எழவில்லை. துக்கம் நெஞ்சை அடைத்தது. சட்டநாதனின் திடீர் மாற்றம் மூர்த்தியையும் கலக்கமுறச் செய்தது என்பதை அவருடைய முகமே எடுத்துக் காட்டியது. அவரும் மனம் பதறினார். உணர்ச்சி வயப்பட்டுக் கண் கலங்கினார். சட்டநாதன் தம் கலவரத்தைக் கண்டு அப்படியே கதறி விடுவான் என்பதை அறிந்தவுடன் அவர் தம்மை அமைதிப் படுத்திக் கொண்டார்.

"என்ன மாப்பிள்ளை? நானோ... அல்லது விமலாவோ என்ன தவறு செய்தோமோ தெரியவில்லை. இப்படி ஒரேயடியாக மாறி விட்டீர்களே! தந்தியடித்தும்..."

"விமலாவுக்கு என்ன ஆபத்து? நடந்தது தான் என்ன? என்னைப் பிடித்த சனி..."

"சட்டம்!..." மூர்த்தி அலறி விட்டார். சட்டநாதன் திடுக்கிட்டுப் போய், பேச்சை நிறுத்திவிட்டான். அவரைவிழித்துப் பார்த்தான். "என்ன மாப்பிள்ளை ? இப்படிச் சம்பந்தமில்லாமல் ஏதேதோ சொல்லிக்கொண்டு போகிறீர்களே! சனியாவது? உங்களைப் பிடித்ததாவது? நம்மைப் பிடித்திருந்த கெட்டகாலம் எப்போதோ விலகிப் போய்விட்டது. எப்படிபட்ட வாழ்வின் நிகழ்ச்சிகள் உங்கள் மனதைக் கல்லாக்கியிருந்ததோ அவற்றின் பழைய நினைப்பு இப்போது உங்கள் கண்ணை மறைத்து விட்டதுபோலும். விமலாவுக்கு......"

"விமலாவுக்கு என்ன மாமா? சீக்கிரம் சொல்லுங்கள்!"

"ஒன்றுமில்லை. ஆபத்து ஒன்றுமே கிடையாது. அவளைத்தாக்கியது வெறுங் காய்ச்சல். அதுவும் கிராமத்திற்குப் போன இரண்டு நாட்களில் சரியாகி விட்டதே! அவள்... இப்போது... லேடிடாக்டரைக் கலந்தேன். ஆமாம் நீங்கள் தந்தியையே பார்க்கவில்லையா?..."

"ஹும்?... தந்தியா?" சுவற்றின் ஒரு மூலையை நோக்கித் திரும்பினான் சட்டநாதன். மூர்த்தி அந்தப் பிரிக்கப்படாத தந்தியைப் பாய்ந்து எடுத்தார். உடைத்துச் சட்டநாதனிடம் அதைக் காட்டினார். வாங்கிப் பார்த்தவன் அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டான்.

"பண்டிகைக்கு வரவும். விமலா கருவுற்றிருக்கிறாள்.—மூர்த்தி." என்ற அதன் வாசகம் சட்டநாதனை எங்கே ஓர் இன்ப உலகிற்குக் கொண்டு சென்றது.

வந்த தந்தியைப் பிரித்துப் பார்க்கக் கூடத் தன்னைத் தைரியமற்றவனாக்கி விட்டதே கொடிய பழங்கால நிகழ்ச்சியின் தழும்பு, என்று எண்ணினான் சட்டநாதன். அவனுடைய முகம் வெட்கிச் சிவந்தது. அச்செம்மையில் விவரிக்க முடியாத ஆனந்தமும் கலந்திருந்ததைப் புரிந்துகொண்டார் பெண்ணைப் பெற்ற சத்தியமூர்த்தி. ★

மேட்டூர்
சந்தண
சோப்பின்
மென்மையை
விவரிப்பதே கடினம்!

அபூர்வ மிருதுத்தன்மையும் பரிசுத்த மேனியும் நுட்பமான இனிய சந்தண மணங் கமழும் ஓர் நிலை...நீங்கள் கேட்ட மாத்திரத்திலேயே கிடைக்கும்! ஆனால், கேட்பதை மட்டும் **மேட்டூர் சந்தண சோப்** என்று குறிப்பிட்டுக் கேளுங்கள்!

மேட்டூர் சந்தண சோப்பில் மனோஹரமான சந்தண மணம் நுட்பமான முறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R.S. :: சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ், சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

MC-602

புத்தக விமர்சனம்

திருக்குறள்—உரைக்கொத்து

அறத்துப்பால் (360 பக்கங்கள்);
பொருட்பால் (780 பக்கங்கள்);
காமத்துப்பால் (320 பக்கங்கள்);
(கிரௌன் $\frac{1}{8}$);

பதிப்பாசிரியர்: வித்வான் தி. பட்டுசாமி ஓதுவார்; வெளியீடு: ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்; தஞ்சை ஜில்லா.

விலை முறையே ரூ. 1-37; ரூ. 2-75; ரூ. 1-20.

வையத்துள் மக்கள் வாழ வேண்டிய வழி வகைகளை முறையாகத் தொகுத்துத் தரும் நீதி நூல்கள் பல. அவற்றுள் தலையாயது திருக்குறள் என்பதும், அதனைத் தந்தருளியது திருவள்ளுவர் என்பதும் அனைவரும் அறிந்ததே. இத் திருக்குறளுக்குப் பத்து புலவர்கள் உரை கண்டார்கள். அவற்றுள் கழிந்தது போக இன்று உள்ளது ஐவர் உரைகளே. இவ்வுரைகளைத் தனித் தனி பெற்று வாசித்தல் என்பது இயலாததோடு செயலற்ற செயலுமாகும் என்பது அனுபவம். இப்பாடு அறிந்தும், பாரத நாட்டிலுள்ள தமிழ் மக்கள் (மாணவ-மாணவியர் உட்பட) எளிதில் பெற்று, நன்கு கற்று, தேர்ந்து, தெளிந்தவர்களாக வாழ வேண்டும் என்ற திரு உளம் கொண்டு, நாளொரு அறமும், பொழுதொரு கட்டளையுமாகச் சிறந்து, அர-அறப்பணி புரிந்துவரும் ஸ்ரீ காசிவாசி ஸ்ரீ-ல-ஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள் திருக்குறள் பதிப்பு நிதி ஒன்று நிறுவி, அதன் வெளியீடாக இவ்வைவர் உரைகளையும் ஒருசேர, ஒருங்கு தொகுத்து வெளியிடச் செய்துள்ளார்கள்.

முதற்பாலாம் அறத்துப்பாலில் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர் உரைகளுடன், ஆங்கில மொழி வல்லுநர்களான திருவாளர்கள் M. S. பூர்ணலிங்கம் பிள்ளை, S. M. மைகேல், V. R. இராமச்சந்திர தீக்ஷிதர், M. R. இராஜகோபால ஐயங்கார், வ. வெ. சுப்பிரமணிய ஐயர், ரெவரெண்ட் ட்ரூ-ஜான்லாஸரெஸ் ஆகியவர்களின் மொழி பெயர்ப்புகளை ஆங்காங்கே நிரல்பட வைத்துத் தொகுத்துள்ளார்கள்.

இரண்டாவது பாலான பொருட் பாலில் மேற்படி நால்வர் உரைகளுடன் பரிப்பெருமாள் உரையும், ஆங்கில மொழி பெயர்ப்புகளில் திருவாளர்கள் I. D. தங்கசாமி, C. இராசகோபாலாச்சாரியார், டாக்டர் ஜி. யூ. போப், எல்லிஸ் ஆகியோர் மொழி பெயர்ப்புகளும், திரு. S. M. மைக்கேல் மொழி பெயர்ப்பு தவிர்த்தும் வெளியிடப் பெற்றுள்ளது.

மூன்ருவது பாலான காமத்துப் பாலிற்கு மேற்படி உரைகளுடன், திருவாளர்கள் M. S. பூர்ணலிங்கம் பிள்ளை, V. R. இராமச்சந்திர தீக்ஷிதர், M. R. இராஜகோபால ஐயங்கார், வ. வெ. சுப்பிரமணிய ஐயர், ரெவரெண்ட் ட்ரூ-ஜான்லாஸரெஸ் ஆகியவர்களின் மொழி பெயர்ப்புகளே இடம் பெற்றுள்ளன.

இவ்வுரைக்கொத்தை ஒருசேர, ஒரே காலத்தில் வாசிக்கப் பெறும்போது, மற்றவர்கள் உரைகளைவிட பரிமேலழகர் உரையே எவ்வகையிலும் சிறந்ததென்பதை நம் பண்டையோர் கண்டபடி நாமும் காணுகிறோம். இலக்கணப் பயிற்சி மிகக் குறைவாக உள்ள இக்காலத்தில் இலக்கண உரையாகிய பரிமேலழகர் உரையே சிறப்புடைத்து எனக் கொள்வதில் தவறு இல்லை.

ஒரு பொருளைப்பற்றிய விவாதமும், உரை காணும் முயற்சியும் கொண்ட புலவர்கள் நிறைந்த பேரவையில் நாமும் கலந்துகொண்டு அதனை மிக விரும்புவதுபோல உள்ளது அறத்துப்பாலின் உரைக்கொத்து. தமிழ்கண்ட சங்கத்தில் இதுபோலத்தான் இருந்திருக்குமோ என்ற கவின்பெறு கற்பனை உதிப்பதில் ஐயமில்லை.

பாராளுமன்றத்தில் அரசியல் வல்லார்களும், அமைச்சர்களும் விவாதம் புரிந்து முடிவுகாணும் ஒரு பெரிய வாய்ப்பை நாம் சான்ருக இருந்து பார்ப்பதுபோன்று இருக்கிறது இரண்டாவதான பொருட்பாலின் உரைக்கொத்து.

மூன்ருவதான காமத்துப்பாலின் உரைக்கொத்து சிறந்ததொரு நாடகத்தைப் பார்ப்பது போன்றும்—நாடக நடிகர்களின் சுவைமிக்க பேச்சுக்களை சுவைப்பது போன்றும்—அல்ல—நாமே தலைமகனும், தலைமகளும், பாங்கனும், தோழியுமாக மாறி உரை நிகழ்த்துவதான ஒரு தோற்றத்தைக் காட்டி நம்மை ஈர்த்துவிடுகிறது.

பொருட்பாலில் உரையாசிரியர்களான ஐவரைப்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையொன்றினை, பல இடங்களிலிருந்து ஆராய்ந்து, தொகுத்து வெளியிட்டுள்ளார்கள் திருப்பனந்தாள் செந்தமிழ் கல்லூரி பிரின்ஸிபால் திரு. K. M. வேங்கடராமையா, M. A., B. O. L. அவர்கள். அது சிந்தனையைக் கிளறும் நலம் வாய்ந்தவை.

பரிதியார் என்ற உரையாசிரியர் பரிமேலழகருக்குப் பிற்பட்டவராகவும், நமக்குமுன் மூன்றல்லது நான்கு நூற்ருண்டுகள் முந்தினவராகவும் இருத்தல் வேண்டும் என்பதையும், சாமானிய மக்களும் ஓரளவு திருக்குறளின் கருத்தை உணரவேண்டுமென்ற கருத்துடையவராகவும் இருத்தல் வேண்டுமென்பதையும் அவரது உரை, சொல் ஆட்சி, முதலியன எடுத்துக் காட்டுகின்றன. பரிமேலழகர் உரையிலுள்ள கடுமையை ஓரளவு குறைக்கவும் செய்கின்றன.

இவ்வுரைக்கொத்து மாணவ-மாணவியருக்கு மட்டுமல்லாது எல்லா தமிழருக்கும் ஒரு கருவூலமாகும். அதன்றி சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த தருமை ஆதீனத்து உரைவளத்தின் வழி நூலுமாகும்.

இவ்வுரைக்கொத்தின் சார்பு நூலாக ஆங்கில மொழிபெயர்ப்புகள் யாவற்றையும் ஒருசேர, ஒருங்கு வெளியிடின் தமிழரல்லாத பிற பிரதேச மொழி மக்களும், பிற நாட்டாரும் திருக்குறளை நன்கு உணர்ந்துகொள்ள ஒரு வாய்ப்பாகும்.

மனக்குரங்கு

க. சந்தானம்

மீனாக்ஷி, பரமேசுவரி அனாதாலயத்தின் கமிட்டித் தலைவியாக ஏக மனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டாள். அவளுடைய பெருமைக்கும், குதூகலத்திற்கும் எல்லையில்லை. கௌரவ உத்தியோகமாக இருப்பினும் முதலில் தீவிர போட்டி இருந்தது. பெரிய உத்தியோகஸ்தர்களின் மனைவிகள் அதற்கு ஆசைப்பட்டனர். ஒரு மரக்கடை வியாபாரியினுடைய வீட்டுக்காரியின் வெற்றியைப் பற்றி எண்ணும்பொழுது அவள் மனதிலே பேருவகை பொங்கியது. கூட்டம் மாலை 3-மணிக்கு முடிந்தது. இதர கமிட்டி மெம்பர்கள் அவளைப் பாராட்டிவிட்டுச் சென்ற பின் அந்த ஸ்தாபனத்தின் பிரதம ஆசிரியை மீனாவைக் கூப்பிட்டு, அனாதாலயத்தின் சில விவரங்களை விசாரித்தாள். 120 அனாதைப் பெண்களுக்கு உணவும், கல்வியுமளித்து வருகிறதென்று அறிந்தாள். பின்னர் 5 மணிக்குத் தன் கணவனுடன் வந்து குழந்தைகளைப் பார்த்துவிட்டுப் போவதாகக் கூறிவிட்டு வீடு வந்தாள், உடனே ஜகதீசனுக்கு டெலிபோன் செய்தாள். அவன் வியாபார விஷயமாக ஒரு பெரிய மனிதருடன் பேசிக்கொண்டிருப்பதாக குமாஸ்தா சொன்னான். 'உடனே பேசவேண்டும் என்று கூப்பிடு' என்று அதிகாரம் செய்தாள். அவன் போய் எஜமான் காதில் முணு முணுத்தான். ஜகதீசன் தான் பேசிக் கொண்டிருந்தவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போனுக்கு வந்து 'என்ன அவசரக் காரியம்', என்று கேட்டான். 'நீங்கள் உடனே வந்துவிடவேண்டும்.' என்று சொன்னாள். 'வேலையிருக்கிறது. 6 மணிக்கு வந்தால் போதாதா?' என்று மன்றாடினான். 'அதெல்லாம், முடியாது, அரை மணி நேரத்தில் வந்துவிடுங்கள்' என்று மூடிவிட்டாள். அவனும் எப்படியோ அன்றைய வேலையை முடித்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான்.

புதிய சேலை உடுத்தி அவசியமான அலங்காரங்களுடன் வெளியில் புறப்பட மீனாக்ஷி தயாராக இருந்தாள். ஜகதீசன் தனது உடைகளை மாற்றவில்லை. இருவரும் மோடாரில் அமர்ந்த பின்னரே தனது புதிய கௌரவத்தைப்பற்றிக் கூறி அனாதாலயத்தைத் பார்க்கப் போவதாக தெரிவித்தாள். ஜகதீசன் சிரித்தான்.

"இதற்காகவா என் வேலையைக்கெடுத்து வரவழைத்தாய்? நாளைக்குப் பார்த்தால் என்ன முழுகிப்போகும். எனக்கு இந்த அனாதாலயங்களே பிடிக்கவில்லை. அனாதைக்குழந்தைகளைப் பணக்காரர்

களிடம் கொடுத்து வீட்டுக்கொரு குழந்தையாக வளர்க்க வேண்டும். ஆட்டுமந்தைமாதிரி ஓரிடத்தில் அடைத்து வைப்பது அநியாயம்!" என்றான்.

தனக்கிருந்த குதூகலத்தில் கணவன் பரிகாசத்தை மீனாக்ஷி பொருட்படுத்தவில்லை.

"உங்களுக்கென்ன? ஏதாவது சொல்லலாம். நம்மிடம் ஓர் அநாதைக் குழந்தையைக் கட்டிவிட்டால் அப்பொழுது தெரியும். நமது மூன்று குழந்தைகளை வளர்ப்பதே கஷ்டமாகயிருக்கிறது. பிறர் பெற்ற குழந்தைகளை வளர்க்க யார் விரும்புவார்கள்?" என்றாள்.

"உன்னிடமுள்ள அன்பினால் உன்னை இந்த பதவிக்கு வைத்திருக்கிறார்கள் என்று நீ அகம்பாவம் கொள்ளாதே. என்னிடமிருந்து பணத்தை வாங்கி கொடுப்பாய் என்று எதிர்பார்க்கிறார்கள். அதனால்தான் அந்த உத்தியோகஸ்தர்களின் மனைவிகள் தோற்று விட்டார்கள். பாவம் இக்காலத்தில் உத்தியோகஸ்தர்களிடம் பணம்ஏது?" என்று மீண்டும் பரிகசித்தான். மனைவி விட்டுக் கொடுக்கவில்லை.

"அதுவும் நல்லதுதானே. தேக்குமரம் விலை திடீரென்று உயர்ந்து உங்களுக்கு ஏராளமான லாபம் கிடைத்ததென்று நேற்று கூறினீர்களே. அதில் ஒருபாகத்தை அநாதாலயத்திற்கு என்னிடம் கொடுத்து விடுங்கள்" என்று அவளும் சிரித்தாள்.

இதற்குள் வண்டி அநாதாலயத்திற்கு வந்துவிட்டது. மீனாவும், மற்ற ஆசிரியப்பெண்களும் வாசலில் வந்து இருவருக்கும் மாலை சூட்டினர். பெண்களுக்கான பிரத்தியேக நிலயம் அது, நடுவில் திறந்த கூடமும், சுற்றிலும் கட்டடங்களமைந்து வாசலில் திடமான கதவுகள்கூடி நல்ல காப்பமைந்த கட்டிடமாக விருந்தது. இரண்டு பக்கங்களில் குழந்தைகள் வசிக்கும் அறைகளும் ஒருபக்கம் ஆசிரியைகளின் வாசஸ்தலங்களும், நாலாவது பக்கத்தில் சமையலறை, சாமான் கிடங்குகளும் இருந்தன. ஒவ்வோர் அறையிலும் பத்து குழந்தைகள் தங்கள் சாமான்களை ஒழுங்காக வைத்து சுத்தமான உடை தரித்துக் கொண்டு நின்றனர். மீனாக்ஷியையும் மீனாவையும் கண்டவுடன் புன்சிரிப்புடன் கைகூப்பி நமஸ்காரம் செய்தனர். 14 வயதிலிருந்து 32 வயது வரையில் பலதரப்பட்ட பெண்கள் இருந்தார்கள். ஒவ்வோர் அறையாக அந்தப் பெண்களை எல்லாம் பார்த்துக்கொண்டு சிறிய குழந்தைகள் இருந்த கடைசி அறைக்கு மீனாக்ஷி வந்தாள். அங்கிருந்த குழந்தைகளும் சந்தோஷமாக இருந்தன. ஆனால் ஒரு குழந்தைமட்டும் ஒரு மூலையில் போய் விம்மிவிம்மி அழுது கொண்டிருந்தது. ஓர் ஆசிரியைபோய் அதைச் சமாதானப்படுத்த முயன்றாள். பலிக்கவில்லை. மீனாக்ஷி அதனிடம் போய் அதன் முகத்தைத் தன்பக்கம் திருப்பி 'ஏன் அம்மா அழுகிறாய்' என்று கேட்டாள். அது அவளைப்பார்க்காமல் திரும்பி 'அம்மா' என்று உரக்க அழ ஆரம்பித்தது. அப்பொழுது மீனா அவளருகில் வந்து காதில் 'இக் குழந்தையின் விதவைத்தாய் மூன்று நாட்களுக்கு முன் இறந்தாள். வேறு கதியில்லாததால் பக்கத்து வீட்டுக்காரர்கள் இதை இங்கு கொண்டுவந்து சேர்த்தார்கள். அம்மாவை நினைத்து ஏங்கி அழுகிறது' என்றாள். மீனாக்ஷியின் உள்ளத்தில் திடீரென்று உணர்ச்சி வெள்ளம் பெருகிற்று. முன்பின் யோசிக்காமல் குழந்தையின் முகத்தை மீண்டும் தன்பால் திருப்பி 'நான்தான் உன் அம்மா' என்றாள். அதைக்கேட்டதும் குழந்தை தன் அழுகையை நிறுத்தி அவளை ஒரு கணம் நோக்கி இறுகத் தழுவிக்கொண்டது. 'இந்தக் குழந்தையை நான் வீட்டிற்கு எடுத்துக்கொண்டுபோய் வளர்க்கிறேன்' என்று மீனாவிடம் கூறிவிட்டு நேரில் வண்டிக்குச் சென்று குழந்தையுடன் உட்கார்ந்தாள். இங்கு எல்லோருக்கும் ஆச்சரியமும் பரபரப்பும் உண்டாயிற்று. சாவகாசமாகச் சிறிது தூரத்தில் வந்து கொண்டிருந்த ஜகதீசனுக்கு ஒன்றும் விளங்க வில்லை. மோட்டாரில் வந்து உட்கார்ந்த பிறகு தான் உமாவைப்பார்த்தான். அவனைக்கண்டு அவள் மீனாக்ஷியிடம் போய் பதுங்கிக் கொண்டாள்.

'நீங்கள் கூறிய படியே உமாவை நான் வளர்க்கப்போகிறேன்' என்றாள் பத்தினி.

'இது அவசரப்பட்டு செய்யும் காரியம். மூன்று குழந்தைகளை வளர்ப்பதன் கஷ்டத்தை பற்றிச் சொன்னது என்னவாயிற்று' என்று வினவினான் கணவன்.

'இவள் அங்கு அழுது கொண்டிருப்பதைப் பார்த்து எனக்குச் சகிக்க முடியவில்லை. உமாவின் தாயார் இறந்து மூன்று நாள் தாம் ஆயிற்றாம். அவளை நினைத்து ஏங்கி இவளும் செத்து விடுவாள் போலிருந்தது. இனி நான் தான் இவளுக்கு அம்மா' என்றாள் மீனாக்ஷி. உமாவுக்கு இவர்கள் பேசியது புரியவில்லை. கடைசியில் 'நான் தான் அம்மா' என்றதும் மீனாக்ஷியை இறுகத் தழுவிக் கொண்டாள். ஜகதீசனுக்கும் கண்களில் நீர் ததும்பிற்று. 'இவளையும் மற்றக் குழந்தைகள் போல் நீ வளர்த்தால் எனக்கு ஆக்ஷேபணை இல்லை' என்றான்.

2

பூந்தமல்லி ரோட்டில் ஜகதீசன் பங்களாவில் பூங்கொடி போல் உமா வளர்ந்தாள். அவளுடைய அழகும், புத்தியும் பார்த்தவர் பிரமிக்கும்படி பெருகின. தன் வயதுள்ள சாவித்திரியைத் தவிர வீட்டிலுள்ள அனைவரும் ஜகதீசன், மீனாக்ஷி, அவர்களுடைய புத்திரர்கள் நடேசன், மாதவன் எல்லோரும் அவளைச்செல்வக் குழந்தையாகக் கருதினார்கள். சாவித்திரிக்கும், தன்னோடு விளையாடுவதற்கு ஒரு தோழி

பொய்த்துப்போன ஒரு பழமொழி

'துணிக்கேற்றபடி உங்கள் கோட்டைத் தைக்கவும்' என்பது பிரபலமான ஒரு ஆங்கிலப் பழமொழி. ஆனுல் தற்சமயம் அது உபயோகமற்றதாகிவிட்டது. சரியான அளவுப்படி தைக்கப்பட்ட உங்கள் கோட்டுக்கூட, உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்கி, இதைப் போல் உபயோகமற்றதாகிவிடலாம்! 'ஸான்பொரைஸ்ட்' முத்திரை இல்லாத துணியாஞல் எப்பொழுதும் இப்படித்தான் நேரும். பல சலவைகளுக்குப் பிறகும் உங்கள் உடைகள் உடம்புக்குப்பொருந்தாதபடி ஒருபோதும் சுருங்காமலிருக்க நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கஜப்பருத்தித் துணியிலும், தயாரான ஆடைகளிலும் 'ஸான்பொரைஸ்ட்' முத்திரை இருக்கிறதா என்று கவனித்து வாங்குங்கள்.

லேபில் மேல்

·SANFORIZED· REGD TD MK

என்ற முத்திரையுள்ளதா என்று பாருங்கள். உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்காது.

'ஸான்பொரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுயட் பீபாடி அண்டு கோ. இன்கார்பொரேடட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கம்பெனியின், 'சுருங்காது' என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் துணிகளில் மட்டுமே 'ஸான்பொரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

விவரங்களுக்கு: 'ஸான்பொரைஸ்ட்' ஸர்வீஸ், 95, மெரீன் டிரைவ், பம்பாய்-2.

SAN-58-3A-TAM

கிடைத்ததில் ஆநந்தம். இருவரும் இணை பிரியாமல் ஓடி விளையாடினார்கள். சேர்ந்தே பள்ளிக்கூடம் சென்றார்கள்.

இப்படி ஐந்து வருஷங்கள் கழிந்தன. சாவித்திரி சாதாரணப் பெண், அழகியுமில்லை. குரூபியுமில்லை. ஆனால் உமாவின் சுந்தரமுகத்திற்கு முன் சாவித்திரி மிகவும் மங்கிப்போனாள். தனிமையில் பார்க்கும்பொழுது ஆட்டுக்குட்டி நன்றாகத்தானிருக்கிறது. மான்குட்டியின் பக்கத்தில் அதை யார் மதிப்பார்கள்? புத்தியிலும், படிப்பிலும் அதே தாரதம்மியங்கள் தோன்றின. இரண்டு பையன்களும் உமாவைப் புகழ்வதிலும் சாவித்திரியைப் பழிப்பதிலும் சிறிதும் கூசவில்லை. சாவித்திரியின் மனதில் துக்கமும், அழுகையும் குடிகொள்ள ஆரம்பித்தன. அடிக்கடி உமாவுடன் சண்டைபோடத் தொடங்கினாள். என்ன செய்வதென்று தெரியாமல் உமா மீனாக்ஷியிடம் போய் அழுவாள். அவளைச் சமாதானப்படுத்தி பதில் ஒன்றும் சொல்லாமலிருக்கும்படி புத்திமதி கூறித் தாயார் அனுப்புவாள்.

இதைப் பார்த்துக் கவலைகொண்ட மீனாக்ஷி ஒருநாள் தன் கணவனிடம் ஆலோசித்தாள்.

'நம்ம சாவித்திரி இவ்விதம் மங்கி வருகிறாளே' என்றாள்.

'உமா பேரில் பொறாமைதான். நாம் அதைக் கவனிக்காவிட்டால், தானே திருந்திவிடுவாள்' என்றான் ஜகதீசன்.

'இருவருக்குமுள்ள ஏற்றத்தாழ்வைப் பார்த்து எனக்கே சிலவேளை வருத்தமாயிருக்கிறது' என்றாள் மனைவி.

கணவன் சிரித்துக்கொண்டே 'பெத்தமனம் பித்து என்று சொல்லுவார்களல்லவா? அதற்கென்ன செய்ய முடியும்? நம் பெண் நம்மைப் போலத்தானே இருக்கும். உமாவின் பெற்றோர்கள் மிகவும் அழகாக இருந்திருக்க வேண்டும். அவர்களுக்கு அதிர்ஷ்டமில்லை. நமக்கு அழகில்லை. அதிர்ஷ்டமிருக்கிறது. இவ்விரண்டையும் சேர்த்துவைக்க விரும்பிய பெருமை உனது தானே' என்றான். அதற்குமேல் மீனாக்ஷி என்ன சொல்லமுடியும்? ஆனால் மனக்கலக்கம் முற்றிலும் மறையவில்லை.

3

மீண்டும் ஐந்து வருஷங்கள் கடந்தன. உமா, சாவித்திரி இருவரும் 14 வயது முடிந்து பருவ வயதில் புகுந்தனர். சாவித்திரியின் அசூயை ஒருபுறம் பெருகிவந்தபோதிலும் அதை ஓரளவு அடக்கிவைக்கும் சக்தியும் அதிகரித்தது. தனக்கு வீட்டில் எவரும் சகாயமில்லை என்று கண்டாள். உமாவிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் நேரிட்டது. எப்படியாவது சாவித்திரியின் சிநேகத்தைப் பெறவேண்டுமென்று விரும்பிய உமாவும் எல்லாவிதத்திலும் அவளுக்கு உதவி செய்வதோடு, தான் சிறிது பணிந்தும், பெற்றோரிடம் சாவித்திரியைப் புகழ்ந்தும் தன் மீதுள்ள வெறுப்பை மாற்ற முயன்றாள்.

இந்த சமயத்தில் உமாவுக்கு மற்றோர் கவலை தோன்றிற்று. நடேசனுக்கு 22 வயது. எஞ்சினியரிங் பரீக்ஷை தேறி புதிதாக ஒரு வேலையில் அமர்ந்திருந்தான், இரண்டு வயது சிறியவனான மாதவன் பி. ஏ. பாஸ் செய்துவிட்டுத் தனது தந்தையின் கடையில் சேர்ந்துவிட்டான். இருவருக்கும் மணம் செய்விப்பதைப் பற்றி ஜகதீசனும், மீனாக்ஷியும் சிந்திக்கலானார்கள். ஆனால் இருவரும் தனித்தனியே தாயிடம் போய் உமாவைத் தான் மணக்க விரும்புவதாகப் பிடிவாதமாகச் சொல்லிவிட்டனர். இது எப்படியோ உமா காதுக்கெட்டிற்று. அவள் திகிலடைந்தாள். இருவரிடமும் தன் அண்ணன்மார்களைப் போல் பழகிவந்த அவளுக்கு அவர்களில் ஒருவருக்கும் மனைவியாக விரும்பவில்லை. ஒரு வேளை தனக்காக சகோதரர்களுக்குள் மனஸ்தாபமேற்பட்டால் விபரீதமாகி விடும். தனக்கு ஸ்கூல் பைனல் படிப்பு முடிந்து விட்டதால், பரமேசுவரி அனாதாலயத்திலேயே போய் ஏதாவது பணி செய்யலாமா என்று எண்ணினாள். ஆனால் அதற்கு ஒருவரும் சம்மதிக்க மாட்டார்கள். ஜகதீசனையும், மீனாக்ஷியையும் அயலார் ஏதாவது அவதூறு சொல்வார்கள். சென்னையிலிருந்து வேற்றூருக்குப் போய் விடுவதே வழி. அதற்கு என்ன செய்வது என்று சிந்திக்கலானாள்.

4

ஒரு விறகு கட்டுக்கு அடியில் ஒரு தணல் கனிந்து கொண்டிருந்தால் எதிர்பாராத சமயத்தில் திடீரென்று தீப்பற்றி எரியும். நம் மனதிலிருக்கும் அசூயையும் அப்படியே.

நடேசன், மாதவன், சாவித்திரி, உமா நால்வரும் சீட்டாடிக் கொண்டிருந்தனர். நடேசனும், சாவித்திரியும் ஒரு கக்ஷி, மற்றிருவரும் எதிர்க் கக்ஷி. சேர்ந்தாற்போல் மூன்று ஆட்டங்களில் நடேசன் கக்ஷி தோற்றுவிட்டது. கோபத்தோடு தங்கையைப் பார்த்து 'உனக்கு சீட்டுக்கூட சரியாக ஆட வராது' என்றான். சாவித்திரிக்கு ஆத்திரம் பொங்கிற்று. தன் கையிலிருந்த சீட்டுக்களை உமா முகத்தில் வீசி எறிந்து நடேசனைப் பார்த்து 'எல்லாம் அவளுக்குத்தான் வரும்' என்று உரக்கக் கத்திக்கொண்டு எழுந்தாள்.

அனைவரும் திடுக்கிட்டு எழுந்தனர். உமாவின் முகம் சிவந்து, கண்களில் நீர் வழிந்தது. தன் கோபத்தை அடக்கிக்கொண்டு, 'நீ வருத்தப்

படாதே சாவித்திரி, நான் இனி இந்த வீட்டில் 'இருக்கப் போவதில்லை' என்று கூறிவிட்டுத்தன் அறைக்குள் போய் தாளிட்டுக்கொண்டாள்.

இச்சிறிய சம்பவத்தால் வீடுமுழுவதும் குழப்ப மாயிற்று. மீனாக்ஷிக்கும் ஜகதீசனுக்கும் கடுமை யான வாக்குவாதம் நடந்தது.

'ஏதோ தவறி சாவித்திரி ஒருவார்த்தைசொல்லி விட்டால், அதற்கு உமா வீட்டைவிட்டுப்போய் விடுவேன் என்று ஏன் இப்படிப் பிடிவாதம் செய்யவேண்டும்? நாம் இவ்வளவு காலம் பிறந்த பெண்ணைப்போல் வளர்த்ததற்கு சிறிது கூட நன்றியில்லையா?' என்றாள் மீனாக்ஷி.

'எதற்காக நன்றி? உன்னை யார் அவளை எடுத்து வரச்சொன்னார்கள்? வந்தபிறகு உன் பெண்ணின் பொறுமையைக் கவனித்து முளையிலேயே கிள்ளுவது உன் பொறுப்பல்லவா?' என்று சீறினான் ஜகதீசன்.

'இதெல்லாம் என் கையிலிருக்கிறதா? நீங்கள்தான் ஏதாவது செய்கிறதை நான் தடுத்தேனா?' என்று கோபித்தாள் மனைவி.

ஜகதீசன் உமாவை அழைத்துச் சமாதானப்படுத்திப் பார்த்தார்.

'ஒரே வீட்டில் பிறந்த சகோதரிகள் சண்டை போட்டுக்கொண்டால், ஒருத்தி அதை விட்டுப் போய்விட முடியுமா, அது சரியா?' என்று கேட்டார்.

'ஒருவேளை அது வேறு விதமாக இருந்திருக்கும். நான் இங்கு பிறக்கவில்லை என்றுமட்டும் தான் எனக்குத் தெரியும். நீங்கள் என்னை மிகவும் அன்புடன் வளர்த்தீர்கள். இனி இந்த வீட்டிற்குள் நான் இருப்பது நன்மையல்ல என்று முடிவு செய்துவிட்டேன்! இதைத் தடுக்காதீர்கள்.' என்று கூறிவிட்டாள்.

'சரி, உன்னிஷ்டப்படியே செய். ஒரு வாரத்திற்குள் ஏற்பாடு செய்கிறேன். நீ போனபின் இந்த வீடு சூன்யமாகத்தான் இருக்கும். ஆனால் அதற்கு நீ பொறுப்பாளியல்ல' என்றார். உமாவுக்கு அன்பினாலும், துக்கத்தினாலும் பேச்சுத் தடுமாறிற்று. ஜகதீசன் காலில் பணிந்து நமஸ்காரம் செய்து, 'என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நான் எங்கிருந்தாலும் உங்கள் பெண்ணாகவே இருப்பேன்' என்றாள்.

உமாவைக் காசி சர்வகலாசாலையில் சேர்த்துவிட ஏற்பாடாயிற்று. ஜகதீசன் தானே அவளை அழைத்துக்கொண்டுபோய் விட்டுவிட நிச்சயித்தான். புறப்படும் தினத்தன்று அந்த வீடு சோகத்தில் மூழ்கியது. உமா திரும்பி வரமாட்டாள் என்றெண்ணம் எல்லோர்மனதிலும் குடிகொண்டது. கடைசியில் ஸ்டேஷனுக்குப் புறப்படும் சமயத்தில் சாவித்திரி உமாவின் அறைக்குள் வந்து 'என்னை மன்னித்துக்கொள் உமா' என்றாள்.

'நாம் என்றும் சகோதரிகள். ஆனால் பிரிந்திருப்பதே நம்மிருவருக்கும் நலம்' என்றாள் உமா.



நீண்ட அடர்ந்த கூந்தலுக்கு

ராம்தீர்த் பிராம்மி எண்ணெயை உபயோகியுங்கள்

ஸ்பெஷல் நெ. 1 (ரிஜிஸ்டர்ட்) ஆயுர்வேத முறை

கேசத்திற்கும், புத்திக்கும் சிறந்த நிகரற்ற டானிக்

மயிர் விழுதலை தடுப்பதற்கும்
புஷ்டியுள்ள கேசம் வளரவும்
இயல்பான கருமை
பெறுவதற்கும் உதவுகிறது

பொடுகு, ஞாபக சக்தி,
நல்ல தூக்கம் யாவற்றுக்கும்
எல்லா பருவத்திலும்
எல்லோருக்கும் பயன்படும்

பெரிய பாட்டில் ரூ. 4—0—0 சிறிய பாட்டில் ரூ. 2—0—0

தபால் செலவு தனி. வி. பி. பி. அனுப்பப்படமாட்டாது.

ஆரோக்கியமாகவும், திடமாகவும் வாழ்வதற்கு யோகாஸனங்களை விவரித்திருக்கும் எங்கள் ஆஸன படத்தை வாங்கிப்பாருங்கள். ரூ. 2—50 அனுப்பினால் தபால் செலவின்றி அனுப்பப்படும். இந்த ஆஸனப் பயிற்சியை வீட்டிலேயே சுலபமாகச் செய்யலாம்.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாச்ரமம்

தாதர் (மத்திய ரயில்வே) பம்பாய்-14

போன்: 62899 தந்தி: "பிராணயாமம்" தாதர், பம்பாய்

சென்னை டெப்போ: 4/441, தங்கசாலைத் தெரு, சென்னை-3

தொடர் கதை

வஜ்ர வீணை

கே. சுந்தராம்பாள்

ஏழாம் அத்தியாயம்.

மறு நாள் ட்ரங்கால் வந்தது. மேகலாவே பேசினாள் "பிரயாணம் ஆபத்தில்லாமல் கழிந்தது. உங்களை நினைத்துக் கொண்டே என் வேதனையை மறக்க முயன்றேன். அம்மாவின் ஆபத்தான நிலைமை தாண்டிவிட்டது. சற்று கண்விழித்துப் பேசுகிறாள். ஆனாலும் நான் அவள் பக்கத்தில் இருக்க வேண்டியது அவசியம் என்று சொல்லுகிறார் டாக்டர். அதனால் தான் இங்கிருந்தே வேதனையை அனுபவிக்கிறேன். ஆனால் இவ்விடம் வேறு எவ்விதமான மாறுதலுமில்லை. நீங்கள் கவலைப்படாமல் காரியத்திலீடுபடுங்கள். வாரிஜாக்ஷன் கூட அவசரப்பட்டு புறப்படவேண்டாம். உங்களுக்கு உதவியாக இருக்கட்டும். உண்மையைச் சொல்கிறேன். அம்மாவிற்கு உடம்பென்று பொய் சொல்லி என்னை அழைத்து, முத்துக்குமரன் கையில் ஒப்படைக்க, உங்கள் மாமா முயற்சி செய்கிறாரோ என்று பயந்து தான் அவ்விடம் அப்படி அழுதேன். இவ்விடம் வந்தபின்பு அது எனது "மனப் பிரமை" என்று விளங்கிவிட்டது. உண்மையாகவே அம்மாவிற்கு உடம்பு தான். உங்கள் மாமா முதலிய ஒருவருமே இவ்விடம் வரவில்லை. அதனால் ஆர அமர விஷயங்களைக் கவனித்துக்கொண்டு வாருங்கள்" என்றாள்.

"அப்பாடா! கவலை கொஞ்சம் குறைந்தது" என்றான் அதுல்யன்.

"அப்படியானால் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கும் சுற்றுப் பிரயாணத்தில் நாமும் கலந்து கொள்ளலாமே" என்றான் வாரிஜாக்ஷன்.

"பதினைந்து நாளாகுமே அது முடிய. அது வரைக்கும் மேகலாவைப் பார்க்காமலிருக்க வேண்டுமே. அவ்விடத்து நிலைமை எப்படியோ?"

"இவ்வளவு நாழிகை அவள் சொன்னதைக் கேட்ட பிறகும் கவலைப்படுவதில் அர்த்தமே இல்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பம் கிடைப்பது துர்லபம். பணத்தைக்கொண்டு செய்யமுடியும் என்று நீ சொல்லலாம். இப்படிப்பட்ட கோஷ்டிகள் கிடைப்பது அருமையிலும் அருமை. மேகலா தாயாரிடம் பத்திரமாகத்தானிருக்கிறாள். ஒரு சமயம், மாதவி இறந்து விட்டிருந்தால் மேகலாவைப் பற்றிக் கவலைப்பட நியாயமுண்டு"

"சரி, நாமும் வருவதாக அவர்களுக்கு அறிவித்துவிடு"

மேகலாவிடமிருந்து கடிதம் வந்தது. பிரிவுத் துன்பத்தைத் தவிர வேறு ஒன்றும் கஷ்டமில்லையென்று தெரிந்தது. தாங்கள் சுற்றுப் பிரயாணம் போகும் விபரமெழுதி, இன்னின்ன தேதியில் இந்தந்த ஊரிலிருப்போம், அவ்விடம் போஸ்டாபீஸ் விலாஸத்திற்கு கடிதமெழுது என்றும், அவசியமானால் டிரங்கால் போடலாம், எங்கள் கோஷ்டிக்கு மதிப்புண்டு அதனால் உடனே தெரிவிக்கப்படும் என்றும் எழுதினான்.

"சுற்றுப் பிரயாணத்தின்பொழுது கடிதம் எழுதித் தொல்லைக் கொடுக்கவேண்டாம். யார் கையிலாவது நமது அந்தரங்கக் கடிதம் கிடைக்க வேண்டாம். அவசியமானால் ட்ரங்கால் செய்கிறேன். நீங்கள் கவலையில்லாமல் சுற்றுப்பிரயாணம் செய்யுங்கள்" என்று எழுதிவிட்டாள் மேகலா.

புயலடித்து ஓய்ந்து விட்டதுபோல் அமைதியுற்றது அதுல்யத்தின் மனம். இந்தச்சுற்றுப் பிரயாணத்தில் மேகலாவும்கூட இருந்தால் எவ்வளவு குதூகலமாக இருக்கும் என்ற எண்ணம் எழுந்ததேதவிர கவலையெதுவும் தோன்றவில்லை. சுற்றுப்பிரயாண முறையை வகுத்திருந்தவிதமே மிகமிக உயர்ந்த தரமான ஏற்பாடாக அமைந்தது. ஒவ்வொரு ஊரிலும் அமோகமான வரவேற்பு. சங்கீத சபாக்களில் கச்சேரிகள், ஊரின் அதிசயங்களைக்கண்டு களித்தல், இப்படியாக சிந்தனை செய்ய நேரமின்றி உற்சாகமாகப் பொழுது கழிந்து கொண்டிருந்தது. சில சபாத் தலைவர்கள்:

"நீங்கள் ஜோடியாகப் பாடிக் கேட்கக் கொடுத்து வைக்கவில்லை" என்று மேகலாவைப் பற்றிப் புகழும்போது சற்று மனதில் வருத்தம் தோன்றும். வாரிஜாக்ஷனும் அதுல்யனுமாகச் சேர்ந்து கச்சேரி செய்து வந்தார்கள்.

மேகலாவினிடமிருந்து கடிதம் வரவில்லை.

அவள்தான் எழுதமாட்டேனென்று சொன்னாளே. நாம்தான் அலட்டிக் கொள்கிறோம் என்று சமாதானப் படுத்திக்கொண்டான். ஸ்தலங்களில் கோவில்களுக்குச் சென்றால் "என் மேகலாவை நான் கூடிய சீக்கிரம் சந்திக்க வேண்டும்" என மனமுருகப் பிரார்த்தனை செய்வான். ஓர் ஊரில் அம்மன் சன்னிதியில், அதுல்யன் பிரார்த்தனை செய்யும் போது கற்பூரத்தைக் கொளுத்திய குருக்கள் கைதவறி கீழே போட்டு விட்டார். திடுக்கிட்ட அதுல்யன்,

"வாரிஜாக்ஷா இது என்ன அபசகுனம்?"

"இது இயற்கையாக நேர்ந்ததல்ல. அந்தக் குருக்களுக்குப் பாடம். அவர் பக்தியுடன் கொளுத்தாமல், அதோ நிற்கிறாளே அழகி அவளைப் பார்த்தபடி கொளுத்தினதற்காக நீ மனஸை அலட்டிக் கொள்ளாதே" என்றான்.

என்ன சமாதானம் சொன்னாலும் அதுல்யத்தின் அடிமனத்தில் இனந்தெரியாத ஒரு திகில் ஏற்பட்டது.

சுற்றுப் பிரயாணம் முடிந்தது. ராஜப் பிரதிநிதியே பரிசுகள் வழங்கினர். "சகல கலா வல்ல சங்கீத சக்ரவர்த்தி" என்ற நீண்டதொரு பட்டத்தை அதுல்யனுக்கு வழங்கினார்கள். எல்லோருக்கும் பரிசும், சன்மானமும் வழங்கப் பட்டது.

"நல்ல நாதத்துடனும், சங்கீத மேதையினால் சரி பார்த்துச் செய்யப்பட்டதும் தங்கத் தினாலான கவசத்தில் வைரம் இரத்தினம் பச்சை முதலிய நவரத்தினங்களால் கொடிகளும் பூக்களுமாக இழைத்து ஆயிரம் சூரியன் சேர்ந்து உதித்தாற் போல் பிரகாசமானதும் வாசிக்கும் படியானதுமான ஒரு வீணையை அதுல்யத்திற்குப் பரிசாகக் கொடுத்தார் அரசாங்க பரிசாக ராஜப்பிரதிநிதி. அரசாங்க விருதும் பெற்றுக் கொண்டான். பிரிவுபசார வந்தனோ பசாரக் கூட்டத்தன்று இரவு வஜ்ர வீணையை வாசித்துக்கொண்டே பாடினான் அதுல்யன். விஸ்தாரமான நீண்ட பெரியஹால் மேடை மீது, பூலோகத்துப் பாடகன் உட்கார்ந்திருப்ப தாகவே தோன்றவில்லை. கருமை படர்ந்து அலை அலையாக நெளிந்த கிருப்புத்தலை. காதில் வைரக் கடுக்கண் கைகள் எட்டு விரல்களிலும் வைர மோதிரங்கள் ரிஸ்ட்வாச், துல்யமான மல்வேஷ்டி, வைரப் பொத்தான்களின் டால் விச்சுடன் கூடிய சில்க் ஜிப்பா நெற்றியில் சிறிய குங்குமப்பொட்டு, சந்திரோதயம் போன்ற முகக்காந்திக்கு எடுப்பாக; மன்மதனே இறங்கி வந்து உட்கார்ந்திருக்கிறனோ? என்று ஐயுறுவண்ணம் அமைந்திருந்தது அதுல்யனின் தோற்றம். வஜ்ரவீணையை மடிமீது வைத்து வாசிக்கும் தோற்றமானது, சர்வாலங்கிருத பூஷிதையானபெண்ணை மடிமீது வைத்து கன்னிகாதானம் செய்யும் தந்தையை போலவும், காதலியின் கரம் பற்றும் காதலன் போலவுமிருந்தது கந்தர்வகானம் என்று சொல்லுவார்களே அது இதுதானோ என்று வியந்தார்கள்.

வீணையைக் கையிலெடுக்கும்பொழுது தந்தையின் நினைவுதான் முதலில் தோன்றினது. "தந்தையின் மறைவிற்குப் பின் இன்றுதான் வீணையைக் கையிலெடுக்கிறேன். இந்த அதியற்புதமான வீணையை வாசிக்கும் பாக்கியத்தை, வீணையின் நாதமே தனது ஜீவநாதமாக வாழ்ந்து மறைந்த என் தந்தைக்கே அர்ப்பணம் செய்துவிட்டு வாசிக்கிறேன்" என்றான். குரல் கம்மிற்று. அவனின் உருக்கமான சொற்கள் யாவர் மனதிலும் அனுதாப உணர்ச்சி தோன்றும்படி செய்துவிட்டது,

மறைந்த தந்தையின் நினைவு ஒருபுறம், பிரிந்து சென்ற மேகலாவின் நினைவு ஒருபுறம், மனதைப் பாதித்த போதிலும் அன்றைய வீணை வாசிப்புடன் சேர்ந்து பாடிய கச்சேரி அதியற்புதமாகவே அமைந்திருந்தது. மிருதங்ககாரர் ஆவர்த்தனம் வாசிக்கும்பொழுது.

"இன்று மேகலாவுமிருந்து கூடப்பாடியிருந்தால் எப்படியிருக்கும் வாரிஜாக்ஷா!"

"இந்த ஜனங்கள் கொடுத்து வைக்கவில்லை என்றாலும் இன்று உன்னுடைய இசை மிக்க உருக்கமாக மனதைத் தொடுகிறது."

"ஊருக்குச் சென்றதும் இந்த வீணையை மேகலாவினிடம் காட்டினால் அப்பொழுது அவள் முகம் எப்படி இருக்கும்? அன்றலர்ந்த செந்தாமரையின் காந்தியை யொத்து விழிமலர் மலரும்." கைதாளம் போட்டபடி இருக்க இருவரும் பேசிக் கொண்டார்கள்

எப்பொழுது மகாநாடு முடியும் என்று காத்திருந்ததுபோல் ஊருக்குப் புறப்பட்டு விட்டார்கள் அதுல்யனும் வாரிஜாக்ஷனும்.

வண்டியை விட்டு இறங்காமலே சாமான்களை இறக்கி விட்டு நண்பர்கள் இருவரும் நேராக மேகலாவின் வீட்டிற்கு வண்டியுடன் சென்றார்கள். அந்த வண்டியிலேயே அவளை அழைத்து வந்து வீணையைக் காண்பிக்க வேண்டும் என்ற ஆவலுடன்.

வண்டியிலிருந்து துள்ளிக்குதித்து நிமிர்ந்தான் அதுல்யன். வீட்டுக் கதவின் பெரிய பூட்டுத்தான் அவனை வரவேற்றது. "வாரிஜாக்ஷா!" என்று பதற்றத்துடன் கூப்பிட்டான்.

பின்னோடு இறங்கின வாரிஜாக்ஷனும் திகைத்து நின்று விட்டான்.

"ஒரிடமும் போவதாக எழுதவுமில்லை. சொல்லவுமில்லையே எங்கே போயிருப்பார்கள்."

"பதினைந்து நாளைக்கு மேலாகி விட்டதே அவளின் கடிதம் வந்து. சுற்றுப் பிரயாண கொண்டாட்டத்தால் மனதைவிட்டு அவளுக்குக் கடிதம் எழுதாமலேயே இருந்து விட்டேன் ஒரு கடிதம் மட்டும்தான் எழுதினேன். பதிலை எதிர்பார்க்க வேண்டா மென்றுதானே சொல்லி யிருந்தாள்."

"இப்பொழுது யாரை விஜாரிப்பது" என்றான் வாரிஜாக்ஷன்."

"பக்கத்து வீட்டு கமலம்மாவைக் கேட்டால் தெரியும் வா போவோம்." இருவரும் வந்த உடனேயே கமலம்மா "வாருங்கள் என்குடிசை இன்றுதான் புனிதமைடந்தது. உங்கள் புகழ் உலகமெங்கும் பரவி விட்டது. பத்திரிகைகளெல்லாம் உங்களைப் பற்றித்தான் எழுதுகின்றன" என்று ஏதேதோ சொல்லிக்கொண்டு போனாள்.

"பாராட்டுதலுக்கு நன்றி. மாதவி வீடு ஏன் பூட்டியிருக்கிறது? எங்கே போயிருக்கிறார்கள்?"

"அது ஒரு பெரிய ரகசியமாகத்தானிருக்கிறது. மேகலா ஊரிலிருந்து வந்ததுமே மாதவிக்கு குணங்கண்டு விட்டது. உங்கள் மாமா வந்து போய்க் கொண்டிருந்தார். யாரோ ஒரு ஜோஸ்யர் வேறு வந்து போவார். முத்துகுமரன் மாதவிக்கு அதிகமானதும் இவ்விடத்திலேயே தங்கிவிட்டார். நானும் போய்ப் பார்த்துக்கொண்டு தானிருந்தேன். ஒன்றுமே தெரியவில்லை. பத்து நாள் முன்பு மாதவிக்கு இடம் மாறினால் உடம்பு தேறிவிடும் என்று டாக்டர் சொல்லுகிறார் என்று மட்டும் சொன்னார்கள். அன்னிக்கு ஒரு வேலையாக பக்கத்தூருக்குப் போனேன். மறுநாள் வந்து பார்க்கும் பொழுது வீடு பூட்டியிருந்தது வேலைக்காரி, வேலைக்காரன் இருவரும் கூடப் போயிருக்கிறார்கள்" என்று மூச்சு விடாமல் பேசி நிறுத்தினாள்.

4

வீட்டில் விளையாட்டுப் பொம்மைக்கு பாதி அலங்காரம் செய்து வைத்துவிட்டு, பள்ளிக்குப் படிக்கச் சென்ற சிறுமி பொம்மையின் நினைவாகவே படித்துவிட்டு, அலங்காரத்தைப் பூர்த்தி செய்ய ஓடோடியும் வரும் பொழுது பொம்மை காணவில்லையென்றால் அச் சிறுமி எப்படி அழுவாளோ அப்படி அழுதது அதுல்யனின் மனம். பிரமை பிடித்தவன் போல் அசையாமல் நின்று விட்டான்.

"அதுல்யா! வா! போகலாம்"

"எங்கே போவது?"

"இப்படியே நின்றால் என்ன பிரயோஜனம், அவர்கள் வீட்டு டாக்டரைக் கேட்கலாம் வா"

"இடம் மாறினால் நல்லது என்று சொன்னேன். ஆனாலும் இப்பொழுது பிரயாணம் கூடாது. பத்து நாள் செல்லட்டும் என்று சொல்லிவிட்டு வந்தேன். அன்றே எனது பீஸ் பணம் முழுவதும் கொடுத்து விட்டார்கள். மறுநாள் எப்படியிருக்கிறாள் பார்க்கலாம் என்று போனேன் கதவு பூட்டியிருந்தது" என்றார் டாக்டர்.

"அதுல்யா! வீட்டுக்கு வா. ஸ்நானம் செய்து சாப்பிடுவோம். அநேகமாக இன்று அவளிடமிருந்து கடிதம் வரலாம். இந்தத் தேதியில் இவ்விடம் வந்து விடுவோமென்று அவளுக்கு தெரியும். நிச்சயம் கடிதம் வரும். வா போகலாம்"

வீட்டிற்கு வந்து ஏதோ சாப்பிட்டோம் என்று பெயர் பண்ணினார்கள். தபால்காரனை நோக்கித் தவங்கிடந்தார்கள். தவம் பலித்தது தபால்கள் வந்தது. பாராட்டுக் கடிதங்கள். ஆனால் எதிர்பார்த்த கடிதம் வரவில்லை.

"நண்பா! புறப்படு! நந்திக் கிராமம் போய் வரலாம்".

"அங்கே போய் என்ன செய்வது?"

"முத்துகுமரன் அவ்விடம் தானிருக்கிறான்"

நண்பர்களிருவரும் அங்கு சென்றார்கள். என்ன ஏமாற்றம்? அவன் வீடு பூட்டிக் கிடந்தது.

அக்கம் பக்கம் விஜாரித்துக் கேட்டதில் அவர் குடும்பத்துடன் ஸ்தல யாத்திரை போயிருப்பதாகச் சொன்னார்கள்.

"நண்பா! மோசடி. கமலம்மா என் மாமா வந்து போனதாகச் சொன்னாளல்லவா? அவர் ஏதோ வேலை செய்து விட்டார். என் மேகலாவை இனி நான் காணப் போவதில்லை."

"அபசகுனம் போல் ஏன் இப்படிப் பேசுகிறாய். அவள் தாயாரின் உடல் நலம் காரணமாகத் தான் சென்றிருப்பாள். ஊருக்குப் போவோம். ஏதாகிலும் கடிதம் வந்திருந்தாலுமிருக்கலாம்".

இவர்கள் திரும்பிவந்து இறங்கின ஒரு மணி நேரத்திற்கப்புறம், மாமா, மாமி, பெண் காத்யாயனி மூவரும் வந்திறங்கினார்கள். அதுல்யனுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

"வாரிஜாக்ஷா அவர்களை வெளியே போகச் சொல்" என்றான்.

"பதட்டப்படாதே அதுல்யா! கோபித்துக் கொண்டு முகத்தில் விழிக்கமாட்டேன் என்று சொன்னவர், திரும்பி வந்திருக்கிறார். வயதில் பெரியவர். உன் தாய் மாமனும்கூட. ஏதோ வந்தவரை அவமானப் படுத்தாமல் இருக்கும் வரை இருந்துவிட்டு போகட்டுமென்று பேசாமலிரு."

"அதுல்யா! ஏதோ கோபத்தில் மிருகத்தனமாக நடந்துகொண்டுவிட்டேன் மன்னித்துவிடு. என்ன வந்தாலும் உனக்கும் எனக்கும் விட்டுப்போமா" என்று அருகில் வந்து நின்று கொண்டு சொன்னார் மாமா

"ஊம்" என்றான் கட்டிலில் படுத்திருந்தவன் அவர் பக்கம் திரும்பிப் பார்க்காமலேயே.

"உட்காருங்கள் மாமா" என்றான் வாரிஜாக்ஷன்.

"இல்லே அப்புறம் வரேன்" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டார்.

"வாரிஜாக்ஷா! இந்த வேஷம் எதற்கென்று புரியவில்லையே?"

"நடக்க நடக்கப் பார்ப்போம்!"

மத்தியான சாப்பாடு முடிந்ததும் தபால்காரனை எதிர்பார்த்துக்கொண்டு ட்ராயிங் ரூமில் உட்கார்ந்திருந்தார்கள் வாரிஜாக்ஷனும் அதுல்யனும். குலுக்கு நடை போட்டு, மந்தஹாசம் புரிந்தவண்ணம் அவ்விடம் வந்த காத்யாயனி

"அம்மாஞ்சி! உங்களுக்குப் பரிசாக வந்த வஜ்ரவீணையை நான் பார்க்கலாமோ?" என்றாள்.

"கலாமண்டபத்தில் வாணியின் சிலையின் பக்கத்தில் வைத்திருக்கிறது. போய் பார்த்துக் கொள்."

"நீங்கள் எந்த சர்ச்சையிலும் வெற்றிபெற்றதைப்பற்றிப் பத்திரிகைகளெல்லாம் பத்திபத்தியாக எழுதிவந்தன. நானும் ஒன்றுவிடாமல் வாங்கிப் படித்தேன். மேகலாவும் நீங்களும் உட்கார்ந்து பாடினதைப் படம் பிடித்துப் போட்டிருந்தார்களே! அதையெல்லாம் கத்தரித்து வைத்திருக்கிறேன்" என்று மூச்சுவிடாமல் பேசிக் கொண்டே போனாள்.

அப்பேச்சு நாராசம் போலிருந்தது அதுல்யனுக்கு. நண்பர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்த சமயம் "கார்தியா!" என்று அழைத்த வண்ணம் அவ்விடம் வந்த மாமி அதுல்யத்தின் எதிரிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். அதுல்யனுக்கு அந்த இடத்தை விட்டே ஓடிவிடவேண்டும் போலிருந்தது. அவன் முகக்குறிப்பை அறிந்துகொண்ட வாரிஜாக்ஷன் "பேசாமல் உட்கார்ந்திரு" என்று கண்களினாலேயே எச்சரித்தான்.

"உம். அப்பா போய் விளையாட்டுப் போல மூன்று மாஸம் ஆகப் போகிறது. அவர் என்ன வெல்லாமோ திட்டம் போட்டார், எப்படி யெல்லாமோ நடந்துவிட்டது."

"எல்லாம் காலத்தின் கோலம்" என்றான் வாரி ஜாக்ஷன்.

"நானும் இவன் அம்மாவும் அந்த நாளிலே அக்காவும் தங்கையும் போல்தான் பழகுவோம். சமயங்களில் "சம்மந்தியம்மா" என்று பரிகாசம் செய்து கொள்ளுவோம். 'உம்' ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு அவள் இருந்தால் எல்லாமே வேறு விதமாகத்தான் நடக்கும்."

"மனிதன் நினைத்ததெல்லாம் நடந்துவிடுமா? அப்படி நடந்தால் இது பூலோகமாக இருக்காது" என்றான் வாரிஜாக்ஷன்.

"ஆமாமப்பா. நீ சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. இல்லேன்னா இவ்வளவெல்லாம் பேசி விட்டு இந்த மேகலா அந்த முத்துக்குமரனைக் கல்யாணம் பண்ணிக்குவாளா?"

"என்ன?" என்று இருவரும் ஏக காலத்தில் கத்தினார்கள்.

"ஆத்திரப்பட்டு என்னபண்ணுவது. கல்யாணம் நடந்தாகிவிட்டது" என்றாள் சாவதானமாக.

அதுல்யன் சிலைபோல் ஆகிவிட்டான். "என்ன மாமி சொல்லுகிறீர்கள். உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"எப்படித் தெரியுமா? நாங்கள் கல்யாணத் திற்குப் போய்விட்டுத்தான் வந்தோம்" என்றாள் காத்யாயனி.

"மாமி! புதிர் போடாமல் கொஞ்சம் விபரமாக சொல்லுங்கள்" என்றான் வாரிஜாக்ஷன்.

"விசேஷமாக எங்களுக்கு ஒண்ணும் தெரி யாது. முத்துக்குமரனிடமிருந்து கடிதம் வந் தது, இவர் போனார். அப்புறம் வந்து எங் களையும் கூட்டிண்டு போனார். ஏலாங்குடின்னு அவனுடைய சொந்தக் கிராமம். அதிலே கோவில்லே கல்யாணம் நடந்தது. மாதவி படுக் கையிலிருந்தாள். நான் மேகலாவையே கேட் டேன். அவ அழுதுண்டே சொன்ன விஷயம் இதுதான் "அம்மாவைப் பார்க்க, எங்களுக்கு பழக்கமான ஜோஸ்யர் வந்தார். என் கல்யாணப் பேச்சு வந்தது. அதுல்யருக்கும் எனக்கும் கல் யாணம் நடந்தால் மூன்றாவது மாதம் அவர் இறந்து விடுவாராம். அவர் தாயாரின் மன விருப்பப்படி தான் நடக்கும். அதனால் அதுல் யர் உயிர் பிழைக்க வேணுமானால் நீ முத்துக் குமரனை மணக்க வேண்டுமென்று சொன்னார். உலகத்திலேயே மஹாவித்வான் என்று பெயர் வாங்கியவர், அவர் சங்கீதம் என்றென்றும் பிர காசிக்க வேண்டும். என்னால் அவருக்கு ஆபத்து என்றால் நான் அதை எப்படி ஏற்பேன். அவர் வந்தால் இருந்தாலுமே இறந்தாலுமே இந்தக் கல்யாணம் நடந்தேயாகவேண்டுமென்று சொல்லுவார். அவர் வருவதற்கு முன்னமேயே ஏற்பாடு செய்யவேண்டுமென்றுதான் இப்படிச் செய்தது. கொஞ்ச நாளைக்கு நான் இருக்கு மிடமே அவருக்குத் தெரியக் கூடாது. பிறகு அவர் கல்யாணம் கார்த்திகை செய்துகொண்டு நன்றாக வாழும் சமயத்தில் அவருடன் சேர்ந்து பாட வருவேன். நான் கொடுத்து வைத்தது இவ்வளவு தான் அப்படின்னு சொன்னா" என்று முடித்தாள்.

அவ்வளவே. அது வரை சிலை போல் அமர்ந் திருந்த அதுல்யன், "ஐயோ மேகலா! உன்னை ஏமாற்றி இருவர் வாழ்வையும் கொலை செய்து விட்டார்கள். மேகலா! என் வாழ்வு முடிந்தது;" என்று அந்தக்கட்டடமே இடிந்து விழும் போலக் கத்தினான். அடுத்த கணம் மயங்கி விழுந்து விட்டான். தாங்கிக்கொண்ட வாரிஜா க்ஷன் "அதுல்யா! அதுல்யா!" என்று அலறினான். பேச்சு மூச்சே இல்லை. உயிர் இருக்கிறதா இல்லையா? என்பது கூடத் தெரியவில்லை.

எட்டாம் அத்தியாயம்

எட்டு நாள்கள் கண்ணை விழிக்க வில்லை. மூச்சு மட்டும் ஓடிக்கொண்டிருந்தது. டாக்ட ருக்கும் நம்பிக்கையில்லை. அவன் குணமாகி எழுந்தாலும் மூளைக்கோளாறு இல்லாமலிருக்க வேண்டுமே யென்று கவலைப் பட்டார். வெளி யூரிலிருந்து பெயர் பெற்ற டாக்டர்கள் வர வழைக்கப்பட்டார்கள். எல்லோருடைய திறமையை உபயோகித்ததில் பத்தாவது நாள் கண்ணை விழித்துப் பார்த்தான்.

இனிமேல் உயிருக்குப் பயமில்லை. ஆனால் மூளை பாதிக்கப்படாமலிருக்கிறதா என்று தெரிய வேண்டுமென்று காத்திருந்தார்கள். இரண்டு நாள் சென்றது. கட்டிலின் மீது இரண்டு பக்கங்களிலும் இரண்டு கைகளை யும் ஊன்றிக்கொண்டு அதுல்யனது முகத் தையே பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்த வாரிஜாக்ஷனது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. உணர்வு வந்த பின்பு இவனை எந்தவிதம் தேற்றுவது? என்ற சிந்தனை யிலிருக்கும் பொழுது அதுல்யன் கண்ணை விழித்து கொஞ்ச நேரம் வாரிஜாக்ஷனை பார்த்த படி இருந்தன.

"அதுல்யா!" என துக்கத்தை அடக்கியவாறு அழைத்தான் வாரிஜாக்ஷன்.

"நண்பா! என் மேகலா!" என்று சொல்லிய வண்ணம் இருகைகளினாலும் வாரிஜாக்ஷனது கழுத்தைக் கட்டிக்கொண்டான். வாரிஜாக்ஷனும் அதுல்யனை அணைத்துக் கொண்டான்.

"அத்துல்யா!"

"மேகலா!"

"அதுல்யா!"

"நண்பா! என் மேகலா"

"வருந்தாதே! உன் மேகலா உன்னிடம் ஓடி வந்து விடுவாள்"

"நிச்சயமாக வருவாளா?"

"வருவாள்"

அன்று டாக்டர் வந்தபின்பு மூளைக்கோளாறு எதுவும் ஏற்படவில்லை என்பது தெளிவாகிற்று." ஆனால் ஜூரம் மட்டும் இறங்கவேயில்லை. கண் விழித்த பொழுதெல்லாம், "நண்பா என் மேகலாவை இழந்தபின்பு நான் எதற்காக வாழவேண்டும்?" என்று கேட்பான்.

"உனக்காகக் கூட நீ வாழவேண்டாம். சங்கீத உலகில் மாபெரும் நஷ்டம் ஏற்படாதிருக்க நீ வாழவேண்டும்."

இப்படியாக அவன் மனதிற்குச் சோர்வு ஏற்படாவண்ணம் பேசி அவனை குணப்படுத்தினான். அவன் ஜூரம் இறங்க மட்டும் ஒரு மாதமாகிவிட்டது. பின்னும் பதினைந்து நாளாகிவிட்டது எழுந்து நடமாட. தூங்கும் நேரம் தவிர மற்றபொழுதெல்லாம் நண்பர்கள் பேசிப் பேசி ஆற்றிக்கொள்வார்கள்.

"நண்பா! மேகலாவிற்கு ஏதோ சந்தேகம் தட்டியிருக்கிறது. 'பிரிவு நிரந்தரமோ' என்று கதறியழுதாளே! பாவி நான் ஏன் தங்கினேன் சங்கீத மஹாநாடு! புகழ்! கொண்டாட்டம்! பெருமை! வஜ்ரவீணை! இவைகளினால் எனக்கு என்ன சுகம் இவைகளைக்கண்டு மயங்கி என் மேகலாவைப் பறி கொடுத்து விட்டனே. இவையொன்றுமேவேண்டாம். மனிதசஞ்சாரமில்லாத காட்டில் ஒரு குடிசையில் நானும் அவளுமாக வானம்பாடிபோல் பாடிக்கொண்டு, காய்கனிகளைச் சாப்பிட்டுக் கொண்டு எனக்கு அவள்

அவளுக்கு நான். எங்களிருவருக்கும் துணை காதல். அவளின் அழகிய முகத்தைப் பார்த்துக் கொண்டு, கருவண்டையொத்த விழிகளில் என்னைக்கண்டு, மந்தமாருதத்தில் மகிழ்ந்து வாழ்ந்து வருவோமே"

"அதுல்யா! உனக்கு நான் எவ்வித சமாதானம் சொல்வது. நடந்து போனதைப் பற்றி வருந்தாதே. ஆண்பிள்ளையாகிய நீ தைரியத்தைக் கைவிடலாகாது. மேகலா இந்த விஷயத்தில் எப்படி அகப்பட்டுக் கொண்டாள் என்பதுதான் புரியவில்லை."

"இந்த மாமாதான் ஏதோ குள்ளநரி தந்திரத்தை உபயோகித்து அவளை மடக்கி விட்டிருக்க வேண்டும். பேதை தைரியமே இல்லாதவள். மாதவி ஓர் அப்பாவி. ஆண் புலிகளெல்லாம் ஒன்றுசேர்ந்து இந்த இரண்டு பசுக்களை நாலாபக்கமும் நின்று மடக்கில் எப்படி வெளியேற முடியும். எனக்கில்லாவிட்டாலும் அவளாவது சுகமாக இருப்பாளா என்றால் அதுவுமில்லை. அவள் எந்த இடத்தில் எப்படிக் கண்ணீர்விட்டுக் கதறுகிறாளோ! ஐயோ! மேகலா நமது மனக் கோட்டையெல்லாம் தவிடுபொடியாகி விட்டதே" துக்கம் தாங்க முடியாமல் விம்மினான்.

"அதுல்யா! நீ வருத்தப்படக்கூடாது. உன் தந்தையின் அந்திய காலக் கட்டளையை நீ புறக்கணிக்கக்கூடாது."

"நான் புறக்கணிக்கவில்லை. வஞ்சகர்கள் கூடி என் தந்தையின் கட்டளையைப் புறக்கணித்து விட்டார்கள்."

"அதைச் சொல்லவில்லை நான்' நீ எந்த நிலைமையிலிருந்தாலும் சங்கீதத்தை மறக்கவோ புறக்கணிக்கவோ கூடாது என்பது. அதனால் நீ உனது வாழ்க்கையின் லக்ஷ்யம் முழுவதையும் சங்கீதத்திலேயே வைக்க வேண்டும்"

"ஆம்! நண்பா உண்மை. இனி என் மனம் அதில்தான் நிம்மதி காணமுடியும். ஆனாலும் என்மேகலா எந்த நிலைமையிலிருக்கிறாள்" என்று மட்டும் தெரிந்தால் போதும்".

"தெரிந்து கொள்ளலாம். நீ பூரண குணமடைந்த பின்பு முதல் வேலையாக அதை

விஜாரித்துக் கொண்டு வருகிறேன்: இன்னொரு விஷயம் நீ கவனித்தாயோ இல்லையோ? காத்தியாயினி தேவியார் அடிக்கடி இவ்விடம் விஜயம் செய்வதும், வேளைக்கொரு அலங்காரம் செய்து கொண்டு உனக்குப் பணிவிடைபுரிய முன் வருவதும், அப்படியே உன்மீது அன்பை அள்ளிவீசுவதும், அத்தான், என்று குழைவாக அழைப்பதும் எல்லாம் எதற்காக?"

"அத்தான்! என்மேகலா வாயினால் வரவேண்டுமென்று எதிர்பார்த்த அப்புனிதமான சொல்லை, இம்மேனிமினுக்கி வாயினால் கேட்க நாராசம் போலிருக்கிறது. தன்சொல் எடுபடவில்லையென்பதற்காகப் பெண்ணை அனுப்புகிறார் சகுனி மாமா"

"அதுல்யா! நானொன்று சொல்லுகிறேன் கேட்கிறாயா?

"சொல்லு"

"மேகலாவோ இன்னொருவனது உரிமைப் பொருளாகி விட்டாள். என்றாலும் அவள் மனதில் உன் உருவம் தானிருக்கும். அதேபோல் உன்மனதில் அவள் உருவமிருந்தாலும் காத்தியாயனியைக் கல்யாணம் செய்துகொண்டு விட்டாயானால், எதிர்ப்பு என்ற சுழலில் அகப்படாமல் வாழ்க்கையின் நீரோட்டத்தில் நீந்திச் செல்லலாம்"

"நண்பா!" என்று அலறியே விட்டான்.

வாரிஜாக்ஷான் நடுங்கிப்போய் விட்டான். என்ன? என்றான் பதட்டமாக

"என்னை என்னவென்று நினைத்தாய்! சிங்கத்தின் இரையை நரி கௌவிக் கொண்டது என்பதற்காக, சிம்மம் அழுகின இரையை எடுத்துக் கொண்டு விடுமோ? என் மேகலாவைத் தவிர வேறு எந்த அதிரூப ஸௌந்தர்யவதியும் என் மனதில் இடம் பெற முடியாது. அவளைத் தீண்டின கை மற்றவளைத் தீண்டாது. என் வாழ்வு இனி தனிமை. பிரம்மசர்யம். என் கடைசிமூச்சுவரைப்பாடி பாடி, சங்கீதமே என்லக்ஷ்யமென்று உயிரை விடுவேன். சங்கீதக் கலைக்கு எந்தவிதமெல்லாம் தொண்டு புரியலாமோ அந்த விதமெல்லாம் ஆராய்ச்சி செய்வதே என் ஜீவிய லக்ஷ்யம். ஆனால், ஆனால் நான் அரும்பாடுபட்டு உருவாக்கிய அபூர்வ வெற்றி அடியுடன் நாசமாக்கப்பட்டு விட்டதே! அதை நினைக்கும் பொழுது என்னால் தாங்கவே முடியவில்லை." உணர்ச்சிப் பெருக்கினால் வாய் ஊமையாகி விட்டது. கண்களை மூடியபடி படுத்திருந்தான். வாரிஜாக்ஷனுக்குப்பயமாகப் போய்விட்டது. மயக்கமடைந்து விடுவானோ என்று.

மௌனத்தை விழுங்கின சில நிமிஷங்கள். சட்டென எழுந்து உட்கார்ந்த அதுல்யன் "தெய்வம் என்பது உண்மைதானா? சத்யம் நிலையானதுதானா! இல்லை. இல்லவே இல்லை, உண்மையானால் சத்யசந்தரான என் தந்தை விடுத்துச் சென்ற மரணவாக்கு ஏன் நிறைவேறவில்லை! அந்த முத்துக்குமரனின் தந்தையின் மரணவாக்கு ஏன் நிறைவேற்றப் பட்டது! எல்லாம் மனிதனின் சூழ்ச்சி. அக்கிரமத்திற்கு அஞ்சாதவருக்கே வெற்றி! ஏன் நான் மட்டும் நியாயத்திற்குக் கட்டுப்பட வேண்டும். என் மேகலாவை முத்துக்குமரனிடமிருந்து மீட்டு வந்தாலென்ன? விடுவிடுவென்று சென்று பளார் பளாரென அவன் கன்னத்தில் அறைந்துவிட்டு என் மேகலாவின் கையைப் பற்றினேனால் என்னுடன் ஓடிவந்துவிடமாட்டாளா? எனக்கு வீடு, வாசல், பணம், பதவி ஒன்றுமே வேண்டாம். என் மேகலாவுடன் எங்கேனும் சென்றுவிடுகிறேன். அவளில்லாமல் என்னால் வாழமுடியாது. அவள் பிரிவைத் தாங்கவே முடியாது! ஐயோ மேகலா!" உணர்வற்றுப் படுக்கையில் சாய்ந்தான்."

"அதுல்யா! அதுல்யா!" என்று அலறினான். முகத்தில் ஜலத்தைத் தெளித்தான். கண்களைத் திறந்தான். குனிந்து பார்த்துக்கொண்டிருந்த வாரிஜாக்ஷனை 'நண்பா!' என்று அழைத்தவண்ணம் கையை நீட்டினான். வாரிஜாக்ஷன் அதுல்யனை அணைத்துக்கொண்டான். "நீ இப்படி புலம்பவும் நான் கேட்கவுமாக விதி சதி செய்துவிட்டதே." என்று கன்னத்தில் பதித்தபடி கூறினான். சற்றுநேரம் மௌனத்தில், தங்கள் அணைப்பில் சிறிது ஆறுதலைக் கண்டார்கள்.

அதுல்யனை படுக்கவைத்துவிட்டு, கட்டிலில் அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தன் இரு கைகளையும் இருபக்கங்களிலும் ஊன்றியபடி— "நீ இப்படி தினமும் புலம்புவது சரியல்ல. உன் வாயாலா இந்த அபத்தமான சொற்கள் புறப்படவேண்டும்! மனிதன் தானாக நாஸ்திகம் பேசுவதில்லை. இப்படிப்பட்ட ஒரு கொடுமையான நிலைமை ஏற்படும் சமயம் தான் நாஸ்திகமும் குழப்பமும் தோன்றி ஆட்டுவிக்கிறது. எரிமலையாகக் குமுறும் மனம், குமுறும் எரிமலை வெடிப்பதுபோல், ஏமாற்றத்தில், விதியின் சதியால், நியாயத்திற்குப் புறம்பாக பிறழன்று இன்னலை உண்டாக்குகிறது.

"உறுதியற்ற மனம் படைத்தவர்கள், உணர்ச்சிக்கு வசமாகுபவர்கள், அந்தமாதிரி மாறிவிடுவார்கள். உன் போன்ற அரிய சாதனையைச் செய்து முடிக்கும் திறன் பெற்றவர்கள், அறிவென்னும் ஆயுத பலத்தினால் ஆத்திரமென்னும் எதிரியை அடக்கவேண்டும். அப்பொழுதுதான் மனிதத் தன்மை மேலோங்கும். உன் உதவி உலகத்திற்குத் தேவையாக இருப்பதனால் தான் இப்படி ஒரு நிலைமையை ஏற்படுத்தினார் ஈசன். இன்னும் கொஞ்ச நாளில் மேகலா உன்னிடமே வரலாம். உணர்ச்சி வசப்படும் காதலில் சிக்காமல் தூய வாழ்க்கை நடத்திக்கொண்டு, சங்கீத வனத்தில் விதவிதமான ராகதாள சாதனைகளான புஷ்பச்செடிகளை வளர்க்கலாம்.

"என் வாழ்க்கையை எடுத்துக்கொள். அதி பால்யத்தில் மணம் செய்து வைத்தார்கள். சுசீலா

என் மனதிற்கேற்ற மனைவியாகத்தான் வாழ்ந்தாள். எங்கள் தாம்பத்ய வாழ்க்கையின் சின்னமாக மூன்று முத்துக்கள் கையில் தங்காமல் உருண்டோடி மறைந்தன. நாலாவதாக சசிதரன் பிறந்தான். எவ்வளவு ஆவலாக அவனை வரவேற்றோம். எப்படி வளர்த்தாள். இரண்டு வயது குழந்தையை என் மடிமீதிருத்திவிட்டு மறைந்துவிட்டாள். குழந்தையே என் உலகம் என்று வாழ நினைத்த என்னை அப்படி வாழவிட்டார்களா? ஏன் நீயும் கூடச் சேர்ந்துதானே கமலாவைக் கைப்பிடிக்கச் செய்தீர்கள். அம்மா அப்பா இருப்பதனால் சசியைப்பற்றிக் கவலைப் படாமல் இருக்கமுடிகிறது. சரி, இதுவும் நமது கடமைதானென்று நான் இருக்கவில்லையா? மனதில் சுசீலாவின் நினைவு மறைந்துவிட்டதென்று நினைக்கிறாயா? இவையெல்லாம் எதற்குச் சொல்லுகிறேனென்றால் நீ தைரியமாக வாழவேண்டும்."

"நண்பா! உன் சசியை எனக்குத் தருவாயா?"

"அதுல்யா! என்னே நமது அன்பின் பெருமை. என் மனதில் நினைத்ததைக் கேட்டு விட்டாய். உன் மகன் அவன். பெண்கள் உதவியில்லாமல் இருக்கமுடியும் என்ற நிலைமை ஏற்பட்டதும் உன்னிடம் தந்துவிடுகிறேன். உன் வாரிசாக உன் வித்தையெல்லாம் அவனுக்குக் கற்றுவை. உன்னைப்போல் பெயரும் புகழும் அடையட்டும். ஒரு சமயம் உன் மனம்கவர் மங்கை, உன் சங்கீதத்தில் லயமாகும் பெண்மணி கிடைப்பாளானாலும் இவன் உன்னிடமிருக்கட்டும் சரிதானே!"

"நண்பா! பால்யத்தில் நாம் சந்தித்தபொழுது வாரிஜாக்ஷா! என்று எல்லா நண்பர்களைப்போல் பெயர் சொல்லி அழைத்தால் அதில் புதுமை இருக்காது. நாம் உயிரும் உடலும்போன்றவர்கள். நான் நண்பா என்றுதான் கூப்பிடுவேன் என்று சொன்னேனல்லவா? அந்த நண்பனின் மதிப்புக் குறையாமலிருக்கவேண்டுமானால் இன்னொருமுறை மனங்கவர் மங்கை என்பதுபோன்ற பேச்சே என்னிடம் பேசக்கூடாது. புரிந்ததா?"

"மன்னித்துவிடு. இனிமேல் பேசமாட்டேன். ஆனால் நீ மனதைத் திடப்படுத்திக்கொண்டு தைரியமாக நடமாடவேண்டும்."

இந்த விதமாகப் பேசிகொண்டே பொழுதைப் புரண்டோடச் செய்தார்கள். பதினைந்து தினங்களில் நடமாடத் தொடங்கினான். ஒருவாறு உடம்பும் தேறிவந்தது. ஒருநாள் "நண்பா! மேகலா எப்படி இருக்கிறாள். என்று தெரிந்து விட்டால் என் மனதிற்குச் சற்று நிம்மதி ஏற்படும். அவள் வீட்டில் யாரியிருக்கிறார்கள், என்று பார்த்து வரலாமா?"

"போகலாம். இரவு எட்டு மணிக்கு மேல் ஒருவரும் அறியாவண்ணம் சென்று வருவோம்." இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள். உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

மேகலா வந்திருப்பாளோ? வந்திருந்தால்? அதற்குமேல் அதுல்யனுக்கு ஆலோசனை நகரவில்லை கால்களும் வேகத்தைக் குறைத்துக் கொண்டன,

"ஏன் தயங்கி நிற்கிறாய். வா. கதவைத்தட்டுவோம் என்ன விஷயமாக இருந்தாலும் நீ தைரியமாக ஏற்கத் தயாராக வேண்டும். என்றான் வாரிஜாக்ஷன். கதவைத் தட்டினதும் திறக்கப் பட்டது. வேலைக்காரி நின்று கொண்டிருந்தவள்

"வாருங்கள்" என்று வழிவிட்டு நின்றாள்.

உள்ளே சென்று நாற்காலியிலமர்ந்து கொண்டார்கள். அதுவரை அடக்கி வைத்திருந்தவள் போல் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு தேம்பித் தேம்பியழலானாள். இருவரும் திடுக்டவர்களாக "ஏனம்மா அழுகிறாய்? என்ன நடந்தது?" என்று கேட்டான் வாரிஜாக்ஷன். சிலையாக உட்கார்ந்திருந்தான் அதுல்யன்.

"மாதவியம்மா போய்விட்டாங்கள்" என்று விக்கி விக்கி அழுதவாறு கூறினாள்.

"ஐயோ மேகலா!" இருகைகளினாலும் தலையை அமுக்கிப் பிடித்துக் கொண்டான் அதுல்யன்.

"இந்தாம்மா அழாதே! என்ன நடந்தது என்பதை அழுகையை நிறுத்திவிட்டு சற்று விவரமாகச் சொல்லு."

ஒருவாறு அழுகையை நிறுத்தி, கண்ணைத் துடைத்துக்கொண்டு "ஐயோ! எஜமான் இப்படி உருமாறிப் போயிட்டீங்களே! நீங்களும், மேகலாவும், பொண்ணு மாப்பிள்ளையாக வரும் வழியை எதிர்பார்த்தோம். சிங்கத்தின் இரையை நரி கொண்டு போயிடுச்சே. எம்மேகலா! அழுதது! கையெடுத்துக் கும்பிட்டுது. ஐயோ அதுக்கு விடியலையே" மறுபடி ஒருதேம்பல்.

"எஜமான்! மேகலா சொல்லிச்சு. நீங்க ஆயுசோடே நன்னா வாளனும்தான் அது அவரைக் கட்டிக்கிட்டதாம்னு சொல்லச் சொல்லிச்சு."

"நன்றாக வாடுகிறேன் என்று சொல்லு" என்றான் அதுல்யன்.

"இதைப்பாரு. நான் கேட்பதற்கெல்லாம் கொஞ்சம் விவரமாகச் பதில் சொல்லு. மேகலா வரும்பொழுது மாதவி எப்படியிருந்தாள்."

"படுத்தப் படுக்கையாத்தானுங்க. மேகலா வந்ததும் கொஞ்சம் குணமாச்சு. ஜோஸ்யகாரரு வந்தாரு. இவருமாமா வந்தாரு. முத்துக்குமரு வந்தாரு. அல்லாரும் பேசிப் பேசிக் குடியே கெடுத்துட்டாங்க"

"என்ன பேசினாங்க?"

"எம்முன்னாலேயா பேசுவாங்க. அறையிலேயே கூடிப்பேசுவாங்க. மேகலா அளுதுகிட்டேயிருக்கும். பொரவாலே மாதவியம்மாளே வேறே ஊருக்குக் கூட்டிப் போவணும்னு சொன்னாங்க. அல்லாரும் குத்தாலம் போனாங்க. முத்துக்குமரு வீட்டாரும் வந்தாங்க, நாங்க போன மூணாம் நாளு காலமே மேகலாவுக்கு அலங்காரம் செய்தாங்க. மேகலா அளுதுதுன்னு" அப்படியே அவளும் அழ ஆரம்பித்தாள்.

"இந்தாம்மா! இனிமே அழுதா என்ன பிரயோ ஜனம். கொஞ்சம்சமாதானம் பண்ணிக்கொண்டு விஷயத்தைச் சொல்லு".

"கொட்டு மேளத்தோடே கோவிலுக்குக் கூட்டிப்போயி அந்தப் பாவிமகன் தாலிக்கட்டினு. மாதவியம்மா ஒருநாளு மேகலா இல்லாமே தனியா இருந்தாங்க."

',ஏன்

"நாங்க இருந்த வங்களா வேறே. முத்துகுமரு வங்களாவேறே. அவங்க வங்களாவுக்குக் கூட்டிப்போனுங்க. மூணும் நாளு அம்மாளுக்கு உடம்பு அதிகமாயிடுச்சு. மேகலா வந்தது. அண்ணைக்கு முளுதும் தாயும் மகளும் பேசிக்கிட்டே இருந்தாங்க. மறுநாளு கருக்கல்லே ஐயோ எப்படிச் சொல்லுவே. மக, கையைப் பிடிச்சுக்கிட்டே உசிரே விட்டுட்டாங்க, எம்மா உங்களே எந்த செம்மத்திலே காணப்போறே" என்று அழ ஆரம்பித்து விட்டாள்.

அதுல்யன் எங்கோ வெறித்துப் பார்த்த வண்ணம் ஆடாமல் அசையாமல் சிலைபோலிருந்தான். வேலைக்காரி கொஞ்சம் அழுது ஓயட்டுமென்று விட்டு விட்டு 'அதுல்யா!' என்று தோளைப் பிடித்துக் குலுக்கினுன் வாரிஜாக்ஷன்.

திரும்பி வெறிக்கப் பார்த்தவன், "கவலைப் படாதே. இனிமேல் மயக்கம் வராது. நெஞ்சுத் தண்ணீர் வற்றியே போய்விட்டது. உணர்ச்சி மரத்துவிட்டது."

வேலைக்காரி பக்கம் திரும்பி "அப்புறம் என்ன நடந்தது சொல்லு".

வாரிஜாக்ஷான் அதுல்யனை உலுக்கும் பொழுது அவளும் அழுகையை நிறுத்திவிட்டு அவனைக்கவனிக்கலானாள். "பொரவு என்ன குத் தாலுத்துச் சந்தியிலே அம்மாளே வாரிக்குடுத் துப்பிட்டு எங்கெல்லாமோ ஊர் ஊரா கூட்டிக் கிட்டுப் போனுங்க. கடாசிலே அவங்க கிராமத் துக்கு வந்து சேர்ந்தோம். எம் புருசனையும் என்னையும் இந்த வூட்டுலேயிருந்துண்டு வூட் டைப் பார்த்துக்கச் சொன்னுங்க" என்ருள்.

"என் மேகலா எப்படி இருக்கிருள்? சொல் லம்மா" என்ருன் அதுவரை வாய் திறவாமல் உட்கார்ந்திருந்த அதுல்யன்.

"என்னத்தை சொல்லுவே. நடை பிணமா நடமாடுது. தாலிகட்டின பொரவு தாஞ்சேதது தப்புனு தெரிஞ்சுக்கிட்டாரு. பொரயோசனம் அவருமுகத்திலே முளிக்காம ஒரு அறையிலேயே குந்திக்கிட்டுருக்கு. அவரு பொஞ்சாதி புண்ணியவதி. புருசன் தாலிகட்டின பொண்ணுன்னு நெனக்காமே ஆறுதல் சொல்லிக்கிட்டிருக்கு"

அவரு முகத்திலே முழிக்காமலிருக்கிருள் என்று வாக்யம் அதுல்யனுக்கு ஆறுதலாகஇருந் தது. தன்னைத்தவிர வேறு ஒருவனைக் கனவில் கூடத் தீண்டமாட்டாள் என்ற திருப்தி அவன் வேதனையைக் குறைந்தது.

எதிர்பார்த்த பொருள் தனக்குக் கிடைக்க வில்லை என்ற ஏமாற்றத்தை மற்ரெருவனுக்கும் கிடைக்கவில்லை என்ற திருப்தியில் மறந்து விடுகிறது மனம் மனிதனுக்கு இது ஒரு பலவீனம்.

எவ்வளவு தரம் கேட்டும் இதற்குமேல் அவளி டமிருந்து ஒன்றும் அறிந்துகொள்ள முடிய வில்லை. அதுல்யனது மாமா, முத்துக்குமரு எல்லோரும் சேர்ந்து கொண்டு, மரணவாக்கு. ஜோஸ்யம் என்றெல்லாம் பயமுறுத்திக் காரி யத்தை வெற்றிகரமாக முடித்து விட்டார்கள். என்பது மட்டும் விளங்கிற்று. ஆனுல் மேகலா எப்படி சம்மதித்தாள். அவள் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தால் அவர்களிடமிருந்து தப்பி யிருக்க முடியும். பேச்சுத் துவங்கினதுமே காசி யிலிருந்த விலாஸத்திற்குத் தந்திகொடுத்தால் லது கடிதம் எழுதியிருந்தால் எப்படியும் நான்கு நாளைக்குள் தங்களுக்குக் கிடைத்திருக்கும். உடனே பறந்து வந்திருக்க மாட்டோமா? என்று பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை.

"நண்பா! அவளை எவ்விதமெல்லாம் கஷ்டப் படுத்தினுர்களோ? அவள் மனதில் ஏதோ பயங்கரமான எண்ணம் தோன்றும்படி சூழ் நிலையை உண்டாக்கியிருக்கிருர்கள்."

"அவர் ஆயுசுடன் இருக்கவேண்டு மென்ப தற்காக இந்தக் கல்யாணம் செய்துகொண்டேன் என்று அவளுடைய வாக்யம் அப்படித்தான் தொனிக்கிறது."

பின்னும் நான்குநாள் சென்றது. நண்பர்கள் இருவரும் மேலே எப்படி? எந்தப் பாதையில் வாழ்வின் உருளையை ஓடவிடுவது என்ற சர்ச்சையிலிறங்கினுர்கள்.

"நண்பா! உன் குடும்பத்தை விட்டுவந்து ரொம்ப நாட்களாகிறது. நீ உன் மனைவி குழந்தை பெற்ரோரைப் பார்த்து வா" என்ருன்.

"உன்னைத் தனியே விட்டுவிட்டு எப்படிப் போவேன்? நீயும் என்கூட வா, கொஞ்சநாள் இருந்துவிட்டு வரலாம்."

"உம், உன்னிஷ்டப்படி வருகிறேன். தக்ஷிணு மூர்த்தியினிடம் எல்லாவற்றையும் ஒப்புவித்து விட்டுப் போகலாம்,"

"அப்பா மறைவிற்குப்பின் பள்ளிக்கூடம் முதலிய விஷயங்களை அவர்தான் கவனித்து வரு கிருர். வீட்டை உன் மாமா குடும்பம் பார்த்துக் கொள்ளுமல்லவா?"

"அவர் டேரா எந்தமட்டும் என்பதுதான் புரியவில்லை."

"எனக்குத் தெரியும். சொன்னுல் உனக்குக் கோபம் நிச்சயம்."

"கோபிக்கவில்லை சொல்லு. நீ சொல்லப்போ வதை நானும் ஓரளவு யூகம் செய்திருக்கிறேன்."

"காத்யாயனி கல்யாணம், இல்லையேல் நீடித்த மனத்தாங்கல். இரண்டிலொன்று நடைபெறும் வரை அவருடைய டேரா நீடிக்கும்.

"நாம் போய் வருமளவும் அதைப்பற்றிய சிந் தனையை விட்டுவிடுவோம் அவர் பாட்டில் இருந்து கொண்டிருக்கட்டும்."

"இவர்கள் இருக்கட்டு மென்ருல் அவர் அதை ஆமோதிக்க வேண்டிய அவசியம்?" (தொடரும்)

விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

அமர மின்னேட்டம்:—

மின்சாரத்தைக் கடத்தும் ஒரு கம்பி சுருளின் வழியே சில விநாடிகளுக்கு மின்னேட்டத்தைச் செலுத்திவிட்டு அதை நிறுத்தினால் மின்னேட்டம் உடனே நின்றுவிடும். ஏனெனில் பொதுவாக எல்லாப் பொருள்களிலும் மின்னேட்டத்துக்கு ஓர் எதிர்ப்பு இருக்கும். இது உலோகத்துக்கு உலோகம் மாறுபடும். உலோகத்தை மிக அதிகமாகக் குளிர்வித்தால் ஒரு விபரீத விளைவு நேருகிறது. திடீரென்று அதன் மின் எதிர்ப்பு மறைந்து விடுகிறது. ஆகையால் ஒரு முறை அதில் தொடங்கும் மின்னேட்டம் அமரத்துவம் பெற்று எப்போதும் நிகழ்ந்துகொண்டிருக்கும். இவ் விளைவை ஒரு பூத நூல் அறிஞர் 1911-ம் ஆண்டில் கண்டுபிடித்தார். இதன் காரணம் இன்னும் தெளிவாக வில்லை. சில உலோகங்களிலும், உலோகக் கலவைகளிலும் மட்டுமே இவ்விளைவு நிகழ்கிறது. அமெரிக்காவில் வெஸ்டிங்ஹவுஸ் மின்சாரக் கருவிகள் கம்பெனியின் விஞ்ஞானிகளான இருவர் இதுபற்றிச் சில உண்மைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். டாக்டர் சந்திரசேகர், ஜே. கே. ஹல்ம் என்னும் இவ் விருவரும் நடத்திய சோதனைகளிலிருந்து உரேனியம் கலந்த நான்கு புதுக் கலவைகளிலும் இவ் விளைவு நிகழும் என்று தெளிவாயிற்று. இவ் விளைவு மிகுதியான குளிரைத் தவிர சற்று அதிகமான வெப்பங்களிலும் நிகழக் கூடும் என்று எதிர்பார்க்கிறார்கள். இவ்வாறு அதை நிகழ்த்த முடிந்தால் மின்சாரக் கருவிகளின் அமைப்பில் பெரும் புரட்சி நேரும். இப்போது கற்பனைக்கும் எட்டாத செயல்களை மின்சாரம் செய்ய உதவும்.

புதுவகை மூக்குக் கண்ணாடி:—

ஏறக்குறைய கண் பார்வை போய்விட்டவர்களுக்குக்கூட அதைத் திருப்பித் தரும் புதுவகைக் கண்ணாடியொன்றை அமைத்திருக்கிறார்கள். இது பல வில்லைகளால் (Lenses) ஆனது. அவற்றைக் குறிப்பிட்ட தொருவகையில் பொருத்தி ஒரு பிளாஸ்டிக் உறைக்குள் ஒரே வில்லையாக அமைக்கிறார்கள். இந்த அமைப்பு மூன்று பகுதிகள் கொண்டது. மேற்பகுதியில் எட்டு வில்லைகள், இவை எட்ட உள்ள பொருள்களை 3 மடங்கு பெரிதாக்கி விழித்திரையில் திருத்தமான படிவம் விழுமாறு செய்யும். மையப் பகுதி அதிகமான பரப்பைக் கொண்டவாறு அமைந்த இரு வில்லைகளால் ஆனது. அருகிலுள்ள பொருள்களைப் பார்ப்பதற்கு இது உதவுகிறது. கீழ்ப்பகுதியில் நான்கு அல்லது ஆறு வில்லைத்தொகுதிகள் இருக்கும். புத்தகம் படிப்பதற்கு இது ஏற்றது. இது எழுத்துக்களை 20மடங்கு பெரிதாக்கிக் காட்டுகிறது. ஆகையால் எப்பொருளையும் தெளிவாகக் காண்பதற்கு இந்த மூக்குக் கண்ணாடி உதவும். சாதாரணக் கண்ணாடியினால் பயன் அடைய முடியாத பலருக்கு இது பார்வை தந்து உதவுகிறது. இது இன்னும் வழக்கத்துக்கு வரவில்லை.

வான வெளிக்குப் பாய்மரக் கப்பல்:—

புவியின் கவர்ச்சியை மீறிக்கொண்டு சந்திரனை நோக்கிச்சென்று, அதைச்சுற்றி வந்து பத்தாவது கிரகமாகச் சூரியனைவலம் வரும் கோளத்தை விஞ்ஞானி உருவாக்கி விட்டான். காற்றுமண்டலத்தில் போலவே வானவெளியிலும் மானிடன் உலவும் நாள் அருகில் வந்துவிட்டது. சூரிய சக்தியைக் கொண்டே வானவெளியில் இயங்கத்தக்க பாய்மரக் கப்பல் ஒன்றை அமைக்கும் வகை அமெரிக்க விஞ்ஞானி யொருவர் விவரித்திருக்கிறார். மனிதர்களையும் விஞ்ஞானக் கருவிகளையும் கொண்ட ஒரு கூண்டை வாணங்களால் புவியிலிருந்து வெளியே அனுப்பி விடலாம், வானவெளியில் அது தன் பாதையை அடைந்ததும் மிகப்பெரிய குடை போன்ற அமைப்பு ஒன்று அதன் மேல் விரிந்து கொள்ளும். இக்குடையின் பரப்பு பல ஏக்கர் இருக்கும். இதை அலுமினியத் தகட்டினாலோ, பிளாஸ்டிக்கினாலோ அமைக்கலாம். இதன் எடை சுமார் 1000 ராத்தல் இருந்தால் இதில் இதே எடையுள்ள கூண்டைப் பொருத்தலாம். குடைபோன்ற அமைப்பின் மேல் சூரியனது கதிர்கள் வந்து விழும். சூரியசக்தி வந்து விழுவதால் அது பரப்பை உந்துகிறது. இதனால் குடையும், கூண்டும் நகரும்.

ஆகையால் வானவெளியை அடைந்தபின் எரிபொருள் செலவில்லாமலே வானக் கப்பலைச் செலுத்தலாம். சூரிய கதிர்களுக்கு ஏற்றவாறு குடையைத் திருப்பிக்கொண்டு வேண்டிய திசையில் செல்ல முடியும். ரேடியோ அலை வாங்கியாகவும் இப்பரப்பை பயன்படுத்தலாம். வான வெளியில் வந்து தாக்கும் வலுவான மின்சாரக் கதிர்கள் கூண்டில் இருப்போரை வந்து தாக்காமல் பாதுகாக்கவும் இது உதவும். இதன் உதவியால் வான வெளியில் வாணங்கள் உதவி கொண்டு பறப்பதைவிட வேகமாகச் செல்லலாம் என்று அந்த விஞ்ஞானி கூறுகிறார். செவ்வாய்க் கிரகத்தைச் சுமார் மூன்று மாதங்களில் அடைய முடியுமாம். வாணங்களால் இயங்கும் கப்பலில் செல்ல ஒன்பது மாதங்களுக்கு மேல் ஆகும்.

வேறொரு கனவு :—

விஞ்ஞானம் வளம் படைத்த நாடுகள் அனைத்தும் புவியின் தென் முனையில் உள்ள அன்டார்டிக் சமுத்திரப் பகுதியில் மும்மரமான ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றன. சுமார் 200 அடியிலிருந்து சில இடங்களில் 2 மைல் ஆழம் வரையுள்ள பனிக்கட்டி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் படிந்து கிடக்கும் இந்த வனாந்தரம் உலக வாழ்க்கைக்கு மிக முக்கியமான பகுதியாக மாறிவிடக் கூடும். இங்கே உள்ள வானிலையை ஆராய்ந்து அறிந்து, அடுத்த சில நாட்களுக்கு உலகத்தின் மற்றப் பகுதிகளில் அது எவ்வாறு இருக்கும் என்று திருத்தமாக முன்கூட்டிக் கூறலாம். அணுசக்தி ஆக்கத்தின்போது வலிவான கதிர்கள் வெளிவருகின்றன. இவற்றைச் சரிவரக் கட்டுப்படுத்தாவிட்டால் பேராபத்து விளையும். இந்தத் தொல்லையே இல்லாமல் பனிக்கட்டி பரந்த வனாந்தரத்தில் அணுசக்தி நிலையங்களை அமைத்து விடலாம். அணுசக்தி உற்பத்தியின்போது தோன்றும் கழிவுப் பொருள்களும் அபாயம் வாய்ந்தவை, அவற்றை எங்கே கொண்டு போய்ப் போடுவது? இப்பிரச்னைக்கும் அன்டார்டிக் பகுதி விடை தருகிறது. பல நூறு அடி ஆழத்தில் பனிக்கட்டியின் கீழே இவற்றைப் புதைத்து விடலாம். உலகம் முழுதுக்கும் தேவையான சக்தியை அங்கே உற்பத்தி செய்ய முடியும் என்று கணக்கிடுகிறார்கள். உற்பத்தியாகும் சக்தியைக் கொண்டு பனிக்கட்டியை உருக்கினால் வரம்பில்லாமல் தூய நீரைப்பெற்றுப் பாசனத்துக்கும், குடிக்கவும் பயன் படுத்தலாம். இச்சக்தியின் உதவியால் இந்த வனாந்தரத்தை வளம் மிகுந்த பகுதியாக மாற்றி உலக மக்கள் குடியேறி வாழ ஏற்றவாறு செய்து விடலாம். உலகம் ஒன்றுபட்டால் இக்கனவை மிக விரைவில் நனவாக்கலாம்.

அன்டார்டிக்கின் அருமை :—

அன்டார்டிக் பகுதியில் பனிப் படிவுக்குக் கீழே பொன்னும் நிலக்கரியும், மண்ணெண்ணெயும் இருக்கக் கூடும். இதைத் தவிர அங்கே விஞ்ஞானிகள் கண்ட வேறொரு அதிசயத்தாலும் மனிதன் பயன் அடையக் கூடும். இப்பகுதியில் உள்ள பறவை விலங்குகள் அனைத்தும் நோய்க் கிருமிகளின் வாடையே இல்லாமல் வாழ்கின்றன. இது எப்படி என்று உயிர் நூலோர் ஆராய்ந்தார்கள். இப் பகுதியில் அதிகமாக உள்ள பெங்குவின் பறவையின் உடலில் கிருமிகளே இல்லை. இதன் முக்கிய உணவு ஒருவகை மீன். அதை ஆராய்ந்தார்கள். அதுவும் அப்படியே. இதன் உணவு நுண்ணியதொரு கடற்பாசி. இதை யெடுத்து ஆராய்ந்ததில் இதிலும் கிருமிகள் இல்லை என்பது கண்டார்கள். இதன் மர்மம் இப்போது புரிந்திருக்கிறது இத்தாவரத்தில் பெனிசிலினைப் போன்றதொரு பொருள் ஒன்று இருக்கிறது. இது கிருமிகளின் வளர்ச்சிக்குப் பகையாய் அவை பெருகாமல் தடை செய்கிறது. இப் பாசியைக் கொண்டு சென்று ஆராய்ந்து வருகிறார்கள். இந்த ஆராய்ச்சியின் விளைவாய் வேறொரு மாயமருந்து கிடைக்கலாம். இப்பாசை அங்கே மலிந்து கிடக்கிறது. ஆகையால் இதிலிருந்து கிருமி நாச மருந்தைத் தயாரிக்க முடிந்தால் மிகச் சவுகரியமாக இருக்கும்.

நம் ஏற்றுமதிக்கு ஆபத்தா? :—

பாரதநாடு ஏற்றுமதி செய்யும் கனிப் பொருள்களில் முக்கியமானது மாங்கனீஸ் உலோகம். இது தமிழ்நாட்டிலும் அதிகமாகக் கிடைக்கிறது. இதன் அருமை குறைந்துவிடுமோ என்று அஞ்சவேண்டிய வகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. கடலுக்கு அடியில் சில இடங்களில் விலை மதிப்புள்ள உலோகப் பொருள்கள் உள்ளன. இவற்றை வெளியே எடுப்பது கடினமாக இருந்தது. கடலுக்கு அடியில் சுமார் 400 லட்சம் சதுர மைல் பரப்புள்ள

பகுதியில் மாங்கனீஸ் தாது மலிந்து கிடக்கிறதாம் நமது முட்டியளவுள்ள கட்டிகளாக இது கிடைக்கிறது. இதைவெளியே எடுப்பது மிக எளிது. கப்பலிலிருந்து கீழே போய் மேலே வரும் எந்திர மண் வெட்டிகளின் உதவியால் அவற்றை வாரி எடுக்க வேண்டியதுதான். இத்தாதுக் கட்டிகளில் 25 சதவிகிதம் மாங்கனீஸ் உள்ளது. இத்துடன் 15 சதவிகிதம் இரும்பும், செம்பு, நிக்கல், கோபால்ட் ஆகிய உலோகங்களும் கலந்திருக்கின்றன. மலிவான வகையில் இவற்றைப் பிரித்தெடுக்கும் முறைகளை ஆராய்ந்து வருகிறார்கள். இதில் வெற்றி கிடைத்தால் கடலிலிருந்து மாங்கனீஸ் உற்பத்தி செய்யும் முறை வழக்கத்துக்கு வந்து விடும்.

வால் நட்சத்திரம் தாக்கினால் : —

வால் நட்சத்திரத்துக்கு இரு பகுதிகள் உண்டு. அவற்றுள் தலை பெரியதும், கனமானதும் ஆகும். வால் மிக இலேசான தூசுத்துகள்களால் ஆனது. உண்மையில் அது ஒரு நட்சத்திரமே அல்ல. புவியைப் போன்றதொரு கோள் அது. ஆனால் மிகச் சிறியது. அதன் வாலின் ஊடே சில சமயம் பூமி தனது வான வெளிச் செலவின் போது போவதுண்டு. இதில் ஒரு தீங்கும் இல்லை. தூசுத்துகள்கள் ஆவியாய் நூற்றுக்கணக்கான எரி நட்சத்திரங்களாகக் காட்சியளிக்கும். அவ்வளவுதான். ஆனால் அதன் தலை வந்து புவியில் மோதினால் பத்து லட்சத்துக்கும் அதிகமான அணுக் குண்டுகள் ஒரே காலத்தில் வெடிப்பது போன்ற அதிர்ச்சி உண்டாகும். இப்போது தோன்றும் வெப்பத்தில் வால் நட்சத்திரம் முழுதும் ஆவியாகி விடும். புவியின் பொருள் சிறு துகள்களாகச் சிதறி வான வெளியில் பரவும். வானத்தில் இத்தகைய புவித் தூசு இருக்கிறது. ஆகையால் புவி இத்தகைய விபத்துக்கு ஆளாகி இருக்கக்கூடும் என்று கருதுகிறார்கள். ஆனால் இது லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழக்கூடும். ஆதலால் ஒருமை காண வகையில்லாது தவிக்கும் மனிதனது வாழ்வு இவ்வாறு முடிந்து விடும் என்று நாம் நினைக்க வேண்டியதில்லை.

பிறவிக் குறைகள் :—

பிளந்த உதடு, முடமானகை, கால்கள் விசித்திரமான வேறுஉறுப்புக்கள் போன்ற

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றை சுவைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும் கூட அபாயமின்றி கொடுக்கலாம்.

பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

FPY-54-TAM.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்

சோல் ஏஜண்டுகள்:-

தாதா அண்டு கம்பெனி,
86, நைனியப்ப நாய்க் தெரு — சென்னை-3

பிறவிக்குறைகள் பரம்பரையாக வருபவை என்று இதுவரை கருதி வந்தார்கள். வம்சாவளியைவிட இதற்குவேறு காரணங் களே பொறுப்பானவை என்று இக்கால மருத்துவர்கள் கண்டறிந்திருக்கிருர்கள். கர்ப்பத்தின்போது தாய்க்கு நேரும் தொல் லேகளால் கரு வளர்ச்சிக்குத் தீமை விளே கிறது. உள்ளத்தில் தோன்றும் அச்சம் கவலே முதலிய உணர்ச்சிகளால் உடலில் வெளியாகும் ஹார்மோன்களின் தன்மை யும் அளவும் மாறுபடுகிறது. மிகச்சிறு அளவில் இருந்து உடலின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் இப்பொருள்களின் சம நிலே கெடுவதால் கரு வளர்ச்சி பாதிக்கப் படும். ஏதோவொரு விபத்தின் காரணங் களாலும் நோயின் விளேவாலும் கருவுக்குப் போதிய பிராணவாயு கிடைக்காவிட்டா லும் அதன் வளர்ச்சி தடைபடும். எக்ஸ் கதிர்கள், அணுசக்திக்கதிர்கள் ஆகியவை கருவைத் தாக்குவதாலும் அதில் விபரீதம் நேரலாம். அம்மை போன்ற நோய்களே விளேவிக்கும் கிருமிகள் தொற்றுவதாலும் கரு நிரந்தரமாகப் பழுதடைந்து விடுகிறது. உணவில் உள்ள குறைகளால் போதிய அளவில் விடமின் சத்து இல்லாவிட்டால் இது ஏற்படலாம். இக்காரணங்களுக்கு உள்ளாகும் தாயின் வயிற்றில் உள்ள கருவின் எப்பகுதி அப்போது வளர்ந்து வருகிறதோ அதில் குறை தோன்றும். ஆகையால் கர்ப்பிணியை மன அமைதியு டனும், சந்தோஷமாகவும் வைத்திருப்பதும் மேற்கூறிய இதர அபாயங்களில் இருந்து தடுப்பதும் மிக முக்கியமானவை.

கண்ணில் மின்னேட்டம்:--

சாதாரண வெளிச்சத்தில் நீங்கள் இந்த வாக்கியத்தைப் படிக்கும்போது நூறுகோடி யில் ஒருபகுதி வோல்ட் அளவுள்ள மின் னேட்டம் தோன்றுகிறது. அதாவது அம் மின்னேட்டத்தைச் சுமார் நூறு கோடி மடங்கு பெருக்கினல் மின்சாரக் கை விளக் கிலுள்ள 'பல்பை' எரிக்கலாம். மிக நுணுக் கமான கருவிகளால் இதை அளவிடலாம். பார்வையின் தன்மையையும், கண்ணின் இயக்கத்தையும் ஆராய்வதற்கு இம் மின்னேட்டம் உதவும். கண்ணில் ஒளி விழுந்தால் ரசாயன விளேவுகள் மட் டுமே நிகழ்வதாக இதுவரை நம்பி வந்தார்கள். அப்போது மின்சார விளேவு களும் நிகழ்கின்றன என்பது அண்மையில் தான் தெரிய வந்திருக்கிறது. நுணுக்கம் மிகுந்த மின்சாரக் கருவிகள் தோன்றி வரும் இந் நாளில் இத்தகைய ஆராய்ச்சி களின் விளேவாய் மின்சாரக் கருவிகளின் உதவியால் குருடருக்கும் பார்வை தரும் முறைகளே வகுக்க முடியலாம்.

விலங்குலக விந்தைகள் :—

கடந்த மாதம் ரசமான விலங்கு நூல் உண்மைகள் இரண்டை நான் படிக்க நேர் தது. கற்பனேக்கும் எட்டாத அதிசயங்கள் விலங்குலகில் உண்டு என்பதற்கு இவை சான்று.

தென் அமெரிக்கக் கண்டத்தின் ஆறு களில் பின்ஹாரா (Pinhara) என்ற ஒரு வகை மீன் உள்ளது. இது மாமிச பட்சணி. மிகக் கொடியது. இது வேட்டை யாடிப் பிடிக்கும் மற்ற மீன்களேயும், விலங்குகளேயும் உயிரோடு துண்டந் துண் டமாகக் கடித்துத் தின்னுமாம். மனிதனே யும் இது தாக்குந் திறனுள்ளது. இத னிடம் சிக்கும் மனிதனுக்கும் இதே கதிதான்! இந்தப் பயங்கர அனுபவம் அந்நாட்டு மக்கள் பலருக்கு ஏற்பட்டு விடுகிறது.

அன்டார்டிக் கடற் பகுதியில் உள்ள பெங்குவின் என்னும் பறவையின் வாழ்க்கை விந்தை மிகுந்தது. பறக்குந் திறனற்ற இப் பறவை புதிதான எதையும் வேடிக்கை பார்க்கும் குழந்தைப் பண்பு கொண்டது. ஆண் பறவை பெண் பறவைக்கு ஒரு மீனேயோ, வேறு பளபளப்பான பொருள் ஒன்றையோ பரிசாகக் கொடுத்து அதன் காதலேப் பெற முயலும். தன் காதலி இடும் முட்டைகளே இது மிக்க கவனத்துடன் அடைகாக்கும். காதலிகள் கிடைக்காமல் பிரம்மசரிய வழி யைக் கையாள வேண்டிய நிர்ப்பந்தம் ஆண் பறவைக்கு ஏற்பட்டுவிட்டால் அது எங்கிருந்தாவது முட்டைகளேத் திருடிக் கொண்டு வந்து அடைகாக்கத் தொடங்கி விடும்

ஆகாயத்தைக் கிழித்துக்கொண்டு ஒரு விளம்பிலிருந்து மற்றொரு முகட்டிற்கு தாவிய மின்னல் நொடிப் பொழுதில் நெளிந்து ஒளி பாய்ச்சியது. தொடர்ந்து இடிமுழக்கம், வெட்டும் மின்னல், வீறிட்டலறும் வாயுதேவனின் சீற்றம் ஆகிய இயற்கை தேவர்களின் பலப்பரீட்சையில் நடுங்கி மனிதர் கூட்டம் பம்மிக்கிடந்த நேரத்தில், சாரங்கன் மட்டும் கிராதியோரம் நின்றுகொண்டிருந்தான். இமை வட்டத்தின் சலனத்திலே சலிப்புற்றுக்கொண்டிருந்த விழிகள் அங்கு களையாறிக்கொண்டிருந்தன.

அந்தப் பெரியவீடு உடையவளின்றி ஊமைக் கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தது. இதழ்களிலே முறுவல் மலர, விழிகளிலே அன்பு பூக்க, மெல்லுடல் முழுவதும் பெண்மை கனிய, கொழுவிய கரங்களை நீட்டி அவனை வரவேற்று, அவனோடு ஒன்றி இன்பத்தை அள்ளி அள்ளிக் கொடுத்த இளமுகம் இன்று எங்கே?

வீறிட்டலறிய காற்றின் சீற்றத்திற்குத் தலை சாய்ந்தது சுவற்றில் மாட்டியிருந்த போட்டோ. தன்னினைவின்றி கை மின்விசையை அமுக்க அறை முழுவதும் ஒளி பாய்ந்தது. உள்ளத்திலே கவிழ்ந்துகிடந்த இருட்டை அகற்றும் உணர்ச்சி விசைக்குரியவள் எங்கே? இன்று இந்த வியாகூலத்தின் வித்தினை அவன் உள்ளத்திலே ஊன்றிவிட்டு அவள் எங்கே போய் விட்டாள்?

அவனது நெடுமூச்சு அடங்குவதற்குள் டெலிபோன் மணி கணகணவென்று ஒலித்தது. கால்கள் தூணாக் கனத்தன. உஹூம்! ஒரு தெருவிடாமல் பைத்தியக்காரன் போல ஓடித் திரிந்த உளைச்சல் கால்களுக்கு மட்டுமல்ல; மனதிற்கும்தான். பெண்களின் வண்ணச் சேலைகள் காற்றிலே அலைந்த இடமெங்கும், அவன் கண்களும், நோக்கும் சாடித் திரிந்தனவே! அந்த களைப்பு இன்னமும் இமைகளை அமுக்கின. விழி நீரோட்டத்தால் களைநீக்கும் அந்த நீரூற்று எங்கே?

நடுங்கிய கைகளுக்கிடையே அந்த அசேதனப் பொருள் வியர்வையில் நனைய அவன் குரல் கம்மிப்போய் ஒலித்தது.

"ஹலோ......யார் பேசுவது?"

"நான்தான் இன்ஸ்பெக்டர்......ஸ்டேஷனிலிருந்து பேசுகிறேன். உங்கள் மனைவியைப் பற்றி ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. கமலா நேரு ஆஸ்பத்திரியில் குத்துயிராக ஒரு கேஸ்... குறிப்பிடும் அடையாளங்களிலிருந்து..."

"என் மனைவியைப்போல இருக்கிறாளா?" மனோ பீதியின் தடை கண்டத்தை அடைத்தது.

"ஆமாம் ஸார்...எதற்கும் நீங்கள் நேரில் போய்ப் பார்த்தால் நபர் சரியாக இருந்தால் நாங்களும் பின்னால் வந்து பார்க்கிறோம்."

பேசும் கருவி பேச்சற்று உருண்டது மேஜையின்மீது!

அடுத்த கணம் ஊசியாகத் துளைத்த மழைத் துளிகளையும் பொருட்படுத்தாது, இருட்டைக் கிழித்துக்கொண்டு சைக்கிள் சக்கரங்கள் ஆஸ்பத்திரியை நோக்கி உருண்டன. நினைவு மழையில் உள்ளம் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டிருக்க, அந்த உயிர் இயந்திரம் உணர்ச்சியின்றி மரத்துக் கிடந்தது.

சைக்கிளை வராந்தாவின் அருகே நிறுத்திவிட்டு படிகளின் மீது விரைந்தான். ஸ்டாண்டு போடாத சைக்கிள் மடாரென்று பூமியில் சாய்ந்

தது. அந்தச் சத்தத்தைக் கேட்டு நர்ஸ் ஒருத்தி வந்து எட்டிப் பார்த்தாள். வெண்மையான உடை காற்றிலே பறக்க, வியப்பால் விரிந்த விழிகளை சாரங்கன் பக்கம் திருப்பினாள் அந்தப் வெண்ணுடை வனிதை.

உலகத்து வேதனையெல்லாம் முகத்திலே படர விட்டபடி வெறிகொண்ட தோற்றத்துடன் அவளை நோக்கி, "ஸிஸ்டர், ஸ்பெஷல் வார்டு 7 நெம்பர் பேஷண்டை நான் இப்பொழுது பார்க்க முடியுமா?" மனோவேகத்தின் தடை சொற்களைத் தேக்கின.

நர்ஸின் கண்கள் எல்லையற்ற அனுதாபத்தைச் சொரிந்தன. "தாங்கள் அந்தப் பெண்ணின் கணவரா?" வயிற்றைக் குமுட்டி வரும் வாந்தியை அடக்குபவள்போல அவள் தோள்கள் குலுங்கின.

"நேரில் பார்ப்பதற்கு முன்பு அதை எப்படி நான் கூற முடியும்?"

"ஓ... அப்படியானால் இன்ஸ்பெக்டர் வந்த பின்தான் அவளைப் பார்க்க முடியும்..." நர்ஸ் அலட்சியமாக செல்லலானாள்:

"ஸிஸ்டர், இன்ஸ்பெக்டர் அனுமதியுடன் தான் வந்திருக்கிறேன். அவர் பின்னால் வந்து கொண்டிருக்கிறார்... தயவு செய்து என்னைப் போக அனுமதியுங்கள்" செவ்வரியிட்ட கண்களில் உணர்ச்சிகள் கொப்பளித்தன. அறையை காட்டி விட்டு அவள் அகன்றாள்.

கதவைப்படீரென்று திறந்துகொண்டு உள்ளே பாய்ந்தான் சாரங்கன். தண்ணென ஒளிர்ந்த விளக்கிலே ஒளியாடிக்கொண்டிருந்த அறையின் நடுவே அவனது அன்புப் பெட்டகம் உதிர்ந்து கிடந்த கொன்றை மலர்க் குவியலென கட்டிலின் மீது அலர்ந்து கிடந்தது.

மார்பின்மீது பின்னிக் கிடந்த கரங்களை அன்போடு பற்றினான். வெம்மையான மூச்சு பட்டு அவள் திரும்பினாள். முரட்டுக் கைகளின் ஸ்பரிசம் தகிக்கும் பெருமூச்சு - நெருங்கிவரும் ஆண் முகம்... 'ஸரஸி'யின் மங்கிய நினைவு முன் சுழன்றது. மறுகணம் அவள் "வீல்" என்று அலறியபடி அவனது தோள்களை நெட்டித் தள்ளினாள். உடல் துவண்டு கட்டிலினின்றும் உருண்டு சாய்ந்தது.

பதறி எழுந்து தூக்கி எடுக்கக் குனிந்தான். கொழுவிய அந்தக் கன்னங்களிலே, சங்குபோன்ற கழுத்திலே, நகத்தின் முத்திரைகள் ரத்தக் கண்ணீர் வடித்து உறைந்து கிடந்தன.

குனிந்த சிரம் நிமிர்ந்து நீட்டிய கைகள் தயங்கின. உறுதியான பூட்சுகள் "சரக்...சரக்" என்று ஒலிக்க இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்தார். அவரைத் தொடர்ந்து டாக்டரம்மாளும் வந்தாள்.

"ஸார்... இவர் உங்கள் மனைவிதானே?" என்று வினவினார். சாரங்கன் தலையாட்டினான். ஒலி கண்டத்திலேயே நின்றது.

"நல்ல வேளை எங்கள் சிக்கல் தீர்ந்தது. மேற்கொண்டு உங்கள் மனைவியின் உடல் நிலைபற்றிய விவரங்களை டாக்டரம்மாள் என்னிடம் எழுதி கொடுத்திருக்கிறார். அதன் நகல் ஒன்றை உங்களிடமும் கொடுப்பார். மற்ற விவரங்களை காலையில் பார்த்துக்கொள்ளலாமா?" நீண்ட காகிதத்தை உறையிலிட்டுக்கொண்டே அவர் வெளியே போய்விட்டார்.

டாக்டரம்மாள் ஸ்டெதெஸ்கோப்பை வீசியபடி நடந்தாள். சாரங்கன் நடந்துகொண்டே ஸரஸியின் பக்கம் கண்களை ஓட்டினான். குனிந்து போர்வையைச் சரிசெய்துகொண்டிருந்த நர்ஸின் தோள்கள் மீண்டும் குலுங்கிய காட்சி அவன் மனதில் கேள்வியாகக் கிளைத்தது.

டாக்டர் அவனை ஆழ்ந்த பார்வையால் அலசி மனத் திராசில் எடைபோட்டுக்கொண்டாள். பளீரென்று துலங்கிய முகத்தை அழுந்தத் துடைத்துக்கொண்டு மென்னகை செய்தாள். வெள்ளிக் கம்பியோடிய நரைமயிர் முதுமையை பறை சாற்றவில்லை. தாய்க்குல சேவையின் புத்துணர்ச்சி கன்னங்களின் சுருக்கத்திற்கு மெருகிட்டன.

"ஸார், பேஷன்ட் மிகவும் அதிர்ச்சியுற்றிருப்பதால் அவளிடமிருந்து எங்களால் ஒன்றும் கிரகிக்க முடியவில்லை. அவருடைய கணவர் என்ற உரிமையில் இந்த அதிர்ச்சிக்கு முந்தைய விஷயங்களை எங்களிடம் கூறமுடியுமா?" அருள் சுரக்கும் அமுத ஊற்றுபோன்ற விழிகளில் பரிவு நிரம்பி வழிந்தது.

சாரங்கன் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டான் "டாக்டர்...எங்கள் இருவருடைய அன்பு மண வாழ்க்கைக்குப் பின் மலர்ந்ததன்று. பனிரெண்டு வருஷங்களுக்கு முன்பு ஸரஸி எட்டு வயது சிறுமியாக வந்தபொழுது முறைப்பெண் என்ற உரிமை வித்து பருவம் வந்தபொழுது காதலாகத் தழைத்தது. ஆண்மகனுக்குரிய பொறுப்புகளைச் சுமந்துகொண்டு நான் இங்கு வந்துசேர்ந்தேன். ஆறுமாதங்களுக்கு முன்புதான் கெட்டி மேளம் முழங்க மூன்று முடிச்சுக்களிட்டு மாலையைப்போட்டு இங்கு அழைத்து வந்தேன்.

இங்கிருந்துதான் அவளுடைய இளமைக் கனவுகளை நனவாக்கிப் பல கோணங்களில் அவளை மகிழ்வித்து அன்பின் எல்லையைக் காணச்செய்தேன். இப்படி வாழ்க்கையை நுகர ஆண்டவன் எங்களுக்கு பண வசதியும் கொடுத்தார். தினமொரு சேலை சரசரக்க, சிவந்த மேனியில் நகைகள் பளபளக்க காரிலும், வண்டியிலும் பல இடங்களைச் சுற்றிவந்தோம். டாக்டர்! காண்போரின் கொள்ளிக் கண்கள் எங்கள் வாழ்வை சுட்டெரித்துவிட்டதே!

"என்னவோ சொல்லிக் கொண்டே போகிறேனே, திங்கட்கிழமை இரவு நானும், ஸரஸியும் இரண்டாவது ஆட்டம் பார்த்துவிட்டு

வெளியே வந்தோம். வானம் கறுத்து, மழை பெய்வதற்கறிகுறியாக காற்றும் சீறிக்கொண டிருந்தது. இருவரும் நடந்தே சிறிது தூரம் சென்றோம், கவிழ்ந்த ஒரு மரத்தினடியில் ஒரு டாக்ஸி நின்றது. அதன் டிரைவர் முகமறியாத இருட்டோடு கலந்து நின்றுகொண்டிருந்தான். என்னுடைய ஆத்திரத்தில் அப்படியொரு ஆராய்ச்சியில் இறங்கவில்லை நான்! டாக்ஸியில் ஏறிக்கொண்டு ஓட்டச்சொன்னேன்.

"வண்டி சில கெஜ தூரம் சென்றதும் நின்றுவிட்டது. டிரைவரது முயற்சிகள் யாவும் வியர்த்தமாயின. "ஸார், கொஞ்சம் கீழே இறங்கி காரைத் தள்ளிவிட்டு, ஸ்டார்ட் ஆனதும் ஏறிவிடுங்கள் ஸார்" என்றான் டிரைவர். அந்த மனிதக் குரலுக்கு பின்னே ஓர் அரக்க இதயம் ஒளிந்து கொண்டிருந்ததை அறியாமல் போனேனே, டாக்டர்!

"இறங்கி பின்புறம் சென்று தள்ளுவதற்காகக் காரில் கை வைத்ததும்தான் தாமதம், கார் சிட்டாகப் பறந்துவிட்டது. என் ஸரஸியின் அலறல் காற்றிலே கலந்துவிட்டது. என்னுடைய பதற்றத்திலும், பீதியிலும் காரின் நம்பரைக் கூட நான் சரியாகக் கவனிக்கவில்லையே. பச்சைக்கிளியை கூண்டிலடைத்துக்கொண்டு போய் விட்டது அந்த மனிதப் பூனை. பின்னர் என்ன? அந்த இருட்டிலே என் உள்ளக் கொதிப்பு நாளங்களிலே பொங்கிப் புனலாக வழிய, தனி வழியே நடந்தேன்...பின்னர் நடந்ததை இன்ஸ்பெக்டர் விவரித்திருப்பார்... டாக்டர்! ஸரஸிக்கு உயிர் கொடுத்து எனக்கு வாழ்வைக் கொடுங்கள்" சாரங்கனின் கண்களில் கலக்கத்தின் செம்மை படர்ந்தது.

முகத்தைக் குலுக்கி முறுவல் செய்தாள் அம்மாது. "உயிரை நான் கொடுத்துவிடுவதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஸரஸிக்கு வாழ்வு கொடுக்க வேண்டியவர் தாங்கள் என்பதை மறக்கவேண்டாம்" அந்தப் புன்னகையில் அர்த்தமற்ற கடுமை ரேகை ஒளியிட்டது.

"டாக்டர், நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? அவளுக்கு ஏதாவது ஊனம் ஏற்பட்டுவிட்டதா? அப்படி நான் வாழ்வு கொடுக்க மறுப்பதற்கு?"

"நோயாளியைப் பற்றிய எந்த விவரங்களையும் ஒளிக்காது கூறவேண்டியது எங்கள் கடமை... இதோ அந்த விவரங்கள் அடங்கிய அறிக்கை..." டாக்டர் நீட்டிய காகிதத்தைப் பரபரப்புடன் பிரித்தான். கைகளிலே யானை பலம்!

நடுங்கிய கைகளுக்கிடையே அந்தக் காகிதம் படபடத்து ஆடியது. கண்களின் வழியே உள்ளே பாய்ந்துகொண்டிருந்த அந்தச் செய்தி வெள்ளமெனப் புலன்கள் வழியே ஆர்ப்பரித்து பாய்ந்தது. மனவெளியில் வெட்டிப் பறித்த மின்னல்கள் ஆயிரம் இடிகளை இதயத்தின் மீது கக்கின.

"ஸரஸி என்ற பெண்ணினுடைய உடல் முழுவதும் காணப்படுகின்ற நகக் கீறல்களிலிருந்தும், அகப் பரிசோதனையிலிருந்தும் மிகுந்த பலாத்காரத்திற்குட்பட்டிருக்கும் முடிவு உறுதிபெறுகிறது.—"

ஐம்புலன்களும் சுழலத் தலையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான் சாரங்கன். எழுச்சிகளின் ஹுங்காரம் காதைச் செவிடாக்கின. அவனுடைய வாழ்க்கையிலே

அந்த ஒரு வினாடியே இல்லாமல் இருந்திருக்கக் கூடாதா?

"டாக்டர், சிந்தையை நோகச் செய்யும் இந்த ஓலையை என்னிடம் ஏன் கொடுத்தீர்கள்?" இருண்டு கறுத்த முகம் கைக்குள் புதைந்தது. நர்ஸின் வெறுப்பு நிறைந்த பார்வையில் புதைந்துகிடந்த புதிர் அவிழ்ந்தது.

"மிஸ்டர் சாரங்கன், ஸரஸியின் இந்த நிலைக்கு முதற் காரணம் தாங்கள்தானே? கடத்திச் செல்லப்பட்ட நிலையில் காப்பாற்ற முடியாதது ஆண்மகனுடைய குற்றமல்லவா? இருவரது கையறு நிலைமைக்கும் ஒரு விதத்தில் கடவுள் பொறுப்புள்ளவர். என்ன செய்வது? கடந்ததை மறந்து விண்டுரைக்கப் போனால் மன்னித்து வாழுங்கள்" பனிபடர்ந்த இமைச் சிமிழுக்கிடையே கசிவு பளபளத்தது.

"டாக்டர், மலரினின்று மணத்தையும், சுடரினின்று ஒளியையும், பெண்ணிடமிருந்து கற்பையும் பிரித்தபின் படைப்பின் அழகும், ரகசியமும் அழிந்துவிட்டன அல்லவா?" என்றான் துடிக்கும் குரலில்.

"மிஸ்டர், சந்தர்ப்பம் செய்த தவறுக்கு வாழ்க்கையைப் பலியிடாதீர்கள். மனதைக்குழப்பமடையச் செய்யாது சிந்தியுங்கள்." டாக்டர் எழுந்தாள்.

இதயத்திலே பீரிட்டெழுந்த வேதனையை இமைகள் தடுத்து நிறுத்த உதடுகள் மடிந்துஅணைகோல அவன் சைக்கிளில் ஏற காலைவைத்தான்.

"ஸார், சுய நினைவடைந்திருக்கும் உங்கள் மனைவியை வேண்டுமானால் பார்க்கலாம்......" முகமூடி நங்கை எழுப்பிய வேண்டுகோளை கவனிக்காதவன் போல விரைந்தான். மறலியை நிகர்த்த கங்குல் அவனை விழுங்கிவிட்டது. அவனது நிலையைக் கண்டு சொரிந்த கண்ணீரென வானம் விடாது வர்ஷித்துக்கொண்டிருந்தது.

2

"ஸரஸி பூர்ண குணமடைந்து ஒரு வாரமாகியும் நீங்கள் அழைத்துச் செல்லாதது மிக்க ஏமாற்றமே. இன்று வந்து அழைத்துச் செல்லுங்கள்" என்று கடமையின் சிகரம் அசரீரி பகன்றது.

இன்று வந்துவிட்டது அந்த நாள்! மனப் போராட்டத்தின் சலனத்தைப் புறத்தே காட்ட நேரமில்லை.

அவளைக் காணுந்தோறும் பந்துபோல தாவி வரும் ஒளிப்பிழம்பு எரித்துவிடுமோ? சிந்தனையில் நீந்தியவாறு சாரங்கன் உள்ளே நுழைந்தான்.

ஸரஸு கட்டிலில் பதிய உட்கார்ந்துகொண்டிருந்தாள். எதற்கும் தயாராக இருப்பவள் போல அவள் சிரம் நிமிர்ந்திருந்தது. கண்கள் மட்டும் சிதறத் துடித்த கண்ணீரை ஏந்தி நின்றன. நிமிர்ந்த நாசியும், மெல்லிய உதடுகளும் துடித்தன. சாரங்கன் அரைக் கணமும் விலகாத பார்வையால் அவளை ஊடுருவி நோக்கினான்.

அவள்தான் மௌனத்தைக் கலைத்து" நாளைக்கு என்னை அழைத்துப் போகிறீர்களா?" என்றாள்.

சாரங்கன் மெதுவாக அவளருகே வந்தான். "நாளைக் காலை ஊருக்குப் புறப்படத் தயாராக இரு, இதோ டிக்கட்கூட வாங்கி ரிஸர்வ் செய்தாகிவிட்டது, பின்னால் மற்றதைப் பார்த்துக் கொள்ளலாம்" குற்றமிழைத்த குறுகுறுப்புடன் அவன் பேசினான்.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்க அவகாசம் வேண்டும். அவ்வளவுதான்" அவன் தடுமாறினான்.

ஸரஸியின் உதடுகளினின்றும் வார்த்தைகள் சிறி ஒலித்தன. "என் பெயரைச் சொல்லிக் கூப்பிடவும் நாவு கூசுகிறதா? ஆண்குலம் பெண்ணைப் பழிக்கும் இப்படிப்பட்ட அவல வினாடியில்தான் அகலிகைக் கல்லாகச் சமைந்தாள்! சீதை பூமி வெடித்துத் தாய்மடி புகுந்தாள்? ஆனால் நான் இருபதாம் நூற்றாண்டுப் பெண். கல்லும் என்னைக் கண்டு கரையாது, பூமியும் இதயத்தைப் பிளந்து இடந் தராது. அந்த அவல வினாடியிலேயே எனக்குச் சாவு வந்திருந்தால் உங்கள் மனமாற்றத்தை அறிந்திருக்கமுடியுமா?"

"ஸரஸீ! ஆத்திரத்தில் அறிவிழந்து நிற்கிறாய்?"

"இப்படி ஓர் ஏற்பாட்டினால் என்னை ஏன் கொல்கிறீர்கள்? இந்தச் சம்பவத்தின் அதிர்ச்சியால் உங்களைவிட அதிகம் பாதிக்கப்பட்டிருப்பவள் நான். உங்கள் உள்ளத்திலுள்ள துன்பங்களை எல்லாம் என்னிடம் வார்த்தைகளாகக் கூறியிருந்தீர்களானால் எனது பாரம்கூடச் சற்று கரைந்திருக்கும். ஆனால் நான் கொடுத்து வைக்காதவள். உடலால் வாழ்வை இழந்தாலும் உள்ளத்தால் ஒன்றிவிட்ட நிலைக்கு அழிவே கிடையாது" விம்மல்கள் நெஞ்சைக் கிழித்தன.

மாலை வீட்டை நோக்கி விரைந்தவனிடம் ஒரு பையன் ஓடிவந்து ஒரு காகிதத்தைக் கொடுத்தான். "தங்கள் மனைவி தற்கொலை செய்து கொண்டுவிட்டாள். உடனே வரவும்" சாரங்கனின் நெஞ்சச் சுமை வண்ணமலர்களாகக் கொட்டியது. நெடு மூச்சிலே கலக்கம் கலந்து வெளியேறியதில் கால்கள் லேசாகி கடுகின.

ஆஸ்பத்திரி முகப்பிலேயே இன்ஸ்பெக்டர் எதிர்கொண்டார். "ஸார், தங்கள் மனைவியின் நகைகள் யாவும் மீண்டுவிட்டன. அது மட்டுமல்ல ஸார். அந்த டாக்ஸி டிரைவர் ஒரு விபத்தில் அகப்பட்டு குத்துயிராகக் கிடக்கிறான். மரண வாக்குமூலம்கூட வாங்கிவிட்டோம்..." புலன்களின் புற இயக்கத்தில் உணர்விழந்தவனாய் சாரங்கன் நடந்தான்.

மீண்ட நகைகள் யாவும் காலடியிலே கிடக்க மீளாத நகையை தேடி நிரந்தர தவத்தில் ஆழ்ந்து கிடந்த பொற்சித்திரத்தை மலர்க்குவியலென வாரி நெஞ்சோடு அணைத்துக்கொண்டான். "களங்கத்தைத் துடைக்க மரணத்தின் மடியில் புகுந்த புதுயுகக் கொழுந்தே, வழி வழியாக வந்த அறத்தீ அதமனை எரித்துவிட்ட சேதிகேட்காது ஆவி போக்கினையே?" என்ற அகக் குரலின் பிரலாபத்தில் ஆணவத்தின் அகந்தை பொடித்துச் சிதற பெண்மைக்கு தலை வணங்கியது இதயம்! ★

சிறுவர் பகுதி

எஸ். விசாலாக்ஷி

உங்களுக்குத் தெரியுமா?

(1) நம் பூமியின் மொத்த எடை 659,200,000,000,000 கோடி டன்.

(2) மனிதனின் தலைமயிர் வருடத்திற்கு 16 அங்குலம் வளர்கிறது.

(3) ஒவ்வொரு மனிதனும் 16 டன் (36000 ராத்தல்) எடையுள்ள காற்றைச் சுமந்துகொண்டு திரிகிறான்.

(4) நட்சத்திரங்கள் கண் சிமிட்டுவதைப் போல் நமக்குத் தெரிவது பூமியைச் சுற்றியுள்ள காற்று மண்டலத்தின் காரணமாகத்தான். காற்றுமண்டலத்துக்குமேல் போய்விட்டால் நட்சத்திரங்கள் கண் சிமிட்டாது. பகல் நேரத்தில் மறையவும் செய்யாது.

(5) உலகிலேயே மிகவும் விஷமுள்ள பாம்பு நாகமல்ல. கடற்பாம்பு. அதன் விஷம் நாகத்தைப்போல் 50 மடங்கு கொடியது.

(6) மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிற ஒளியில் நீலநிறப் பொருள்களைப் பார்த்தால் அவை நீல நிறமாகத் தோன்றாது. கருமை நிறமாகத் தோன்றும்.

(7) உலக மொத்த ஜனத்தொகையான சுமார் 230 கோடியில் முஸ்லிம்கள் சுமார் 21 கோடி 64 லட்சம், கிருஸ்துவர்கள் சுமார் 69 கோடி 20 லட்சம்.

(8) நம் நாட்டில் தற்சமயம் 8173 பத்திரிகைகள் வெளியாகின்றன.

(9) பச்சை, சிகப்பு, மஞ்சள் எனப் பல் வேறு நிறங்களை பார்த்தால் அவை அவ் அவ் நிறங்களாகத் தோன்றாது. எல்லா நிறங்களும் ஒரேவிதமாகத் தெரியும். இவ்வித நோய் ஒன்று மனிதர்களுக்கு ஏற்படுவதுண்டு. இதை நிறக் குருட்டுநோய் (Colur Blindness) எனச் சொல்லுவார்கள். இந்நோய் ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் அதிகமாகக் காணுகிறது.

நீங்களும் மந்திரவாதியாகலாம்

வீடுகளில் சமைக்கும் போது கிடைக்கும் அரிசிக் கொதிநீரை பேனா அல்லது குச்சியில் தொட்டு ஒரு காகிதத்தில் எழுதுங்கள். அது காய்ந்ததும் மற்றவர்களிடம் அக் காகிதத்தைக் காட்டுங்கள். எழுத்து எதுவுமிருக்காது. சுத்தமான காகிதமாகவே தெரியும் டிஞ்சர் அயடினில் பஞ்சை நனைத்து காகிதத்தில் பூசுங்கள். நீலநிற எழுத்துத் தோன்றும். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

ஒரு எலுமிச்சம்பழத்தில் சிறு துவாரம் செய்து ஒரு கம்பியின் உதவியால் அதில் பாதரசத்தை நிரப்புங்கள். பிறகு துவாரம் மேல் நோக்கி இருக்கும்படி பழத்தை வெயிலில் வைத்துவிடுங்கள். பழம் ஆடும், குதிக்கும், பார்க்க வேடிக்கையாக இருக்கும். பாதரசத்தை நிரப்பியதும் துவாரத்தை மெழுகால் மூட மறக்கவேண்டாம்.

யார் சொல்லுவது சரி

இராவணன் ஆரியன் என்கிறான் முருகன், இல்லை அவன் ராட்சசன் என்கிறான் முனியன், இல்லை அவன் தமிழன் என்கிறான் மூக்கன். இவர்களில் யார் சொல்வது சரி.

தென் துருவப் பிரதேசத்தில் வெண்பனிக் கடியில் புதைந்து கிடக்கும் ஒரு பெரிய பூகண்டமே அன்டார்டிகா என்பது என்கிறான் வேங்கடரமணி. பூகண்டமல்ல அது. தீவுக்கூட்டம் என்கிறான் வேங்கடகிரி. இவர்களில் யார் சொல்வது சரி.

திமிங்கலக் குஞ்சைவிட எலிக் குஞ்சு சிறியது என்கிறான் ராமன். பெரியது என்கிறான் சோமன். இவர்களில் யார் சொல்வது சரி?

ஒரு ஈ, ஒரு மீன் இரண்டுக்கும் அருகே ஏதாவது வாத்தியம் ஒன்றை வாசித்தால் இரண்டும் அதை ரசிக்கும் என்றாள் அனிதா. இல்லை ஈதான் ரசிக்கும்; மீன் ரசிக்காது என்கிறாள் அமிதா, மீன்தான்

உழைப்பு உயர்வின் வித்து

ஞானி ஒற்றுமைக்கு வழிகாட்டுகிறுன். அஞ்ஞானி பிரிவினைக்கு வழிகாட்டு கிறுன்.

சிரிக்கும் எதிரியைவிடச் சிடுசிடுக்கும் நண்பனே சிறந்தவன்.

உடைத் தூய்மை உடல் தூய்மையை விட உள்ளத் தூய்மையே உயர்வானது.

மௌனம் சர்வார்த்தசாதனம்.

ரசிக்கும் ஈ ரசிக்காது என்கிருள் அபரா ஜிதா, இவர்களில் யார் சொல்வது சரி?

ஸ்ரீரங்கம் கோவிலின் கருப்பகிருஹத் தைக் கட்டியவன் ஒரு சோழமன்னன் என்கிருன் ராகவன். இல்லை பாண்டிய மன் னன் என்கிருன் ரவீந்திரன். சேரமன்னன் என்கிருள் ராதிகா. இவர்களில் யார் சொல் வது சரி?

(விடைகள் 44-ஆம் பக்கத்தில் காண்க)

பழமொழிகள்

பாடப்பாட ராகம், மூட மூட ரோகம்.

பாக்கியவதி எனப் பறந்தோடி வந்தவன் கோத்திரத்தைக் கேட்டதும் குதித்தோடிப் போனுன்.

பட்டர் வீட்டில் பாவம் படுத்திருக்கும்.

பானை வாயை மூடலாம், பட்டணத்து வாயை மூடமுடியுமா?

பூச்சூட்ட அத்தையில்லை. போரிட அத்தையுண்டு.

பெரியோர் வாயில் பொய் நில்லாது.

பொன் உள்ள இடம் மின்னும்; பூ உள்ள இடம் மணக்கும்.

சாண் செடியில் முழத் தடி வெட்ட முடியுமா?

தரித்திரப்பட்டாலும் தைரியம் விடாதே.

படியுங்கள்! சிரியுங்கள்!

பிரயாணி: ஏன் தம்பி! இந்த ரோடு எங்கே போகிறது?

பையன்: எங்கேயும் போகவில்லை. இங்கே தான் எப்பொழுது மிருக்கிறது.

* * *

தாயார்: அடே பாவி! எரிக்கும் வெயிலில் குந்திகொண்டு என்னடா செய்கிருய்?

பையன்: ஒன்றும் செய்யவில்லை அம்மா! உடம்பெல்லாம் வியர்வை. அதை வெ யிலில் காய வைக்கிறேன்.

* * *

பேத்தி: தாத்தா! நீ ஏன் கண்ணுடி போட்டி ருக்கிருய்?

தாத்தா: பார்ப்பதற்காக. கண்ணுடி இல் லாது எனக்கு கண் தெரியாது.

பேத்தி: தூங்கும்போது ஏன் போட்டுக் கொள்வதில்லை?

தாத்தா: அப்பொழுது எதையும் பார்க்க வேண்டி இருப்பதில்லை.

பேத்தி: அப்படியானுல் எப்படி நீ கனவு காணுகிருய்? அதுமட்டும் எப்படித் தெரிகிறது உனக்கு?

வாய்க்குள் இருக்கும் வார்த்தை மனித னுக்கு அடிமை. வாய்க்கு வெளியே வந்த வார்த்தைக்கு மனிதன் அடிமை.
— சாக்ரடிஸ்

சுகத்தை வெறுத்து விலக்கித் தள்ளுங் கள். அது உங்களைத் தொடர்ந்து தேடி வரும். — பிராங்ளின்

உலகில் மனிதன் தன்னைத்தானே தான் தாழ்த்திக்கொள்கிருன். வேறு எந்த சக்தியும் அவனைத் தாழ்த்துவது மில்லை. தாழ்த்தவும் முடியாது. -காந்திஜி

ஆரோக்கியத்தை விரும்புவோர் எப்பொழுதும்
லைப்பாய் உபயோகித்தே நீராடுவார்

பாலர் முதல் வயோதிகர் வரை குடும்பத்திலுள்ளோர் யாவரும் உற்சாகத்துடன் இருக்கும் வீடு எதுவோ அதுவே உண்மையான இன்ப நிலையம். உற்சாகத்திற்கு ஆதாரம் ஆரோக்கியந்தான். ஆனால் ஆரோக்கியத்திற்கு நிரந்தரமாக ஆபத்து விளைவிப்பது அழுக்கு. நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் அழுக்கிலிருந்து தப்பமுடியாது—அழுக்குத்தான் நோய்க் கிருமிகளின் இருப்பிடம். அழுக்குடன் கிருமிகளைக் கழுவிக் களைந்து உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது **லைப்பாய்** சோப். அன்றாடம் லைப்பாய் சோப்பினால் குளித்து அழுக்கிலுள்ள கிருமிகளினின்று உங்கள் ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்ளுங்கள். புதுமலர்ச்சியூட்டும் அனுபவமும் அதுவே.

L. 273—X52 TM

தயாரிப்பாளர்கள் : ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட், பம்பாய்.

யார் சொல்வது சரி (விடைகள்)

மகரிஷி புலஸ்தியரின் புத்திரன் விஸ்ரவா மகாமுனி பரத்வாஜரின் பெண்ணை மணந்துகொண்டார். இந்த விஸ்ரவாவின் புத்திரன் வைஸ்ரவன். சுமாலியின் பெண்ணை கைகசியை வைஸ்ரவன் மணந்துகொண்டான். வைஸ்ரவனுக்கும் கைகசிக்கும் பிறந்தவர்களே ராவணன், விபீஷணன், கும்பகர்ணன், வஜ்ரமணி(சூர்பநகை) முதலியவர்கள். இராவணனின் தந்தையாகிய வைஸ்ரவன் ஆரியன். தாயான கைகசி அனரியப் பெண். ஆகையால் தகப்பன் வழி ராவணன் ஆரியன்; தாய் வழி அனரியன். முன்காலத்தில் தாய்வழியே குழந்தை வழி என்ற வழக்கமிருந்தது. இதனால் ராவணன் அனரியனாகக் கருதப்படுகிறான். ராவணனின் தாயான கைகசி ராட்சச வகுப்பைச் சேர்ந்தவள் என இராமாயணம் கூறுகிறது, இதனால் ராவணன் ராட்சசனாகக் கருதப்படுகிறான். ஆனால் தற்காலத்து புதுமை ஆராய்ச்சியாளர் சிலர் இராமாயணம் இராட்சசர்கள் எனக் குறிப்பிடுவது தமிழர்களைத்தான் என்னும் முடிவுக்கு வந்துள்ளனர். இதனால் ராவணன் தமிழன் என்னும் கருத்தும் இப்பொழுது நிலவி வருகிறது. இந்நிலையில் யார்சொல்லுவது சரி என நிச்சயிப்பது?

வேங்கடகிரி சொல்லுவதுதான் சரி. இப் பூபௌதீக ஆண்டில் நடந்த ஆராய்ச்சிகளிலிருந்து அன்டார்டிகா ஒரு பூகண்டமல்ல. தீவுக்கூட்டம் எனத் தெளிவாகியுள்ளது. அங்கு ஆராய்ச்சிகள் நடத்தச் சென்றுள்ள அமெரிக்க, ரஷிய விஞ்ஞானிகள் இக் கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இருவர் சொல்வதும் தவறு. எலிக்குஞ்சும் திமிங்கலக்குஞ்சும் கிட்டத்தட்ட ஒரே அளவாகவே இருக்கும்.

அபராஜிதா சொல்வதுதான் சரி. மீனுக்குச் செவியுண்டு. ஈக்குச் செவியே இல்லை. சுத்தச் செவிடு அது. ஆகையால், அதனால் வாத்திய இசையைக் கேட்கவோ ரசிக்கவோ இயலுவதில்லை.

ரவீந்திரன் சொல்வதுதான் சரி. கி. பி. 1257–1277 வரை கன்னியாகுமரியிலிருந்து நெல்லூர் வரை ஒரு குடையின் கீழ்ஆண்ட இரண்டாம் சுந்தரபாண்டியன்தான் இப்பொழுதுள்ள ஸ்ரீரங்கம் கோவில் கருப்பக்கிருஹத்தைக் கட்டி, கோவிலைப் புதுப்பித்து விமானத்தைத் தங்கத் தகட்டினால் மூடினான். விஜயநகர ராஜ்ய ஸ்தாபகரில் ஒருவரான புக்கரின் மகன் கம்பன் இளவரசனாகிக் காஞ்சீபுரத்தை ஆண்டபோது சமயபுர சுல்தான் ஸ்ரீரங்கம்கோவிலை தாக்கி அழிக்க, ஸ்ரீரங்கநாத விக்ரஹத்தை முதலில் திருமயத்திலும், பிறகு மைசூரில் உள்ள மேல்கோட்டையிலும், பின்பு திருவேங்கடத்திலும் ஒளித்து வைத்தனர். இதையறிந்த கம்பன் கொப்பனாரியன் என்னும் தன் சேனாதிபதியை அனுப்பி சமயபுர சுல்தானை விரட்டியடித்தான். அதன் பிறகுதான் ரங்கநாதர் விக்ரஹத்தை தேசிகர் என்ற வெங்கடநாதச்சாரியார் மீண்டும் ஸ்ரீரங்கத்தில் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்தார். ஸ்ரீரங்கம் கோவில் மதிலில் இதைப்பற்றிய சுலோகங்கள் வெட்டப்பட்டுள்ளன. ●

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள்நாடு		மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு	
	ரூ.	நயா பைசா	ரூ.	நயா பைசா
ஒரு வருஷம்	6	00	7	50
அரை வருஷம்	3	00	3	75
தனிப் பிரதி	0	50	0	62

தந்தை தந்த வாழ்வு!

மு. சதாசிவம்

“என்ன மாலா சிரித்துக்கொண்டே றாய்”

“ஒன்றுமில்லை சார்”

“ஒன்றும் இல்லாததற்கா இந்த நீரோடைச் சிரிப்பு?”

“அப்படியென்றால்”

“நீரோடையில் எப்படித் தண்ணீர் சலசல வென்று போகுமோ அது போல நீ சலசல வென்று சிரித்தாயே அதைச் சொன்னேன்.”

“பரவாயில்லையே! சி. ஐ. டி. சாருக்கு கற்பனை தோன்றுகிறதே”

“ஏன் மாலா! எனக்கென்ன கற்பனை தோன்றாதா என்ன? நானும் மனிதன் தானே! பாரதி கூட சொன்னார் அல்லவா; காதலினால் மனிதர்க்குக் கவிதையுண்டாம் என்று. எனக்குக் கவிதை தோன்றாவிட்டாலும் அதன் கருப்பொருள் கற்பனை தோன்றுகிறதல்லவா?”

“போங்கள் சார்! எப்பவும் உங்கட்கு இந்தப் பேச்சுத்தான்”

“சரி, நீயேதான் பேசேன். எதற்காகச் சிரித்துக்கொண்டே வந்தாய்?”

“அதுவா... வந்து... இன்னிக்குக் காலேஜிலே தமிழ் வகுப்பிலே குறுந்தொகை நடந்தது. அதுவும் இன்னிக்கு நடந்த பாட்டு வேதனையைத் தந்தது வகுப்பிலே எனக்கு. அதை இங்கே வரும்போது நினைத்தேன். சிரிப்பு வந்து விட்டது.”

“அப்படி என்ன பாட்டு மாலா அது?”

“யாயும் யாயும் யாராகியரோ? என்ற பாட்டு”

“எங்கே அந்தப் பாட்டைப் பாடு பார்ப்போம்?”

“அந்தப் பாட்டின் கருத்தைமட்டும் சொல்கிறேன் சார். அதாவது இரண்டு காதலர்கள். ஆணைப்பற்றிய விபரம் பெண்ணுக்குத் தெரியாது. பெண்ணைப் பற்றிய விவரம் ஆணுக்குத் தெரியாது. ஆனால் எப்படியோ இவர்கள் இரண்டு பேரும் காதலிலே கட்டுண்டு போனார்கள் ஒரு நாளைக்கு அந்த ஆண்மகன் அவளைப் பார்த்துச் சொன்னதாக இந்தப் பாட்டு உள்ளது. ‘உன் அம்மாவுக்கும் என்னம்மாவுக்கும் என்ன உறவு? உன் தந்தைக்கும் என் தந்தைக்கும் என்ன உறவு? முன்பின் தெரியாத நாம் எப்படியோ நமக்குள்ளே உறவு கொண்டுவிட்டோம்.’ என்று ஆண் மகன் சொல்லி அதற்கு நல்ல உதாரணமும் சொல்கிறான் சார்.”

“அதையும் சொல்லு மாலா!”

“வானம் எங்கேயோ மேலே இருக்கு. செம்பூமி ஒன்று கீழே இருக்கிறது. அதுவும் எங்கேயோ வானத்திற்கும் அதற்கும் தொடர்பு இல்லாமல் இருக்கு. ஆனால் இந்த நேரத்தில் வானத்தில் இருந்து பெய்கின்ற மழை அந்த செம்மையான தரையிலே விழுந்து தண்ணீர் சிவப்பு நிறமாக மாறுகிறது என்று சொன்னான்.”

“நல்ல உவமை மாலா! நல்ல உவமை!”

“இந்தப் பாட்டிலே சிறப்பு என்னன்னா! இன்னிக்கு இந்தப் பாட்டு வகுப்பிலே நடந்த போதெல்லாம் எனக்கு உங்க நினைப்புத் தான் சார் வந்தது.”

“ஏன்?”

"என்ன சார் ஒண்ணும் விளங்காததுபோல் கேட்கிறீர்கள்? நீங்கள் யாரு? நான் யாரு? எங் கேயோ பிறந்தோம் எங்கேயோ வளர்ந்தோம்? இப்ப ரெண்டுபேரும்........."

"வார்த்தையைப் பூர்த்திசெய் மாலா."

"வேண்டாம் சார்"

"மாலா"

"உம்"

"உண்மையாகவே நீ இந்தப் பாட்டை நம் வாழ்க்கைக்கு உதாரணமாய் கொள்கிறயா?"

"இதிலென்ன சந்தேகம் சார்?"

"உண்மையானல் ஒருதடவையாவது நீ என்னை சார் என்று அழையாமல் 'அத்தான்' என்று கூப்பிடேன்."

"போங்க அத்......"

"மாலா! மாலா! அதற்குள் என்ன ஓடுகிருய்? உனக்கு வந்த வெட்கமா இது?" என்ருர் கைலா சம். மாலா சென்ற வழியிலேயே விழிகளைப் பதித்து, பெருமூச்சு ஒன்றை அவளைப் பின் தொடருவதற்காக அனுப்பிவிட்டுத் தன் இடத் தில் அமர்ந்தார்.

* * * *

மாலா இப்போது கல்லூரி மாணவி. பருவத் தின் தலைவாயிலில் வாடாமலராகப் பூத்து நிற்பவள். காலம் என்பது இன்னும் இரண்டு ஆண்டை கபளீகரம் செய்யுமேயானல் மாலா விற்குப் பின் இரண்டெழுத்துப் பட்டம் ஒன்று ஒட்டிக்கொண்டு பெருமை கூறும். மாலாவைக் காதலிக்கும் கைலாசம் கண்கொண்டு, இந்த உலகப்பெண்களை, ஏன் உலக அழகி எனப் பட்டம் வாங்கியவர்களையே நாம் பார்ப்போமே யானல் அழகிகள் அத்தனை பேரும் அவ்வளவு தூரம் மாலாவைப்போல் வளர்ச்சி பெறவில்லை என்றே சொல்லத் தோன்றும். கைலாசம் கண் ணுக்குமட்டுமல்ல. எல்லோர் கண்ணுக்கும் அவள் அழகிதான். அவளது அழகுக்கு அணி யாக நின்று மெருகு தீட்டி வருகிறது வளர்ந்து வருகின்ற அறிவு.

காலம் சில சமயம் கோலமான விளையாட்டுக் கள் அதிகம் செய்வதில் விருப்புக்கொண்டது போலும். கணக்குச் சந்தேகம் தீர்க்கச் சென்ற மாணவி மாலாவை இன்று கைலாசத்தின் காதலி யாக்கி இன்பம் காண்கிறது காலம் என்ருல் நமக்கு வியப்பு அதிகம் தோன்றுகிறது.

பத்து மாதம் சுமந்து பெற்று ஒருவருட காலம் வளர்த்த தாயை, எல்லோரின் பரிதாபத்திற்கு ஆக்கவேண்டும் என்ற எண்ணத்தினுலோ என் னவோ காலன் தன் கொடும் பார்வையால் அழைத்துக்கொண்டான். தந்தை கேசவன் மாலாவிற்குத் தாயாகவும் இருந்து உலகம் தெரி யும்வரை அவளை வளர்த்துவந்தார். மாலா பள்ளி செல்லும் பருவம் அடைந்தாள். நில புலன்களையும் சிறப்பாக தனக்கே உரித்தான செவக்காட்டு வயலையும் கவனிப்பதிலேயே சிந்தையைப் பங்கிட்ட கேசவன், தன் மகள்மீது கொண்ட வாஞ்சையினுலும், தன் மனைவிக்கு நன்றிக்கடன் ஆற்றும் பொருட்டும் இரண்டாம் தாரக் கல்யாணத்தை மறுத்தார். தன்னிட மிருந்து தன் பெண் படிப்பதைவிட தன் தமக்கை விசாலாக்ஷியிடம் சென்று படித்தால் மிகவும் நல்லது என்று எண்ணி தன் தமக்கை யிடம் கொண்டு சேர்த்தார் பெண்ணை. ஏழு வயது இரண்டாம் வகுப்புப் படித்து வந்தாள் மாலா. மூன்ரும் வகுப்புப்பாடம் மதுரைப் பள்ளியிலேயே தொடர ஆரம்பித்தது. என்ன இருந்தாலும் மாலா தனக்கு அடிப்படைக் கல்வி தந்த தன் ஊர் ஸ்ரீரங்கத்தை மறக்கவில்லை.

பார்த்துப் பல வருடங்கள் ஆனுலும் அவளது வீடும், அந்த கீழ உத்தரவீதியும் அவள் சிந்தனை யில் நீரோட்டம் செலுத்தியது. கேசவன் தமக்கை விசாலாக்ஷி அம்மையார் மாலாவை வளர்ப்பதிலே தனக்கென்று ஒன்று இல்லாத குறையை மறந்தாள். அது போல்தான் அவளது கணவன் கிருஷ்ணனும். இப்போது அவர் மாஜி தாசிலதார். அவர் அடைந்த சம்பளத்தின் பாதித்தொகையை அரசாங்கம் இப்போது தந்து தன்நன்றியை அவருக்குத் தெரிவித்து வருகிறது. பூர்வீக சொத்து. மதுரையிலேயே சித்திரை வீதியில் ஒரு சொந்த வீடு. இது போதாதா அவளுக்கு. மேல் செலவை அரசாங்கம் தரும் ஊதியம் கவனித்துக் கொள்கிறது. இந்நிலை கொண்டு அவரை நாம் பெரிய செல்வர் என்று சொல்லிவிடுவதற்கு இல்லையாயினும் வறுமை யின்றி வாழும் செம்மை நலத்தினர் என்று சொல்லலாம்.

மாலாவின் வளர்ச்சியிலே போட்டியிட்டனர் இந்தத் தம்பதிகள். போட்டியின் பயனையும் அடையாமல் இல்லை. அதனுல்தான் மாலா இப் போது கல்லூரி மாணவியென நடக்கமுடிகிறது. தாய்முகம் மறந்த மாலாவிற்குத் தாயாக இருந் தாள் விசாலாக்ஷி, மாலாவும் சிலசமயம் அவளைத் தாயென்றே அழைப்பதுண்டு.

மாலா உயர்நிலைப் பள்ளியிலே ஐந்தாம் படிவம் படித்துக் கொண்டிருக்கும் போதுதான் கைலா சம் மதுரைக்குப் புதிதாக வந்தான், பட்டம் பெற்றவன். போலீஸ் உளவு இலாக்காவில் ஏதோ செல்வாக்கான அதிகாரியாய் நியமிக்கப் பட்டுள்ளவன். இளமையிலேயே அவனுக்கு இவ்வேலையை வாங்கித் தந்தது எது என்ருல் அவன் படிப்பும், அவன் உடற்கட்டும்தான். காரணமாகும். இருபது வயதை உடையவன் இவ்வளவு தூரம் உயர் வேலையைப் பார்க்கப் பணிக்கப்பட்டான் என்ருல் நமக்கு வியப்புத் தான் தோன்றும்.

மதுரையில் பணியாற்ற வந்த அவனுக்குச் சித்திரை வீதியில் வீடு கிடைத்தது. தனி ஆள் தான் என்றாலும் அவனுக்கு ஏனோ கொஞ்சம் பெரிய வீடாகவே தேவைப்பட்டது. அந்த வீட்டில் குடியேறிய ஒருமாதம் வரை அவன் யாருடனும் அதிகமாகவே பழகவில்லை, அது தொழிலின் அறிவு போலும். அது போன்று தான் மாஜி தாசில்தார் கிருஷ்ணனும் தன் வீட்டுக்கு அடுத்த வீடே ஆயினும் அவனுடன் பழகவே அவர் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. பழகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டாலும் குலம், கோத்திரம், படிப்பு இவைகளை அறிந்து கொள்ளத் தவறவில்லை.

சினிமா பார்த்துவிட்டு திரும்பிய கைலாசம் தாகத்தால் தவித்தான். வேலையாள் தண்ணீர் கொண்டு வைக்க மறந்து விட்டான். பைப் படிக்குச் செல்லலாம் என்றால் அதுவும் அவன் இருக்கும் இடத்திலிருந்து அதிக தூரம் போக வேண்டும். அப்பொழுது அடுத்த வீட்டில் கிருஷ்ணன் இருமும் ஓசை கேட்டு கைலாசம் அடுத்த வீட்டிற்குச் சென்றான். வாயிலில் கட்டிலில் படுத்திருந்த கிருஷ்ணன் "யார்" என்று கேட்டுக்கொண்டே எழுந்தார், நான்தான் கைலாசம். அடுத்த வீட்டில் குடி இருக்கேன். ஒன்றுமில்லை குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்.

"ஓ நீங்களா? வாருங்கள். இப்படி உட்காருங்கள்" என்று சொல்லி வரவேற்புத் தந்த பின்னர் வீட்டுக்குள்ளிருந்தும் தண்ணீர் வரவழைத்துக் கொடுத்தார். இது இவர்களின் முதல் சந்திப்பு. இச்சந்திப்பு நாளடைவில் முற்றிய நட்பாய் மாறியது. நாளும் கிருஷ்ணனை கைலாசம் பார்க்காமல் இருப்பது அரிதாய் விட்டது. கைலாசத்திற்கும் இந்த நிலைமைதான். அலுவலகத்திலிருந்து திரும்பியவுடன் தனது வீட்டிற்குள் நுழைவதில்லை. அளவளாவ இருக்கும் கிருஷ்ணன் வீட்டிற்குள் தான் நுழைவார். சில சமயம் மாலை சிற்றுண்டி கூட கிருஷ்ணன் வீட்டிலேயே நடந்து விடும். மாகாண அரசாங்க நிர்வாகத்தில் ஆரம்பிக்கும் பேச்சு ஐ. நா. சபையில் போய் இளைப்பாறுதற்கு நிற்கும். பின்னும் கலை ஆராய்ச்சி நடக்கும்.

இப்படி நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக வளர்ந்த நட்பு தன் பருவம் அடைந்து வந்தது. இப்பொழுது கூறப் போனால் கைலாசம் வீட்டிற்கும், கிருஷ்ணன் வீட்டிற்கும் உள்ள வேறுபாடு குறுக்கே இருக்கும் சுவர் தானே தவிர உள்ளங்கள் இரண்டும் பண்பட்டு நட்புக் கயிற்றால் கட்டப்பட்டு விட்டன. மேலும் இருவரும் படித்தவர்கள். நாகரிகம் தெரிந்தவர்கள். பண்பாடு சிறந்தவர்கள். இவைகள் எல்லாம் அவர்களின் நட்புக்கும் நன் முறையில் அடிகோலி விட்டன.

கைலாசம் கிருஷ்ணனால் ஒருமையில் அழைக்கப்படும் அளவிற்கு அவர்கள் நட்பு வளர்ந்து விட்டது என்றால் வேறு கூற வேண்டியதில்லை. கைலாசத்தின் கட்டுப்பாடான இளமையில் நல்ல அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார் கிருஷ்ணன். அதனால்தான் மாலாவை கைலாசத்துடன் பேசுவதற்கு அனுமதித்து இருந்தார்.

மாலா—சூரியன் காணாத மொக்கு. ஐந்தாம் படிவம் படித்துக்கொண்டு இருந்தாள். அன்று பள்ளியிலே தந்த வீட்டுக் கணக்கு எவ்வளவு தூரம் அவள் பொறுமையினையும் அறிவையும் சோதிக்க முடியுமோ அவ்வளவு தூரம் சோதித்து விட்டது. மாலாவிற்கு அழுகை வராததுதான் பாக்கி. அவள் வளர்ப்புத் தந்தையோ வீட்டில் இல்லை. எப்படியாவது அந்தக் கணக்கை அன்று இரவுக்குள் போட்டு விட வேண்டும் என்று துறு துறுப்பு. ஆகவே கொஞ்சமும் அச்சமின்றி அடுத்த வீட்டிற்குள் போனாள். அங்கே அப்போது அலுவலகத்திலிருந்து திரும்பிய கைலாசம் அசதி தீர சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தான்.

என்றுமில்லாமல் இன்று மாலா தன் வீட்டிற்குள் வருவதைக் கண்ட கைலாசம் நெற்றியிலே சந்தேகம். தன் புருவக் கைகளினாலே ஓவியம் வரைந்தது. வாய் திறந்து "வா மாலா! வா! என்ன வேண்டும்?" நிரம்பிய கேள்வி. ஆனால் பதிலோ குடித்தவன் போல தடுமாறியே தான் தலை காட்டியது. "ஒண்ணுமில்லே சார். எனக்கு ஒரு கணக்கு விளங்கலே. மாமாவும் வீட்டில் இல்லை. அதுதான் உங்களிடம் சந்தேகம் கேட்டுப் போகலாம் என்று வந்தேன்" ஒரு மாணவியின் குரலில் இருக்க வேண்டிய அடக்கம் பவ்வியம் எல்லாம் இருந்தன.

புன்னகை புரிந்தான் கைலாசம். பாடம் துவங்கப்பட்டது. மிகக்கவனமாகக் கேட்டாள் மாலா. அவள் கவனித்த சக்தியினாலோ அல்லது அவன் சொல்லிக் கொடுத்த திறமையினாலோ என்னவோ மாலாவிற்கு அக்கணக்கு நன்றாக விளங்கிவிட்டது. மாலாவின் உள்ளத்தில் சொல்ல முடியாத மகிழ்ச்சி உள்ளத்தின் உள்ளேயே அவன் திறமையைப் பாராட்டினாள்; வாழ்த்தினாள். அவளது உள்ளத்தில் ஊன்றிவிட்ட அவனது கல்வி கற்பிக்கும் திறமை அவளை தினந்தோறும் அவன் வீட்டிற்கு அழைத்துச் செல்லத் தவறவில்லை. இதைத் தடுப்பார் யாருமில்லை.

அவன் உதவிகொண்டு ஆறும் படிவத்தில் அரசாங்கம் நடத்திய தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று தேர்வு பெற்றாள். அவனுடன்கொண்ட கள்ளமில்லா நட்பு அவளுக்கு அறிவை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் இன்னொன்றையும் வளர்த்துவிட்டது. அது தான் மேலும் படிக்க வேண்டும் என்ற அவா. ஆக்கவழியில் செல்லும் ஆசைக்கு விளக்கம் தந்தனர் அவளை வளர்த்தோர்.

இயற்கை அன்னை மாலாவைப் பலவகையால் சித்தரிக்கத் தொடங்கினாள். மாலாவின் உடல்

மீது அழகை மழையெனச் சொரிந்தாள். பருவத்தின் பூரிப்பு பலகோணங்களில் மாலாவின் பட்டு மேனியில் கொடிகட்டிப் பறந்தது. கல்லூரியில் இரண்டாம் வகுப்பில் போடப்பட்டிருந்த அந்தப் பெஞ்சுகளுக்கு வாயிருந்தால் அவைகள் மாலாவைத் தாங்குவதிலே தனக்குள்ள பெருமையினை எடுத்துக் கூறத் தவறாது.

வளர்ந்துவிட்டாள் மாலா. வளர்ந்து விட்டது அழகு. கட்டுப்படுத்தியது பருவத்தின் துடிப்பு. இவ்வளவு இருந்தும் அறிவு வளர்ச்சிக்கு, கல்வி வளர்ச்சிக்கு கைலாசத்தின் உதவியை நாடினாள் மாலா. பாடம் சொல்லித் தர மறுத்தானில்லை கைலாசம். தமிழ் முதல் விஞ்ஞானம் வரை அத்தனையும் தன்னால் முடிந்தவரை சொல்லிக்கொடுத்தான். மாலாவின் வளர்ப்புப் பெற்றோர் கைலாசம் மீது வைத்திருந்த நம்பிக்கை பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் வைத்திருக்கிறோம் என்ற எண்ணத்தை எழவிடவில்லை.

அகநானூறு பாடலுக்கு விளக்கம் கேட்டாள் மாலா. தன்னால் இயன்றவரை சொல்லிப் பார்த்தான். புரிந்தாளில்லை. உதாரணம் காட்டினால் தான் புரிந்து கொள்வாள் போலும் என்று நினைத்த அவன் தன்னைத் தலைமகனாகவும் அவளைத் தலைமகளாகவும் கூறி பாடம் சொன்னான். பாடம் முடிந்த பின்னும் கவிழ்ந்ததாமரை முகம் நிமிரவில்லை.

“என்ன மாலா இப்பொழுதாவது புரிந்ததா?” பாடம் சொல்லிக்கொடுத்த களைப்பு புரையோடிய கேள்வி.

“புரிந்தது” தேன் தங்கிய இதழ் திறந்து பதில் எட்டிப் பார்த்தது. அழகு முகம் நிமிரவில்லை.

“என்ன மாலா? குனிந்தே இருக்கிறாய்?”

நிமிர்ந்து பார்த்தாள். கைலாசமும் பார்த்தான். அன்பு கொப்பளித்துக் கரை புரண்டு ஓடிய பார்வைகள். காட்சியும் கருத்தும் பாலும் சுவையுமென ஒன்றி விட்டன. நாளடைவில் உள்ள உறவு உறுதிபட்டது. இதனால் படிப்புப் பாதிக்கப்படவில்லை. பண்படுத்தப்பட்டது.

நான்காம் ஆண்டு மாணவி மாலா! இது வரைக்கும் ஆயிற்று. கைலாசத்தை ‘சார்’ என்று அழைப்பதைத் தவிர வேறொன்றும் அவள் பேசாள். மாலாவை மறையாத தேயாத நிலவாய் தன் உள்ள வானில் நீந்த விட்டான் கைலாசம்.

* * *

“இதெல்லாம் என்ன மாலா?”

“ஏன் இவைகள் உங்களுக்குப் பிடிக்காதா சார். கிருஷ்ண ஜெயந்தி பட்சணம்.”

“ஓகோ! அதுதானே கேட்டேன். நேற்றைக்கு நீ வீட்டு வாசலிலே செம்மண் கோலம் போட்டுக் கொண்டு இருந்தாயே! இதுக்குத்தானா?”

“ஆமாம். ஆலாத்திகூட எடுத்திருந்தேனே! நீங்கள் பார்க்கவில்லையா?”

“அதையும் பார்த்தேன். அதிலேகூட எனக்குக் கொஞ்சம் சந்தேகம். ஏன் ஆலாத்தி எடுக்கிறார்கள்?

“இதென்ன கேள்வி சார்? நாட்டிலே எங்கும் பரம்பரையாய் நடந்து வருகிற காரியம். அதற்குப் போய் காரணம் கேட்கிறீர்களே.”

“ஏன்? நீ எதற்கெடுத்தாலும் புதுக் காரணம் சொல்வாயே. இதுக்கும் ஏதேனும் சொல்லேன் பார்க்கலாம்?”

அப்படிக் கேளுங்கள் சொல்கிறேன். உண்மைக் காரணம் தெரியாது. இப்போது சொல்வது என் சொந்த ஆராய்ச்சி. ஆலாத்தி எப்படி உண்டாக்கப்படுகிறது என்றால் மஞ்சளும் சுண்ணாம்பும் சேர்க்கப்பட்டு, கலக்கப்பட்டு ஆக்கப்படுகிறது. அப்பொழுது சிவப்பு நிறம் கொண்ட நீர் உற்பத்தி ஆகிறது. இதிலே என்னவென்றால் மஞ்சள் என்றால் மங்களம். சுண்ணாம்பு என்றால் வெண்மை. அதாவது தூய்மை. மங்களமும் தூய்மையும் சேர்ந்தால் சிவப்பு. அதாவது வெற்றியின் அறிகுறி. ஆகவே ஆலாத்தி எடுப்பது வெற்றியைக் குறிப்பதாகும்.”

“பலே மாலா பலே! நல்ல ஆராய்ச்சி. எனக்கு என்ன பரிசு கொடுப்பது என்றே புரியவில்லை.”

“ஒன்றும் வேண்டாம். நீங்கள் சும்மா இருந்தாலே போதும்,” குறும்புப் புன்னகை செவ்விதழ்க் கரையில் தலைகாட்டி மறைந்தது.

“மாலா! நமக்கு என்றைக்கு ஆலாத்தி எடுப்பது?

“இந்த ஒரு வருடம் பொறுத்துக்கொள்ளுங்கள். என் அப்பாவும் வர இருக்கிறார்.”

“இன்னும் அதுவரைக்கும்.....”

“கிணற்று நீரை ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போகாது”.

“போ மாலா! என்ன விளையாட்டு வேண்டிக் கிடக்கு. நான் படும் வேதனை.”

“உங்களுக்குமட்டும் சொந்தம் இல்லையே!”

“தெரிந்தும் இப்படி நடப்பது........”

“நான் என்ன சொல்கிறேன்? இன்னும் சில மாதங்களில் அப்பா வர இருக்கிறார். இப்போது ஏதோ நிலத்தகராறாம். அது இன்னும் கொஞ்ச காலத்தில் முடிந்துவிடும். பிறகு வந்துவிடுவார். அதற்குப்பின் நமக்கு......”

“காலம் நேரம் தெரியாத நிலத்தகராறு.”

“வேடிக்கையாகப் பேசுகிறீர்கள்?”

“உன் விழிகள் கற்றுத்தந்த பாடம்.”

"என்ன இருந்தாலும் நான் உங்கள் மாணவி."

"பாடங்கேட்கும்போது."

"மற்ற நேரத்தில்."

"நான் சொல்லித்தான் ஆகவேண்டுமா மாலா?"

"சார்......" குழைவு நிரம்பி வருகின்ற குவளைக் கண்கள். ஆர்வம் தேக்கப்பட்டு உணர்ச்சித் தேனில் தோய்த்து எடுத்த வார்த்தை.

"மாலா! மறுபடியும் சார் என்றுதானே கூப்பிடுகிறாய்?" ஏக்கம் எதிர் நீச்சல் அடித்தது.

"அத்தான்" இதழ் ஓரத்தில் கிளம்பிய ஒலி தென்றலில் கலந்து தேய்ந்தது.

* * *

கல்லூரி முகவரிக்கு மாலாவிற்கு அவசரக் கடிதம் ஒன்று வந்தது அன்று. அதைக் கையெழுத்துப் போட்டு வாங்கியதிலிருந்து பிரித்துப் பார்க்கும்வரை உள்ள நேரத்தில் அவள் உள்ளம், தீயணைக்கும் படையினர் அவசரமாக தன் பணி ஆற்றப் போகும் போது மணி அடிப்பார்களே அதைப் போன்று அடித்துக் கொண்டது. படித்ததற்குப் பின் ஒன்றுமேயில்லை. படபடப்பு இருந்த இடத்தில்—கவலை இருந்த உள்ளத்தில் களிப்புக் களிநடனம் புரியத்தொடங்கியது, இன்பப் படபடப்பு உடல் எல்லாம் பரவியது. என்ன செய்வதென்றே புரியவில்லை. மகிழ்ச்சி தொண்டையை அடைத்துக் கொண்டது. உட்கார்ந்திருந்த வகுப்பைவிட்டு எப்படியோ வெளியே வந்தாள். உள்ளத்தில் கொப்பளிக்கும் இன்ப உணர்வு; இதை யாரிடமாவது சொல்ல வேண்டும் என்று தூண்டியது. ஆகவே அவள் நின்ற வழியே வந்த தன் தோழி அல்லாத ஒருத்தியுடன் தன் கடிதச் செய்தியை தன் தந்தை வரவிருப்பதை சொன்னாள். அந்தோ! இவள் சொல்லியதைக் கொஞ்சம் கூட லட்சியம் செய்யாமல் போய்விட்டாள் அவள். ஆமாம். உண்மை தானே! சொல்லவேண்டிய விஷயத்தை சொல்ல வேண்டியவர்களிடம்தானே சொல்லவேண்டும். கண்டவர்களிடமெல்லாம் சொன்னால் கேட்பவர்களுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? கேட்பவர்கள் இவளைப் பைத்தியம் என்று நினைத்தாலும் வியப்பில்லை அல்லவா!

மாலா சொல்லிய செய்தியைக் கேட்டவளும் அப்படித்தான். இவ்வருடம் தான் கல்லூரிக்கு வந்தவள். அவ்வளவு தூரம் இவளுக்குப் பழக்கமில்லாதவள். ஆகவே அவள் அலட்சியமாய்

சென்ருள் என்ருல், மாலா தன் அறிவைத் தவிர அவளை நொந்துகொள்வது அறிவீனம் தானே?

மாலா தான் என்ன செய்வாள்? அவள் மனே நிலை அப்படி. மகிழ்ச்சி உள்ளத்தில் நிரம்பி வழிகிறது. அதை யாரிடமாவது சொல்லவேண்டும் என்று தோன்றுவது சகஜந்தானே! ஆகவே தான் அவளிடம் சொன்னுள். அவள் கேட்கவில்லை. கேட்காவிட்டால் போகட்டும். இவள் சொல்வதை எல்லாம் கேட்டு மகிழத்தான் ஒருவன் இருக்கிருனே! அவனிடம் போய்ச் சொல்வாள்! அதுவும் இது அவனுக்கு மிகமிகப் பிடித்த செய்தி.

மாலா அப்பா இன்று மாலை வருகிருர் என்ருல் கைலாசத்திற்கு கசக்கவா செய்யும்? உண்மையிலேயே, சொல்லப் போனல், மாலாவை விட கைலாசம்தான், மிக்க மகிழ்ச்சி கொள்வான். ஏனென்ருல் மணவாழ்க்கையை நிர்ணயிப்பவர் அவர்தானே? மாலா மகிழ்ச்சியுடன் தன் வீட்டையடைந்தாள். தன் வளர்ப்புப் பெற்ரேரிடம் தன் தந்தையின் வருகையை மகிழ்ச்சி பொங்கக் கூறினுள். அவர்களும் மகிழ்ச்சி தான் கொண்டார்களேயானுலும், அந்தக் கடிதத்தைப் பார்த்துக் கொஞ்சம் கவலையும் கொள்ளாமல் இல்லை. அந்தக் கடிதத்தில் இரண்டே வரிகள் தான் எழுதியிருந்தன.

"மாலாவிற்கு ஆசிகள். நான் இன்று மாலை அங்கு வருகிறேன்.

இப்படிக்கு
தந்தை கேசவன்."

இவைகள் தாம் அக் கடிதத்தில் கண்டிருந்தன. தந்தை வருகையையே குறிக்கோளாகக்கொண்ட மாலா ஏனையவற்றைப் பற்றிக் கவலையே கொள்ளவில்லை. "என்னடா இது. திடீரென்று எழுதியிருக்கிருரே! வேருென்றும் எழுதவில்லையே! வார்த்தைக்குக் கூட சுகம், சுகம் தெரிவி என்று என்று எழுதவில்லையே! அப்படி என்ன அவசரமாய் இருக்கும்?" இவைகள் ஒன்றையுமே மாலா நினைத்தாளில்லை. காரணம் அவள் மனம் கண்ட மணவாழ்க்கை. நேரத்தைப் பார்த்தாள். ஐந்தரை ஆயிற்று. இன்னும் இரண்டு மணி நேரத்தில் அப்பா வந்து விடுவார்' அதற்குள் கைலாசத்திற்கு இதைத் தெரிவிக்க வேண்டும் என்ற அவா உந்தத் தன்னை என்று மில்லாதபடி அழகுசெய்து கொண்டு அந்த வீட்டுக்குள் நுழைந்தாள்.

அப்பொழுது தான் அலுவலகத்திலிருந்து திரும்பிய கைலாசம் மாடியில்உள்ள தன்னறைக்குச் சென்ருன். தனக்குப் புதிதாக அன்றைய தினம் மேலதிகாரியிடம் இருந்து வந்த ஆர்டர் அடங்கிய கவர்ஒன்றை சட்டைப் பையினின்றும் எடுத்து மீண்டும் ஒருமுறை படித்துவிட்டு, அதை மேசைமேல் வைத்துவிட்டு கீழே இறங்கி போய் அங்குள்ள அறைக்குச் சென்று முகம் கழுவப் போயிருந்தான்'

இந்நேரம்தான் மாலா மகிழ்ச்சி பொங்க மான் போல் துள்ளிக் கொண்டு மாடியேறி அவன் அறையை அடைந்தாள். அங்கு அவள் சுற்றுமுற்றும் தன்மலர்விழிகளைக் கொண்டு அறையை நோட்டமிட்டாள், அறையை ஒருதரம் உலா வந்த அவளது பார்வை மேஜையின்மீது இருந்த கவரில் நிலைத்து நின்றது' அவசரமாக அதைப் பிரித்துப் படித்தாள். அவள் பார்த்துக்கொண்டு இருக்கும்பொழுது கைலாசம் மேலே வந்தான். வந்தவன் "எப்பொழுது மாலா இங்கே வந்தாய்?" என்ற கேள்வியை முன் அனுப்பியவாறே வந்தான். ஆனுல் அதற்கு மாலா பதில் சொல்லவில்லை.

"அத்தான்! உங்களுக்கு இந்தக் கடிதம் எப்பொழுது வந்தது?"

"ஏன்? மாலா. இன்றுதான் வந்தது. அதற்கு என்ன இப்பொழுது?"

"அத்தான்! அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருப்பது யார் என்று மீண்டும் சொல்லுங்கள்" படபடிப்பின் வளர்ச்சி வளர்பிறையாய் அமைந்தது.

"ஏன்மாலா, இதில்உனக்கு அவ்வளவு அக்கரை"

"இல்லை அத்தான்! அந்தப் பெயரைத்தான் மீண்டும் சொல்லுங்களேன்"

"கேசவன். கீழஉத்திரவீதி. ஸ்ரீரங்கம். ஏன்?"

"ஆ!........."அதிர்ச்சி தாக்கிய குரல்,

"என்ன மாலா? என்ன வந்தது இப்பொழுது?"

"அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது என் அப்பா அத்தான்,"

"என்ன உளறுகிருய் மாலா?"

"இந்தக் கடிதத்தைப் பாருங்கள்" மாலாவிற்கு வந்தகடிதம் கைமாறியது, படித்தான் கைலாசம். சந்தேக ரேகைகள் புருவத்தில் நெளிந்தன,

"ஆமாம்,உன் அப்பா எப்பொழுது வருகிருர்?" மகிழ்ச்சியோடு கேட்க வேண்டிய கேள்வி, இது பாவம், அதிர்ச்சியோடு கேட்டான் கைலாசம்.

"இப்பொழுது வந்து விடுவார்" கண்கள் குளமானது, உதடுகள் துடித்தன, தரையை நோக்கினுள்.

கைலாசத்தின் உள்ளத்திலும் ஏதோ சொல்ல முடியாத உணர்ச்சி ஒன்று தாக்கியது.

அன்று மேலதிகாரியிடமிருந்து வந்த கடிதம் இதுதான்.

"இன்று ஸ்ரீரங்கத்திலிருந்து கேசவன் என்று பெயருடையவர் ஒருவர் மதுரைக்கு வருகிருர். அவர் தன் ஆட்களைக்கொண்டு தனக்கும் இன்ெருருவருக்கும் ஏற்பட்ட நிலத் தகராரில் எதிரி

2/8561

கான்கிரீட் ரோடுகள்



அநேக வருஷங்களாக அதிக போக்குவரத்தை தாங்கியும்கூட சிறந்த நிலையிலிருக்கின்றன

நாள்தோறும் பெருகிக்கொண்டே போகும் நாட்டின் போக்குவரத்திற்கு கான்கிரீட் ரோடுகள் அவசியம், ஏனென்றால்:

கான்கிரீட் ரோடுகள்

- அதே அளவு பாரம் தாங்கக்கூடிய இதர ரோடுகளைவிட குறைந்த செலவில் போடலாம்
- பராமரிப்புச் செலவைக் குறைக்கின்றன
- நீண்டகாலம் உறுதியாக இருக்கின்றன
- அதிகத் தெளிவான தூரப்பார்வையை சாத்தியமாக்குகின்றன
- விபத்துகள் நேர்வதைத் தவிர்க்கின்றன

ஏஸிஸி

சுய முயற்சியின் ஓர் அரிய சாதனை

நிலைக்கும் ஆக்கவேலைகளுக்கு
ஏஸிஸி ஸிமெண்ட்
உபயோகியுங்கள்.
இப்பொழுது இவைகள்
கன்ட்ரோல் விலைகளில்
ஏராளமாகக் கிடைக்கின்றன

தி அஸோஸியேடட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்
தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்

யைக் கொலை செய்துவிட்டார். இங்கிருந்து தப்பி இன்று மதுரை வருகிறார். அவருக்குச் சித்திரை வீதியில் உறவினர் இருப்பதாகத் தெரிகிறது. அதைத் தீர விசாரித்து அவரைக் கைது செய்யவும்."

இந்தக் கடிதத்தைப் படித்தவுடன் மாலாவிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இருவருக்கும் இடையே சிறிது நேரம் சுடுகாட்டு அமைதி நிலவியது.

"அத்தான்! எப்படியேனும் விடுதலை பண்ண முடியாதா?"

"அதெப்படி முடியும் மாலா. கைது செய்ய வேண்டியது என் கடமை அல்லவா?"

"எனக்காகத் தயவுசெய்து உங்கள் கடமையைத் தளர்த்த மாட்டீர்களா?" பரிவும் கெஞ்சலும் நிரம்பி வழிந்தன.

"அதெப்படி முடியும் மாலா?"

"எனக்காக......"

"மாலா, இது ஆபீஸ் சமாசாரம். இதில் குறுக்கிடாதே."

"என் தந்தையைக் கைது செய்தால் நம் கல்யாணம் நிச்சயம் நடக்காது."

"பரவாயில்லை. எனக்குக் கடமைதான் பெரிது" கல்லென உறுதியாக்கப்பட்ட உள்ளம் தந்த உறுதியான பதில் இது.

"அப்படியானால் நம்முடைய காதல்..." ஏமாற்றமும் அதனால் ஏற்பட்ட ஏக்கமும் தொனித்தது.

"மாலா! நீ பேசாமல் வெளியே போ!"

கைலாசம் இவ்வார்த்தையைச் சொல்லும்போது அவளைப் பார்க்கவில்லை. இவ்வார்த்தையிலே அவனது இரும்பு உள்ளத்தின் பிரதிபலிப்பு தெரிந்தது. வெறுப்பாகக் கூறியும் மாலா போவதாகத் தெரியவில்லை.

"அத்தான்! தயவு செய்து இந்தத் தடவை விட்டுவிடுங்கள். நான் தாயில்லாதவள். அப்பா ஒருவர்தான் எனக்கு ஆதரவு."

கைலாசம் உள்ளமென்ன மெழுகுவர்த்தியா உருகுவதற்கு.

"மாலா! வெளியே போ என்றால் போய்விடு" வெறுப்பும் கோபமும் கலந்த உஷ்ணக் காற்று வீசியது.

"அப்படியென்றால் நம்முடைய காதல்..."

"கடமைக்குப் பின்பு"

"அப்ப உங்க கடமை தான் பெரிதா?"

"ஆமாம்"

"அனார்கலி—சலீம் கதை சொல்வீர்களே" அழுதே விட்டாள். எவ்வளவு தூரம்தான் அவள் பொறுப்பாள்?

"மாலா! ஏட்டுச் சுரைக்காய் இங்கே பயன் படாது"

"சார்..."

"போ வெளியே!"

"டுமீல்"

இருவரும் ஒருவரை ஒருவர் இனம் புரியாத அச்சத்தால் பார்த்துக் கொண்டனர். சப்தம் வந்த இடத்தை நோக்கினர். பின்னர் இருவர் கால்களும் விரைவாக மாடியினின்றும் இறங்கின. இறங்கியவர்கள் நேரே தோட்டத்தை அடைந்தனர்.

அங்கே!

"அப்பா"

"மாலா"

கேசவன் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டு இருந்தார்.

"அழாதே! மகளே! அழாதே!"

"இங்கே எப்படியப்பா வந்தீர்கள்?"

"இப்பொழுது தான் வந்தேன் ஊரிலிருந்து. நீ இங்கே இருப்பதாக உன் அத்தை சொன்னாள். இங்கு வந்தேன்......"

தொடர்ந்து பேச முடியவில்லை அவரால். மாலாவின் மடியின் மீது தலைவைத்துப் படுத்தவர் சாவுடன் போராடுபவர் இழுத்து இழுத்துப் பேசினார்.

"இங்கே வந்தேன். மாடிக்குப் பாதி தூரம் வந்தேன். உங்கள்...பேச்சைக் கேட்டேன். என்னால் உன் வாழ்வு பாதிக்கக் கூடாது"

"அப்பா" அழுது விக்கினாள் மாலா.

"இல்லை. மாலா. இல்லை. என்னால் பாதிக்கக் கூடாது. உண்மை! உண்மை! கீழே வந்தேன். அந்த அறையில்...இது...இருந்தது. அப்படியே அதை எடுத்துக்கொண்டு இங்கே வந்து விட்டேன்."

இப்பொழுதுதான் புரிந்தது கைலாசத்திற்கு தான் செய்த தவறு. தான் முகம் கழுவி விட்டு மேலே வரும் பொழுது தன் கைத்துப்பாக்கியைத் தவறாகக் கீழேவைத்துவிட்டு வந்ததை அப்போதுதான் உணர்ந்தான். அவருடைய நேர்மை கண்டு அவன் உள்ளம் அழுதது. அவன் அழுதான்.

"அழாதீங்க சார்! அழாதீங்க...இவளைக் காப்பாற்ற வேண்டியது இனி...உங்கள்...பொறுப்பு" என்று சொல்லிக் கொண்டே மாலாவின் கையையும், கைலாசத்தின் கையையும் ஒன்றாக இணைத்து வைத்து, தன் இரத்தத்தை இரண்டு பேருக்கும் பொட்டாக வைத்தார்.

"அப்பா" அலறினாள். அரற்றினாள். பயன்... இப்பொழுது அவள் அப்பாவிற்குக் காது கேட்காது.

மேற்கே சூரியன் மறைந்து விட்டான். இருந்தும் கைலாசத்தின் கண்ணில் அந்த நேர்மையாளரின் இரத்தம் சொட்டிய அந்தச் செம்மண்—பூமி கண்ணுக்குத் தென்பட்டது. அது அவன் நல்வாழ்விற்கு ஆலார்த்தி எடுப்பது போன்று இருந்தது.

மாலாவின் மலர் விழிகள் இரண்டும் அவள் மாம்பழக் கன்னங்கள் குளிப்பதற்கு வெந்நீர் வைத்துக் கொத்துக்கொண்டு இருந்தன. ★

கேரள நாட்டுப் பிரயாணம்-6

கே. ஸ்ரீநிவாஸன்

கேரளத்தில் ஒரு விரும்பத்தக்க அம்சம் பலபாகங்களில் சர்க்கார் நடத்தும் பஸ்மார்க்கங்கள்தான். "எக்ஸ்பிரஸ்" என்று சொல்லும்பஸ்கள் உண்மையில் வேகமாகத் தான் செல்லுகின்றன. கடற்கரையோர மாக உள்ள பாகங்களில்யாரும் ரயில் என்று ஒன்று உண்டு என்று எண்ணுவதேயில்லை. எர்ணுகுளத்திலிருந்து திருவனந்த புரத்துக்கு எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் செல்லும் பொழுது கிட்டத்தட்ட கேரளத்தின் எழில்மிக்க அம்சங்களைப் பார்க்கலாம். எர்ணுகுளம் கொச்சி பாலத்தருகே "வந்தனம், மறுபடியும் இங்கே வரவும்" என்ற போர்டை பார்த்தவுடனேயே "ஆகா! இவ்வளவு உபசாரம்கூறும் எர்ணுகுளத்தை விட்டுப் போகவாவது என்றுகூடத் தோன் றிற்று". வழிநெடுக உப்பங்கழிகள். உப்பங் கழிகள் என்றால் மூங்கில் தடிகள் என்று அர்த்தம் இல்லை. இந்த உப்பங்கழிகள் சமுத்திர நீர் உள்நாட்டுக்குள் ஊடுருவிப் பாயும் கால்வாய்கள். கிட்டத்தட்ட மேற் குக் கரைபூராவும் இந்த உப்பங்கழிகள் இருக்கின்றன. அவைமூலம் சாமான்கள் ஓர் இடத்திலிருந்து பல இடங்களுக்குச் செல்ல தோதாக இருக்கிறது ரஸ்தாமூலம் செல்லும்பொழுது கொச்சிக்கு அருகே ஓர் அகண்ட உப்பங்கழிக்கு மேல்பாலம் இல்லை. இங்கு பஸ் உள்பட பிரயாணிகளை மோட்டார் படகு (FERRY) சில நிமிடங் களில் அக்கரைக்குக் கொண்டு செல்லு கிறது. வடக்கே சில இடங்களில் நடப்பது போல் படகோட்டிகளுடன் பேரம் பேசத் தேவையில்லை. இந்த உப்பங்கழியைக் கடந்து அக்கரையை அடைந்ததும் 'சில்லெ'ன்று காற்று அடித்தது. கொச்சி யைச் சேர்ந்த தென்னை மரங்களும் பாக்கு மரங்களும் தேவ கன்னிகளைப் போல் தலைவிரித்தாடின.

எர்ணுகுளத்தை சுற்றிப் பார்க்க வேண்டு மென்றால் பஸ்ஸில் ஏறினால் போதும். இந்தத் துறைமுகப்பட்டினம் கோவணத் தைப் போல் நீளத்திலேயே அமைந்துள் ளது. சமுத்திரக்கரையை ஒட்டிய பட் டினம். ஒவ்வொரு தெருவிலும் ஒரு மாதா கோவிலும் நான்கு வெற்றிலைபாக்கு கடைகளும் இருக்கின்றன. ஒரு கட்டத் தில் ஒரு கடைக்காரர் மற்றவரிடம் வாங்கி னால்தான் வியாபாரம் என்ற அளவுக்கு கடைகள் மண்டினாலும் மண்டலாம். கோட்டயத்தில் ஒரு கிருஸ்தவ வர்த்தகத் தலைவர் நாயர்கள் முன்னாளில் மிகவும் சோம்பேறிகள் என்று சொன்னது ஞாபகம் வந்தது: "ஏய், நம் ஊரை விட்டு போயோ? ஒருபத்து அம்பது ரூபாயில் கடை வை த்தால் என்ன?" என்பது தலைமுறையாக வந்த வேதாந்தம். சென்னையில் சர்க்கார் நிர்வாக கௌன்ஸில் (வெள்ளையர் ஆண்ட காலத்தில்) மெம்பர் ஸ்ரீகிருஷ்ணன் நாயர் ஊட்டுப்பிறைகளை மூடினாரோ மலையாளிகள் தங்கள் ஊரைவிட்டுக் கிளம்பி மற்ற மாகா ணங்களில் வியாபிக்கத் தொடங்கினார்கள். இன்று பிரச்னை படித்து விட்டு ஜீவன மார்க்கம் தேடும் இளைஞர்களுக்கு வழி என்ன? நிலம் என்பது மிகவும் குறை வாக உள்ள கேரளத்தில் உழவர்களின் பெரும்குடும்பங்கள் பிழைக்க நிலம் எங்கே?

எர்ணுகுளத்தை விட்டு கிளம்பிய திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் (ரயில் வண்டி யல்ல, துரித பஸ் மார்க்கம்) கடுமையாகவே தான் சென்றது. உப்பங்கழிக்குமேல் உள்ள கொச்சி பாலத்திலிருந்து எர்ணுகுளம் ஒய்யாரமாகவே காட்சியளித்தது. பஸ்ஸில் நெருக்கடி கிடையாது. ஒவ்வொருவருக் கும் விச்ராந்தியான ரப்பர் மெத்தை கொண்ட ஆசனம், தலையைச் சாய்த்துக் கொள்ளும்படியான சாய்மானம். ஓர் உப்பங்கழிக்கு இன்னும் பாலம் அமைக்கப் படவில்லை. ஆனால் துளிக்கூட தாமதம் இல்லாமல் பஸ்ஸை படகில் பிரயாணிகள் உள்பட ஏற்றி அக்கரை கொண்டு வந்து சேர்த்தார்கள். வழிநெடுக ஓர் அதிசயக் காட்சியைக் கண்டேன். தண்ணீர் தேக் கங்களில் முட்டு முட்டாக குவிக்கப்பட்ட திடல்களில் நெல் பயிராக்கப்பட்டிருந்தது. என்னவென்று விசாரித்ததில் சதுப்பு நிலத்திலும் கொஞ்சமாவது நெற்பயிர் செய்ய முயற்சி செய்கிறார்கள் என்று அறிந்தேன். ஆங்காங்கு முந்திரிக் கொட் டையும் பயிராக்கப்பட்டு வந்தது. மொத் தத்தில் பச்சையாக இல்லாத நிலம் எங்குமே தென்படவில்லை. நீர்வளமும் நிலவளமும் உள்ள மாகாணம் கேரளம்!

வழிநெடுக தூறிக்கொண்டிருந்தது கொயிலோனை நெருங்கியபொழுது நல்ல மழை பிடித்துக் கொண்டது. கொயிலோன் ஒரு விசேஷ வர்த்தகஸ்தலம். கேரளத் தின் மேற்கு சமுத்திரக்கரைப் பிரதேசங்கள் பூராவும் உப்பங்கழிகள் வர்த்தகப் போக்கு

வரத்துக்கு உதவுகின்றன என்றாலும் கொயிலோனில் அவைகள் மிகவும் உபயோகப் படுகின்றன. உப்பங்கழியின் இருபுறங்களிலும் நூற்றுக் கணக்கான படகுகள் நின்று கொண்டிருந்தன. கொயிலோனுக்கு வருவதற்கு முன் ஓர் இடத்தில் நிறுத்தி, "இங்கு ஊணு கழிக்கலாம்" என்றார் டிரைவர். திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் தன் பெயருக்கேற்றவாறு எந்தஊரிலும் ஐந்து நிமிஷங்கள் கூட நிற்கவில்லை. சரி, சாப்பாட்டை இப்பொழுது விட்டால் இனி நாளை காலை தானே சாப்பாடு என்று உள்ளே நுழைந்தேன். தமிழ் ஜில்லாக்களில் தண்ணீர் பந்தல் என்று சொல்லுகிறார்களே அதைத்தான் ஒத்திருந்து அந்த ஹோட்டல். எப்படியிருந்தாலும் ரங்கூனில் சாப்பிடச் சொன்ன ஹோட்டலை விடவா மோசமாக இருக்கும் என்று உள்ளே சென்றேன். எச்சில் இலைகளுக்கு முன் நான் சாப்பிட வேண்டியிருந்தது. பரிமாறுபவர் மூங்கில் முறத்தில் கொண்டுவந்த அன்னத்தைப் பார்த்ததும் உயிரே போய்விட்டது. அரிசி கைக்குத்தலாக இருந்தால் பழுப்பாக இருக்கும். இந்த அன்னம் கருப்பாக இருந்தது. ஹோட்டல் முதலாளி ஒரு காலத்தில் தமிழ் நாட்டு வாசியாக இருந்திருக்கவேண்டும். என் முகத்தைப் பார்த்ததும்: "நீங்கள் தஞ்சாவூரோ?" என்றார். நானே தஞ்சாவூராக இல்லாவிட்டாலும் அவர் கேள்வியை அறிந்து கொண்டு தலையை அசைத்தேன். "ஈ...யீண்டமகன் சோறு ஞிங்கள் ஊணுக்கல்லா" என்று சொல்லி உள்ளே அழைத்தார். அடுப்பங்கரையில் வெள்ளை வெளேரென்ற சாதம் கிடைத்தது. "இது 'பிளாக்' ஆக்கும். என்றார். சோற்றுக்கு விலையும் 'பிளாக்'தான். வெளியே எட்டணா சாப்பாட்டின்விலை உள்ளே பன்னிரண்டணா. அரிசி போதிய அளவில் கேரளத்தில் உற்பத்தியாகவில்லை என்றாலும் அங்கு மக்களுக்குக் கிடைக்கும் அரிசியை நம் ஊர் மாடுகள்கூட கண்ணெடுத்துப் பாரா. நல்ல வேளையாக கம்யூனிஸ்ட்கள் இந்தத்துறையில் பிரசாரம் செய்ய வாயில்லை. ஏனென்றால் அவர்கள் ஆந்திராவில் தகிடுதத்தம் செய்து மட்ட அரிசியை வாங்கி அதற்கு உயர்ந்த ரக அரிசியின் விலையைக் கொடுத்ததாகப் புரளி செய்து சுமார் 3 லெக்ஷம் ரூபாய் தங்கள் கட்சியின் நிதிக்குத் திரட்டியது ஜனங்கள் அறிந்த விஷயமாயிற்றே.

நீண்டக்காரா என்ற இடத்தில் பஸ் நின்றது. இங்கு மத்திய சர்க்காரின் திட்டத்தின் கீழ் நார்வே நாட்டார் மீன் பிடிப்பதற்கு நவீன முறைகளை மலையாளிகளுக்குக் கற்றுக் கொடுத்து மீன் ஏராளமாகப் பிடிக்க உதவி செய்கிறார்கள். இதைப்பற்றிப் பிரஸ்தாபித்தபொழுது பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்த நடுத்தர வயதான ஒரு செம்படவர் மத்திய சர்க்காரை வாழ்த்தி இன்று மீன் பிடிப்பது ஒரு நல்ல ஜீவனமார்க்கமாகி விட்டது என்று சொன்னார். ஆனால் இங்கும் கம்யூனிஸ்ட்கள் தங்கள் கைவரிசைகளைக் காண்பிக்கிறார்கள். செம்படவர்கள் கோவாப்ரேடிவ் சொஸைடிகளை நிறுவினால் அவர்கள் கூட்டு முறையில் மோட்டார் படகுகளைப் பெற்றுப் பயன் பெறலாம் என்று திட்டத்தார் அபிப்பிராயப்பட்டனர் சொஸைடி நிறுவும் கட்டத்தில் அவைகளைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வந்து இங்கும் செம்படவர்களுக்குச் சித்தாந்த உபத்திரவம் கொடுக்கின்றனர் செந்தோழர்கள்.

இரவு ஒன்பது மணிக்குமேல் கண்ணயர்ந்து விட்டேன். பஸ் ஓடிக்கொண்டேயிருந்தது. சுமார் பன்னிரண்டு மணியிருக்கும் திருவனந்தபுரத்தை அடைந்தோம். கடைத்தெரு, போஸ்டாபீஸ், சர்க்கார் அலுவலகம் எல்லாவற்றையும் கடந்து ரயில்வே ஸ்டேஷனை அடுத்த பஸ் ஸ்டாண்டில் பஸ்நின்றதுதான் தாமதம். அந்த நிசாசர வேளையிலும் வாண்டுப் பையன்கள் "ஸார் ஞான் நிங்களுக்கு ரூம் காட்டி" என்று பெட்டியைப் பிடுங்கியது பரிதாபமாக இருந்தது. ஒரு சிறுவன் என் பெட்டியைத் தலையில் வைத்துக் கொண்டு ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் சத்திரத்துக் கதவை பிளக்கமுயற்சித்தான். ஒரு குண்டோதரப் பேர்வழி பத்து நிமிஷம் கழித்து எழுந்து உடம்பை நெளித்து சோம்பல் முறித்துவிட்டு; "யாரடா,........ யீண்டமகனே, நேரம் தெரியுமா?" என்றான். பையன் பளிச்சென்று "பன்னிரண்டு" என்றதும் குண்டோதரன் ஓநாய் மாதிரி கத்தினான். பையன் பின்வாங்கி "ஸாரே, நாம் உடுப்பிபோயோ" என்றான். பையன் நடுங்கியதிலிருந்து குண்டோதரன் உடனே அங்கிருந்து நகராவிடில் எலும்பை ஒடித்து விடுவேன் என்று சொல்லியிருக்கவேண்டும் என்று யூகித்தேன். "எங்கு வேண்டுமானாலும் போ, திருவனந்தபுரம் நடுச்சந்தியில் மட்டும் படுக்கவைத்து விடாதே" என்றேன். பையன் என்னை நல்லவேளையாக உடுப்பியில் சேர்த்துவிட்டுக் காலையில் ஊர் சுற்றிக் காட்ட வருவதாகச் சொல்லிவிட்டு சென்றான்.

அந்த ஹோட்டலில் கொசுக்கள் வண்ணாத்திப் பூச்சி அளவுக்கு இருந்தன. கொஞ்சம் சில்லென்று இருந்த போதிலும் பங்காவை முடுக்கிவிட்டுப் படுத்தேன். விடிந்து ஏழு மணிக்குத்தான் எழுந்தேன். கேரளத்தில் தண்ணீருக்குப் பஞ்சமில்லை. ஆகவே எந்த ஹோட்டலிலும் மழைமாதிரி தலைக்குமேல் தண்ணீர் சொரியும் குழாயை பொருத்தியிருக்கிறார்கள். இந்த மாதிரி பத்து நிமிஷம் குளித்தால் உடம்பு வலியெல்லாம் ஆறுகிறது.

காப்பி சாப்பிட்டுவிட்டு நேரே பத்மனாபஸ்வாமி கோவிலைப் பார்க்கச் சென்றோம். வழி நெடுக பையன் எனக்கு அரசியல் சொல்லிக்கொண்டே நடந்தான். திருவனந்தபுரத்தில் சோஷலிஸ்டுகளுக்கு அதிக மரியாதையென்றும், கம்யூனிஸ்ட்களைக் கண்டால் முக்கால்வாசிப் பேருக்குப் பிடிக்காது என்றும் பையன் சொன்னான். "நீ ஏன் படிக்காமல் ஊர் சுற்றுகிறாய்?" என்று கேட்டேன். பையன் தான் நான்கு கிளாஸ்வரை படித்ததாகவும், தன் குடும்பம் பெரிதாகி, தகப்பனார் ஒரு மெகானிக், சம்பளம் போதாததால் தானும் சம்பாதிக்க வேண்டி வந்ததென்றும் சொன்னான். "அப்படியென்றால் உனக்குக் கம்யூனிஸ்ட்களையல்லவா பிடிக்கவேண்டும்" என்றேன். "அவர்கள் திருடர்கள் ஸார். அரிசியல் நல்லா பணம் பண்ணிஸாமி, பஸ் சார்ஜை ஒசத்திப் போட்டாங்க, ஸார்". என்றான். பையன். தான் சோஷலிஸ்ட் என்று மேலும் தொடர்ந்து தன்னுடைய சோஷலிஸ சித்தாந்தத்துக்கு ஆதாரங்களையும் சொல்ல ஆரம்பித்தான். பகவான் சிருஷ்டியை வியந்து கொண்டே சென்றேன். நான்கு வகுப்புகள்மட்டுமே வாசித்த வாண்டுப் பையனுக்கு அரசியலை எந்தக் கல்லூரி போதித்தது? தன் தகப்பன் குடும்பத்தில் ஒரு பிடி சோறு சாப்படாத தெரு வாசிக்கு குடும்பம் பிழைக்கவேண்டுமே என்ற அக்கரையை யார் படிப்பித்தார்கள் என்று வியந்தேன். வழியில் பல மரங்களில் கருப்புக் கொடி பறந்து கொண்டிருந்தன. தமிழ் நாட்டிலிருந்து வந்தவனுக்கு கருப்புக் கொடியைப் பார்த்ததும், கண்கள் மாவட்டக் கழக அலுவலகத்தின் போர்டை தேடுவது சகஜம் தானே? இதைப் பையன் எப்படியோ தெரிந்து கொண்டிருக்க வேண்டும். "இந்தக் கொடி ரோஸம்மா பொன்னூஸ் ஜயித்ததைக் குறித்து வருந்த ஸார்" என்றான். நான் பார்த்த கொடிகளின் எண்ணிக்கையிலிருந்து தேவி குளத்தில் கம்யூனிஸ்ட் அபேக்ஷகர் ஜயித்ததற்காக திருவனந்தபுர வாசிகள் பெரிதும் வருந்தியிருக்கவேண்டும்.

பத்மனாபஸ்வாமி கோயிலும், சுசீந்திரம் கோவிலும் தான் தமிழ் நாட்டுப்பாணியில் கட்டப்பட்டவை போலும்! கோவிலுக்கு முன்னமைந்துள்ள தடாகம் அழகாக இருப்பதுடன் தண்ணீரும் கூடுமான வரை சுத்தமாக இருந்தது. பத்மனாபஸ்வாமி தேவஸ்தானம் மிகப் பெரியது. சமஸ்தானமே கோவிலைச் சேர்ந்தது என்ற அடிப்படை காரணமாகக் கோவிலுக்கு ராணுவ மோஸ்தரில் பாராக்காரர்கள் உள்ளனர். கோவிலுக்கு வெளியே மணிக்கு மணி சேமங்கலத்தில் மணியடிக்கும் சேவகர்கள் மூன்று பேர்கள். கோவில் முக்கிய வாசற்படியை அடைந்ததும் பாராக்காரர் என் சட்டை பனியனைக் கழற்றச் சொன்னார். இடுப்புக்கு மேல் எவ்வித உடையும் அணிந்து உள்ளே செல்லக் கூடாது என்பது கேரளத்தில் உள்ள கோவில்களில் அனுசரிக்கப்படும் வழக்கம்; மகாராஜா கூட இந்த விதிக்கு விலக்கல்ல.

சட்டையைக் கழற்றச் சொல்லிவிட்டு அதற்குள் இருந்த சாமான்களைத் தான் கவனித்துக் கொள்ள முடியாது என்று சொல்லவில்லை. காமிரா முதல் காலணா காசுவரை எல்லாவற்றையும்தான் வாங்கிக் கொண்டார். உள்ளே சென்றதும் மனோரம்மியமாக இருந்தது. விசாலமான பிரகாரம். முதல் சந்நிதியில் பல அபூர்வமான கற்சிலைகள் என் மனதைக் கவர்ந்தன. மன்மதன் ரதி, துவாரபாலகர்கள் எல்லாரும் தத்ரூபமாகக் காட்சியளித்தனர். பத்மனாபஸ்வாமி கோவிலில் புகைப்படம் எடுக்கக்கூடாது. எடுப்பதற்கு அனுமதியிருந்தால் நேயர்கள் பார்த்து அனுபவிக்கத்தக்க புகைப்படங்கள் எடுத்திருப்பேன்.

பத்மனாபஸ்வாமி கோவிலில் விசேஷம் ஒற்றைக்கல்தரிசனம். இங்கு ஒரே கல் சுமார் 12 அடி சதுரமும் 10 அடி உயரமும் உள்ளது. இந்த மேடையிலிருந்துதான் பத்மனாப தரிசனம். பத்மனாபர் நன்றாக மல்லாந்து படுத்து வலது கரத்தை சாலிக்கிராம குளத்திற்குள் தொங்க விட்டிருக்கிறார். மூலஸ்தானம் இலுப்பைக் கட்டையால் ஆனதென்றும் அது மிதந்து கொண்டிருப்பது தான் விசேஷம் என்று சொல்லக் கேட்டேன். மூலஸ்தானத்திற்கு அபிஷேகமோ கற்பூர ஆராத்தியோ கிடையாது. இவைகளைப் பெற்றுக் கொள்ளும் விக்கிரகங்கள் ஸ்ரீதேவியும் பூதேவியும். சீட்டுப் பெற்றுக் கொண்டு பிறகுதான் அர்ச்சனை. பிரஸாதம் துளசியும் சந்தனமும்தான்.

கோவிலில் விசேஷம் என்னவென்றால் ஒவ்வொரு சுவற்றிலும் வரிசை வரிசையாகப் பித்தளை விளக்குகள் தொங்கவிடப் பட்டிருக்கின்றன. இவைகளை மாதத்தில் பல தடவைகள் ஏற்றுவார்களாம். அவற்றை ஏற்றும் பொழுது ஜாஜ்வல்யமாக இருக்கும் என்பது சுலபமாக யூகிக்கக் கூடிய விஷயம்.

பிராகாரத்தைச் சுற்றி வரும்பொழுது திருவாங்கூர் மகாராஜாவும் பிரதக்ஷிணம் செய்து கொண்டிருந்தார். சர்வ சாதாரணமான உடை, தேஜஸ் சொட்டும் முகம். இன்று வரை அவர் திருவனந்தபுரத்திலிருக்கும் பொழுது தினம் ஒரு தடவை கோயிலுக்கு வரத் தவறியதில்லையாம். திருவாங்கூர் சமஸ்தானமே பத்மநாப ஸ்வாமியைச் சேர்ந்தது என்ற ஐதீகத்தில் மகாராஜா நிரந்தர டிரஸ்டி. ஸ்வாதி திருநாள் உருக்கமாக பாடியிருப்பதும் இதே பத்மநாபரைப் பற்றிதான்.

கேரள யாத்திரை பூராவும் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்த விஷயம் நேந்திரங்காய் வற்றல்தான். கோட்டயம் சென்றது முதல் இந்த வற்றலை ஏதேஷ்டமாக வாங்கித் தின்ன வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் கோட்டயத்திலும் சரி, எர்ணாகுளத்திலும் சரி, வழியிலும் சரி இந்த வஸ்து கிடைக்கவில்லை. திருவனந்தபுரத்திலே மூலை முடுக்கெல்லாம் தேடியும் பயனில்லை. "எந்தா சேட்டா, ஈ நேந்திரங்காய் வற்றல் இங்கு உண்டோ?" என்று தமிழும் மலையாளமுமாகக் கலந்து மோர்சிங் வாசித்தது தான் மிச்சம். எங்கும் ஒரே தினுசான பதில். "ஓ! அதா? உண்டு. ஆனால் இங்கு கிட்டிட்டில்லா" எங்கு அது கிட்டும் என்பதை அடுத்த யாத்திரையில் தான் ஆராய வேண்டும்.

திருவனந்தபுரத்து மிருகக் காட்சிசாலை மிகவும் ஓசத்தி என்று சொல்லுகிறார்கள். எனக்கு என்னவோ அது அவ்வளவு உயர்ந்ததாகத் தெரியவில்லை. மிருகங்கள் இருக்க அமைத்திருக்கும் விடுதிகள் நன்றாக இருக்கின்றன, மனிதர்களுக்கு பட்டண வாசங்களில் ஏற்படும் இட நெருக்கடி அவைகளுக்குக் கிடையாது. ஆனால் அவை மிகவும் புஷ்டியாகவோ அல்லது உயர்ந்தரகமாகவோத் தோன்றவில்லை, எந்த மிருகக் காட்சிசாலையையும் பார்க்கக் கொடுக்கும் கட்டணமும் நியாயமானதுதான். ஆனால் இங்கு காமிராவை உள்ளே எடுத்துச்செல்ல வாங்கிய கட்டணமான ஒரு ரூபாய் மிகவும் அநியாயம். அந்தக்கட்டணம் ஜீர்ணம் ஆகவேண்டுமானால் ஒரே வழிதான் என்று இறுதியில் நினைத்தேன்' அது காட்சிசாலை அதிகாரிகளைக் கூட்டிற்குள் அடைத்து புகைப்படம் எடுப்பது.

திருவனந்தபுரத்தின் மத்தியில் கேரள சர்க்கார் மத்திய காரியாலயம் அமைந்துள்ளது. ஜேஜேயென்று தேர், திருநாள் மாதிரி உள்ளே கூட்டம். உள்ளே நுழைந்ததும் கேரளத்தைப் பற்றிய விவரங்கள் அடங்கிய ஒருசிறிய கண்காட்சி. விளம்பர இலாகா எங்கு இருக்கிறது என்று கண்டுபிடிக்க சுமார் அரைமணி ஆயிற்று. அப்படியும் டைரக்டரைப் பிடிக்க முடியவில்லை. உதவி டைரக்டர் ஒரு மூக்கோட்டையில் 'உட்கார்ந்திருந்தார். அவருக்கு மிகக்கோபம். அவர் கேட்ட காகிதக்கட்டை குமாஸ்தா கொண்டு வந்து கொடுக்கவில்லை இதற்காக அவருக்குக் கோபம் வரவில்லை. வெகு நிதானமாக, "பைல் இல்லா, ஞான் என்ன செய்யட்டும்?" என்று சொல்லி அவருக்கு முன் நெளிந்துக் கொடுத்தார் குமாஸ்தா. உதவி டைரக்டர் பொறுமி உறுமினதுதான் மிச்சம், "நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்" என்ற தோரணையில் ஒரு பார்வை பார்த்துவிட்டு சென்றார் குமாஸ்தா. டைபிஸ்ட் ஓர் அம்மாள். அவள் வாயைத்திறந்து ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை.

"காலம் கெட்டுப்போச்சு ஸார். செக்ரடேரியட்டில் உத்தியோகத்துக்குத் தாளம் போட்டது அந்தக்காலம். 'என்னய்யா முறைக்கிறயா' என்று நம்பூதிரிபாத்திடம் சலுகை கொண்டாடுவது இந்தக்காலம்" என்றார் உதவி டைரக்டர்.

"இம்மாதிரி ஒழுங்கீனத்தைக் கம்யூனிஸ்ட் சர்க்கார் கண்டிப்பதில்லையா?"

"இப்பொழுது சலுகை காட்டிக் குட்டிச்சுவராக்குகிறார்கள். யார் கண்டார்கள் அவர்கள் சர்க்கார் நிரந்தரமானால் இதே கழிப்புண்ணிகளுக்கு கசையடி கொடுத்துக் கசக்கிப்பிழிய மாட்டார்கள் என்று?"

மொத்தத்தில் இன்று கேரள சர்க்கார் காரியாலயத்தில் காணப்படும். ஊழல் இந்தியாவில் (டில்லி உள்பட) எங்கும் பார்க்க முடியாது. ஒரு சாரரைக் கண்டால்தான் சர்க்கார் ஊழியர்களுக்குப் பயம். அது கம்யூனிஸ்ட் தலைவர்கள். அவர்கள் சொன்னால் அது மந்திரிகளின் உத்தரவுக்கு மேலாக மதிக்கப்படுகிறது கண்டிராக்டு லைசென்ஸ் முதலியவைகளை கம்யூனிஸ்ட் தலைவர்கள் கை சொடுக்கும் நேரத்தில் பெறுகிறார்கள். மற்றவர்கள் அவைகளுக்குப் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கிறது. உதாரணமாக மின்சார சம்பந்தமான சர்க்கார் காரியாலயத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கண்டிராக்டர் ஒருவர் அழமாட்டாக் குறையாக "ஸார் சென்ற வருஷப் பணம் வந்தால் பிள்ளையாருக்கு நூற்றெட்டு தேங்காய் உடைக்கத் தயார். இந்த செக்ரடேரியட்டில் இனி நம்மால் ஈடு கொடுக்க முடியாது" என்றார். பழைய மந்திரி ஒருவரைப் பிடித்துக்கொண்டு அவருடைய இலாகாவில் வேலை செய்த ஊழியரைக் குல்லாப்போட்டு பணத்தைப் பெற ஏற்பாடு செய்து கொண்டிருந்தார் அந்த கண்டிராக்டர்.

அந்த மந்திரி வேறுயாருமில்லை. சாக்ஷாத் ஸ்ரீ பரமேச்வரம் பிள்ளை தான். அவருடைய அரசியல் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்று குசலப் பிரச்னம் செய்ய ஆரம்பித்தேன். ஸ்ரீ பிள்ளை மிகவும் தளுக்காக, "நான் எல்லாம் சொல்லுகிறேன். வெளியே செல்லலாம் வாருங்கள். இங்கு சர்ச்சை செய்தால் பாவம் உதவி டைரக்டருக்கு சீட்டு கிழிக்கப்படும்" என்றார். சரிதான் என்று வராந்தாவுக்கு வந்து பெஞ்சியில் உட்கார்ந்தோம். எங்களை ஒருவர் வெகு சமீபத்தில் நின்று கவனிக்கலானார். அவர்தான் கனம் ஸி.ஐ.டி. அவர்கள்.(தொடரும்)

எதிரொலி

“விஸ்வம்”

எல்லா மொழி தினசரிகளிலும் பிரசுரமாயிருந்தது அந்த விளம்பரம். திவான் பகதூர் தீனதயாளு திருப்பித் திருப்பி ஒவ்வொரு பத்திரிகையாகப் பார்த்துக் கொண்டிருந்தார். தானே கொடுத்த விளம்பரத்தைப் படிப்பதில் எத்தனை சுவை!

“ரஞ்சன்! என்னைத் துக்கக்கடலில் ஆழ்த்தி விட்டு இந்தப் பத்து வருஷமாக எங்கே மறைந்திருக்கிறாய்? உன்னைப் பிரிந்த துக்கத்தால் உன் தாய் சிவலோகப் பிராப்தியடைந்து விட்டாள். என்னைத் துக்கத்திலிருந்து காப்பாற்றத் திரும்பி வந்து விடு. ஏராளமான செல்வத்தோடும் அளவில்லா அன்போடும் உன்னைவரவேற்கக் காத்துக் கொண்டிருக்கிறேன். உன் தந்தை திவான் பகதூர் தீனதயாளு, அழகு மாளிகை, அடையாறு.”

விளம்பரத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்த தீனதயாளுவுக்குப் பழைய நினைவு வந்தது. பத்து வருஷங்களுக்கு முன் வீட்டை விட்டு ஓடிப்போன அவருடைய பையன் ரஞ்சன் உருவம் அவர் மனக்கண் முன் தரிசனமளித்தது. அப்போது அவனுக்கு வயது பன்னிரண்டு. இப்போது எப்படியிருப்பான்? எவ்வளவு வளர்ந்திருப்பான்?

காணாமற்போன ரஞ்சனைத் தேடாத இடமில்லை. பணத்தைத் தண்ணீராய் வாரி இறைத்துப் பார்த்து விட்டார் திவான் பகதூர். ரஞ்சன் சென்ற சுவடே தெரியவில்லை. பிறகு துக்கத்தை மறக்க மனைவியோடு பல தேசங்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார். பிரயாணம் முடித்துத் திரும்பியதும் மனைவியும் இறந்து விட்டாள்.

“நான் தான் திரும்பப் பார்க்கக் கொடுத்து வைக்க வில்லை. எப்படியாவது நம் மகனைக் கண்டு பிடித்து விடுங்கள். உங்கள் அந்திய காலமாவது அமைதியாயிருக்கட்டும்.” இறக்கும் போது மனைவி விடுத்த வேண்டுகோள் இது. இதன் பலன் தான் விளம்பரம்.

விளம்பரம் பலித்தது போலும். பிரசுரமான அன்று மாலையே பல இளைஞர்கள் அழகு மாளிகையில் கூடி விட்டார்கள். ஏராளமான சொத்தல்லவா அவர்களை அழைத்தது!

“காணாமற் போனது என் ஒரு மகன்தானே! இத்தனை பேர் வந்திருக்கிறார்களே! என்ன செய்வது?” என்று கொஞ்ச நேரம் திகைத்தார் திவான் பகதூர். அவருக்கு ஒரு முடிவு தோன்றிற்று. தன் மகன் யார் என்று கண்டு கொள்ளும் சூத்திரம் ஒன்று அவருடைய மூளையில் நுழைந்தது.

பேட்டி காண வந்திருந்த இளைஞர்களை ஒவ்வொருவராகத் தன் முன் அழைத்துப் பரிசீலித்தார்.

“உன் பெயர்?”

“ரஞ்சன்”

“தகப்பனார் பெயர்?”

“திவான் பகதூர் தீனதயாளு”

“உன் வயது?”

“சுமார் இருபத்திரண்டு”

இதைப்போல் இன்னும் எத்தனையோ கேள்விகளுக்கு எல்லாரும் ஒரே மாதிரியாகப் பதில் சொன்னார்கள். விவரம் முழுவதும் தெரிந்து ஒத்திகையோடு வந்திருந்த நடிகர்கள் தானே அத்தனை பேரும். ஆனால் ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் ஒருவரும் சரியான பதில் சொல்லவில்லை. ஒவ்வொருவன் பதில் ஒவ்வொரு தினுசாயிருந்தது.

“சரி, நீ வீட்டுச்செல்லு முன் என்ன நடந்தது”

சிலர் விழித்தார்கள். சிலர் உளறினார்கள்.

“அம்மா என்னை அடித்தாள். அதனால் ஓடினேன்”

“நீங்கள் என்னைத் திட்டினீர்களல்லவா அதனால்தான் ஓடினேன்”

"நான் கேட்ட பணத்தை நீங்கள் கொடுக்காத தால்தான் நான் கோபித்துக்கொண்டு ஓடிவிட்டேன்."

இதைப்போல், இன்னும் பல தினுசான பதில்கள். ஒன்றும் உண்மையில்லை.

எல்லாரையும் நிராகரித்து விட்டார் திவான் பகதூர். ஏமாற்றத்தோடு திரும்பினர் பலர். சில கைதேர்ந்த நடிகர்கள் மட்டும், 'கோர்ட்டுக்குப் போவேன்' என்று மிரட்டிச் சென்றனர். திவான் பகதூர் அசையவில்லை.

ஒருமாதம் இந்த மாதிரி பேட்டியும் பரிசீலனையும் நடந்தது. உண்மை ரஞ்சன் கிடைக்கவில்லை, திவான் பகதூரும் நம்பிக்கையிழந்து விட்டார்.

ஐந்தாறு மாதங்கள் ஓடிவிட்டன. ரஞ்சன் விளம்பரத்தைப்பொதுமக்கள் மறந்துவிட்டனர். ஆனால் ரஞ்சனைத் தந்தை மறக்கவில்லை. இரவு பகல் அவனை நினைத்து ஏங்கினர். என்ருவது வரமாட்டானா? எங்கேயாவது தென்பட மாட்டானா?

ஒருநாள் மாலை. இருட்ட ஆரம்பித்துவிட்டது திவான் பகதூர் இருப்புக் கொள்ளாமல் அடையாறு கடற்கரையில் ஜன நடமாட்டமேயில்லாத ஓரிடத்தில் உலாவிக் கொண்டிருந்தார், திடரென்று அவர்மேல் ஓர் இளைஞன் பாய்ந்து அவர் கழுத்தில் கத்தி முனையை வைத்தான்.

"பெரிய மனிதரே! எனக்குப் பணம் தேவை! எடும் உமது பர்சை."

இளைஞன் குரலில் அதிகாரத்தோடு ஒரு பதட்டமும் தொனித்தது. திவான் பகதூர் சாமான்யமான பயங்காளியல்ல. சமாளித்துக் கொண்டு தன் கையால் இளைஞனின் கத்தியைப் பிடித்துக் கொண்டார்.

"யார் நீ? உன் பெயர் என்ன?"

"என் பெயரைப்பற்றி என்ன கவலை? அது யாருக்குத் தெரியும். என் அப்பன் பெயர் திவான் பகதூர் தீனதயாளு. அவர் பணக்காரர். நான் பிச்சைக்காரன்......; கொள்ளைகாரன்."

"உன் தகப்பனர் பெயர் என்ன சொன்னய்?"

"திவான் பகதூர் தீனதயாளு."

"என் மகனே" என்று கட்டிக்கொள்ளலாமா என்று தோன்றியது திவான்பகதூருக்கு. ஆனல் சந்தேகம். இளைஞன் தன் மகன்தானு. இல்லை மற்றவர்களைப்போல்......

கத்தி நழுவித் தரையில் விழுந்தது.

"உன் தகப்பனர் "பணக்காரர்" என்கிருயே! நீ ஏன் அவரிடம் திரும்பிப் போகக்கூடாது?"

"அதுதானே முடியாது திரும்ப என் அப்பாவின் முகத்தைப் பார்க்க எனக்குக் கூச்சமாயிருக்கிறது."

"ஏன்!"

"வீட்டை விட்டு ஓடி வந்தவன் நான்."

திவான் பகதூருக்குத் தேவையானது கிடைத்விட்டது. அதாவது அந்தக் கேள்வியைக் கேட்க சந்தர்ப்பம்.

"சரி. நீ வீட்டைவிட்டுச் செல்லுமுன் என்ன நடந்தது,"

"சொல்ல வெட்கமாயிருக்கிறது, என் அப்பாவின் பீரோவைத் திருட்டுத்தனமாய்த் திறந்து பணம் எடுத்துக் கொண்டிருந்தேன், அவர் பார்த்துக் கொண்டே வந்து விட்டார். தப்பி ஓட முயன்றேன், ஆனல் பிடித்துக்கொண்டு விட்டார், "நீ ஏன் உன் பணத்தையே திருட வேண்டும்? பீரோவில் உள்ளதெல்லாம் உன்னுடையதுதானே, இந்தா!" என்று சொல்லி சாவியையே என்னிடம் கொடுத்துப் போய் விட்டார். பீரோப் பணத்தோடு அன்று இரவே நான் கம்பி நீட்டினேன்......"

இளைஞன் சொல்லி முடிக்கவில்லை, திவான் பகதூர் கைகள் அவனை அணைத்துக்கொண்டன,

"என் மகனே! என் கண்ணே!" என்று அவருடைய வாய் பலமுறை சொல்லிற்று,

அணைத்தபடியே அழைத்துச் சென்ருர். திவான் பகதூரின் காணுமற்போன மகன் ரஞ்சன் கிடைத்து விட்டான் என்ற செய்தி எங்கும் பரவியது, பலர் ரஞ்சனைப் பார்க்க வந்து போனர்கள். எல்லாருக்கும் ரஞ்சனை அறிமுகம் செய்து வைத்தார் திவான்பகதூர். வெகுகாலம் பழகினவன்போல எல்லோரிடையும் அளவளாவினன் ரஞ்சன். தன்பழைய கதைகளையெல்லாம் சொல்லிச் சொல்லி மகிழ்வித்தான். தன் தந்தையின் அன்பை உயர்த்திப் பேச மட்டும் தவறவில்லை.

ரஞ்சன் மீண்டதிலிருந்து அழகு மாளிகை இன்னும் அழகு பெற்று விளங்கியது. இரண்டொரு மாதங்களில் ரஞ்சன் எல்லா வட்டங்களிலும் பிரபலமானன். அவனுக்குப் பெண் கொடுக்க எத்தனையோ பேர் முன் வந்தனர்! ஒரு பெண் நிச்சயமாயிற்று. திவான் பகதூருக்கு வேறு என்ன வேண்டும்? கல்யாணம் செய்து வைத்து சொத்தையும் ஒப்படைத்து விட்டால் தான் நிம்மதியாகக் கண்ணை மூடலாம் என்ற ஆசை.

அழகு மாளிகை அல்லோலகல்லோலப்பட்டது. ரஞ்சனுடைய திருமண நிச்சயதார்த்தத்தை

ஓட்டி பெரிய விருந்து. விதவித உடையணிந்த விருந்தினர்கள் மின் விளக்கொளியில் ஜொலித்தனர். மேளவாத்தியங்கள் ஒரு பக்கம், மேடை இசை ஒரு பக்கம், பலவிதமான பேச்சுகள் பல பக்கம், எல்லாம் ஒன்று சேர்ந்து விவரம் புரியாத ஓர் இரைச்சலை எழுப்பின. திவான் பகதூரின் மனம் நிறைந்திருந்தது. தன்னுடைய பிரதாபங்களை யெல்லாம் விருந்தினருக்கு விளக்கிக்கொண்டிருந்தார்.

திடீரென்று வெளியிலிருந்து ஏதோ இரைச்சல் கேட்டது. எல்லோரும் பேச்சை நிறுத்திக் கவனித்தார்கள். திவான் பகதூரும் ரஞ்சனும் சென்று பார்த்தார்கள். திடீரென்று ரஞ்சனுடைய முகம் கறுத்தது, மறுகணம் சோகை பிடித்தது போல் வெளுத்தது.

தடுக்கும் காவலர்களைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான் ஒருவன். உடையிலும் தோற்றத்திலும் பிச்சைக்காரனைப் போலிருந்தான் அவன். லேசாகக் குடித்திருந்தான் போலும்.

"யாரிவன்?" என்றன ஒரே சமயத்தில் பல குரல்கள்.

வந்தவன் ஒன்றையும் பொருட்படுத்த வில்லை. நேராக ரஞ்சனிடம் போனான். "என்னடா! மாப்பிள்ளை! சௌக்கியமாடா?" என்று தோள் மேல் கை போட்டான். ரஞ்சன் சிரமத்துடன் விடுவித்துக்கொண்டு உள்ளே சென்று விட்டான்.

"உதை குடிகாரனை."

உதைக்கும் குத்துக்கும் குறையவில்லை. குடிகாரன் குற்றுயிராக வெளியே கொண்டு குப்பைத் தொட்டியில் தள்ளப்பட்டான். அவன் சொன்ன சொல் ஒன்று கூட யார் காதிலும் படவில்லை.

திவான் பகதூரின் முகம் அவமானத்தால் சிவந்தது. தான் இவ்வளவு கஷ்டப்பட்டு ஏற்பாடு செய்த களிப்பை ஒரு பிச்சைக்காரன் வந்து கலக்குவதென்றால்!

ரஞ்சனை சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் உள்ளே சென்றார் திவான் பகதூர். சோபாவின் சாய்மானத்தில் தலையைக் கவிழ்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான் ரஞ்சன்.

“அந்தப் பிச்சைக்காரப்பயலை அடித்துத் துரத்திவிட்டேன்......வா......வேறு உடை தருகிறேன்...”

“என்ன துரத்திவிட்டீர்களா?......”

ரஞ்சனுடைய உதடுகள் நடுங்கின. திவான் பகதூரின் முகத்தைப் பார்த்துக்கொண்டே தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான்.

“அவனைத் துரத்தி விட்டீர்களா? அவன் யாரென்று தெரிந்திருந்தால்......”

“யாரவன்?”

பதில் சொல்லாமல் தேம்பினான் ரஞ்சன்.

“யாரவன் சொல்......சொல்லமாட்டாயா?

“தங்...கள்...ம...க...ன்...ர...ஞ்...ச...ன்

தேம்பலுக்கிடையே வெடித்து வெடித்து வந்தன இந்த வார்த்தைகள்.

திவான் பகதூரின் வாட்டசாட்டமான உடல் நடுங்கிற்று.

“அப்படியானால்...நீ?”

“நான்...ஏழை, அநாதை. தங்கள் வீட்டில் வேலை செய்து வந்த நீலன். ரஞ்சனைப் பணத்தைத் திருடத் தூண்டியவன் நான். வீட்டை விட்டு அழைத்துச் சென்றவன் நான். அவன் கொண்டுவந்த பணத்தைச்சூறையிட்டவன் நான். கொஞ்ச காலத்தில் பசியிலும் பட்டினியிலும் இருவரும் பிரிந்துவிட்டோம். ரஞ்சன் இறந்துவிட்டதாகவே நான் எண்ணியிருந்தேன். தங்களுடைய விளம்பரமும் தொடர்ந்த ஏமாற்றமும் என் மனதில் ஒரு தகாத ஆசையை எழுப்பின. கடற்கரைக்குத் தங்களைத் தொடர்ந்தேன். ரஞ்சனாக நடித்தேன். தங்கள் அன்பைப் பெற்றேன். தங்களையே என் தந்தையாகக் கருதியும் விட்டேன்...”

மலைத்து நின்றார் திவான் பகதூர்.

“தங்கள் அன்புக்கு நான் பாத்திரனல்ல...”

நீலன் தடால் என்று திவான் பகதூரின் காலில் விழுந்து அவர் பாதங்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டான். திகைத்து நின்ற திவான் பகதூரும் மற்றவர்களும் சமாளிப்பதற்குள் விர்ரென்று விரைந்துவிட்டான் வெளியே.

“போகாதே! நில்!” என்று அலறிற்று திவான் பகதூரின் குரல்.

அவரும் இறங்கி ஓடினார்.

“ரஞ்சன்! நீலன்!... இருவரும் என் மகன்கள் தாம்...ரஞ்சன்!...நீலன்!... ரஞ்சன்!... நீலன்!...

நடு நிசியில் அவருடைய குரல் எங்கும் எதிரொலித்தது. ஆனால் ரஞ்சனோ நீலனோ பதில் கொடுக்கவில்லை.

எமது புதிய ஏஜண்டுகள்:

S. M. அனிபா
நியூஸ் ஏஜண்டு
ரயில்வே ரோடு
பாபநாசம்
(தஞ்சை ஜில்லா)

N. M. பாலகிருஷ்ணன்
ஜெனரல் மர்ச்செண்ட்
சாவடிகடைத் தெரு
அய்யம்பேட்டை
(தஞ்சை ஜில்லா)

தொழில் துணுக்குகள்

விசால்தேவ்

(இப் பகுதியில் வெளிவரும் துணுக்குகள் குறித்து விளக்கமோ அதிக விவரமோ வேண்டும் அன்பர்கள் துணுக்கு வெளியாகி மூன்றுமாத காலத்துக்குள் எங்களுக்கு எழுதவேண்டுகிறோம். அதிககாலம் கடந்து வரும் கடிதங்களுக்கு காலதாமதமாகவே பதிலும் கிடைக்கும்.)

கண்ணாடியில் ஓவியம்

கண்ணாடியில் ஓவியமோ எழுத்தோ எழுதும் தொழில் பெண்களும் மாணவர்களும் சுலபமாக ஏற்று நடத்தக்கூடிய ஒரு தொழிலாகும். இதை நடத்த அதிக முதல் எதுவும் தேவையில்லை. சாதனங்களும் அதிகமாக வேண்டியதில்லை. கீழ் கண்ட சாதனங்கள் இதை நடத்தப் போதுமானவை.

(1) பல அளவிலான கண்ணாடிகள்

(2) புருசு நம்பர் 1 லிருந்து 6 வரை 6 புருசுகள்

(3) சாயங்கலக்கப் பாத்திரங்கள்

(4) கருமை, வெண்மை, பச்சை, மஞ்சள், நீலம் போன்று வேண்டிய வர்ணங்களில் எண்ணெய்ச் சாயங்கள் (oil colours) வெள்ளி தங்கப் பொடிகள்

(5) சாயம் கலக்க வார்னிஷ்

(6) சாதாரண மரச்சட்டங்கள்

(7) பேஸ் போர்டு (Base Board) கெட்டி அட்டை.

மேலேகண்ட சாதனங்களைச் சுலபமாகச் சேகரித்துக் கொள்ளலாம். வார்னிஷைக் கடைகளில் வாங்காமல் சொந்தமாகவும் தயாரித்துக் கொள்ளலாம். இதற்கு ஒரு அவுன்ஸ் குந்திரிகத்தை ஒரு பாத்திரத்தில் போட்டு அடுப்பேற்றி உருக்கவேண்டும். நன்கு உருகியபின் அடுப்பை விட்டிறக்கி சற்று குளிர்ந்தவுடன் அதோடு டர்ப்பன்டைன் சேர்த்து குழம்புபோல் கலக்கிக் கொள்ளவேண்டும். இக்குழம்போடு தேவையான வர்ணச் சாயத்தைப் பிறகு கலந்து கொள்ளலாம். இந்த வர்ணச் சாயத்தில்தான் எழுத்துக்கள் அல்லது ஓவியங்கள் வரையவேண்டும்.

வரையும் முறை: எழுதவேண்டிய எழுத்து அல்லது ஓவியத்தை கண்ணாடியின் முன் பக்கம் முதலில் எழுதவேண்டும். வார்னிஷால் இவ்விதம் எழுதலாம். காகிதத்தில் வரைந்தும் அதை கண்ணாடியின் மேல் ஒட்டலாம். இவ்விதம் செய்து கண்ணாடியை பின் பக்கமாகத் திருப்பிப் பார்த்தால் ஓவியம் எழுத்து எல்லாமே தலை மாருகத் தெரியும். அப்பொழுது அங்கே தெரிகிறபடி எழுத்துக்கள் ஓவியங்களை வார்னிஷில் தலைமாருகக் கண்ணாடியின் பின்பக்கம் தீட்டவேண்டும். இப்படித் தீட்டி முடிந்த எழுத்தும் ஓவியமும் நன்கு உலர்ந்த அப்பக்கம் முழுவதும் பொருத்தமான ground paint ஐப் பூசிவிடவேண்டும். பிறகு அது உலர்ந்ததும் அதன் மேல் கறுப்பு பெயிண்ட் பூசவேண்டும். அதுவும் உலர்ந்ததும் கண்ணாடியைத் திருப்பி முன் பக்கமாக எழுதிய எழுத்து, ஓவியம் முதலியவைகளை போக்கிவிட வேண்டும். காகிதம் ஒட்டி இருந்தால் நீரில் நனைத்த துணியால் போக்கிவிடலாம். வார்னிஷால் எழுதியிருந்தால் மண்எண்ணெய் நனைத்த துணியால் துடைத்துப் போக்கிவிடலாம். இப்படி போக்கியதும் பின்பக்கம் அட்டையை வைத்து சட்டங்களை ஓரங்களில் வைத்து சாதாரணப் படங்களுக்கு பிரேம் போடுவது போல் போட்டு விற்பனைக்கு அனுப்பலாம். தலைவர்கள் தெய்வங்களின் படங்கள், நீதிவாக்கியங்கள், 'வணக்கம், நல்வரவு, கடனில்லை, ஞாயிறு விடுமுறை, போன்ற வாக்கியங்களை இவ்விதம் எழுதி பிரேம் போட்டு விற்கலாம். நல்ல லாபம் கிடைக்கும்.

கமலா விதை எண்ணெய்

கமலா ஆரஞ்சு நம் பக்கங்களில் ஏராளமாக விளைகிறது. அதன் விதையிலிருந்து பெட்ரோலியம், ஈத்தர், ஹெக்சேன்

அல்லது பென்ஸீனின் உதவியால் ஒரு வகை எண்ணெய் பிரித்தெடுக்கலாம். அவ் எண்ணெய் இருண்ட கத்தைக்காம்பு நிறத்திலிருக்கும் இப்படிப் பிரித்தெடுக்கு முன் விதைகளை சுமார் அரைமணி நேரம் காஸ்டிக் சோடா, சோடியம் கார்பனேட், சுண்ணும்பு, பேரியம் ஹைட்ராக்ஸைடு அல்லது சோடியம் சிலிகேட் 0·5–2·0% கலந்த தண்ணீரில் ஊறப்போட வேண்டும். பிறகு அவற்றை வெளியே எடுத்துக் கழுவிச் சுத்தமாக்கி வெயிலில் காயப்போட வேண்டும். காய்ந்த பிறகு அரைத்து முதலில் கூறிய இரசாயனப் பொருள் களில் ஏதாவதொன்றின் உதவியால் எண்ணெயைப் பிரித்தெடுக்கலாம். இவ் எண்ணெய் பெயின்ட் வார்னிஷ் தயாரிக்கப் பயன்படும்.

சிறு செமண்ட் தொழிற்சாலை

நாட்டின் எல்லா பகுதியிலும் செமண்டுக்கு இப்பொழுது கிராக்கி இருந்து வருகிறது. இதை உற்பத்திச் செய்யப் பிரதானமாகத் தேவைப்படும் சுண்ணும்புக் கல்லும் நாட்டின் எல்லா பகுதியிலும் கிடைக்கிறது. ஆகையால் அவற்றைப் பயன்படுத்தி அவ்அவ் இடங்களின் தேவைகளை அந்த அந்த இடங்களிலேயே சரி கட்டிக் கொள்ளலாம். செமண்ட் விலையும் மலிவாகும். பெரிய பெரிய தொழிற்சாலைகளின் உற்பத்தியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். ஆனுல் சிறு அளவில் செமண்ட் உற்பத்தி செய்வது லாபகரமல்ல. அதற்கு வேண்டிய இயந்திர சாதனங்களும் கிடைக்காது என்ற நிலை இப்பொழுது இருந்து வருகிறது. ஆனுல் சமீபத்தில் பரோடாவில் உள்ள மஹாராஜா சயாஜிராவ் சர்வகலாசாலையைச் (Maharaja Sayaji Rao University) சேர்ந்த புரபசர் ஸி. எச். காடில்கர் (Prof: C. H. Khadilkar) என்பவர் சிறு அளவில் மிகவும் லாபகரமாக செமண்ட் உற்பத்தி செய்யும் முறை ஒன்றைக் கண்டறிந்துள்ளார். அவர் கண்டறிந்துள்ள சூளையின் சக்தி அதிகம். ஆனுல் எரிபொருள் குறைவாக தேவைப்படும். சரக்கும் ஒரேவிதமான நயத்துடன் தயாராகிறது. இதில் மற்ருெரு தனிச்சிறப்பும் உண்டு. திடீரென வேண்டியபோது வேலையை நிறுத்தலாம், துவக்கலாம். அதனுல் செமண்டின் தரம் கெட்டுப் போகாது.

இச்சூளையில் சுமார் 500°செ. வெப்பநிலையில் செமண்ட் தயாராகிறது. வெளியில் வரும்போது செமண்டின் வெப்பநிலை 100° செ. இருக்கும். தூசி அதிகமாக உற்பத்தியாவதில்லை. ஒருகன மீட்டர் செமண்டுக்கு அரை கிராம் தூசிதான் உற்பத்தியாகிறது.

கச்சாப் பொருள்களை சரியான முறையில் பக்குவப்படுத்தி இச்சூளையில் போட்டால் தான் அதிகமாகவும் நயமாகவும் செமண்ட் தயாராகும். கச்சாப் பொருள்களில் சிலிகாவைவிட அலுமினியமும் இரும்பும் அதிக அளவில் அடங்கி இருத்தல் நல்லது. அப்படி அவை குறைவாக இருந்தாலும் அவற்றின் அளவைக் கூட்டுவதற்காகக் கச்சாப் பொருளோடு அலுமினியத்திற்காக பாக்சைட் களிமண்ணும், இரும்புக்காக இரும்புகனியும் (Iron ore) சேர்த்துக் கொள்ளலாம். சிலிகாவின் அம்சம் 1·8—2·5%; அலுமினுவின் அம்சம் 1·2—1·8%; இரும்பின் அம்சம் 0·95—1·00% அடங்கியுள்ள சுண்ணும்பு கற்களே இதற்குச் சிறந்தவை.

இவ்விதம் வருடம் 4000 டன் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலை ஒன்றை அமைக்க ஆறுலட்சம் ரூபாயாகும். வருடம் பூராவும் தொழிற்சாலையை ஓட்ட 16000 ரூபாய் பிடிக்கும். இவ்விதம் உற்பத்தி செய்யப்படும் செமண்டின் விலை அடக்கம் டன் 40 ரூபாயாகும். ஜில்லா அல்லது தாலூகா ஒவ்வொன்றிலும் இவ்வித தொழிற்சாலை ஒன்று நிறுவினுல் செமண்ட் டன் 42—45 ரூபாய்க்கு விற்கலாம்.

உ. பி. யில் செயற்கை ரப்பர் தொழிற்சாலை

உத்தரப்பிரதேசத்தில் சக்தி சாராயம் (Power Alcohol) உற்பத்தி செய்யும் 16 தொழிற்சாலைகள் இப்பொழுது உள்ளன. இத் தொழிற்சாலைகளின் உற்பத்தியைப் பெருக்கமட்டுமன்றி புதிதாக மேலும் 4 தொழிற்சாலைகள் அங்கே ஆரம்பிக்க இந்திய அரசாங்கம் இப்பொழுது அனுமதி வழங்கி இருக்கிறது. இப்புதிய தொழிற்சாலைகள் மோதிநகர், மனுர்நகர், சசோரா ஆகிய இடங்களில் அமைக்கப்படும். 1959 இறுதிக்குள் இப்பொழுதுள்ள வருட உற்பத்தி அளவான 1480 லட்சம் காலன் 1800 லட்சம் காலனுக அதிகரித்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சக்தி சாராயம் அனைத்தும் சக்தி உற்பத்திக்காகப் பயன்படுவதில்லை. ஆகையால் எஞ்சும் சாராயத்தை செயற்கை ரப்பராக மாற்ற தொழிற்சாலை ஒன்று

பொழுது புலர்கிறது—
வீட்டில் பரபரப்பு
அடுப்பு மூட்டப்படுகிறது
பள்ளிக்குப் போகும்
குழந்தைகளுக்கு
ஆடைகள் அணிவிக்கப்
படுகின்றன.
ஆபீஸுக்குக் கொண்டு
போக டிபன் பாக்ஸ்
தயாரிக்கப்படுகிறது.
பரபரப்பு ஓய்கிறது.
இப்பொழுது இல்லாள்
உற்சாகமூட்டும் ஒரு
கப் டீ அருந்தி சிரம
பரிகாரம் செய்து
கொள்ளலாம்!

நான்தான் டீ

நான் குடும்பத்தின் நண்பன்



TEA BOARD INDIA

BST 213

அங்கு அமைக்கப்படவிருக்கிறது. இத்தொழிற் சாலையை ஆரம்பிக்கவும் இந்திய அரசாங்கம் அனுமதியளித்துவிட்டது.

நம் தென்னாட்டில் இப்பொழுது சர்க்கரைத் தொழிற்சாலைகளில் பெரும்பாலும் வீணாகிவரும் மொலாஸஸிலிருந்து சக்தி சாராயம் தயாரிக்கலாம். முயற்சி வேண்டும்.

தானே இயங்கும் பம்ப் செட்

இமயத்தில் பத்ரிநாராயணம் செல்லும் வழியில் ருத்ர பிரயாகை என்னும் ஓர் அழகிய ஊர் இருக்கிறது. அந்த ஊரிலிருந்துதான் கேதார்நாத்துக்கு போகிறவர்கள் தனிவழியே பிரிந்து செல்லவேண்டும். அவ்வூரில் உள்ள அரசாங்கப்பள்ளியின் ஆசிரியரான ஸ்ரீ மஹேஸ்வரிதத்த டிம்ரி (Sri Maheswari Datta Dimri) என்பவர் நூதனமான பம்ப் செட் ஒன்றைத் தயாரித்துள்ளார். இது தானே இயங்கக்கூடியது. 36 அடி உயரம் வரை இப்பொழுது தண்ணீரை இரைக்கிறது. 1000 அடி உயரம் வரை இரைக்கும்படி இதை அமைக்கலாம் என அவர் சொல்லுகிறார். ஜில்லா கலெக்டர் இக் கண்டுபிடிப்புக்காக டிம்ரிக்கு ரூ. 2000 பரிசு ஒன்றும் சமீபத்தில் வழங்கியுள்ளார்.

மீன் மாவு தயாரிக்கும் மெஷின்

மண்டபத்தில் உள்ள மத்திய மீன் ஆராய்ச்சி நிலையத்தில் குடிசைத் தொழில்முறையில் மீன் மாவு தயாரிக்கும் மெஷின் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். இதன் விலை சுமார் 500 ரூபாய்தானாகும். மீன் எண்ணெய் தயாரிக்கும் மெஷின் ஒன்றை கல்கத்தாவில் உள்ள மீன்தொழில் ஆராய்ச்சி நிலையம் (Fisheries Technological Laboratory) கண்டுபிடித்துள்ளது. இத்துறையில் ஆர்வமுள்ள படித்த இளைஞர்கள் மேற்படி தொழில்களை மேற்கொண்டு நடத்த இம்மெஷின்கள் உதவியாக இருக்கும். அதிக விவரங்கள் வேண்டுவோர் மேற்படி ஆராய்ச்சி நிலையங்களுக்கு நேரில் சென்றோ அல்லது எழுதியோ தெரிந்து கொள்ளலாம்.

நீங்கள் கேட்டவை.

(1) நுரைக்கும் ஸ்நானப் பவுடர் தயாரிக்கத் தாங்கள் கூறும் சாபொனின், சோடியம் லாரைல் சல்பேட் எங்கே கிடைக்கும்.

—சுப்பையா, அடிசனல் செஷன்ஸ் கோர்ட், திருநெல்வேலி.

கீழ் கண்ட விலாசங்களுக்கு எழுதவும்.

(1) H. Chandanmall & Co,
97, Nainiappa Naick Street,
P. T. Madras 3.

(2) Bengal Chemical Co.
Broadway
Madras 1.

(2) நாடா தொழிலைப் பற்றிய விவரங்கள்.

வெ. கிருஷ்ணன், திருநெல்வேலி.

(1) மின்சாரசக்தி அவசியமில்லை. மின்சாரமில்லாத இடங்களிலும் நடத்தலாம்.

(2) தறி நெய்வதில் அநுபவமிருந்தால் நல்லது உள்ளூர் நெசவாளர்களிடம் சுலபமாக அநுபவம் பெற்றுக்கொள்ளலாம். தனிப் பயிற்சி எதுவும் தேவையில்லை.

(3) & (4) கீழ் கண்ட கல்கத்தா கம்பெனி இத்தறியை கண்டுபிடித்துத் தயாரித்து விற்கிறது. Tape, Newar, Duster, Towel loom என இதற்குப் பெயர். விலை சுமார் நூறு ரூபாய்தானாகும். அதை இயக்கும் விவரங்களை அவர்களிடமிருந்தே தெரிந்துகொள்ளலாம். அக் கம்பெனியின் முழு விலாசம் இதுதான்.

M/s. Oriental Machinery Supplying
Agency Ltd.
P12 Mission Row Extension,
Calcutta.

சலனம்...!
"அசென்ராஜ்"

"அத்தான்...!"

"உம்..."

"வானத்தைப் பார்த்தீர்களா?"

"என்ன?"

"வானவில்...! எத்தனை அற்புதமாயிருக்கிறது!"

"உம்..."

"மழைக் கடவுளைத் தடை செய்ய இந்திரன் வளைத்த வில் தானே அது?"

"அப்படித்தான் சிறு குழந்தைகள் சொல்லிக் கொள்ளும்!"

"வான் தரையில் இயற்கை வரைந்த அந்த சப்தவர்ணக் கோலத்தைப் பார்த்தால் என்ன தோன்றுகிறது தெரியுமா?"

"ஊஹூம்...?"

சூல்கொண்ட முகில் குமரிக்கு அமரர்கள் வழங்கிய பட்டாடை போல் தோன்றுகிறது?"

"உன் கன்னக் கதுப்பில் என் உதடுகள் பதித்த கடத்தில் குமிழிடும் வர்ணச் சிதறலின் பிரதிபலிப்புப் போல் தோன்றுகிறது!"

"ஹூக்கும், குறும்பு!"

"இல்லை, கண்ணே... இதோ, பாரேன்!"

"போதும், அத்தான், போதும்... மூச்சுத் திணறுகிறது. விடுங்கள், அத்தான்..."

"ஊஹூம், வர்ணவில்லை வானம் விட்டுவிட விரும்புமா?"

"அத்தான், வானவில் எத்தனை அழகாயிருக்கிறது!"

"மனிதன் கைக் கெட்டாத உயரத்தில் உள்ள எதுவுமே எழில் குன்றுமல் விளங்குவதில் விந்தையொன்றுமில்லையே!"

"உண்மை, அத்தான். மனிதன் கைக்குள் சிக்கிய எந்தப் பொருளும் விரைவில் எழில் மங்கி விடுகிறது..."

"வானத்தில் அந்தவர்ணவில் தோன்றக்காரணமென்ன தெரியுமா?"

"ஊஹூம்..."

"விஞ்ஞானிகள் சொல்கிருர்கள்..."

"அவர்களைத் தள்ளுங்கள். பூர்ணமாய் எதையும் காணப்பொறுக்காமல் வகிர்ந்து ஆராய்வதில் உயிர்நிலையையே அழித்துவிடுகிருர்கள். கவிஞர் என்ன சொல்கிருர்களென்று சொல்லுங்கள்..."

"கவிஞர்களா...? கந்தர்வ கன்னியின் கால் சிலம்பு, அமரலோக சுந்தரியின் உடைந்த வளையல் துண்டு, இப்படி யென்னவெல்லாமோ சொல்வார்கள்..."

"அத்தான்... இப்படி உங்கள் தோளில் சாய்ந்திருந்தாலே சொர்க்கத்தை உணர்கிறேன்."

"இந்தக் காட்சி வானத்தில் வர்ணவில் வளைந்து கிடப்பதைப்போல் தோன்றுகிறது... இல்லையா?"

"அத்தான்... குளிர்காற்று வீசுகிறதே! வாடை யடிக்கவில்லையா?"

"என் இல்லை? சரி, உள்ளே போகலாம் வா. இன்னும் மழை வேறு வருகிறுற்போலிருக்கிறது."

"வரட்டும்...வரட்டும்"

"உடம்புக்கு ஒத்துக்கொள்ளாதே!"

"உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்யுமே!"

"வேண்டாம், கண்ணே!"

"ஊஹூம், இந்த மொட்டை மாடியைவிட்டு நான் வரமாட்டேன். தூற்றலில் நனைந்து கொண்டே கனவு காண ஆசை..."

"ஓ...ஓ...மழை பெரிதாய்ப் பிடித்துக்கொண்டு விட்டதே. அப்பப்பா, எப்படிச் 'சளீர்' 'சளீர்' என்று அடிக்கிறது. உனக்கு வலிக்கவில்லையா?"

"ஊஹூம்... பனிக்கட்டியைச் சிதறியடிப்பது போலல்லவா இருக்கிறது. உதடுகளில் படும் போது உள்ளமே கூத்தாடவில்லையா?"

"உன் உதட்டிலே பட்டுத் தெறிக்கும் பனித்துளிகள் என் உள்ளத்தில் என்னென்னவோ ஆசைகளை முளைவிடச் செய்கிறது."

"உம்... இருக்கும்..."

"அன்பே, உன் அதரங்கள்..."

"என் அதரங்களுக்கு என்னவாம்?"

"முத்துப் பேழையின் அந்தப் பொற் கதவுகளின் முனையில் துடித்து நிற்கும் நீர்த்துளிகளைப் பருகவேண்டுமென்று துடிக்கிறது உள்ளம்..."

"எனக்கும்...?"

"உனக்கும்...? சொல்லு..."

"சொல்லித்தான் புரியவேண்டுமோ?"

"இல்லை, சொன்னல் சுவையேறுமே!"

"நான் சொல்லமாட்டேன்..."

"வேண்டாம். நான் புரிந்துகொண்டதைக் காட்டுகிறேன் பாரேன்..."

"போதும், என்ன இது? விலகுங்கள்!"

"என் தாகம் தீரவில்லையே!"

"அதற்கு எங்காவது குளத்தைத் தேடிப்போங்கள்..."

"இந்தத் தேனூற்றை விட்டுவிட்டா... முடியாது..."

"போதும், அத்தான். உங்கள் உதடுகள் சிவந்துவிட்டன, அந்திவானத்தைப்போல்!"

"உன் உதடுகள் வெளுத்துவிட்டன, மழை பெய்து தீர்த்த வானத்தைப் போல்!"

"ஹுக்கும், நீரை வழங்கியபின் மேகம் வெளி றித்தானே போகும்?... கொண்டதற்கு நன்றி கூடக்கூறத் தெரியவில்லை...?"

"என்றும் தானம் வழங்கப்பிறந்தவர்கள் நீங் கள்; தானம் வாங்கப் பிறந்தவர்கள் நாங்கள்; இதில் நன்றி யென்ன வேண்டிக்கிடக்கிறது?"

"இப்படியே எங்களைக்காலமெல்லாம் ஏமாற்று வதே உங்கள் தொழில்...ஹுக்கும்..."

"அன்பே, ஏன் திடீரென்று விழிகளை மூடிக் கொண்டு விட்டாய்?...வெட்கமா?

"மின்னல் எத்தனை பயங்கரமாய்ச் சுழற்றி யடிக்கிறது?"

"இருளின் மீது விழும் சாட்டையடிகள் பயங் கரமாயில்லாமல் எப்படியிருக்குமாம்?"

"உங்களுக்குப் பயமாயில்லையா?"

"ஊ...ஊஹும்... உன் விழி வீச்சைக்கண்டு பழகியவனாயிற்றே!"

"எனக்குப் பயமாயிருக்கிறது!"

"நீ ஒரு கோழை..."

"அதனால் தானே உங்கள் அடிமைகளாய் யுக யுகாந்தரமாய் நாங்கள் வாழ்கிறோம்."

"என் ஆசைக்குரியவளே, உன் விழிகளில் மறைந்து கிடக்கும் ஒளிப் புதையலைத்தான் மின்னல் தேடித் திரிகிறதோ?"

"அத்தான், மின்னலை நேராகப் பார்க்காதீர் கள். கண்ணைப் பறித்துவிடும்......"

"இந்தக் கண்கள் போனால்தானென்ன? நீ தான் என் ஒளிமங்கா விழிகளாயிற்றே!"

"இருந்தாலும்......"

"குருடனோடு வாழ முடியாதென்று யோசிக் கிறாயா?"

"அப்படியெல்லாம் பேசாதீர்கள்.

"சொற்கள் சுட்டுவிடுமா, என்ன? சரி, சரி, பேசவில்லை. கையை எடு..."

"அத்தான், என்னபயங்கரமான இடியோசை!"

"'அர்ச்சுனா', 'அர்ச்சுனா' என்று சொல்லு!"

"எதற்காம்...?"

"சிறு குழந்தைகள் அப்படித்தானே சொல்லிக் கொள்ளும்?"

"அதோ... அதோ பாருங்கள்... மேகத்தைத் துண்டாடிப் பாய்ந்து செல்கிறதே ஒரு மின் னல்!... ஆ, ஐயோ, அத்தான்,... என்ன இது திடீரென்று எங்கும் ஒரே இருள்...! அத்தான், எங்கு போய்விட்டீர்கள்...?"

"இதோ வந்துவிட்டேன். உள்ளே போய் ஒரு துண்டை எடுத்து வந்தேன். நீ எவ்வளவு நனைந்துவிட்டாய்?..."

"ஐயோ, அத்தான், நீங்கள் எங்கேயிருக்கிறீர் கள்..? எனக்கொன்றும் தெரியவில்லையே?"

"ஆ, என்ன சொல்கிறாய்? ஒன்றுமே தெரிய வில்லையா?"

"ஆமாம், அத்தான் ஒன்றும் தெரியவில்லை... உங்கள் முகம்... எழிலுருவம்... வையம்... வானம்... மின்னல்—எதுவுமே தெரியவில்லையே. நான் என்ன செய்வேன்... ஐயோ, அத்தான், என் கண்கள்..."

"என்னைக் கொன்றுவிட்டாயே! நான் இனி எப்படி நடமாடுவேன். ஒரு நொடியில் எத்த னையோ விபரீதங்கள் நடந்துவிட்டதே! கண்ணே கண்ணே... என்னை விலக்கிவிட்டு நீ பலியாகி விட்டாயே! என் வாழ்வு வானத்தின் வர்ண வில் அதற்குள் மறைந்துவிட்டதா? என் கனவு களெல்லாம் நொடியில் கருகிச் சாம்பலாகிவிட் டனவா? என் கண்களை இழந்து விட்டேனா?... அன்பே, சொற்கள் சுட்டுவிடுவதுமுண்டோ?"

"அத்தான், அந்த மின்னல்..."

"மறைந்துவிட்டதே!"

"எனக்குப் பயமாயிருக்கிறது..."

"......?......?"

* * *

"அத்தான், இப்பொழுது மணி என்ன?

"ஐந்தாகிறது"

"என்னை மொட்டை மாடிக்கு அழைத்துச் செல்லமாட்டீர்களா?"

"அப்படியே, கண்ணே!"

"அத்தான், வானவில் தோன்றியிருக்கிறதா?"

"இனிமேல் தோன்றவே செய்யாது."

"மேகங்கள்...?"

"கூடி நிற்கின்றன"

"மழை கொட்டுமே?"

"பெய்யத்துவங்கும் வரை நிற்கலாம்."

"வேண்டாம், அத்தான், உள்ளே போய் விடுவோம். மீண்டும் அந்த மின்னல்...... உங்களுக்கும்...? வேண்டாம், அந்த விஷச் சோதனை; நாம் உள்ளேயே போய் விடுவோம்."

"சரி, உன்னிஷ்டம்!"

* * * *

"அத்தான்."

"என்ன வேண்டும், கண்ணே?"

"நீங்கள் சாப்பிட்டாய் விட்டதா?"

"இனி மேல்தான். முதலில் நீ சாப்பிடு!"

"அத்தான், இப்படி எனக்கு ஊட்டிக்கொண் டிருந்தால் உங்களுக்குப் பசிக்காதா? என்ன?"

செல்லம் அழுதது ஏன்?

பிற்பகல் வேளை; பித்தான்கள் உடைந்து காலரிலும் கைகளிலும் கிழிந்திருந்த என் கணவரின் சட்டைகளை நான் தைத்துக்கொண்டிருந்தேன். அதே சமயம் பக்கத்து வீட்டுப் பப்பியுடன் விளையாடிக் கொண்டிருந்த என் குழந்தை செல்லம் திடீரென வீரிட்டு அழுதாள்; அந்த அதிர்ச்சியில் தையல் ஊசியே என் கையில் ஏறிவிட்டது. கோபத்துடன் திண்ணைக்கு ஓடி வந்தேன். அதே சமயம், பப்பியின் தாயார் கண்ணம்மாவும் அங்கு ஓடி வந்து செல்லத்தை வாரியெடுத்து சமாதானம் செய்ய முயன்றாள்: "ஆரு அடிச்சாம்மா என் செல்லக் குழந்தையை?"

"மாமி, ப...ப...பப்பி என் பொம்மயோட கவுனை அழுக்காக்கிட்டா, மாமி!" என்று விசித்து விசித்துக் கூறினாள் செல்லம்.

"அவ்வளவுதானே. பப்பியை நாம்ப நல்லா அடிச்சுட்டு உன் பொம்மைக்குப் புதுசா ஒரு கவுன் வாங்கிப் போட்டுடலாம். வா!" என்று தேற்றிவிட்டு, இரு குழந்தைகளையும் தன்னோடு அழைத்துச் சென்றாள் கண்ணம்மா. கண்ணம்மாவிடம் காணப்படும் தங்கமான குணங்களில் ஒன்று, தன் குழந்தைகளைப் போலவே பிறர் குழந்தைகளையும் அரவணைத்துக்கொள்ளும் தன்மை. தன் தந்தை பணக்காரர் என்ற கர்வம் எள்ளளவும் அவளிடம் கிடையாது.-இவ்வாறாக எண்ணமிட்ட

S. 258A-X52 TM

வண்ணம் அப்படியே கண்ணயர்ந்துவிட்டேன். அப்புறம் செல்லம் வந்து என்னை எழுப்பினாள். கண்விழித்துப் பார்த்ததும், செல்லத்தின் கையிலிருந்த பொம்மைக்குப் புதுக் கவுன் போட்டிருந்தது தென்பட்டது— முன்பிருந்ததைப் போலவே இருந்தது இந்தக் கவுனும். இந்த ஏற்பாடு எனக்குப் பிடிக்கவில்லை. இதை ஆட்சேபிக்கக் கண்ணம்மாவின் வீட்டுக்கே சென்றேன்.

கண்ணம்மாவோ, "புதிதாகக் கவுன் ஏதும் வாங்கவில்லையே. சில துணிகளை நான் துவைக்க வேண்டியிருந்து, கையோடு கையாக அந்தக் கவுனையும் அலசினேன்" என்றாள். அழகாயிருக்கிறதே பேச்சு! வீட்டில் துணிகளைத் துவைத்துக்கொள்ளும் வழக்கம் எங்களுக்கே கிடையாது: சலவை செய்ய வெளியே அனுப்புகிறோம். அப்படியிருக்க, மோதிரக் கையினால் துணி துவைப்பதாகக் கூறினால், நம்புகிறவள் நானா? "அதெப்படியம்மா துவைத்தீர்கள், அடித்துத் துவைக்கும் சத்தங்கூடக் கேட்காமல்?" என்றேன். "என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் இதோ இந்தத் துணிகளைப் பாருங்கள். இப்போதுதான் இஸ்திரி போட்டு முடித்தேன். ஆனால், அடித்துத் துவைக்கும் சத்தம் கேட்காத காரணம்........."

ஆனால் என் கவனமோ அவள் பேச்சில் லயிக்கவில்லை. வெகு பளிச்சென்று சுத்தமாக விளங்கிய அந்தத் துணிகள் மீது என் பார்வையைப் பறிகொடுத்துவிட்டேன். எனினும், அதே சமயம் என் மனதை உறுத்திய விஷயம் வேறொன்று. தன் செய்கையைப்பற்றி நாலு பேர் என்ன நினைப்பார்கள் என்பதை யோசித்துப் பார்த்தாளா இவள்? இதையே நான் இவளிடம் கேட்டதும், அவள் சிரித்துவிட்டு, "நல்ல கேள்வி கேட்டாய். என் வேலையை செய்வதற்கு நான் ஏன் கூச்சப்படவேண்டும்? தாம் தூம் விவகாரமே எனக்குப் பிடிப்பதில்லை. என் கையாலேயே நான் துணிகளைத் துவைத்துக்கொள்வதில் எவ்வளவோ சிக்கனமிருக்கிறது. அன்றாடம் உடுத்திக்கொள்ள சுத்தமான துணிகள் கிடைப்பதோடு அவை நீடித்து நிற்கவும் செய்கின்றன" என்றாள்.



"நீடித்து உழைக்கிறதாவது; அதென்னமாக? எங்கள் வீட்டுத் துணிகள் விறுவிறுவென்று கிழிந்துவிடுவதும் வாங்கின சுருக்கோடு விட்டுப்போய் விடுவதும் சர்வசாதாரணமாகிவிட்டன. வருஷத்துக்குப் பல தடவை புதுத்துணிகள் வாங்கி மாளவில்லை!"

"அடித்துத் துவைப்பதால்தான் அவை கிழிந்துவிடுகின்றன. ஆனால் நாங்களோ அடித்துத் துவைக்காமல் ஸன்லைட் சோப்பினால் சலவை செய்கிறோம்."

பரிசுத்தமுள்ள சிறந்த சோப்பான ஸன்லைட் ஏராளமான நுரை கொழிக்கிறது என்றும், கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலுமுள்ள எல்லா அழுக்குகளையும் நொடிப்பொழுதில் அகற்றிவிடும் நுரை அதனுடையதுதான் என்றும் விளக்கிக் கூறினாள் கண்ணம்மா.

இப்போதெல்லாம் நாலுபேர் நினைப்பதைப்பற்றி நானும் அக்கரைப்படுவதில்லை. துணிகளை வீட்டிலேயே ஸன்லைட் சோப்பினால் சலவை செய்துவிடுகிறேன். அது சிக்கனமான சோப் என்றும், சிறிதும் பெரிதுமாக சுமார் நாற்பதைம்பது உருப்படிகளைச் சுத்தமாகவும் பளிச்சென்றும் வெளுப்பதற்கு ஒரே ஒரு வில்லை ஸன்லைட்டே போதுமானது என்றும் கண்டு கொண்டேன். இப்போதெல்லாம் தினசரி உடுத்துவதற்குத் தூய்மையான துணிகள் எங்களெல்லோருக்கும் கிடைத்துவருகின்றன. கிழிசல்கள் தைக்கப்பட்ட ஆடைகளை அணிந்துகொள்ளும் நிலைமையும், காலர்களையும் கைகளையும் கோட்டுக்குள் மறைத்துக்கொள்ளும் அவசியமும் இனி என் கணவருக்குக் கிடையாது. சிக்கனம் என்றால் எல்லா விதத்திலும் சிக்கனம். ஒரு குடும்பப் பெண்மணிக்கு இதைவிட வேறென்ன வேண்டும்?

S. 258B-X52 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட்

"என் பசியெல்லாம் எப்போதோ அடங்கி விட்டதே!"

"அத்தான், உங்களுக்குப் பெருஞ்சுமையாய் விட்டேனே!"

"இதோபார், இனியொருமுறை அப்படிச் சொன்னால் நான் எழுந்துபோய்விடுவேன்"

"வேண்டாம்...வேண்டாம் அத்தான்...என் விழிகள் போனது போதாதா? என் உயிரையுமா இழக்கவேண்டும்...? நான் வாழத்தான் விரும்புகிறேன். என்னை விட்டுப் போய்விடாதீர்கள், அத்தான்."

"நான் எப்படிப் போவேன்...இதோபார்..."

"நான்தான் கண்களை யிழந்துவிட்டேனே!"

"நான்தான் துணையிருக்கிறேனே!"

"ஆனாலும் என்ன? இனிய தமிழ்ச் சொல்விருந்தும் உச்சரிக்க நாவில்லாமற் போய்விட்டதுபோலாயிற்றே"

"நீ அறிவுள்ளவளாயிற்றே. என் கேள்விக்குப் பதில் சொல்லு, பார்க்கலாம். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் எப்போது காதலர்களானார்கள்?"

"உள்ள ஒருமைப்பாடு நிகழும்போது!"

"ஒருவரையொருவர் எப்படிக் கண்டுகொள்கிறார்கள்?"

"உள்ளத்தால்தான்..."

"அப்போது விழிகளெதற்கு...?"

"உலகைக்காண்பதற்கு வேண்டாமா?"

"காதலனைக் கண்டுகொண்டாலே உலகைக் கண்டமாதிரியென்று சொல்வாயே."

"ஆமாம், அத்தான்..."

"சரி இந்தப் பாலை அருந்து."

"நீங்கள்?"

"இதோ ஒரு நொடியில்...?"

* * * *

"அத்தான், ஆபீசிற்குக் கிளம்பிவிட்டீர்களா?"

"ஆமாம், கண்ணே. சென்று வரட்டுமா?"

"சீக்கிரம் வந்துவிடுங்கள்... வழிமேல் விழி வைத்து,... தப்பு, தப்பு... உள்ளம் வைத்துக் காத்திருப்பேன்..."

"அப்படியே... இடையில் உனக்குப் பசித்தால், உடனே..."

"எனக்கு நீங்கள் வரும்வரை பசிக்காது"

"உம்... எதற்கும் வேலைக்காரியிருக்கிறாள்.... நான் வரட்டுமா?"

"ஆனால்... சீக்கிரம்..."

"என்றாவது தாமதித்து வந்திருக்கிறேனா?"

* * * *

"ஏன் அத்தான், இத்தனை நேரம்?"

"நான் சொன்னால் நீ கோபித்துக் கொள்வாய்!"

"சொல்லா விட்டால்தான் கோபித்துக் கொள்வேன். எதானாலும் சொல்லுங்கள்."

"ஒன்றுமில்லை... என்னுடைய நண்பனொருவன் விடாப்பிடியாகச் சினிமாவுக்கு இழுத்துக் கொண்டு போய்விட்டான். நான் எவ்வளவோ சொன்னேன். கேட்க மறுத்து விட்டான்...... பார்த்தாயா, நீ மௌனமாகி விட்டாயே? இதற்குத்தான் நான் சொல்லமாட்டேன் என்றது? வீணாக உனக்கு வேதனை கொடுத்துவிட்டேன்."

"அதெல்லாம் ஒன்றுமில்லை... சினிமா என்றவுடன் பழைய நினைவுகள் வந்துவிட்டன. அத்தான் உங்களுடன் சினிமா பார்ப்பதே தனி ஆனந்தமாயிற்றே!"

"வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே. நீ பார்க்க முடியாத சினிமாவை நானும் இனி ஒருபோதும் பார்க்கப் போவதில்லை. சரிதானே?"

"எனக்காக நீங்கள் எதையெல்லாம் தான் தியாகம் செய்வது!"

"இது ஒரு பெரிய தியாகமா? சினிமா பார்க்காததால் எதையும் இழந்து விடுவதில்லை... நீ மட்டும் சந்தோஷமாயிருந்தால் போதும்..."

"அத்தான் உங்கள் மார்பின் மீது..."

* * * *

"அத்தான், கோபித்துக் கொள்ளமாட்டீர்களே!"

"என்ன வேண்டும் கேள்...?"

"ஒன்றுமில்லை..."

"தைரியமாகக் கேள். நீ கேட்டு எதை நான் மறுத்திருக்கிறேன்?"

"அத்தான், இப்போதெல்லாம் வீட்டுக்கு வர நெடுநேரமாகிவிடுகிறதே. ஏன், அத்தான்?"

"உம்... ஆபீசில் வேலை அதிகம்."

"இப்போது மட்டும்தானா?"

"இப்போதுதான் இலாகாவை மாற்றியிருக்கிறார்கள்."

"இரவு வரை வேலையிருக்குமோ!"

"ஆமாம், கண்ணே. எனக்குமுன் இருந்த குமாஸ்தா ஏராளமானவேலையைப் பாக்கிபோட்டுவிட்டதால்தான் என்னை அந்தக் கிளைக்கு மாற்றியிருக்கிறார்கள்?"

"இதை நான் நம்பவேண்டும்!"

"ஏன், உனக்குச் சந்தேகம்?"

"அத்தான், எத்தனை நாளைக்குத்தான் ஒரு குருட்டுப் பெண்ணிற்குச் சேவை செய்துகொண்டிருக்கமுடியும்?"

"நீ என்ன சொல்கிறாய்?"

"நேரடியாகவே சொல்கிறேன். கொஞ்சகாலமாகவே நீங்கள் என்னை ஏமாற்றிவருகிறீர்கள்..."

"யார் உனக்கு இப்படிப் பேசக் கற்றுக்கொடுத்தார்கள்!"

"என் வேதனை...! அத்தான், நான் குருடி உங்களை மகிழ்விக்க முடியாதுதான் உங்களோடு வாழமுடியாதுதான்..."

"இப்படியெல்லாம் பேசி ஏன் வேதனையை அதிகமாக்குகிறாய்... நிதானமாயிரு,...

"அத்தான், எவருமே வாழத்தான் விரும்புவார்கள்; வாழ்வைத் தியாகம் செய்வது எளிதல்ல. அதிலும் ஒரு குருடிக்காக... விழிநிறைந்த ஒரு பெண்ணை நீங்கள் மணந்துகொள்வதுதான் நல்லதென்று எத்தனை தடவை சொன்னேன். நீங்கள் தானே...?"

"எப்போதிருந்து உனக்கிந்த விபரீதக் கற்பனையெல்லாம்? மின்னல்போல் தோன்றி மறையும் குரூரக் கற்பனைகளால் வாழ்வையே கொன்றுகொள்ளாதே! விழியில்லாக் குறையால் இத்தனை பெரியவிபரீத எண்ணங்களுக்கிடங்கொடுக்காதே. நான் உண்மையான காரணத்தைச் சொல்லி விடுகிறேன்; கேள்."

"வேண்டாம்... நான் அறிவதால் வேதனை இன்னும் அதிகமாகும்... நீங்கள் உங்கள் மனம்போல் எதுவும் செய்யுங்கள்... நான் குருடிதானே

"கடல் கொந்தளிக்கத்துவங்கிவிட்டது. இனி மரக்கலம் கரையிலேயே ஒதுங்கிவிடுவதுதான் நல்லது... நான் வருகிறேன்..."

"எங்கே போகிறீர்கள்?"

"எங்கேயோ?..."

"அத்தான், போகாதீர்கள். போகவேண்டியவள் நான் தான், அத்தான், நான்தான்... அத்தான்...அத்தான்... போய் விட்டீர்களா? ஐயோ...நான் இனி யென்ன செய்வேன்...? எனக்கு யார் துணை...?"

* * * *

"யாரது...? அத்தானா...?"

"ஆமாம்..."

"நீங்கள் வந்து விட்டீர்களா?"

"வராமல் எங்கு போவேன். என் மனம் உன்னை விட்டு வர மறுக்கிறதே!"

"அதுவே நல்லதாயிற்று!"

"நீ யேன் வாயிற்படியிலே உட்கார்ந்து விட்டாய்?"

"உள்ளே எனக்குப் பயமாயிருக்கிறது... அத்தான், இந்தக் கொட்டும் மழையில் எங்கே தங்கியிருந்தீர்கள்?... அடடா... தொப்பலாக நனைந்து விட்டீர்களே...மின்னல் அடித்ததோ?"

"ஊஹூம்...நீ பயப்படாதே. வா, உள்ளே... மெள்ள மெள்ள... படி, காலை யெட்டிவை... உம்..."

"நீங்கள் எங்கே வராமல் போய் விட்டீர்களோ என்று பயந்து விட்டேன். இனி மேல் என்னை விட்டுப் போக மாட்டீர்களே?"

போன்: 3094 தந்தி: "சூட்கேஸ்"

30 வருஷமாகப் பிரசித்திபெற்ற

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்.

உறுதிக்கும் வேலைப்பாட்டிற்கும் உத்திரவாதம் உள்ளவை.

எங்களிடம் கியாஷ் பெட்டிகள் (Cash Box) நகைப் பெட்டிகள் (Jewel Box) மற்றும் ஆபீஸ்களுக்கு வேண்டிய பைபில்பாக்ஸ் (File Box) தபால் பாக்ஸ் (Tapal Box) லெட்டர் பாக்ஸ் (Letter Box) பேப்பர் டிரே (Paper Tray) முதலியவைகளும் கிடைக்கும்.

ரயில்வே, கவர்ன்மெண்டு
முதலியவைகளுக்கு சப்ளை செய்பவர்கள்

ஷண்முகம் பிராண்டு
ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்,
(Prop: C. ஞானசுந்தர நாயக்கர்)
341, எஸ்பிளநேட், மதராஸ்-1

ஷோ ரூம்: 1/14, பேக்கர் தெரு, மதராஸ்-1
கிளை: 342, 343, எஸ்பிளநேட், மதராஸ்-1

பிராஞ்சு :
22, பொற்றமரை வடகரை, கும்பகோணம்
(தஞ்சை ஜில்லா)

"நீ விரட்டாமல் இருந்தால் சரி..."

"ஒரு தரம் பட்ட சூடு வாழ்நாள் முழுமைக்கும் போதுமே...அத்தான், எனக்குப் பசிக்கிறது."

"கையிலேயே வாங்கி வந்திருக்கிறேனே?"

"என்னது?"

"உனக்கு பிடித்தமான..."

"ஆப்பிளா? உங்கள் உள்ளத்தைப் புண் படுத்திய எனக்கா?..."

"அதை விட்டுத்தள்ளு. இந்தா இப்படி உட்காரு. உம், இந்த பழத்தை முதலில் சாப்பிடு. பிறகுதான் பேச்செல்லாம்...உம்..."

"அத்தான், நீங்கள் அபூர்வமான மனிதர் தான்."

"இப்போது, புகழுரை ஆரம்பமா?"

"இனி எப்போதுமே அதுதான். என்னை மன்னித்து விடுங்கள். என் பிழைக்காக வருந்து கிறேன்..."

"நானுந்தான், கண்ணே! உன்னிடம் ஏன் தாமதித்து வந்தேனென்று முதலிலேயே சொல் லியிருந்தால்..."

"எனக்கு அது தெரியவேண்டியதில்லை!"

"தெரிந்துகொள்வது நல்லது... அன்பே, உன் விழி இருளுக்கு மரணம் நெருங்கிவிட்டது"

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"பிரபல அமெரிக்க டாக்டர் ஒருவர் நம் ஊர் கிறிஸ்துவ ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கிறார். அவ ரிடம் உன் நிலையை விளக்கிக் கூறினேன். நம் பிக்கையளித்திருக்கிறார், அதற்காக...",

"அதற்காக...?"

"பணம் வேண்டாமா? அதற்குத்தான், ஆபீஸ் வேலை முடிந்தவுடன், ஒரு கம்பெனியில் அதிகப் படியாக வேலை செய்து வருகிறேன். அதை உன்னிடம் சொன்னால் நீ எங்கே தடுத்துவிடு வாயோ என்று தான் மறைத்துவந்தேன்..."

"அத்தான்... அத்தான்... நீங்கள் அதீத மனி தர்தான்... அத்தான் என் தலை சுற்றுகிறது. நீங்கள் சொல்வது உண்மையா?"

"இன்னும் சந்தேகமா?"

"இல்லையில்லை. மகிழ்ச்சியை என்னால் தாங்க முடியவில்லை... ஒரு மின்னல் என் விழிகளைப் பறித்துக்கொண்டது. மின்னல்போல் தோன்றிய எண்ணமோ என் வாழ்வையே விழுங்கப் பார்த் தது... இனியொருதரம் அந்தப் பிழையைச் செய்யமாட்டேன்..."

"அவ்வளவுபோதும்... சந்தேகம் என்பது ஒரு புற்றுநோய். அதற்கு மட்டும் இடம் கொடுக்கவே கூடாது. என்ன?"

"அத்தான், தியாகத்தின் தன்மை உயர உயர நம்பிக்கையின் வலிமை என்னால் தாங்க முடிய வில்லை... அதனால்தான் இத்தனை விபரீதம்."

"எங்கே, ஒரு புன்னகை?... அப்பா? இந்த இதழ் விரிப்பிலே என் துயரங்களெல்லாம் புதைந்துவிட்டன. மேல் வரிசை ஈறு தெரிய உதடுகளை நெளித்துக்காட்டுவதைப் பார்த்தால், செம்பட்டில் முத்துக்கள் பதித்தாற்போலிருக் கிறது,

"உம், உம்"

"ஏன் உன் உதடுகள் துடிக்கின்றது?"

"தேவையின் பனித்தூறலில் நடுங்கத்தானே செய்யும்?"

"என்ன இப்போது தேவை?"

"நான் சொல்லமாட்டேன்"

எமது புதிய ஏஜண்டுகள் :-

சுந்தர விலாஸ்
ஸ்ரீ V. வைத்திலிங்கம்
ஜவுளி & நியூஸ் ஏஜண்ட்
ஆடுதுறை :: (தஞ்சை ஜில்லா)

ஸ்ரீ V. S. ராகவன்
காளிகாட்,
கல்கத்தா-26.

பெண் உள்ளம் பெண்ணுக்குத் தெரியும்!

கு. ப. சேது அம்மாள்

அவசரம் அவசரமாக வந்த வஸந்தா சுற்று முற்றும் பார்த்துவிட்டு "அம்மா, எங்கேம்மா மதனியைக் காணோம்?" என்று ஆவலோடு கேட்டாள்.

"மாடியிலே இருப்பாள்..."

"ஆமாம்." என்றான் அங்கிருந்த வஸந்தாவின் தம்பி.

"வராந்தாவில் நின்று தபால்காரனை எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள்! சொன்ன வார்த்தை தவறாமல்......"

வஸந்தா திரும்பி நின்றாள் கடுகடுப்புடன். "ஏனம்மா இதையெல்லாம் சொல்லி வீண்மனஸ்தாபத்தையும், பொல்லாப்பையும் கட்டிக்கொள்கிறாய்? வந்தால் வைத்துக்கொள்ளுகிறாள். இல்லாவிட்டால் சும்மா இருக்கிறாள்; உனக்கேன்பாடு?"

"பின் யாருக்கடி பாடு?"

"அவர்களிடமிருந்து, சீர் செனத்தி என்று வராது என்பதைத் தெரிந்துதானே சம்பந்தம் செய்துகொண்டாய்?"

"ஆமாமடி, நான்தானே செய்துகொண்டேன்? குதியாகக் குதித்து, 'இந்த க்ஷணம் அந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணி வைக்கிறாயா? மிலிட்டரியில் சேரட்டுமா என்றல்லவா பயமுறுத்தினான் மகாராஜன்? எக்கேடு கெட்டு ஒழியட்டும் என்று பண்ணியாச்சு. இல்லாவிட்டால், சீருக்கு ஆசைப்பட்டு அநியாயமாகப் பிள்ளையைப்பட்டாளத்திற்கு விரட்டிவிட்டாளே என்று ஊரார் கொத்தி எடுத்துவிடமாட்டார்களா என்னை?..."

"அதுவரையில் சரி, வருஷாந்தரச் சீர்களுக்கு என்று பணமாகக் கொடுத்துவிடுவது என்றுதான் ஏற்பாடு; கொடுத்துவிடுகிறார்கள்."

"ஊம், கொடுக்கிறார்கள்; காத்துக்கொண்டிரு! கலியாணமாகி வருஷம் ஒன்று ஆகப் போகிறது—."

"அது அவர்கள் பாடு. அவள் பாடு. கொடுத்தால் அவளுக்கு. இல்லாவிட்டால் இருக்கிறாள். நீ ஏன் இப்படி தவுதாயப்படுகிறாய்?"

"ஏன் படுகிறேனா? வயிற்றில் இடம் கொடுத்த தோஷம் படச்சொல்லுகிறது! குழந்தைக்கு ஒரு ஆடி, ஆரும்மாதம். தீபாவளி என்று ஓர் அழைப்பு, அருமை பெருமை உண்டா—உலகத்தார்போல?

"இதெல்லாம் அநாவசியக் கவலை அம்மா! ஏதோ ஆசைப்பட்டுப் பண்ணிக்கொண்டான். அவர்களுக்குள் அந்யோன்யமாக இருக்கிறார்கள். அவ்வளவுதான் நமக்கு வேண்டியது" என்று தாயைச் சமாதானம் செய்ய முயன்றாள் வஸந்தா.

பார்வதி அம்மாளுக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை! கண்களை உருட்டி விழித்து, "இந்தாடி, அதிகப்பிரசங்கி, வந்த காரியத்தைப் பார்த்துக்கொண்டு போய்ச்சேர். உன் வீட்டைப் பார்க்க. உன் ஆக்கினை ஒன்றுதான் பாக்கியிருந்தது எனக்கு, ..." என்றாள் படபடப்புடன்.

வஸந்தாவுக்குத் தாயாரின் அறியாமையையும் ஆத்திரத்தையும் கண்டு ஒருபுறம் கோபமும், ஒருபுறம் சிரிப்பும் வந்தது!

பார்வதி அம்மாள் பிரதாப லங்கேசுவரன் தங்கை! தன் மகளுக்குத் தான் செய்த சீர் சிறப்புப்போல, தனக்கு வரும் மாட்டுப்பெண்ணும், ஒவ்வொரு பண்டிகைக்கும் அதற்கான சீர்வகைகளுடன் வந்து இறங்கவேண்டும். ஊரார் பார்த்து மெச்சவேண்டும் என்று நீண்டநாளைய ஆசைகொண்டவள்!

ஆனால் நடந்தது வேறு!

பிள்ளையாகப் பார்த்து விரும்பி மணந்த பெண் பானுமதி. என்னவோ பணக்கார இடத்துப் பெண்தான்! பெண்ணுக்குத் தாயார், அத்தை, பாட்டி என்று யாரும் கிடையாது வீட்டில். தகப்பனார், ஒரு தமையன். ஒரு கிராமம் முழுவதும் அவர்களுடையது. கொழுத்த மிராசு!

கிராமவாசத்துப் பெண். ஆதலால் ஏழாவது வரையில் அவ்வூரிலேயே படிக்கவைத்திருந்தார் அவள் தந்தை. அவ்வூரிலிருந்த வித்வான் மூலம் வாய்ப்பாட்டில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தாள். குடும்பப் பண்பாடு, அழகு, அமரிக்கை அனைத்தும் அமையப்பெற்ற கன்னிகை. குடும்பமும் கௌரவமான குடும்பம்.

அதோடு பார்வதி அம்மாளுக்கு எட்டிய உறவு வேறு. பார்வதி அம்மாளின் புருஷர் அப்புசுவாமி பலே பேர்வழி. வேறு காரியமாக அக்கிராமத்திற்குப் போனவர் இந்தப் பெண்ணைப் பார்த்தார். மனதிற்குப் பிடித்துவிட்டது அவருக்கு. அப்போதே அவள் ஜாதகத்தை வாங்கி வந்து பார்த்தார். திவ்வியமான பொருத்தம்! நல்ல யோக ஜாதகமாகவுமிருந்தது பானுமதியின் ஜாதகம்.

மனைவியிடம் சொன்னால், என்னதான் பொருத்தமும், அதிருஷ்ட ஜாதகமானாலும், தாயில்லாப் பெண் எனக்கு வேண்டவே வேண்டாம், என்று அதற்கு ஆயிரமேற்கோள்காட்டி மறுத்து விடுவாள் என்று கமுக்கமாகப் பிள்ளையை அழைத்துச் சென்று பெண் பார்க்கச்சொல்லி அவனை முடுக்கி விட்டு விட்டார்! அவ்வளவு தான்! முயற்சி வெற்றிபெற்றுவிட்டது.

ஜாமீன், சீர்வகை அனைத்திற்குமாக ரொக்கம் பனிரெண்டாயிரமென்று பேசி வாங்கிய பணத்தை. கலியாணத்திற்கு சிக்கனமாகச்செலவு செய்து விட்டு மிகுதியைப் பிள்ளை, மாட்டுப்பெண்பேரில் பாங்கில் போட்டுவிட்டார்!

பார்வதி அம்மாளுக்குக் கணவரைக் கண்டால் சிம்ம சொப்பனம்? மறைவில் முணுமுணுத்து ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வதே தவிர அவரைக் கேட்க பயம்!

நாள், கிழமை என்றுவரும்பொழுது, பார்வதி அம்மாளுக்கு மனம் வெதும்பும்,நாட்கள் செல்லச் செல்ல ஜாடை மாடையாக பானுமதியை இடித்துக் காட்டி வரலானள்.

2

பானுமதி ரோஷம் மிக்கவள். சொல் பொறுக்காதவள்! மிருது சுபாவம் படைத்த பெண், விளையாட்டுக்காக யாராவது கேலி செய்தாலும் சட்டென்று அழுதுவிடுவாள். பெண் மனம் கோணாமல், ஆனால் அடக்கத்தோடும், பயத்தோடும் வளர்த்திருந்தார் அவள் தந்தை.

கடுத்த முகமும். இடித்துரைக்கும் சுடுசொற்களும் கேட்டு கதிகலங்கிப் போனாள் பானுமதி! கணவன் அன்பு செய்கிறான்—உண்மை! அதைத் தவிடுபொடியாக்கி விடுகிறதே மாமியாரின் கொள்ளிச் சொற்கள்?

ஆகவே அவள் மனம் அமைதியை இழந்தது! மனதுள் வேதனை குடிகொண்டது! நிலைமையைக் கணவனிடம் உரைத்தால் வீடு இரண்டு படுமே என்ற கவலை!

இதற்கிடையில் பொங்கல் பண்டிகை வரவிருப்பதையொட்டிப் பொங்கல் சீருக்காகத் தங்கைக்கு 'ஸ்ரீ தனம்' அனுப்பிவைப்பதாக பானுமதியின் தமையன் எழுதிய கடிதம் அவளை நான்கு நாட்களாக ஆறுதல் கொள்ளச் செய்திருந்தது.

அன்று போகிப் பண்டிகை.

மறுநாள் 'பொங்கல்' ஆதலால், விடுமுறை இன்றுகட்டாயம் தமையனிடமிருந்து 'வரும்படி' கிடைக்கும். கிடைத்தால் மாமியார் மனது குளிரும். பண்டிகைப் பொழுது சந்தோஷமாகப் போகும் என்று திட்டம் செய்து கொண்டு தபால்காரன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு மாடியில் நின்றிருந்தாள் பானுமதி.

தெருக்கோடியில் தபால்காரனைக் கண்டதும் சந்தோஷத்தால் அவள் உள்ளம் வேகமாக அடித்துக்கொண்டது! அதன் நடுவில் ஒரு எண்ணம் மின்னல் வேகத்தில்! ஒரு வேளை வராவிட்டால்?

சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள் அவள்.

தபால்காரன் அருகில் வந்துவிட்டான்! அதோ, அதோ வருகிறான் நம் வீட்டுக்குத் தான்! இருக்கட்டும். நாம் ஓடக்கூடாது. 'பானுமதி பானுமதி மணியார்டர், என்று கூப்பிட்ட பிறகு போவோம்', என்று நினைத்தாள்!

ஆ! என்ன ஏமாற்றம்! ஒருகார்டை வீசிவிட்டு அவன் இறங்கிப் போய்க்கொண்டிருந்தான்!

பணம்...வர...வில்லை...!

வெல வெலத்துப்போய் ஐயோ, என்ற ஆற்றாமையோடு மூச்சு விடும் சமயம். "மதனி," என்ற இன்குரலோடு அங்கே வந்தாள் வஸந்தா.

முகத்தில் மலர்ச்சியை வரவழைத்துக்கொண்டு, "வா. எப்போது வந்தாய்?" என்று கேட்டாள் அருமையுடன்.

"நான் வந்து அரைமணிக்கு மேலே ஆகிவிட்டது! அம்மாவுடன் பேசிக்கொண்டிருந்தேன் 'புயலும் படகும்' முடித்து விட்டாயா மதனி?"

"இல்லே வஸந்தா. என் மனம் சரியாகஇல்லே. அதைத் தொடவேயில்லே! இருந்தாலும்,...இந்த உலகத்தில் பெண்கள் தம் தாயர் போன பிறகு உயிர் வாழ கூடாது வஸந்தா..." என்று அதற்கு மேல் பேச இல்லாமல் அடங்கியிருந்த துக்கத்தைக் கொட்டிஅழுதே விட்டாள் பானுமதி!

வஸந்தா பரபரப்புடன் அவள் கண்ணீரைத் துடைத்து, 'வருத்தப்படாதே மதனி! அம்மா சுபாவம் அது! அதை நீ லட்சியமே செய்யாதே!

தாயிருந்தால் செல்வாக்கு, சலுகை உண்டு என்பது உண்மைதான். ஆனால் அதைவிடப் பெரியது கணவனுடைய அன்புள்ளம் என்பது! அதுதான் வாழ்க்கையில் பரிபூர்ண சந்தோஷம் தரவல்லது, தெரிந்துகொள்! என்னைப் பார் உதாரணத்திற்கு! அம்மா இருக்கிறாள் அன்பைச் சொரிகிறாள். கைபிடித்த புருஷனுடைய உள்ளன்பு என்பது எனக்கு இல்லை!..."

"என்னைச் சமாதானம் செய்யும் நோக்கில், பொய்கூடச் சொல்லுகிறாயே வஸந்தா?"

வஸந்தா ஒரு வேதனை கலந்த புன்சிரிப்புடன் பானுவின் கைகளைப் பற்றியபடி "இல்லை மதனி; அப்பட்டமான உண்மை. வாழ்க்கையில் எனக்குச் சந்தோஷமே கிடையாது" என்றாள் சோகம் தோய்ந்த குரலில்.

பானுமதி திகிலுடன் "நிஜமாகவா வஸந்தா?" என்று கேட்டாள்.

"ஆமாம் மதனி! ஆனால் அது வெளிப்படையாகத் தெரியாது யாருக்கும்! என் சுபாவத்திற்கு நேர் விரோதமான சுபாவம் அவருக்கு! மகா முன்கோபி, எதிலும் பதட்டம். அவசரம். ஆடம்பரச் செலவோ சொல்லத்தரமன்று. வாய்ப்பந்தல் போடுவதில் அவருக்கிணை அவரேதான்! நான் வேண்டும் என்பதை அவர் வேண்டாம் என்பார். ஏதடா கொண்ட புருஷனை இப்படித் தூற்றுகிறாளே என்று நினைக்காதே!

"ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை இன்றியமையாதது. கணவனுடைய அந்தரங்க அன்பு ஒன்றுதான்! அதை அடையப் பெற்றவளே பாக்கியசாலி மதனி! இப்போ அம்மா உன்னைப் பகலெல்லாம் ஏசுகிறாள், தூஷிக்கிறாள், கோபிக்கிறாள். உன் மனது சங்கடப்படுகிறது. இரவு வந்ததும் வீட்டுப்பாடு ஓய்ந்து படுக்கச் சென்றதும், அண்ணாவின் மலர்ந்த சிரிப்பு ஒன்றில் ஓர் இன்சொல்லில் உன் கிலேசமெல்லாம் பறந்துவிடுமே!

"எனக்கு அம்மா அனுகூலமாக இருக்கிறாள். அவளிடம் என் வேதனையைச் சொல்லி அழலாம் வேண்டுமானால்—மகிழ வழியேது?

"ஆகையால் நீ இந்த மாதிரி மனதை நோக வைக்கவே கூடாது. அம்மா சொல்வதைக் காதிலேயே வாங்காதே. பழங்காலத்தின் பிரதிநிதி. என்ன சொன்னாலும் அவள் சுபாவம் மாறக்காணோம்".

"பாரேன், அவர் ஏசிக்காட்டுவதற்கு ஏற்றாற்போலவே, கடிதம் எழுதிவிட்டு ஜம்பமாக, அனுப்பாமலிருந்துவிட்டான் அண்ணா! தெய்வமே என்று இருந்திருக்கக்கூடாது? கடிதம் எழுதுவானேன்? இன்று கட்டாயம் கிடைத்துவிடும் என்ற நினைவில் கவலையற்று இருந்தேன், நாளை விடுமுறை, மணியார்டர் இன்ஷியூர் கிடைக்காது".

"ஏன் கண்கலங்குகிறாய் மதனி. அனுப்பாமலிருக்கமாட்டார்கள், எழுதிவிட்டு. அப்படித்தான் வராவிட்டால் என்ன மோசம்?"

"மோசம் ஒன்றுமில்லை. வருஷத்திற்கு ஒரு நாளும் அதுவுமாக......மனசு கிடந்து..." என்று வார்த்தையைப் பாதியில் நிறுத்திவிட்டு விம்மினாள் பானு. "பார்த்தாயா, பார்த்தாயா. மறுபடியும் ஆரம்பித்துவிட்டாயே, மறுபடியும் சொல்லுகிறேன். அண்ணாவின் அன்பு ஒன்றுதான் உனக்கு வாழ்க்கையின் முக்கிய அம்சம். மற்ற யாவும் அதற்கு முன் சக்தியற்றவை!

"என்னைப்பார்! நாளும் கிழமையுமாக கழுத்து சங்கிலியை அடகு வைக்கக் கொடுக்கவில்லை யென்று இரண்டு நாளாக என் மேல் கோபம். வீட்டுக்கே வரவில்லை. இந்த வீம்பில் நாளைக்கும் வரமாட்டார்! என்ன பண்டிகை. வாழ்வு, வேண்டியிருக்கிறது?" என்று ஆற்றாமையுடன் தன் குறையை வெளியிட்டாள் வஸந்தா.

"சங்கிலியை அடகு வைக்க, அப்படி என்ன அவசரச் செலவு?" என்று கலவரத்துடன் கேட்டாள் பானு.

"ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்! கடன் இருக்கிறதாம். தீர்க்கவேண்டுமாம். எதற்கு எப்போது வாங்கினீர்கள் என்று கேட்டதும் கோபம் வந்துவிட்டது..."

"அம்மாவிடம் சொன்னாயோ இதைப் பற்றி!"

"ஐயையோ. வீடு இரண்டுபட்டுவிடாதா? தெய்வம்விட்டவழி என்று இருக்கிறேன். கொடுத்தால் அம்மா உறுமுவாள். கொடுக்காவிட்டால் அவர் உறுமுவார். ஏதோ 'அம்மா இல்லை' என்று குறைபட்டுக் கொண்டாயே, அதற்காகச் சொல்லவந்து ரகசியம் அம்பலமாகிவிட்டது! நாழியாகிவிட்டது மதனி, போய்வருகிறேன், அண்ணா வரும் சமயமாகி விட்டது. முகம் அலம்பி பொட்டு வைத்துக்கொள்" என்று எழுந்தாள் வஸந்தா.

பானுமதி வருத்தம் நிரம்பிய குரலில் "இத்தனை நாளும் என் கவலைகளோடு இருந்தேன். இன்றிலிருந்து உன் கவலையும் சேர்ந்துவிட்டது! இப்படிப்பட்ட நிலையில் எப்படிப் பொழுதைப் போக்குகிறாய் வஸந்த்?" என்று பரிவுடன் அவளுடைய முகவாயைப் பற்றி வருடினாள் பானு

"அதுதான் பார்க்கிறாயே! சந்தோஷமாக இருப்பதுபோல நடிப்பேன்! உள்ளே அவ்வளவும் ஆறாத்துயர். நீங்காத சோகம்! என்ன

செய்வது, வரட்டுமா மதனி?" என்று கூறி விடைபெற்றுச் சென்றாள் வஸந்தா.

3

அன்றிரவு வெகுநேரம் கழித்துவீடுதிரும்பினான் வாசு. கைகொள்ளாமல் பழங்களும், புஷ்பமும், புத்தாடைகளுமாக வீட்டுக்கு வந்தான்.

"அம்மா, என் மைத்துனன் வருஷாந்தரச் சீர்பணமாக ஐந்நூறு ரூபாய்; 'கனுப்பணம்' என்ற மஞ்சள் குங்குமச் செலவுக்காக ஐம்பது ரூபாய்க்குமாக 'செக்' அனுப்பினான் இன்றைக்கு அப்பா பெயருக்கு......"

"அனுப்பியிருக்கிறானே இல்லையோ, அதையும் அப்படியே பாங்கியில் போட்டுவிடச் சொல் உங்கப்பாவை."

"அந்த ஐந்நூறுரூபாயை அப்படியே போட்டாகி விட்டது. ஐம்பது ரூபாயை மட்டும், உன் நாட்டுப் பெண்ணிடம் கொடுத்துவிடச் சொன்னார். இந்தா." என்று தாயாரிடம் நீட்டினான் வாசு! "எனக்கெதற்கடா? அவளண்டை கொடுத்துவிடு, அவள் பணத்தை" என்றாள் பார்வதி அம்மாள் எரிச்சலை வெளிக்காட்டாமல்.

அதுவரையில் பேசாமல் நின்றிருந்த பானுமதி முன்வந்து நின்று, 'ஆமாம், நம் வஸந்தாவுக்கு 'கனுப்பண'மாக......"

பார்வதி அம்மாள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்!

ஏதேது நாட்டுப் பெண்ணுக்கு எவ்வளவு தைரியம் என்பது போலப் பார்த்தாள்.

பானுமதி தைரியமும், தென்பும் படைத்த மனைத்தலைவிபோல நிமிர்ந்து, "உங்கள் தங்கைக்கு நீங்கள் என்ன தருவீர்களோ எனக்குத் தெரியாது. என் அன்பளிப்பாக அவளுக்கு இருநூறு ரூபாய் தரவேண்டும். கனுவன்று. அப்பாவிடம் சொல்லி ஏற்பாடு செய்யுங்கள்" என்றாள், வஸந்தாவின் அன்புரையில் நெகிழ்ந்த மனதினளாக!

பிள்ளையும், தாயாரும் பானுவின் செயலுக்குக் காரணம் புரியாமல் விழித்தார்கள்!

வியப்பிலிருந்து மீண்டவளாக, "நன்றாக இருக்கிறதே, நீ எதற்கு அனுமத்தாக அவளுக்கு இருநூறும் முந்நூறும் கொடுப்பது? எப்போதும் போல 'பொங்கல் சீர்' என்று சாமான்களும்! கனுப்பணமாக பத்து ரூபாய் கொடுப்பது வழக்கம்" என்றாள் பார்வதி அம்மாள்.

பானுமதிக்குத்தன்னையுமறியாமல்ஒரு துணிவு, ஒரு திறன் ஓர் அதிகாரம் என்றுகூடச் சொல்லலாம்-எல்லாமாகஎழுந்து அவளை நிமிரச்செய்தது!

"ஆமாம்! பொங்கல் சீர் சாமானும், பத்து ரூபாய் பணமும்—கொடுத்துவிட்டால் நிறைந்து விடுமா அம்மா? அந்தக் குழந்தையின் மனதில் எவ்வளவு வேதனையிருக்கிறது என்பதை என்றாவது கவனித்தீர்களோ நீங்கள் — கேட்கிறேன்"

வேதனையும், வெலவெலப்பும், திகைப்புமாக, "வேதனையா? என்ன வேதனை? என்னிடம் ஒன்றையுமே சொல்லவில்லையே அவள்?"

"சொல்லணுமா? அகத்தழகு முகத்திலே தெரியாதா?" என்று கூறி அவள் சொன்ன விவர முழுவதும் கூறினாள் பானுமதி.

அந்தக் குழப்பத்திலிருந்து வாசுவும், பார்வதி அம்மாளும் மீளு முன்பே. "இப்போதைக்கு இந்த இருநூறு ரூபாய் கொடுத்து அவர் மனதை திருப்தி செய்துவிட்டு கொஞ்ச காலத்திற்கு நம் அகத்திலேயே வைத்துக் கொண்டு மாப்பிள்ளையை மெள்ள மெள்ள நல்ல வழிக்கு கொண்டுவரவேண்டும்! அதனால் அம்மா—நீங்களும், உங்கள் பிள்ளையுமாக இந்த என் யோசனையை அப்பாவிடம் ஹிதமாக எடுத்துச் காரியத்தை நிறைவேற்றுங்கள். நாம் சந்தோஷமாக இருந்தால் மட்டும் போதாது! நம் வீட்டுக் குழந்தையான அவளும் சந்தோஷமாக இருக்கவேண்டுவது முக்கியமாச்சே!" என்றாள் திட்டவட்டமாக!

வாசு தன் மனைவியின் உயர்ந்த நோக்கத்தையும் குடும்பப் பற்றுதலையும் எண்ணி புளகாங்கிதமடைந்தான்!

பார்வதி அம்மாள் அன்பின் வலிமையால், தன்னை வெற்றிகொண்ட பானுமதியின் சாதுரியத்தையும், தயாளமும், பெருந்தன்மையும் கொண்ட உத்தம குணத்தையும் கண்டு அவள் உள்ளம் நெகிழ்ந்தது. அவள் வந்ததிலிருந்து இன்று வரையில் அவளுடன் சுமுகமாக பேசி ஆதரவு காட்டாத தன் சிறுமைக் குணத்தைக் கண்டு தானே வெட்கினாள்!

பானுமதிக்கும் வியப்பினால் உள்ளம் படபடத்தது? துளிகூட எதிர்பாராமல், தன் வாழ்வில், தனக்கு உரிய ஸ்தானமும், மதிப்பும், பெருமையும், உரிமையும் கிடைத்த பேரதிசயம் அவளை ஆட்கொண்டு திணற அடித்தது!

பானுமதி விவாகமாகி வந்த அந்த வருஷத்து பொங்கல் பண்டிகை எப்பொழுதையும் விட சிறப்பாக 'ஜாம் ஜாம்' என்று நடந்தேறியது. பார்வதியம்மாளின் மனக்குறை தீர்ந்து நிறைவு பெற்றுவிட்டதன்றோ?

எஸ். விஜயா

குடித்தனக் குறிப்புகள்

1. இக்காலத்தில் பாலில் மிகச் சாமர்த்திய மாக நீரைக் கலந்து விற்கிறார்கள். இதைச் சுலபமாகக் கண்டறிய பாலில் இரண்டு மூன்று துளிகள் நைட்ரிக் ஆஸிட் விட வேண்டும். அப்படிச் செய்தால் பால் வேறு நீர் வேறாகப் பிரிந்து விடும்.

2. உருளைக்கிழங்கு மிகவும் பழயதாகி விட்டால் அது சமையலுக்கு அவ்வளவு நன்றாக இராது. அப்படிப்பட்ட கிழங்கு களை வேக வைக்கும் போது சிறிது எலுமிச்சை ரசமும், சர்க்கரையும் கலந்து கொள்ள வேண்டும். இப்படிச் செய் தால் கிழங்கு மிக வெண்மையாக இருப்ப தோடு ருசியாகவுமிருக்கும். அல்லது

உருளைக்கிழங்கை வேகவைக்கும்போது அதோடு சிறிது சோடாமாவும் சர்க்கரை யும் கலந்து வேகவிடவேண்டும். இப்படிச் செய்தால் கிழங்கு மிகவும் ருசியாகவும் மணமாகவும் மிருதுவாகவுமிருக்கும்.

3. வெங்காயத்தைத் தாளோடு கட்டித் தொங்க விட்டால் வெகு நாள் வரை அது கெடாதிருக்கும்.

4. சமைக்கும் போது சில துளிகள் எலுமிச்சை ரசம் பிழிந்து விட்டால் சாதம் அதிக வெண்மையாக இருப்ப தோடு பொல பொல வென்று மிருக்கும்.

5. பால் தீய்ந்து போனால் அது சூடாறிக் குளிர்ந்து போவதற்கு முன்பாக சிறிது உப்பும் மிளகாயும் அதோடு கலந்து விட வேண்டும். அப்படிச் செய்தால் அப் பாலின் ருசி நன்றாக இருக்கும். சாப்பிட லாம்.

குளிர் காலத்தில் குளித்தல்

குளிர் காலத்தில் குளிக்கவே பலருக்கு தோன்றுவதில்லை. குளிக்க வேண்டுமென்றால் பயமாகப்படுகிறது. ஆனால் அது மிகவும் தவறு. குளிர் காலத்தில் தினசரி ஸ்நானம் செய்ய வேண்டியது உடல் நலத்துக்கு மிக மிக அவசியம். ஆனால் குளிப்பதில் கீழ் காணும் விஷயங்களைக் கவனத்தில் கொள்ளுதல் நல்லது.

1. வெந்நீரில் குளிப்பதானால் முதலில் அடிக்கால், மேல்கால், முழங்கால், துடை, இடுப்பு, அடிவயிறு, மேல்வயிறு இவ் விதம் ஊற்றிக் கடைசியில் தான் தலையை நனைக்க வேண்டும்.

2. குளிர்ந்த நீரில் குளிப்பதானால் முதலில் தலை, கழுத்து இவ்விதம் படிப் படியாகக் கடைசியில் தான் காலை நனைக்க வேண்டும்.

3. உடலைத் தேய்க்கும் ரப்பர் அல்லது துண்டினால் (சோப்பு போட்டு முடிந்ததும்) உடலை நன்கு தேய்த்து உடலில் ஒட்டிக்கொண்டுள்ள சோப்பைப் போக்கி விட வேண்டும்.

4. குளித்து முடிந்ததும் உடலில் ஒட்டி யுள்ள நீர் தானே உலரும்படி விடுதல் கூடாது. கூந்தலிலிருந்து நீர் சொட்டிக் கொண்டிருக்கும்படியும் அனுமதித்தல் கூடாது. ஸ்நானம் செய்து முடிந்ததும் கூடுமான வரை துரிதமாக உடலையும், கூந்தலையும் ஈரமின்றி துவட்ட

வேண்டும். கூந்தலுக்குப் புகை காட்டுவதும், முகம், பிடரி, கழுத்து போன்ற பகுதிகளில் பவுடர் பூசுவதும் நல்லது.

5. குளித்து துவட்டி முடிந்ததும் ஈர ஆடையை அணிந்து கொள்ளுதல் கூடாது. சுத்தமானதும், துவைத்து நன்கு உலர்ந்ததுமான ஆடைகளையே அணிந்துகொள்ள வேண்டும். சிறிது நேரமானாலும் குளித்து முடிந்தபிறகு ஈர ஆடையை உடுத்துவது உடல் நலத்துக்கு உகந்ததல்ல.

6. குளிர்ந்த நீரில் குளிக்கும்போது தலை, உடல், நாபி முதலிய இடங்களில் எண்ணெய் லேசாகப் பூசிக்கொள்ளுவது நல்லது. இப்படிச் செய்தால் குளிர் உடலைத் தாக்கி ஜலதோஷம், சிரங்கு முதலியவை ஏற்படாதபடி தடுக்கும்.

7. சூரியன் உதித்து வெகுநேரமாகி வெயிலடிக்கும்போது ஸ்நானம் செய்தால் சளி பிடிக்காது எனப் பலர் தவருக நினைப்பதுண்டு. சூரிய உதயத்துக்கு முன்பு குளிப்பதால் சளி பிடிக்காது. சுருசுருப்பாகவுமிருக்கும். வெயிலேறிய பிறகு குளிப்பதால் சளி பிடிக்கும் அபாயம் அதிகரிக்கிறது. சோம்பலும் அதிகரிக்கிறது.

8. சாப்பிட்டு குறைந்தது இரண்டரை அல்லது மூன்று மணிநேரம் சென்றே ஸ்நானம் செய்ய வேண்டும்.

9. கடுமையான உழைப்பு, பிரயாணம், வெயிலில் அலைச்சல் முதலியவைகளுக்குப் பிறகு உடனே ஸ்நானம் செய்தல் கூடாது.

10. ஸ்நானம் செய்தபிறகு உடுத்தி இருந்த ஆடையையே மறுபடியும் துவைக்காமல் உடுத்திக் கொள்ளுவதும் ஸ்நானம் செய்யாதே இருப்பதும் ஒன்றுதான். ஆகையால் எக்காரணம் கொண்டும் உடுத்திய உடையைத் துவைக்காமல் மறுபடியும் உடுத்துதல் கூடாது.

11. ஸ்நான அறையை மூடிக்கொண்டு வெந்நீரில் குளித்தபிறகு அங்கேயே உடலைத் துவட்டி வேறு ஆடை மாற்றிக் கொண்டு பிறகுதான் வெளியே வர வேண்டும். ஈர உடையோடு வெளியே வந்து பிறகு உடை மாற்றுவது நல்ல முறையல்ல.

குழந்தை வளர்ப்புக்கலை

மலக்கட்டுக்கும் மலச்சிக்கலுக்கும்;—குழந்தைகளுக்கு அடிக்கடி மலக்கட்டும் மலச்சிக்கலும் உண்டாகிறது. இதுவே வேறு பல நோய்களுக்கும் காரணமாக அமைகிறது. ஆகையால் குழந்தைகளுக்கு மலச்சிக்கல், மலக்கட்டு ஏற்படாதபடி கவனித்துக்கொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகும்.

குழந்தைகளுக்கு மலச்சிக்கலினுல் வயிற்று வலி, வயிற்று உப்பிசம், வாந்தி, போன்றவை ஏற்படுவதுண்டு. மலம் துர்நாற்றம் வீசும் மலத்துவாரம் வழியாக வெளியேறும் காற்றும் துர்கந்தம் வீசும்.

வாரம் ஒருமுறை ஒலிவ எண்ணெய் (Olive Oil) ஒரு தேக்கரண்டி வழக்கமாகக் கொடுத்துவந்தால் மலச்சிக்கல் ஏற்படாதிருக்கும். எப்பொழுதுமே நிரந்தரமாக மலச்சிக்கலிருந்தால் தினசரி பாலோடு பால் சர்க்கரை (Malt Sugar) கலந்து கொடுத்து வரவேண்டும். அன்றன்று மலம் நன்கு வெளியேறிவிடும். மலச்சிக்கலைப் போக்க அத்திப்பழ சர்பத்தும் மிக நல்லது. குழந்தைகள் இதை விரும்பிச் சாப்பிடும். இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் Syrup of figs என்ற பெயரில் இது விற்கப்படுகிறது. மேலே கூறிய முறை எதற்கும் அசைந்து கொடுக்காத மலச்சிக்கலானுல் விளக்கெண்ணெய் கொடுக்கலாம். நாட்டு முறைப்படி தயாரிக்கப்படும் விளக்கெண்ணெயைவிட சுத்தம் செய்த விளக்கெண்ணெயே (Refined Castor Oil) இதற்கு மிகவும் சிறந்தது. வயிற்றைத் தடவிக் கொடுப்பதும் நல்லது. கெடிகாரமுள் நகரும் திசையில் (Clockwise) வயிற்றைத் தடவிக் கொடுத்தல் வேண்டும்.

பொதுக் குறிப்புகள்

டர்ப்பன்டைன் எண்ணெயில் சலித்த சாம்பல் அல்லது விபூதியைக் கலந்து அதால் இரும்பு அல்லது பித்தளைப் பாத்திரங்களையும் மற்ற சாமான்களையும் தேய்த்தால் அவை பளபளவென்ருகிவிடும். டர்ப்பன்டைன் இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

சுத்தமான பெருங்காயம் கருமை கலந்த சிகப்பு நிறத்தில் இருக்கும். மட்டமான காயம் பழுப்பு நிறமாக இருக்கும். எரிகிற

நெருப்பில் ஒரு சிறு துண்டு காயத்தைப் போட்டால் உடனே அது மணம் வீச வேண்டும். அப்படி வீசினுல் அது நல்ல பெருங்காயம். மணம் வீச நேரமானுல் போலிக்காயம் எனத் தெரிந்து கொள்ளலாம்.

வெண்ணெயைக் காய்ச்சும்போது வெற்றிலையைக் கிள்ளிப் போட்டுக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டால் அந்நெய் அதிக நாள்வரை கெட்டுப் போகாதிருக்கும்.

சமையல் வேலை செய்வதன் காரணமாக பெண்களின் கைகள் பொதுவாகக் கெட்டுப் போய் விடுகிறது. கிளிஸரின் எலுமிச்சை ரசம் இரண்டையும் சமஅளவாகக் கலந்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் படுக்கைக்குப் போகுமுன் சோப்பு போட்டுக் கை அலம்பி இக்கலவையை வழக்கமாகப் பூசிவந்தால் கைகள் மிருதுவாகவும் பளபளப்பாகவுமிருக்கும்.

அழகுக் குறிப்புகள்

கைகால் வெடிப்புக்கு:—சிலருக்குக் கால், கை வெடித்துப் பார்க்க விகாரமாகத் தோன்றும். இதற்கு இரவு நேரத்தில் இலுப்பை எண்ணெயைப் பூசி அதன் மேல் மஞ்சள் பொடியைத் தூவிவரலாம். சர்க்கரை சர்ப்பத்தைப் பூசி சிறிது நேரம் சென்று அலம்பிவரலாம். இவ்விதம் ஒவ்வொரு நாளும் ஒருமுறை தவருது அலம்பிவர வேண்டும்.

புருவமயிர் வளர;—சிலருக்கு கண் புருவ மயிர் சரியாக வளர்ந்திருக்காது. இதனுல் அவர்கள் முகம் அழகு குன்றித் தோன்றும் இங்கிலீஷ் மருந்துக் கடையில் 1% எல்லோ ஆயிண்ட்மெண்ட் ஆப் மெர்குரி என்னும் மருந்தொன்று விற்கிறது. இதை வாங்கி வந்து ஒவ்வொரு நாளும் இரவு படுக்கைக்குப் போகுமுன் புருவத்தில் மை இட்டுக் கொள்ளுவதுபோல் இட்டுக் கொள்ள வேண்டும். இவ்விதம் கிரமமாகச் செய்து வந்தால் புருவமயிர் கரு, கரு என அழகாக வளர்ந்து விடும். முகப்பொலிவும் அதிகரிக்கும்.

நகஅழகு:—நகத்தை நீரில் நனைத்து வெட்டினுல் சுலபமாக வெட்டுப்படும். ஹைட்ரஜன் பெராக்சைடு என்னும் திரவத்தில் நனைத்து வெட்டினுல் நகம் அதைவிட மிருதுவாகி வெட்ட மிகமிகச் சுலபமாக இருக்கும். ஹைட்ரஜன் பெர்ஆக்ஸைடு இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கும். நகத்தை இவ்விதம் வெட்டிக் கீழ்க் கண்டவிதம் நகக்களிம்பு தயாரித்து இரவு நேரத்தில் நகங்களில் பூசிவரவும். இவ்விதம் செய்து வந்தால் நகம் மிகமிருதுவாகவும், பளபளப்பாகவும், அழகாகவும் இருக்கும்.

வெள்ளை வாஸ்லின் (White Vaseline) 4 அவுன்ஸ், சோப் அரை அவுன்ஸ் இரண்டையும் உருக்கி ஒன்ருக்கி அதோடு வாசனைக்குச் சிலதுளி ரோஸ் அல்லது வேறு அத்தர் சேர்த்துக் கொள்ளவும். இதுதான் நகக்களிம்பு.

சாந்துப் பொட்டு:— 1. வாஸ்லினை (Vaseline) தொட்டு வைத்து அதன் மேல் செந்தூரத்தைத் தொட்டு பொட்டு வைக்கலாம்.

2. கருவக் கோந்து ஒரு தோலா, ஜலம் அரை வீசம் படி, ரோஸ்வாடர் அரை வீசம் படி, செந்தூரம் (Red-lead) பத்து தோலா எடுத்து முதலில் கருவக் கோந்தை ஜலத்தில் கரைத்துக் கொள்ளவும். பிறகு அதில் ரோஸ்வாடர், செந்தூரம் இரண்டையும் கலந்து கொள்ளவும். இதைச் சொந்தத்துக்காகவும் தயாரிக்கலாம். தயாரித்து பாட்டில்களில் அடைத்து லேபில் ஒட்டி வியாபாரமும் நடத்தலாம்.

3. கார்மைன் (Carmine) — 15 பங்கு, கருவக் கோந்து தூள் — 5 பங்கு இரண்டையும் கலுவத்தில் இட்டு வேண்டிய ரோஸ்வாடர் விட்டு நன்ருகக் கடைந்து கொள்ளவும். இச் சாந்துப் பொட்டு மிக உயர்வாகவும், மணமாகவுமிருக்கும். சொந்தத்துக்காவும் தயாரித்துக் கொள்ளலாம். பாட்டில்களில் நிரப்பி அழகாக லேபில் ஒட்டி விற்பனையும் செய்யலாம். கார்மைன் கடைகளில் கிடைக்கும்.

"வேரும் விளைவும்"

சேதி

நிமிர்ந்த நளினாவின் கண்களைப் பார்த்தாள் கமலி. அவள் உள்ளத்தில் நெருப்புச் சுட்டது போல் இருந்தது. தங்கையின் கன்னத்தில் இறங்கியது கமலியின் பார்வை. மனம் துடித்துப் புரண்டு அழ ஆரம்பித்து விட்டது.

"அடி என் கண்ணே" என்று அலறியவள் குழந்தையின் பையைக் கையில் வாங்கிக் கொண்டாள். நளினி அவள் அறியாமலேயே அக்காவின் மடியில் ஏறி யிருப்பதையும் அவள் தன் முகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பதையும் பார்த்தாள்.

"என்ன அக்கா?"

நான் அல்லவா இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும் என்று 'தனக்குள்' ஒரு வசனத்தை உதிர்த்துவிட்டு "யாரம்மா அடித்தார்கள்?" என்ற கேள்வி ஒன்றைச் சுண்டினாள்.

நளினியின் உள்ளம் சுருங்கிற்று. ஒரு பிரகாசம் எழுந்தது; மீண்டும் மலர்ந்தது. கன்னத்தில் கன்னல் ஏற்பட அடித்தவள் அகல்யா. கன்னம் சிவக்க, கண்ணும் நீருகுத்துச் சிவந்ததுண்டு. அதைச் சொல்ல வில்லை அவள். "வாத்தியார்..." என்று ஆரம்பித்த சொல் வாக்கியமாக வளரவில்லை. அதற்குள் கமலியிடம் எழுந்த கோபம் அதன் வளர் சக்தியை அணைத்து விட்டது.

"எந்த வாத்தியாரடி?"

நளினி யோசித்தாள். மலையைவிட்டு இறங்கிய ஆறு ஓடித்தான் ஆக வேண்டும். தடையிருந்தாலும் வெட்டிவிட ஆள் இருக்கும் போது?

"எங்க கிளாஸ் வாத்தியார்?" அவர் தான் அன்று கோபம் காட்டியவர்.

"யாரு? அந்தச் சோகையா?"

நளினி "மின்சாரத் தூக்கி"யில் ஏறுவது போல் ஏறியிருந்தாள். அதே போல பூமிக்கும் வந்து விட்டாள். அந்த "ஷாக்" தீரும் சமயம் ஓர் இடி இடித்தது. மின்னல் நொடித்தது. பிறகு இருட்டு.

இடியின் வார்த்தைச் சப்தத்தை நளினி மட்டும் இல்லை; உடல் நலத்தை வியாதியிடம் போராடவிட்டுக் கட்டிலைச் சரண் அடைந்திருந்த அவள் தாயும் கேட்டாள். "அம்மா! நளினி கன்னத்தைப் பார்த்தாயோ! போ நளினி, காட்டு"

பிறகு மின்னல் நொடித்ததில் கமலி மறைந்து விட்டாள்.

"என்னடி நளினி?" என்று கேட்டாள் தாய் தன் குழந்தையைப் பார்த்து. நளினி சற்று விழித்த விழியில் அவள் மூளையின் சாவி முறிந்து விட்டதோ என்று ஐயமாயிருந்தது. நிலைமைக்கு வந்தவுடன் அவள் சொன்னாள்.

"உபாத்தியாயர் அடித்தார் என்றேன். அக்கா எங்கேயோ போய் விட்டாள்" என்று சொன்னாளே தவிர நளினியின் மனதை ஒரு பயம்

கவ்விக் கொண்டிருக்கிறது என்பது தாய்க்குத் தெரிந்து விட்டது.

"அடித்தாரா? அடித்தால் என்ன? அதற்கு இவள் எங்கே ஓடினாள்?" அது கிராமம். இன்னும் ஆசிரியர்களுக்குக் கொஞ்சம் சலுகை இருந்துதான் வந்தது. அதுவும் படிக்காததால் குழந்தையை அடித்துக் கன்னத்தில் இரண்டு விரல் தழும்புகள் புடைக்கச் செய்வது கண்டிக்கத்தக்க விஷயமே என்று கருத ஆரம்பிக்கவில்லை. அதுவும் ஓர் இளம்பெண் நடுப்பகல் பனிரெண்டு மணிக்குச் சென்று கண்டிக்கலாம் என்ற நிலைக்குத் தகுதி பெறுமளவு அது கெட்ட காரியம் என்று அவள் மனது ஒப்பவே இல்லை. அதற்குள் நளினி போட்டபோடு, பெண் போனது சரியல்ல என்றிருந்த சந்தேகப் பாம்பின் தப்புத்தான் என்ற படத்தையே எழுப்பிவிட்டது.

'அம்மா, நிசமாக வாத்தியார் அடிக்கலையம்மா!'

'என்னடி சொல்றே நீ?'

'ஆமாம் அம்மா, அகல்யாவுக்கும் எனக்கும் சண்டை. அவள் பின்னலைப் பிடித்து நான் இழுத்தேன். சௌரி வந்துவிட்டது....!"

தாய் இவள் செய்த பிசகைக் கண்டிப்பாளா; அல்லது பெரிய பெண் செய்யப் போயிருக்கிற பிசகுக்குத் தான் என்ன செய்வாள்? பல மிழந்த பாலம். வெள்ளம் சேர்ந்து வந்தவுடன் தலையும் மிஞ்சிவிட்டது 'நீங்கள் எப்படியாவது போங்கள்' என்று சொல்லிய அவள் தன் உடலைக்கட்டிலுக்கும் மனதை எண்ணமற்ற நிலைக்கும் ஒப்பிவித்து விட்டாள்.

* * * *

கமலி மிராசுதார் மீனாட்சி சுந்தரத்தின் மூத்த மகள். கிராமத்தில் இருந்தாலும் மிராசுதார் முற்போக்கு எண்ணமுடையவர். இரண்டே பெண்களானபடியால் பையன் பிறக்காத குறையை அவர் பெண்களைப் படிக்க வைத்துத் தீர்க்கலாம் என்று எண்ணினார். பெண்களோ துணிவும் முனைப்பும் கொண்டவர்களாய் வளர்ந்து அவர் விருப்பத்துக்கு அளவுக்கு மீறியே உணவு தர ஆரம்பித்தார்கள்.

அத்தை வீட்டில் இருந்து எஸ். எஸ். எல், ஸி டரீக்ஷை எழுதி முடித்த கமலி ஊருக்கு வந்து மூன்று மாதங்களாகின்றன, வாய்க்கால் கரையில் வளரும் காணுவாழைச்செடி போன்று தள தளப்புடனும், செழுமையாய் வளர்ந்த கீரைத் தண்டுபோல் இனிய சதைப் பிடிப்புடனும் வளர்ந்துவிட்ட அவளுக்கு மணம் செய்துவிடவேண்டும் என்று விரும்பினாள் தாய். 'பார்த்துக்கொள்ளலாம் அம்மா!' என்றாள் பெண்.

தந்தை மட்டும் ஒன்றும் பேசவே இல்லை, அவர் வழக்கம் அது.

அந்தப் பெண் தான், கமலி, ஓடினாள் ஆத்மநாதன் வீட்டுக்கு. அவள் பெண்ணுள்ளம் உடைசல் கண்ணாடி கீறி ரத்தம் ஓடும் உருண்ட

இளம் பெண் கை என விரிந்து போய் விடும் நிலையிலிருந்தது. தங்கையின் பால் கொண்ட அன்பு அடிபட்ட பாம்பு போல் சீறி எழுந்தது. அநியாயத்தைக் கண்ட வீரம் கனல்வது போல் கனன்று வீசிற்று அவள் பெண்ணுள்ளம். அவள் துணிவு போர் முரசு கொட்டிற்று.

அவள் வேகமாகப் போனாள். அவளை விட வேகமாய்ப் போயிற்று அவள் மனம். அதையும் தோற்கச் செய்தது கற்பனை. இந்தப் பந்தயத்தில் வெற்றி கொண்டாட முன் அச்சாரம் கொடுத்தது கோபம் தான்.

பிடித்துக் கேட்கிற கேள்வியிலே அந்தச் "சோகை" அப்படியே...! வெட்கத்தால் உடல் சிவக்க, பயத்தால் உடனே வெளிறக் குழறிப் பேசித் திணறி நிற்கும் அந்த ஆசிரியரின் கற்பனை உருவத்தைக் கண்டு அவள் மனது 'பரிதாபப்படட்டுமா!' என்று கூட மனுப் போட்டுக் கேட்டது. ஆனால் கோபமோ அந்த மனுவைக் கிழித்தும் போட்டுவிட்டு 'டிஸ்மிஸ்' என்ற உத்தரவையும் போட்டு விட்டது.

அடுத்த தெருவில் தான் இருந்தது ஆசிரியர் ஆத்மநாதன் வீடு. ஓடினவள் புயல் போல் ஏறினாள் வீட்டுக்குள். அது கூரை வீடு. கூரையைப் பார்த்தவுடன் அது அவள் சுயமதிப்பு எண்ணத்தைக் கேலி செய்தது. அதற்கு அஞ்சவில்லை அவள். படியேறினாள். சாத்திருந்த கதவு அவள் கால்பட்டும் அதை ரசித்துக் கொண்டிருந்து விட்டது: நகரவில்லை. கை கொடுத்துத் தள்ளினாள். காலாலேயே உதைக்கலாம் என்று குறை கூறுவது போல் கிரீச்சிட்டுக் கொண்டு திறந்தது வாசற் கதவு. உள்ளே காலடி எடுத்து வைத்தவள்

"யார்? என்ற சத்தம் கேட்டு நிமிர்ந்தாள்.

"அண்ணா இன்னும் பள்ளிக்கூடத்திலிருந்து வரவில்லையே. அண்ணாவைத் தானே பார்க்க வேண்டும் உங்களுக்கு!" என்ற குரலுக்கு உரியவனை அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

ஆண் குரலுக்கு இவ்வளவு இனிமையும் உண்டா? என்று சந்தேகப்பட்ட கமலியின் பெண் மனம் அந்த ஆணுருவத்தின் கட்டழகைக் கண்டு வலு விழந்து படுத்து விட்டது!

கையிலே சீப்பு, தலையிலிருந்து வடியும் நீர், உருண்டு திரண்டு குண்டு குண்டாய் வலு வேறி முறுகி நிற்கும் கைகளை அழகு படுத்தி வெளிக்

காட்டும் முண்டாப் பனியன், மடித்துக் கட்டிய நான்கு முழ வேஷ்டி, உருண்டு திரண்ட கணுக் கால்கள்— ஆம் இவ்வளவையும்— அவள் அப்பொழுதே பார்க்கவில்லை. அவள் கண்கள் தான் படம் எடுத்து பிடித்துக் கொண்டன.

திகைத்து நிற்கும் இளம் பெண்ணைக் கண்டதும் தியாகு உள்ளே திரும்பி, "மன்னி யாரோ வந்திருக்கிறாள் பார்! என்று சொல்லிவிட்டு அப்படியே உள்ளுக்குள் நகர்ந்துவிட்டான்.

திகைப்புப்பூண்டு என்று ஒன்று உண்டாம். அதை மிதித்தால் அப்படியே திகைப்பு ஏற்பட்டு நின்று விடுவார்களாம். எதிரெதிரான இரண்டு ஆற்றல்கள் ஒரு பொருளைத் தாக்கினால் அந்தப் பொருள் நகராது. காற்றில் அடித்து வரும் பஞ்சு கல்விடுக்கில் வந்து தொத்திக் கொள்ளும், படபடக்கும், திமிரும், ஆனால் நகர மட்டும் முடியாது. ஓடிவரும் நீரோட்டத்தைக் குறுக்கே கிடக்கும் கல் அணையிடும். பேலே மேலே நீர்வரும்; கல் நகர்ந்தால் அல்லவா ஓட்டம் மீண்டும் தொடங்க!

நின்றவள் மெதுவாக ஓரக்கண்ணால் பார்த்தாள். இருட்டு உள்ளில் இரண்டு கண்கள் ஒளியிட்டன. தலையைக் குனிந்தவள் அந்தப்பார்வை தலையையும் குடைவதாக எண்ணினாள். குடைந்து கனத்தையே எடுத்து விடுமானால் நல்லதுதான்!

தோல்வி எண்ணம் உடலில் படபடப்பாய் மாறிற்று, வியர்வைநீரால் உருஎடுத்தது. கடைசியில் தலைவலியாய் ஏறி அமர்ந்தது. போதாதற்கு அந்த உருவம் எழுப்பிய புயல் அவள் பெண்ணுள்ளத்தின் புதிராய் எழும்பி அந்த வலிக்கும் வலுவூட்டிற்று.

நிமிர்ந்து எதிரே பார்த்த அவள் அந்த அம்மாள் இடுப்பில் குழந்தையுடன் வருவதைக் கண்டாள்.

பட்டணத்தில் பழகிய பெண்ணா, 'நமஸ்காரம்' என்றாள், "நான் நளினியின் அக்கா!" என்று அறிமுகம் செய்து கொண்டே.

"வா அம்மா! நான் இரண்டுநாளாயிற்று வந்து. உங்கள் வீட்டுக்கே வரவேண்டும் என்ற ஆசை!" என்று சொன்னவள் தன் மைத்துனனிடம், "பார்த்தாயா தியாகு பெரிய மனிதர்கள் பெரிய மனிதர்கள்தான். பார்த்து விட்டுப்போக வந்திருக்கிறாள் பார்!" என்றாள்.

அதற்கப்புறம் நடந்தது பேச்சு. அது நமக்கு எதற்கு? போனசுவடு தெரியாமல் திரும்பி வந்தாள் கமலி. ஆனால், அவள் மனதில் மட்டும் ஏதோ ஒன்றின் சுவடு ஏற்பட்டு அரிக்க ஆரம்பித்துவிட்டது.

வீடு நெருங்க நெருங்க கமலியின் உள்ளம் ஒரு பக்கம் வலித்தது, ஒரு பக்கம் அரித்தது. சை! அந்தப் பிள்ளை என்ன அப்படிப் பார்க்கிறார்? தியாகு, தியாகுவாமே அவர்பேர். தித்திக்கிறதே!

"சோலைக்குத் தம்பியா அவர். அந்த அம்மாள் அவர் மனைவியா? எவ்வளவு பதவிசாகக் இருக்கிறாள்? கூரை வீடானாலும் எவ்வளவு அழகாக இருக்கிறது வீடு!

அந்தப் பையனைச் சுற்றியெழுந்த எண்ணம் எல்லாமே இனித்தது அவளுக்கு. அந்த இனிப்பில் அவள் தன் கசப்பு மாத்திரையையும் விழுங்கி விட்டாள்.

வரும்போதே நளினி எதிர்ப்பட்டாள். "அக்கா நீ அவசரம்–வாத்தியார் அடிச்சார்னு...!"

"சரிதான் போ! வாத்தியார் அடிச்சா என்ன? அடிக்கப் படாதா?" என்றாள். நளினி எப்படி மேலே பேசுவாள்?

இருந்தாலும் சொன்னாள். "அக்கா–அந்த வாத்தியார், அப்பாவிடமும் அம்மாவிடம் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் அடிக்கல்லே அக்கா, அகல்யா அடித்தாள். நீ அவரிடம் கேட்டு வைக்காதே. கேட்டுட்டியா அக்கா?"

கமலி அந்த உபாத்தியாயரிடம் பேசும் நிலையிலா இருந்தாள். அறைக்கு அருகே வந்தாள்.

அவள் பேர்தான் அடிபட்டது. இடையிலே தியாகு என்ற பெயரும் கேட்டது. ஆம்! அவர்கள் அவளையும் தியாகுவையும்தான் பிணைத்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

பிறகு பி. ஏ. முதல் வகுப்பில் பாஸ் செய்த தியாகுவுக்கும், கமலி (எஸ். எஸ். எல். சி.)க்கும் அந்த ஊரிலேயே கலியாணம் மிக விமரிசையாய் நடந்தது. அதற்கு முன் ஜாதகப் பொருத்தம் கண்ட பெரியவர்கள் பெண்ணும் பையனும் பார்த்துக்கொள்ளட்டுமே என்று சொன்னபோது தியாகு முதலில் வேண்டாம் என்றானாம். அவன் மன்னிதான் "தியாகு அன்று அந்தப் பெண் வெயிலில் வந்தது. ஒரேயடியாகத் திகைத்து நின்ற சமயத்தில் பார்த்தாய். மலரைச் செடியில் பார்; குளிர்ந்த நேரத்தில்!" என்றாளாம்.

அவர்கள் அன்று பார்த்த பார்வையில் என்ன அர்த்தம் இருந்தது என்று யாருக்கும் தெரியவில்லை. முதல்முறை பார்க்கும் திகைப்புமட்டும் இல்லை என்று எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள்.

நளினி சில சமயம் "ஏ காந்தாரி!- "சோகை" எப்படி இருக்கிறது?" என்று கேட்கிறாள் மிகவும் ரகசியமாக. கேட்டுவிட்டு அவள் சிட்டாய்ப் பறந்து விடுகிறாள். "ஏ, கழுதை!" என்று கத்திவிட்டு கமலி பிடிக்க ஓடுகிறாள்.

நளினி மட்டும் கையில் அகப்படுவதேயில்லை! ★

சிரித்த செந்தாமரை

ஏ. சுப்பையா

1

சுகுணாவின் மகள் லீலாவை, சிவலிங்கத்திடமிருந்து எடுத்துச்சென்ற கர்ணம் கந்தசாமி பிள்ளை நேராக மதுரையிலிருக்கும் தனது சகோதரியின் வீட்டிற்குச் சென்றார். லீலாவை சகோதரியிடம் ஒப்படைத்து விட்டு ஒன்றும் தெரியாதவர் போலத் தனது கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்.

அதற்குள் கந்தசாமிப் பிள்ளையை இரண்டு மூன்று தடவைகள் தேடிச் சென்ற சேவகன் செல்லையா, அவரிடம்வந்து தாசில்தார் கையோடு அழைத்துவரச் சொன்னதாகக் கூறி அவரைப் பார்த்தசாரதியிடம் கூட்டிச் சென்றான்.

லீலாவின் இருப்பிடத்தை அறிவதற்கு கந்தசாமிப் பிள்ளையை மிரட்டினார் பார்த்தசாரதி. தந்திரமாகவும் பேசிப் பார்த்தார். ஆனால் கந்தசாமிப் பிள்ளை அசைந்து கொடுக்கவில்லை.

"பிள்ளை! இந்தநிமிஷத்தில் உம் வயிற்றிலடிக்க என்னால் முடியும். நீர் என் அதிகாரத்தின் கீழ் இருக்கிறீர். சென்ற அறுவடையில் நீர் எவ்வளவு லஞ்சம் வாங்கினீர் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். அதைவைத்தே உம்மைச் சிறைக்குள் தள்ளிவிடுவேன். அந்தக் குழந்தையை நீர் என்னிடம் ஒப்படைத்துவிட்டால் நீர் சங்கடத்துக்கு ஆளாகாமல் தப்பலாம். என்ன சொல்கிறீர்?" என்றார் பார்த்தசாரதி.

லீலாவைக் காப்பாற்றுவதற்காகத் தன் வேலையைஇழப்பதற்கும், சிறைவாசம் அனுபவிப்பதற்கும் தயாராகி விட்டார் கந்தசாமிப் பிள்ளை. எனவே, "ஸார்! குழந்தை லீலா என்னுடைய கண்காணிப்பில் தான் இருக்கிறாள். ஆனால் நான் அவளை உங்களிடம் தரமுடியாது. இவ்வளவு நேரம் நீங்கள் பேசிய தோரணையிலிருந்து உங்களுடைய உத்தேசம் என்னவென்பதையும் நான் ஓரளவு உணர்ந்து கொண்டேன். உங்களால் முடிந்ததை நீங்கள் செய்யலாம். நான் போய் வருகிறேன்" என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினார்.

நான்கு தினங்களுக்குள் கந்தசாமிப் பிள்ளையின் மீது லஞ்ச வழக்குத் தொடரப்பட்டு, வழக்கின் முடிவில் இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனையும் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

11. புலிக்குகையில் மான்

தியாகராயநகரில் ஒரு பங்களா. பிரபல பாடகியான தனலட்சுமியின் பங்களா தான். அதன் மாடியில் ஒரு சிறிய அறையில் படுத்திருந்தாள் சுகுணா. அவள் முகம் வாடி வதங்கிப்போயிருந்தது. அவள் கட்டியிருந்த புடவையும், படுத்திருந்த பாயுங்கூட பார்வைக்கு அவ்வளவு நன்றாகயில்லை.

சுகுணா அந்த வீட்டில் காலடி வைத்து சுமார் இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. அதற்குள் ஓரளவு பாடுவதற்கும் பயின்றிருந்தாள். உண்பதற்கு ஒருவிதமான குறைவும் கிடையாது. இருந்தாலும் அவளது வாழ்க்கை ருசியற்றதாக இருந்தது.

தனலட்சுமியின் வாழ்க்கைமுறை, முலாம் பூசிய நகைகள், அலங்காரம், அற்பர்களின் சகவாஸம் இவை யாவும் சுகுணாவை மிகவும் புண்படுத்தின. அதனால் அங்கிருந்து ஓடிவிடலாமா என்றுகூடப் பலதடவைகள் அவள் நினைத்ததுண்டு. ஆனால் அவள் சுலபமாக ஓடிவிட முடியாத நிலையில் வைக்கப்பட்டிருந்தாள்.

சுகுணாவைத் தன்வழிக்குக் கொண்டு வருவதற்காக தனலட்சுமி எவ்வளவோ முயன்றாள். அழகான பட்டுப் புடவைகள் கொடுத்துக் கட்டிக்கொள்ளும்படிச் சொன்னாள். விதவிதமான தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்தாள். அங்கு வருகிறவர்களுக்குப் பாடிக் காட்டும்படி வேண்டினாள். ஆனால் சுகுணா, எதற்கும் உடன்பட

வில்லை. எனவேதான் அவளைக் கட்டுக்காவலில் வைத்தாள் தனலட்சுமி.

எப்படியும் இன்னும் சிறிதுகாலத்திற்குள் சுகுணவைச் சரிகட்டிவிலாம் என்பது தனலட்சுமியின் நம்பிக்கை. அதற்கு நேர் விரோதமாக அங்கிருந்து தப்பி ஓடுவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் சுகுண.

ஒருநாள் தனலட்சுமியின் நண்பர்களில் ஒருவரான கண்டிராக்டர் கண்ணப்பன் அங்கு வந்தார். அவர் தனலட்சுமிக்கு மிகவும் உரித்தானவர்



நீண்டநாள் நண்பர் என்றாலும் தனலட்சுமியின் முதுமைப் பருவம், கண்ணப்பனுக்கும் அவளுக்கும் உள்ள பிணைப்பை அறுத்துக்கொண்டிருந்தது. முழுவதும்அறுந்து விட்டால் அன்றாட வாழ்க்கைக்கே தாளம் போடவேண்டுமே என்ற பயத்தினால் மீண்டும் அந்தப் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு சுகுணாவைக் கருவியாகப் பயன்படுத்தும் நோக்கத்தோடுதான் தனலட்சுமி கண்ணப்பனை வரவழைத்திருந்தாள்.

கண்ணப்பன் சோபாவில் அமர்ந்திருந்தார். ஒரு வேலைக்காரன் அவருக்கு விசிறினான். தனலட்சுமி, சுகுணாவின் கையில் வெற்றிலைத் தட்டைக்கொடுத்து கண்ணப்பருக்குக் கொடுக்கும்படி அனுப்பினாள். சுகுணாவைக் கண்டதும் கண்ணப்பரின் பற்கள் வெளியே தெரிந்தன. வெற்றிலைத் தட்டை வாங்கும் தோரணையில் அவள் கையையும் சேர்த்துப்பிடித்தார். சுகுணா சடாலென்று தட்டைக் கீழே போட்டு விட்டு உள்ளே ஓடிவிட்டாள்.

அன்றையதினம் சுகுணாவைத் தனலட்சுமி பேசிய பேச்சுக்கள் கொஞ்ச நஞ்சமல்ல. மானத்தை இழப்பதா அல்லது உயிர் மாய்த்துக் கொள்வதா என்ற இரண்டே கேள்விகள் தான் இறுதியில் அவள் முன்னிலையில் நின்றன. அந்த பங்களா அவளுக்கு நாசமாகிவிட்டது.

இரவு முழுவதும் சுகுணா தூங்கவில்லை. அன்று அவள் சாப்பிடவுமில்லை. கடந்த கால சம்பவங்கள் அடுக்கடுக்காக அவள் மனத்திரையில் தோன்றி மறைந்தன. அப்பப்பா! எவ்வளவு கஷ்டங்கள்? என்னென்ன துன்பங்களையெல்லாம் அவள் சகித்துக்கொள்ள வேண்டியிருந்தது? இந்த நிலைமை யார் செய்த குற்றத்தின் விளைவு? தனக்குப் பால்ய விவாகம் செய்வித்த தன் பெற்றோர்களைத் தான் அவளால் சபிக்க முடிந்தது.

இடையிடையே தனது மகள் லீலாவைப்பற்றிய எண்ணமும் சுகுணாவின் உள்ளத்தில் எழுந்தன. அதைத் தொடர்ந்து பார்த்தசாரதியின் உருவமும் அவள் மனக்கண்ணில் தோன்றின. அவள் உள்ளம் குமுறிற்று. கண்ணீர் அருவியெனப் பெருக்கெடுத்து வழிந்தது. அந்தக் கண்ணீரைத் துடைப்பதற்கோ அல்லது அவளுக்கு ஆறுதல் சொல்வதற்கோ யாருமில்லாததால் கண்ணீர் ஓட்டம் தானாகவே வறண்டுவிட்டது.

சகல துன்பங்களிலிருந்தும் தப்புதவற்கு ஒரே வழி சாவுதான் என்று சுகுணா முடிவு செய்தாள். அந்த வினாடியிலேயே தனது முடிவை நிறைவேற்றி விடவேண்டும் என்று உறுதிப்படுத்திக் கொண்டு ஒரு முழக் கயிறுக்காக அறை முழுவதும் தேடினாள்; கிடைக்கவில்லை. போர்த்திக் கொள்வதற்காக அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த போர்வையை எடுத்தாள். கட்டிலின் மீதேறி, முகட்டிலிருந்த ஒரு கொண்டியில் போர்வையின் ஒரு தும்பை முடிந்து, நன்றாக முறுக்கிக் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு, கட்டிலிலிருந்து கீழே குதித்துவிட்டாள்!

பூமியில் தடாலென்று ஒரு சத்தம் சுகுணா கீழே கிடந்தாள். ஆனால் அவள் சாகவில்லை. போர்வை மிகவும் நைந்து போயிருந்ததால் அவளது பாரத்தைத் தாங்காமல் அறுந்து விட்டது. அப்படியே சிறிதுநேரம் அதிர்ச்சியுற்றுக் கிடந்தாள் அவள்.

சுகுணா மரணத்தை விரும்பினாலும் மரணம் அவளைக் கண்டு பயப்படுகிறதே! சரி இன்னும்

உலகத்தில் அவள் செய்யவேண்டிய காரியங்கள் பாக்கியிருக்கின்றன. என்று மனதைத் திடப் படுத்திக் கொண்டு எழுந்தாள். அறைக்கு வெளியே வந்து மொட்டை மாடிக்குச் சென்ருள். மாடியிலிருந்து கீழே எட்டிப்பார்த்தாள். பக்கத்து வீட்டின் முகடு பத்தடிக்குக் கீழே தென்பட்டது. புடவையை வரிந்து கட்டிக் கொண்டு மாடியிலிருந்து குதித்து விட்டாள் சுகுணு.

12. எதிர்பாராதது

முத்தையா ஒரு சட்டக் கல்லூரி மாணவன். ஏழைக் குடும்பதில் பிறந்தவனுதலால் தடபுடலான வாழ்க்கைக்கு வழியில்லை. தியாக ராய நகரில் ஒரு வீட்டின் மாடியில், பிரம்புப் பாய்களினுல் சிருஷ்டிக்கப்பட்டிருந்த ஓர் அறை யில் வசித்துவந்தான். காலொடிந்த ஒரு மேஜை.

மேஜையின் மீது ஒரு மண்ணெண்ணெய் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அந்த வெளிச் சத்தின் உதவியால் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான் முத்தையா.

அப்பொழுது அங்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. முத்தையா திடுக்கிட்டு, புத்தகத்திலிருந்த கண் களை வாசற்பக்கம் திருப்பினுன். ஒரு பெண், பைத்தியம் பிடித்தவள்போல ஓடிவந்து அந்த அறைக்குள் நுழைந்தாள். அவளது உடலெல் லாம் நடுங்கிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்த அவனது உடலும் நடுங்க ஆரம்பித்துவிட்டது. வாய்விட்டு அலறிவிடலாமா என்றுகூட ஒரு கணம் நினைத்தான். பின்பு மனதைத் திடப் படுத்திக்கொண்டு அந்தப் பெண்ணை உற்று நோக்கினுன்.

அவள் அதிரூபவதியாக இருந்தாள். அறைக் குள் நுழைந்ததும் கதவைச் சார்த்திக்கொண்டு முத்தையாவை நோக்கி, "அண்ணு! என்னைக் காப்பாற்றுங்கள். நான் ஓர் ஆபத்திலிருந்து தப்பி வந்திருக்கிறேன்" என்ருள் அவள்.

"ஆபத்தா என்ன?"

"என்னை ஒரு வீட்டில் அடைத்து வைத்திருந் தார்கள். நான் அங்கிருந்து ஓடிவந்துவிட்டேன். கொஞ்சம் பொறுங்கள். நான் எல்லாம் விவர மாகச் சொல்கிறேன்" என்று கூறிக்கொண்டே உட்காருவதற்காக அங்குமிங்கும் பார்த்தாள் சுகுணு.

"இங்கு வேறு யாருமில்லையா" சுகுணு கேட் டாள்.

"இல்லை நான் தனிமையாகத்தான் இருக்கி றேன்" என்ருன் முத்தையா. சுகுணு, அப் பப்பா!, என்று பெருமூச்சு விடுத்தாள். "இன் னும் யாராவது வந்து என்னை வெளியே அனுப்பிவிடுவார்களோ என்று பயந்தேன்...... உம்......அண்ணு! இன்றிரவு மாத்திரம் இங் கேயே நான் படுத்துக்கொள்வதற்கு இடம் தர வேண்டும். நான் ஆதரவற்றவள். ஒரு தாசி யின் கையில் தெரியாமல் மாட்டிக்கொண்டு விட்டேன். அவள் என்னைப் படாதபாடு படுத்தி ஓர் அறையில் பூட்டி வைத்திருந்தாள்."

"அங்கிருந்து அவளுக்குத் தெரியாமல் ஓடி வந்து விட்டாய், இல்லையா?"

தலையசைத்தாள் சுகுணு. "நான் அனுதை. நாளைக்காலையில் எங்காவது போய் விடுகிறேன்" என்று கெஞ்சும் பாவனையில் வேண்டினுள்.

"உன் பெற்ருேர்கள், சகோதரிகள், கணவர் யாருமே......?"

"இல்லை. எட்டுவயதில் கணவனை இழந்தேன். என் பெற்ருேர்களும் காலமாகி விட்டனர்."

"பாவம்!. உன் பெயரென்ன?"

"சுகுணு."

"நீ இரவில் இங்கிருப்பதால்......?"

"யாராவது உங்களை அவதூருகப் பேசுவார் களோ என்று பயப்படுகிறீர்களா?"

"இல்லை. என்னைப்பற்றி எனக்குப் பயமில்லை. ஆனல் உன்னைத்தவருகக் கருதுவார்களோ என்று தான் தயங்குகிறேன்."

"சுகுணு! சமுதாயத்தின் அவதூறுக்குப்பயந்து நான் செத்தகாலம் மலையேறி விட்டது. என் னுல் உங்களுக்கு ஏதாவது தீமை ஏற்படாதிருக் வேண்டும். அதனுல்தான் பொழுது விடிவதற்குள் நான் போய்விடுகிறேன் என்று சொல்கிறேன்."

முத்தையா, வாலிபன்தான் என்ருலும் உயர்ந்த பண்பாடுடையவன். மன உணர்ச்சிகளுக்கு அடி மையாகும் அற்பனல்ல. ஆகவே, "சரி நீ உன் விருப்பம்போல இங்கேயே படுத்துக் கொள்ள லாம்" என்ருன்,

சுகுணு அவனுக்கு நன்றி தெரிவிக்கும் முறை யில் கை கூப்பி வணங்கினுள்.

"நீ ஏதாவது சாப்பிட்டாயா?" முத்தையா கேட்டான்.

"ஆம் நேற்றுக்காலையில் சாப்பிட்டேன்."

அந்தப் பதிலில் தானுகவே சிரித்து விட்டான் முத்தையா. எழுந்து சென்று தகர டப்பாவிலி ருந்த ஒரு பாத்திரத்தை எடுத்துவந்து அவள் முன்னுல் வைத்து "இதில் கொஞ்சம் சாதம் இருக் கிறது, சாப்பிடு. பால் கொஞ்சம் வைத்திருக்கி றேன், அதை உனக்கு 'டீ' போட்டுத்தருகிறேன்" என்று சொல்லி அடுப்பின் பக்கம் சென்ருன்.

சுகுணு, "வேண்டாம்! நான் டீ தயாரித்துக் கொள்கிறேன். நீங்கள் நிம்மதியாகப் படியுங் கள்" என்ருள்.

முத்தையாவின் மனம் படிப்பில் நிலைகொள்ள வில்லை. சுகுணுவை எங்கே, எப்படிப் படுக்கச் சொல்வது என்ற சிந்தனையில் மூழ்கியிருந்தான். அன்று வரையில் பிற பெண்களிடம் பேசும்படி யான அவசியமோ அல்லது சந்தர்ப்பமோ அவ னுக்கு ஏற்பட்டதில்லை. அன்று ஒரே அறையில் அவளுடன் படுக்கவேண்டியிருந்தது. என்னசெய் வது? எப்படியும் அவள் படுப்பதற்கு ஒருபாய், தலையணை கொடுக்கவேண்டுமே,எங்கேபோவது?

பசி ஓரளவு தணிந்து விட்டதால் சுகுணாவின் கண்களும் தூக்கத்தை நாடின. இந்த அறையில் முத்தையாவோடு தனிமையாகப் படுத்திருக்கவேண்டும். என்பதைப்பற்றி அவள் சிறிதும் கலங்கவில்லை. ஏனெனில் முத்தையாவின் நிர்மலமான முகம், அறிவொளி வீசும் கண்கள், கள்ளங் கபடமற்ற பேச்சு வார்த்தைகள் யாவும் 'அவன் நல்லவன்' என்பதை அவளுக்கு உணர்த்தின. எப்படித் தன் சொந்த வீட்டில் தனது சகோதரனோடு இருப்பாளோ அதேபோல முத்தையாவையும் அவள் கருதினாள். என்றாலும் வெட்கமும் ஒரு புறம் ஏற்படத்தான் செய்தது.

என்ன செய்வதென்று தெரியாமல் சுகுணாவும் அடிக்கடி முத்தையாவை நோக்கினாள். அவனும் அதேபோல சுகுணாவைப் பார்த்தான். காலம் ஓடிக்கொண்டேயிருந்தது. திருட்டுத்தனமாக ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டிருந்ததில் தற்செயலாக இருவரது கண்களும் சந்தித்து விட்டன. ஒரே சமயத்தில் இருவரையும் வெட்கம் பற்றிக்கொண்டு விட்டது.

சிறிது நேரம் இருவரும் மௌனமாகயிருந்தனர். சுகுணா மெதுவாக, "படுக்க வேண்டாமா?" என்றாள்.

"அதைத்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் முத்தையா.

"என்ன யோசனை?"

"நீ இங்கே படுத்துக்கொள். நான் எனது நண்பனின் வீட்டிற்குப்போய்ப் படுத்துக்கொள்கிறேன்."

"வேண்டாம். அது முறையல்ல."

"ஏன், அதில் தவறென்ன?"

"இப்பொழுது இரவு பன்னிரண்டு மணி இருக்கும். இந்த நேரத்தில் நீங்கள் நண்பரின் வீட்டிற்குப் போவதும், படுத்துக்கொள்வதற்கு இடம் கேட்பதும் அனாவசியமான சந்தேகங்களுக்கு இடமளிக்கும். இரண்டாவதாக, நான் இங்கு வந்ததால் உங்களுக்கு அத்தகைய சிரமத்தை உண்டு பண்ணியதாக ஆய்விடும்."

"அதனால்...!"

"நான் வெளியே-மொட்டை மாடியில் படுத்துக்கொள்கிறேன். நீங்கள் அறைக்குள் படுத்துக்கொள்ளுங்கள்".

"உன்னால் வெளியே தூங்கமுடியாது. பனி அதிகம். நான் வெளியே படுத்துக்கொள்கிறேன்".

இவ்வாறு இருவரும் தர்க்கித்துக் கடைசியில் ஓர் உடன்பாட்டிற்கு வந்தனர். முத்தையா ஒரு பாயையும், போர்வையையும் மாத்திரம் எடுத்துக்கொண்டு வெளியே சென்று படுத்துக்கொண்டான். சுகுணா அறைக்குள், சில பத்திரிகைகளைத் தரையில் விரித்துப் படுத்துவிட்டாள்.

சுகுணா படுத்த சிறிது நேரத்தில் அயர்ந்து தூங்கிவிட்டாள். ஆனால் முத்தையாவுக்குத் தூக்கமே வரவில்லை. அவனது வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த முதல் அனுபவம், பற்பல கற்பனைகளை அவன் உள்ளத்தில் சிருஷ்டித்து அவனது நித்திரையைப் பங்கப்படுத்திக் கொண்டிருந்தது. சந்தர்ப்ப வசத்தால் நேர்ந்துவிட்ட இந்த நிகழ்ச்சிகள் அவர்கள் இருவரும் எங்கே நிற்கிறார்கள், அவர்களுக்கு ஜனங்கள் என்னென்ன பட்டங்கள் சூட்டிப் பாதை வகுக்கப் போகிறார்கள் என்ற சிந்தனை அவனது மூளையை துளைத்துக்கொண்டிருந்தன. பொழுது விடியும் வரையில் அவனது எண்ணச் சுழல்களுக்கு ஒரு முடிவே ஏற்படவில்லை.

பல இரவுகள் சரியான தூக்கமேயில்லாதிருந்த சுகுணா நன்றாகத் தூங்கி பகல் எட்டு மணிக்குத் தான் எழுந்தாள். அதற்குள் ஸ்நான-பானங்களை முடித்துவிட்டுத் தனது படிப்பில் ஈடுபட்டிருந்த முத்தையாவைப் பார்த்ததும் அவளுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

"நீங்கள் இவ்வளவு சீக்கிரம் எழுந்துவிட்டீர்களே! நான் இரவில் எங்கிருந்தேன் என்பதே தெரியாமல் தூங்கிவிட்டேன்" என்று சொல்லிக் கொண்டே முத்தையாவின் அருகில் வந்தாள் அவள்.

"ஏன் அப்படி?" புத்தகத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டான் முத்தையா.

"பல நாட்களுக்குப் பிறகு நான் நேற்றுத்தான் சுகமாகத் தூங்கினேன். சரி, பல் துலக்கிவிட்டு நான் காப்பி போடட்டுமா?"

"நான் குடித்தாய்விட்டது. உனக்கும் அதோ பாத்திரத்தில் மூடி வைத்திருக்கிறேன், பார். நான் வெளியே போகவேண்டும்."

"எங்கே"

"சில மாணவர்களுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுக்கிறேன். அதை முடித்துவிட்டு ஆபீசுக்குப் போகவேண்டும். அப்புறம் கல்லூரிக்குப் போக வேண்டும்."

சுகுணா ஒன்றுமே விளங்காமல் திகைத்தாள். முத்தையா சட்டக் கல்லூரியில் படித்ததோடு ஓர் ஆபீஸிலும் சில மணி நேரங்கள் குமாஸ்தாவாக வேலை செய்தான்; அதோடு சில மாணவர்களுக்கு டியூஷனும் சொல்லிக் கொடுத்தான். இத்தகைய வருமானங்களின் மூலந்தான் அவனது வாழ்க்கையும், சட்டப் படிப்பும் நடைபெற்று வந்தன என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சுகுணா பல் துலக்கிவிட்டுக் காப்பி அருந்தினாள். முன் பின் அறிமுகமில்லாத ஒரு பெண்ணிற்காக அவ்வளவு சேவை செய்யும் முத்தையாவை மனதால் வாழ்த்தினாள்.

முத்தையா வெளியே கிளம்புவதற்கு ஆயத்தமானான்.

சுகுணா அவன் எதிரில் சென்று, "அண்ணா! நான்..." என்று வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினாள்.

"என்ன சுகுணா? சும்மா சொல்?"

"நான் போய் வரட்டுமா?"

"எங்கே போகப் போகிறாய்?"

"போகாமல் இங்கேயே இருப்பதா?"

"எங்கே போவதென்று முடிவு செய்திருக்கிறாய்?"

"என் விதி எங்கே அழைத்துச் செல்லுகிறதோ அங்கே போவேன்."

"இதோ பார்! நீ இப்பொழுதே இங்கிருந்து போய்விட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. போகக் கூடாது என்று உன்னைத் தடுக்கும் அதிகாரமும் எனக்கில்லை. உறவினர்கள் யாருமில்லை என்கிறாய். அதனால் நீ இங்கிருந்து போவதானால் எங்கே போவது என்பதைத் திட்ட வட்டமாக முடிவு செய்து என்னிடம் சொல். அந்த முடிவு சரியென்று எனக்குத் தோன்றினால் சந்தோஷத்தோடு நீ போவதற்கு அனுமதி தருகிறேன். அப்படியில்லாமல் 'நான் எங்காவது போவேன்' என்று நீ சொன்னால் நான் உன்னைப் போக விட மாட்டேன்."

முத்தையாவின் உயர்ந்த-பரந்த குணத்தை எண்ணியதும் சுகுணாவின் கண்கள் கலங்கின. அவளால் பதில் பேச முடிய வில்லை.

"சுகுணா! நீயே சமையல் செய்து கொள்கிறாயா அல்லது ஓட்டலிலிருந்து உனக்குச் சாப்பாடு கொண்டு வரட்டுமா?" என்றான் முத்தையா.

"நானே பண்ணிக் கொள்கிறேன்" என்று சொல்லியவாறு கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் சுகுணா. முத்தையா தன் வேலைக்குப் புறப்பட்டான்.

ஆபீஸை அடைந்தான் முத்தையா. வேலையில் அவனது கவனம் செல்லவில்லை. அன்று வரையில் இயந்திரம் போன்று இயங்கிக் கொண்டிருந்த அவனது சாரமற்ற வாழ்க்கையில், சுகுணா புகுந்ததால் தேனூற்று பொங்கிற்று.

பெற்றோரையும், உடன் பிறந்தவர்களையும் சிறுவயதிலேயே கிராமத்தில் விட்டுவிட்டுப்பட்டணத்தில் படித்துவந்த முத்தையா, அன்னையின் அன்பையும், சகோதர வாஞ்சையையும் அனுபவித்ததில்லை. தன்னந்தனியாக, ஒதுங்கி நின்று அவன் பட்டணத்தில் வாழ்ந்ததால் வாழ்க்கை வறண்ட பாலைவனமாகத்தான் இருந்தது. இன்று அப்பாலைவனத்தில் நீரூற்றாக இருந்தாள் சுகுணா.

எப்படியோ பகற்பொழுதை ஆபீசிலும், சில மணி நேரங்களைச் சட்டக் கல்லூரியிலும் போக்கிவிட்டு மாலையில் வீட்டிற்குத் திரும்பினான் முத்தையா. அறைக்குள் நுழைந்ததும் ஆச்சரியத்தால் அவன் மலைத்து நின்றுவிட்டான்.

அங்குமிங்கும் சிதறிக்கிடந்த புஸ்தகங்கள் யாவும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. காலையில் அலங்கோலமாகக் கிடந்த துணிகள் இப்பொழுது சுத்தமாக மடிக்கப்பட்டு இருக்க வேண்டிய இடத்தில் இருந்தன. அறையிலுள்ள சகல பொருள்களிலும் அழகுத் தெய்வத்தின் ஆசீர்வாதம் மிளிர்ந்தது.

அறையில் சுகுணா இல்லாததால், "சுகுணா!" என்று மெதுவாக அழைத்தான் முத்தையா.

"ஏன்? வந்து விட்டீர்களா?" என்று கேட்டுக் கொண்டே பின் பக்கத்திலிருந்து வந்தாள் சுகுணா. ஏனோ அவளது கண்களில் அப்பொழுது நீர் தேங்கி நின்றது.

அதைக்கண்டமுத்தையா, "சுகுணா! இதென்ன இங்கிருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா!" என்றான்.

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?"

"நீ கண்ணீர் வடிப்பதன் காரணம்?"

"என்னுடைய சரித்திரம் தெரியாததனால் நீங்கள் இப்படிக் கேட்கிறீர்கள். சொல்லட்டுமா?"

"உன் சரித்திரத்தை நீ சொல்ல வேண்டாம். அதை மறந்துவிடு என்கிறேன்."

"சரி, சாப்பிடலாம் வாருங்கள்"

"சாப்பாட்டிற்கு இப்பொழுதென்ன அவசரம். முதலில் உன் மனோநிலை சாந்தமடையட்டும்."

"என் மனத்திலிருக்கும் பாரம் நீங்கும்வரை சாந்தம் எப்படி ஏற்படும், அண்ணா?"

"என்ன பாரம்?"

"நான் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?"

"தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை. நீ ஒரு நல்ல பெண். அது ஒன்றே எனக்கு போதும்."

"நீங்கள் நினைத்திருப்பதுபோல நான் நல்லவளல்ல. மகாக் கொடியவள், துர்பாக்கியசாலி, ஒழுக்கந்தவறியவள்" இவ்வாறு ஆரம்பித்துத் தனது கதை முழுவதையும் விவரித்துக் கூறினாள் சுகுணா.

முத்தையா அவளை வெறுக்கவில்லை; ஆனால் அவள்மீது பச்சாத்தாபம் கொண்டான். "நடந்து போன விஷயங்களை நினைத்து ஏன் அழுகிறாய்?" என்று ஆறுதலும் கூறினான்.

"தங்களுக்கு என்மீது எவ்வளவு இரக்கம் இருக்கிறது என்பதை நான் உணருகிறேன். எப்படியாவது எனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்து என் எதிர்கால வாழ்விற்கு ஒரு வழி வகுத்துக் கொடுங்கள்".

"அவ்வளவுதானே? உபாத்தியாயினி வேலை கிடைத்தால் போதுமா?"

"போதும்".

"சரி, நாளைக்கே என் முதலாளியிடம் சொல்லி உனக்கு உபாத்தியாயினி வேலை போட்டுத் தரும்படி ஏற்பாடு செய்துவிடுகிறேன், கவலைப் படாதே!"

சம்பாஷணையை அத்துடன் முடித்துக் கொண்டு இருவரும் சாப்பிடுவதற்குச் சென்றனர்.

13. புது வாழ்வில் பூகம்பம்

முத்தையா வேலை செய்யும் ஸ்தாபனத்தின் அதிபர் நகரபரிபாலன சபையில் ஓர் அங்கத்தினர். எனவே அவர் மூலம் சுகுணுவுக்குச் சுலபமாகவே ஓர் பள்ளியில் உபாத்தியாயினி வேலை கிடைக்கும்படி அவனுல் செய்ய முடிந்தது. சுயமாகச் சம்பாதிக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டபோதிலும் சுகுண, முத்தையாவுடன் சேர்ந்து, அவனுடைய அறையிலேயே வசித்தாள்.

முத்தையா சுகுண இருவரது வாழ்க்கையும் சகோதர மனப்பான்மையில் நடந்து வந்தது; ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டனர். முத்தையா எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கும்படிச் செய்வதற்குத் தன்னுலான முயற்சிகளையெல்லாம் சுகுண செய்தாள்.

அச் சிறிய அறையில் ஸ்வர்க்கலோக சுகத்தை அனுபவித்தான் முத்தையா, நாவிற்கு ருசியான உணவு, சுத்தமான உடை, இருப்பிடம், அழகிய சுகுணவின் அன்புகனிந்த பார்வை இவையாவும் அவனைப் புது மனிதனுக ஆக்கிவிட்டிருந்தன. அதேபோல சுகுணவின் உடல் வனப்பும், உள்ள பூரிப்பும் பன்மடங்காகப் பெருகின.

மூன்றுமாதங்கள் கழிந்திருக்கும். முத்தையா சுகுணவைப்பற்றிய வதந்தியும் விபரீதமாக உலாவின. இருவரையும் பற்றி இல்லாத கட்டுக் கதைகளையெல்லாம் சிருஷ்டித்தனர் அக்கம்பக்கத்தவர்கள். முத்தையாவின் நண்பர்களே அவன் மீது பொருமை கொண்டனர்.

முத்தையாவின் தந்தை முருகையா பிள்ளைக்கும் ஒரு மொட்டைக் கடிதம் சென்றது, அவர் அலறித் துடித்துக்கொண்டு பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார். தன் மகன் வசிக்கும் விலாசத்தை விசாரித்துத் தெரிந்து அந்த அறையின் பக்கம் சென்று கதவைத் தட்டினர்.

சுகுண கதவைத் திறந்தாள். "நீங்கள் யார்?" யாரைப்பார்க்க வேண்டும்?" என்று வினவினுள்.

பழங்கால மனிதரான முருகையாபிள்ளைக்குப் பணிவாகப் பேசும் முறையே தெரியாது. "இது முத்தையாவின் வீடுதானே?" என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

"ஆம், அவர்வீடுதான். உள்ளே வாருங்கள்." அன்பாகவே பகர்ந்தாள் சுகுண.

"நீ யார்?"

இந்தக்கேள்வி சுகுணவின் பார்வையை வயோதிகரின் உருவத்தின்மீது கூர்ந்து பாயும்படிச் செய்தது. அவர் யாரென்பதை உடனே ஊகித்துக்கொண்டு, "நீங்கள் அவருடைய தந்தையா?" என்றுள்.

"நான் அவனுடைய தந்தைதான். நீ யார்?"

"நான்.........நான்.........அவருக்குச் சகோதரி போல......"

"ஏய்! நீ என் மகனைக் கெடுப்பதற்கென்றே வந்தயா? அவன் உத்தமன். உலகம் அறியாதவன் இன்று அவனைப்பற்றி ஊரெல்லாம் என்ன பேசுகிறது தெரியுமா? என் குடும்பத்தின் கௌரவம், குலத்தின் பெருமை, அந்தஸ்து எல்லாமே போகும்படிச் செய்து விட்டாயே!" இவ்வாறு ஆவேசத்தால் உடல் பதறவும் பேசினர் முருகையாப் பிள்ளை.

சுகுணவின் எதிர்கால வாழ்க்கையில் இடி விழுந்துவிட்டது போலிருந்தது பெரியவரின் பேச்சு. "ஐயா! நான் அனுதை; ஆனல் மானங்கெட்டவள் அல்ல. தங்களுடைய மகனை நான் கெடுக்கவுமில்லை. தங்களிடம் யாரோ என்னையும் -உங்கள் மகனையும் பற்றி அவதூருகச் சொல்லியிருக்கிறர்கள் என்று நினைக்கிறேன். அதனுல் தான் நீங்கள் இவ்வளவு ஆத்திரமடைந்து பேசுகிறீர்கள்" என்று கண்ணீர் மல்கக் கூறினுள்.

"இந்த வம்பெல்லாம் எதற்கு. நீ உத்தமியாகவே இருக்கலாம். இருந்தாலும் உன்னைபோன்ற ஓர் இளம் பெண், முத்தையாவைப்போன்ற ஒரு வாலிபனேடு தனியாகக் குடியிருந்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், சொல்வார்கள் என்று நீ கொஞ்சமாவது யோசனை செய்திருந்தால் இப்படி இங்கு இருப்பாயா?"

"வாஸ்தவம்! நான் அப்பொழுதே உங்கள் மகனிடம் வாதாடினேன். அவர்தான் என்னை வற்புறுத்தி இங்கே இருக்கும்படிச் சொன்னுர்."

"அவனுக்கென்ன உலகம் அறியாதவன். சரி, அதெல்லாம் எதற்கு? இப்பொழுதாவது நீ என் மகனை விடப்போகிருயா, இல்லையா?

"நான் என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்?"

"இந்த நிமிஷத்திலேயே நீ இங்கிருந்து போய் விட வேண்டும்."

"அவ்வளவு தானே? சரி, உங்கள் மகன் வரட்டும்; வந்ததும் நான் போய் விடுகிறேன்."

"ஏன்? அவன் வந்தபின்புதான் உன்னால் போக முடியுமோ?"

"எனக்கு உதவிசெய்த அவரிடம் சொல்லிக் கொள்ளாமல் போவது முறையாகுமா?"

"சீ! நீயா எனக்குத் தர்ம நியாயத்தைப்பற்றி உபதேசம் செய்கிறாய்? நான் சொல்கிறேன்; மரியாதையாகப் போய் விடு! இல்லாதபோனால் நானே உன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவேன்,

சுகுணாவின் நிலைமை தர்ம சங்கடமாகிவிட்டது தனது செயலினால் தந்தைக்கும் - மகனுக்கும் விரோதம் ஏற்பட்டு விடுமோ என்றும் அவள் பயந்தாள். முத்தையாவிடம் சொல்லிக் கொள்ளாமல் அங்கிருந்து போவதற்கும் அவள் மனம் ஒப்பவில்லை. ஆகையால் போவதற்காகத் தனது சாமான்களை எடுப்பவள்போல நடித்துக் கொண்டிருந்தாள். முருகையா பிள்ளை அவளைத் துரிதப் படுத்திக் கொண்டிருந்தார்.

அவ்வமயம் அங்கு வந்து சேர்ந்தான் முத்தையா. தன் தந்தையையும் சுகுணாவின் நிலைமையையும் கண்ட அவன் திடுக்கிட்டுப் போனான்.

"அப்பா! இதெல்லாம் என்ன? நீங்கள் எதற்காக இங்கு வந்தீர்கள்?"

"வேலையில்லாமல் யாராவது வருவார்களா?" என்று பூமியைப் பார்த்துச் சொல்லிவிட்டு சுகுணாவை நோக்கி, உம்...! நீ புறப்படு" என்று அதட்டினார் முருகையா பிள்ளை.

சுகுணா, தனது புடவைகளையெல்லாம் ஒரு சிறிய பெட்டியில் எடுத்து வைத்துக்கொண்டு முத்தையாவின் பக்கத்தில் வந்து நின்றாள். அவனை ஏறிட்டு நோக்கினாள். அவளது கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்தது. "நான் போய் வருகிறேன்" என்று சொல்ல முடியாமல் சொன்னாள் அவள்.

அவள் கையைப் பிடித்துக் கொண்டான் முத்தையா. "சுகுணா! நீ போக வேண்டாம்! நீ போய் விட்டால் என் வாழ்க்கையே நாசமாகி விடும்" என்றான்.

முருகையா பிள்ளை, "ஏண்டா! நீ அவளைக் கட்டிக் கொள்ளப் போகிறாயா? ஜாதி, மதம், குலம், கோத்திரம் ஒன்றுமே உனக்குக் கிடையாதா!" என்று கோபத்தோடு வினவினார்.

"கிடையாது! நான் அவளைத்தான் கட்டிக் கொள்ளப் போகிறேன்" என்று அதே தொனியில் பதிலளித்தான் முத்தையா.

அன்று வரையில் தனது மகன் மிகவும் நல்லவன், தந்தையின் சொல்லைத் தட்ட மாட்டான் என்று எண்ணியிருந்த முருகையா பிள்ளைக்கு அவனது பதில் உச்சியில் அடித்தாற் போலிருந்தது. "அட பாவி! உனக்கு அவ்வளவு துணிச்சல் வந்து விட்டதா? சரி! இன்றோடு நம் உறவு தீர்ந்து விட்டது. இனிமேல் நீ எனக்கு மகனுமில்லை, நான் உனக்குத் தந்தையுமில்லை" என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியேறி விட்டார்.

தந்தை சென்றபின்பு முத்தையா ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினான். சுகுணாவை மணந்து கொள்ளப் போவதாக அவன் தனது தந்தையிடம் கூறிய விஷயம் அவன் மனத்தை மிகவும் புண்படுத்திற்று. உண்மையிலேயே இருவரும் அண்ணன் தங்கைபோல நடந்து வந்திருந்தும் அந்தவார்த்தை அவன் வாயிலிருந்து ஏன்வந்தது? இப்பொழுது சுகுணா அவனைப்பற்றி என்ன நினைப்பாள்? அவள் முகத்தில் எப்படி விழிப்பது?

இத்தகைய கேள்விகளின் சுழலில் சிக்கித் தவித்த முத்தையா, மேஜையின்மீது கைகளைச் சாய்த்து அதில் தன் தலையை வைத்துக்கொண்டு கண்களை மூடினான். அந்த நிலையில் அவன் எவ்வளவு நேரம் இருந்தானோ? அவன் தோளில் ஒரு கை பட்டது. தீயால் சுட்டது போலிருந்த அவனுக்கு. திடுக்கிட்டு எழுந்து பார்த்தான். கண்ணீர் வடித்து அவன் எதிரில் நின்றாள் சுகுணா.

(தொடரும்)





எமது விசேஷ நிருபர்

பட விமர்சனம்

மாமியார் மெச்சிய மருமகள்

ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் 'மாமியார் மெச்சிய மருமகள்' படத்தில் வசன அமைப்பு மிகவும் மெச்சத்தக்கதாக உள்ளது. குறிப்பாக, முன்று எழுத்து உரையாடல் பகுதி கருத்தைக் கவரும் வகையில் கோர்க்கப்பட்டிருக்கிறது. வசன கர்த்தாவின் புனைப் பெயர் 'கலைப்பித்தன்'.

வயது முதிர்ந்த ஒரு பாகத்தில் ஜி. வரலக்ஷ்மி வந்து, வார்த்தைகளை விதாணையாகப் பேசி ஜமாய்த்திருக்கிறார். நூதனமான நடிப்பையும் அவரிடம் காணலாம்.

எம். என். ராஜம் வழக்கமான 'வில்லி' யாகத்தோன்றாமல் அடக்கமான குடும்பப் பெண்ணாக நடித்து புது வழியில் நல்ல பெயர் எடுக்க முயற்சி செய்கிறார். எஸ். எஸ். ராஜேந்திரன் நடிப்பில் புதுமை ஏதும் இல்லை, மழையில் நனைந்து கொண்டே ஒரு காட்சியில் கோமாளிக் கூத்தடிப்பது வேடிக்கையாக உள்ளது. மற்றபடி அவர் நடிப்பில் குறை ஏதும் சொல்வதற்கில்லை.

என். லலிதா, லக்ஷ்மிநாராயணன், பக்கிரிசாமி, ராமராவ் போன்ற இளம் நடிகர்களுக்கும் நல்ல வாய்ப்பளித்திருக்கிறது இப் புதுப்படம். கவி ராஜகோபால், உடுமலை நாராயண கவி இருவருமாக முழு கர்னாடக சங்கீதம் பரிமளிக்க உதவியிருக்கின்றனர். சாயி சுப்புலக்ஷ்மி நடனமும் படத்துக்கு அழகு ஊட்டும் வகையில் கொஞ்ச நேரம் நடக்கிறது.

மார்ஷல் டிட்டோவுடன் வைஜயந்திமாலா

'மாதவி'யில் சௌகார் ஜானகி

நகைச் சுவைக் கதை; ஆனால் நகைச் சுவை–கதையில் நிரவலாக இல்லை. ஒளி, ஒலிப் பதிவுகள் உயர்தரம் என்று சொல்லத் தேவையில்லை கிருஷ்ணன்-பஞ்சுவின் டைரக்ஷனைப் பற்றியும் அதிகம் கேட்கவே வேண்டாம்.

சுமங்கலி

பெண் ரஸிக உள்ளங்களை சுண்டியிழுக்கக்கூடிய சுந்தரமான தலைப்பு. ஆனால் கதைக்கும், தலைப்புக்கும் காததூரம். கெட்ட நடத்தையுடையவர்களை, குறிப்பாக குடிகாரர்களைத் திருத்த வேண்டுமென்கிற லட்சியப் படம். லட்சிய சித்திக்காக ராஜேஸ்வரி பிலிம்ஸார் படத்தை படாத பாடு படுத்தியிருக்கிறார்கள்.

ஈ. ஆர். சகாதேவனின் உணர்ச்சி மயமான நடிப்பு காண்போரை கதி கலங்கச் செய்யும். வில்லன் நடராஜன் தலையை மொட்டையடித்துக் கொண்டு திண்டாடுவதோடு சரி. நடிப்பில் கூர் கட்டவில்லை. மொட்டையாக நிற்கிறது.

ஈ. வி. சரோஜா - பாலாஜி ஜோடி பரவாயில்லை. இருவருமே தத்தம் முழுத்திறமையைக் காட்ட இன்னும் உழைத்து நடித்திருக்கலாம்.

கிராமப்புற சூழ்நிலையில் உருவாக்கப்பட்ட படமானதால் இயற்கைக் காட்சிகள் நேத்திரானந்தமாக திகழ்கின்றன. வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய கதை இது. திரைக் கதை, வசனம், பாடல்களை அமைத்தவர் 'என் தங்கை' நடராஜன். ஆடல், பாடல்களுக்கு குறைவே இல்லை. காமன் பண்டிகை, கரக ஆட்டக் காட்சிகளும் உண்டு. அவற்றையெல்லாம் சிரமப்பட்டுத் தாண்டி, படத் தலைப்புக்கு ஏற்ப சுபமாக முடிகிறது.

மஞ்சள் மகிமை

படம் முடிவதற்கு முக்கால் மணி நேரத்துக்கு முன்பே கதையின் முக்கிய அம்சம் முடிந்துவிடுகிறது. அத்துடன் பத்து நிமிஷம் மட்டும் எடுத்துக்கொண்டு காட்சிகளை கடைசி கட்டத்தில் கச்சிதமாக அடக்கியிருந்தால் அன்னபூர்ணாவின் இத்திரைப்பட மகிமை இன்னும் பன்மடங்கு பெருகியிருக்கும்.

ரஞ்சகமான பல குடும்பக் காட்சிகள் நிறைந்த படம். சாவித்திரி நன்றாக நடித்துள்ளார் என்றாலும் அதிகமான உழைப்பைக் காணோம். ஏ. நாகேஸ்வர ராவ் நடிப்பு சுமார். தங்கவேலு ஓட்டைக்காரரை ஓட்டினாலும், தம் நடிப்பை நேராகவே ஓட விட்டிருக்கிறார். ராஜசுலோசனாவின் ஹாஸ்ய பாகமும் சுவாரஸ்யமாக இருக்கிறது கண்ணாம்பா, எஸ். வி. ரங்கராவ் தங்களுக்குள்ள வழக்கமான திறமையைக் காட்டியுள்ளனர் சாரங்கபாணி, சுந்தரிபாய், ஜி. வரலட்சுமி மூவரும் நன்குபேசி சீராக நடித்துள்ளனர்.

ஸ்ரீதரின் வசனங்கள் செவ்வனே அமைக்கப்பட்டிருக்கின்றன. பாடல்கள் மனதில் பதியக்கூடியதாக இல்லை. கனவுக் காட்சி அனாவசியம். நடனங்களிலும் விறுவிறுப்பு இல்லை. திருப்பதிக் காட்சிகள் மனோரம்யமாக விளங்குகின்றன. பால்ய விவாகமானாலும் மஞ்சள் தாலிக்குள்ள மகிமையை அருமையாக எடுத்துக் காட்டும் படமானபடியால் குறிப்பாக பெண்கள் விரும்பிப் பார்ப்பதற்கு கேட்பானேன்!

ஈ. வி. சரோஜா, சாரங்கபாணி, சாவித்திரி, ரங்கராவ்—'கடன் வாங்கி கல்யாணம்'

தங்கப் பதுமை

மளமளவென ஓடும் வசனங்களைக் கொண்டே ஜூபிடரின் 'தங்கப் பதுமை' புகழ் திரட்டும். ஜூபிடர் ஜி. சோமசுந்தரம் முன்பு தயாரித்த கண்ணகியின் பெருமையை இதற்குள் எவரும் மறந்திருக்க முடியாது. அப்படி மறந்திருந்தால் அதனை பெருமளவு நினைப்பூட்டும் அவரது இப் புதுப்படம்.

சிவாஜி கணேசன் இப் படத்தின் முற்பாதியில் நல்ல நிதானம் காட்டி நடித்துள்ளார். அவரும், பத்மினியும் அரு. ராமநாதனின் நேர்த்தியான வசனக்கட்டு குலையாமல் பக்குவமாகப் பேசியிருப்பது திரைக் கதைக்கே அலாதி களையூட்டியுள்ளது. நம்பியார், ராஜகோபால், எம். என். ராஜம், டி. பி. முத்துலக்ஷ்மி ஆகியவர்கள் நடிப்பும் பரவாயில்லை. ஆடல், பாடல்கள் நிறைந்த அதி நீளப் படம். பட உலகிலிருந்து விலகிக் கொண்டுள்ள லலிதாவின் நாட்டியத்தையும், காலஞ்சென்ற என்.எஸ். கிருஷ்ணனின் ஹாஸ்ய நடிப்பையும் காண அரியதோர் வாய்ப்பளிக்கும் படம். அவை மட்டுமா? புகழ்வாய்ந்த பழைய நடிகை டி. ஆர். ராஜகுமாரி மாயாமோகினியாக வந்து மயக்குகிருர்.

காட்சி ஜோடனைகள் கண்களை கவர்கின்றன. ஓரிரு பாடல்கள் இனிமையாக உள்ளன. ஸ்ரீ. ஏ. எஸ். ஏ. சாமியின் டைரக்ஷன் பாராட்டத் தக்கது. நீளத்தை முக்காலாக நறுக்கியிருந்தால் கட்டுக்கோப்பு சில இடங்களில் அனுவசியமாக நைந்திருக்காது.

வளருகின்றன.

கலையரசி

எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி இருவரும் காதல் ஜோடியாகவந்து மகிழ்விக்கப் போகிருர்கள் 'கலையரசி'யில். சரோடி பிக்சர்ஸ் தயாரிப்பு. இதில் பி. சரோஜாதேவி, ஸி. டி. ராஜகாந்தம், வீரப்பா, எம். என். நம்பியார் முதலியவர்களையும் சந்திக்கலாம்.

புனர்ஜன்மம்

ஸ்ரீதர் திரைக்கதை வசனம் எழுதியுள்ள 'புனர்ஜன்மத்தை விஜயா பிலிம்ஸுக்காக என். எஸ். திரவியம் தயாரித்து வருகிருர். சிவாஜி கணேசன், பத்மினி, தங்கவேலு, டி. ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் நடிக்கும் படம் இது. ஆர்.எஸ் மணி டைரக்டர்.

ஒரே வழி

டி. எஸ். பாலையா, பிரேம் நஸீர், எம். என். ராஜம், ஸ்ரீ ரஞ்சனி பங்கு

'சுமங்கலியில்' ஈ. வி. சரோஜா

கொள்ளும் 'ஒரே வழி'க்கான படப்பிடிப்பு வேலைகள் அனேகமாக பூர்த்தியாகிவிட்ட தெனலாம். வாசு பிலிம்ஸார் ஜெமினியில் தயாரிக்கும் இப்படத்துக்கு கதை வசன கர்த்தா ஜாவர் சீதாராமனுவார்.

ராஜமகுடம்

மன்னனுகவும், புரட்சித் தலைவனுகவும் இரு வேஷங்களில் என். டி. ராமராவ் தோன்றி நடிக்கும் 'ராஜமகுடம்' வேகமாக வளர்ந்து வருகிறது. வாஹினி ஸ்டுடியோவில் பி. என். ரெட்டி சொந்தமாக தயாரித்து டைரக்ட் செய்யும் இப்படம் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளில் வெளிவரும். ராஜசுலோசனு, கண்ணும்பா, என். டி. ராமராவ், சாந்தினி ஆகியோர் இரண்டிலும் வருவார்கள். தமிழ் படத்தில் எஸ். வி. ஸஹஸ்ரநாமம், 'குலதெய்வம்' ராஜகோபால், பாலாஜியையும் காணலாம். தமிழ் வசனங்களை எழுதியவர் பி. எஸ். ராமய்யா.

ரேணுகா பதிசுகா

வாஹினி ஸ்டுடியோவில் ஸ்வஸ்தி ஸ்ரீ பிக்சர்ஸ் தயாரிக்கும் இத் தெலுங்குப்படம் தமிழிலும் எடுக்கப்பட்டு வருகிறது. கண்ணும்பா எஸ். வி. ரங்கராவ், 'சௌகார்' ஜானகி, நாகையா, என். டி. ராமராவ் ஆகியோர் இரு படங்களிலும் நடித்து வருகின்றனர். தமிழ் படத்துக்கு இன்னும் பெயர் சூட்டப்படாவிட்டாலும் பாலய்யா, டி. ஆர். ராமச்சந்திரன். வீரப்பா, ஒ.ஏ.கே. தேவர் முதலியவர்கள் அதில் நடிக்கின்றனர். முடிவடையும் தறுவாயிலுள்ள படங்களில் இதுவும் ஒன்று.

கனவு பலித்ததம்மா

ஸஹஸ்ரநாமம், கள்ளபார்ட் நடராஜன், லக்ஷ்மிராஜ்யம் தோன்றும் காட்சியொன்று 'கனவு பலித்ததம்மா' படத்துக்காக சமீபத்தில் எடுக்கப்பட்டது. ஜெமினி கணேஷ், ராஜ சுலோசனு, எஸ். வி. சுப்பையா, வி. ஆர். ராஜகோபால் முதலியவர்களையும் இப்படத்தில் பார்க்கலாம். கலைமகள் பிக்ஸர்ஸார் தயாரித்துக்கொண்டிருக்கின்றனர்.

ராணி சம்யுக்தை

விஜயா ஸ்டுடியோவில் வேகமாக வளர்ந்துகொண்டிருக்கும் இப்படம் சரஸ்வதி பிலிம்ஸாருடையது. எம். ஜி ராமச்சந்திரன், எம். என். ராஜம் தோன்றும் காட்சி ஒன்று சமீபத்தில்படமாக்கப்பட்டது.

தாயைப்போல் பிள்ளை...

துரிதமாக முன்னேறிவரும் படங்களில் லட்சுமி பிக்ஸர்ஸ் 'தாயைப் போல் பிள்ளை, நூலைப்போல சேலை'யும் ஒன்று. ஏ. பி. நாகராஜன், திரைக் கதை வசனங்களை எழுதியுள்ளார். கே. வி. மகாதேவன் இசையமைப்பாளர். பண்டரிபாய், கண்ணும்பா, வி. கே. ராமசாமி, மனேகர், சிவதாணு, ஸி. டி. ராஜகாந்தம் முதலியவர்கள் நடிக்கின்றனர்.

அதிகாரி

அனேகமாக மார்ச்சு மாதம் திரையிடப்பட்டுவிடலாம். சித்ரா மூவிஸ் தயாரிக்கும் 'அதிகாரி'. இதில் பாலாஜி, எஸ். எஸ். ராஜேந்திரன், ஈ. வி. சரோஜா, விஜயகுமாரி முதலியவர்கள் வருகின்றனர். மஸ்தான் டைரக்ட் செய்கிருர்.

ராஜ கட்டளை

ஸெஸில் டி. மில்லியின் பிரும்மாண்ட தயாரிப்பான 'டென் கமாண்ட்மெண்ட்ஸ்' என்ற ஆங்கிலப் படத்தைத் தழுவி மாறன் கதை வசனங்களை எழுதும் 'ராஜகட்டளை'யை மாடர்ன் தியேட்டர்ஸார் பிரம்மாண்டமாகவே தயாரிக்கப் போகிருர்கள். டி. ஆர். சுந்தரம் டைரக்டர். கலர் படமாக இருக்கும்.

Edited & Published by N. R. Ramanujam, B. A., & Printed by S. Rangaswami, B. A., at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

218 562

நரை மயிரே தோன்றாமல் முதுமைப் பருவம் எய்தும் அழகு

லோமா

அகில உலகும் வியந்து போற்றிட கேசத்திற்கு இயற்கைக் கருமையூட்டும் தைலம்,

நிச்சயமாகக் கருமையூட்டும் லோமாவின் சக்திக்கும் மீறி நரை மயிர் எய்தியவர் எவருமே கிடையாது! லோமா என்பது ஒரு சாயச் சரக்கல்ல, கேசத்திற்கு இயற்கை கருமையூட்டும் தைலமாகும்; அதே சமயம், இயற்கையான மூலப் பொருள்கள் கலந்துள்ள அது கேசத்திற்கு போஷாக்களிக்கும். தைலமுமாகும் . . . அதோடு மனோகர நறுமணமுள்ளது.

ஏகபோக ஏஜெண்டுகள் : எம். எம். கம்பாட்வாலா அஹமதாபாத்-1.
ஏஜெண்டுகள் :
ஸி. நரோத்தம் & கம்பெனி, மங்கள்தாஸ் ரோடு, பம்பாய்-2.

MPS-TAM

மதராஸ் ஏஜண்டுகள்:
மெஸர்ஸ் ஜே. பாலாபாய் & கோ., 260, எஸ்பிளனேட், மதராஸ்.
ஸிலோன் ஏஜண்டுகள்:
மெஸர்ஸ் சிர்ருல் காதிர் & கோ., 41 & 43, 2-வது கிராஸ் தெரு, கொழும்பு-11.

The Cauveri Colour Press, Kumbakonam.